மாஸ்டர் ஸி. வி.வி

நமஸ்காரம்

எல்லையற்றதும் இதயத்திலேயே
இருப்பதற்குமான ஓர் அடையாளம்
(ஸ்ரீ வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் சுய சரிதம்)



பிரக்ஞா பிரபாகரம்

தமிழில் – வீ.ராஜகோபால்
தமிழ் எழுத்தாளர்

வெளியீடு :
பிரபாகர் தியான மண்டலி
சினகாகனி, குண்டூர் (மா) ஆந்திரபிரதேஷ் – 522 503.
செல் : 0917466414, 08333056960

பிரக்ஞா பிரபாகரம்

தமிழாக்கம் : வீ.ராஜகோபால்
(வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் தெலுங்கு மூலத்திலிருந்து)

பிரதிகள் : 1000

விலை ரூ. 100/–

©Copy Rights Reserved

For Copies
K.Ganesan
9/1, Plot No.56, Thiruvalluvar Street,
Iyappa Nagar, Trichy - 600 021
Tamilnadu.
Mobile : 99442 82772

மாஸ்டர் ஸி.வி.வி.
யோக மித்ராலயா சங்கம்
2, கீழ டபீர் தெரு,
கும்பகோணம் – 612 001.

பிரபாகர் தியான மண்டலி
சினகாகனி, குண்டூர் (மா)
ஆந்திரபிரதேஷ் – 522 503.
செல் : 0917466414, 08333056960



மாஸ்டர் ஸி. வி.வி.

2. மாஸ்டர் ஸி.வி.வி., துணைவியார் திருமதி வெங்கம்மா

3. மாஸ்டர் ஸி.வி.வி. பிரார்த்தனை செய்த
வீட்டின் முதல் மாடி (கும்பகோணம்–தமிழ்நாடு)

4. மாஸ்டர் ஸி.வி.வி. யின் கிழக்கு டபீர் தெரு
வீட்டின் முகப்பு தோற்றம் (கும்பகோணம்)



5. ஸ்ரீ பிரபாகர சாஸ்திரி : கல்விமான் – ஞானி



6. ஸ்ரீ வேட்டூரி பிரபாகர சாஸ்திரி தியானத்தில் மூழ்கி இருக்கிறார்.

7. வேட்டூரி பிரபாகர சாஸ்திரி - புகைப்படம் : கையெழுத்துடன்



8. மாஸ்டர் ஸி.வி.வி., ஸ்ரீ வேட்டூரி பிரபாகர சாஸ்திரி மற்றும் யோகா சங்க நண்பர்கள்

9. வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் தந்தை ஸ்ரீசுந்தர சாஸ்திரி, தாயார் திருமதி சேஷம்மா

10. வேட்டூரி பிரபாகர சாஸ்திரி தன் துணைவியார் திருமதி மஹாலக்ஷ்மி அம்மையாருடன்

பொருள் அடக்கம்

பக்கங்கள்

பதிப்பாளர் உரை	1
மொழிபெயர்ப்பாளர் உரை	5
முன்னுரை – டாக்டர் வி. அனந்த மூர்த்தி	6
ஆசியுரை – டாக்டர் வி. சந்திரசேகர சாஸ்திரி	10
முகவுரை – ஸ்ரீ வி.குருப்பிரசாதம்	11
எங்கள் மதிப்பிற்குரிய குருநாதர் – ஸ்ரீ கே.சத்தியநாராயணா	19
அணிந்துரை – ஸ்ரீ கொத்த வெங்கடேஸ்வரராவ்	23
பிருக்த ரஹித தாரக ராஜயோகா – ஒரு குறிப்பு ஸ்ரீ கொத்த வெங்கடேஸ்வரராவ்.	54
ஒரு புகழ்மாலை – கொத்த ராமகோட்டையா	
பிரக்ஞா பிரபாகரம்	58
1. அடித்தண்டு	59
2. பிறப்பு	60
3. குழந்தைப்பருவத்து நினைவுகள்	62
4. புரோஹிதமும் –அதைக்கடைப்பிடித்தலும்	74
5. அறிவு விரிவடைதல்	78
6. பழிவாங்கும் குணமுள்ள காக்கை	82
7. அறிதலும் அனுபவமும்	84
8. வேங்கட சாஸ்திரியிடம் கல்வி கற்றது	86
9. வால் நட்சத்திரம் தெரிந்தது	89
10. பிரம்மச்சர்யமும் திருமண நிலையும்	92
11. திருமணம்	97
12. வாகன விபத்து	99
13. சகுனங்கள் பார்த்தல்	104
14. இலக்கிய வாழ்க்கை – கைக்கும் வாய்க்குமான நிலைமை	107

15.	டைஃபாயிட் நோய்	114
16.	ஸ்ரீ வேங்கடேஸ்வரர் தரிசனம்	118
17.	முதல் அனுபவம்	121
18.	என் மனத்துயர்	129
19.	உடல்நிலை பாதிப்பு	135
20.	"மருந்துகளே வேண்டாம்" என்ற முடிவு	138
21.	ஒளியும் நிழலும்	142
22.	ஒளிவீசிய பாதை	147
23.	தெய்வீகப் பார்வை	150
24.	தெய்வீக அனுபவம்	153
25.	தெய்வீகச் செய்தி	157
26.	கைகூடுதல்	161
27.	ஸ்ரீ குருநாதர்	163
28.	புது வாழ்க்கை	170
29.	என் மனைவி தீக்ஷை பெற்றது	179
30.	நாடி ஜோதிட நூல்கள்	184
அடிக்குறிப்புகள்		198
வி.பி.எஸ். உடைய பரிசோதனை அறிக்கை		215
மாஸ்டர் ஸி.வி.வி. யின் மீடியம்களின் பெயர்ப்பட்டியல்		221
மாஸ்டர் என்.ஆர்.பி.வி. யால் தீக்ஷை பெற்றவர்கள்		247
ஸ்ரீசாஸ்திரியாரின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகளும் – நாட்களும்		263
யோகா பயிற்சி மையங்கள் (தமிழ்நாடு, பிற மாநிலங்கள்)		283
குருநாதரின் குடும்ப விருக்ஷம்		288
வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் குடும்ப விருக்ஷம்		290
புகைப்படங்கள்		291

பதிப்பாளர் உரை

குருநாதர் ஸி.வி.விக்கு நமஸ்காரம் :
ஆச்சார்யர் வி.பி.எஸ்.ஸுக்கு நமஸ்காரம்

'இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றின் ஒரு மைல் கல்' எனலாம். நவீன இந்தியாவின் இந்த காலகட்டத்தில் பலவிதமான திறமைகள் வெளிப்பட்டன. அந்நிய ஆட்சி எனும் இருட்டிலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, அனைவரும் பயன் அடையும் விதமாக ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றப்பாதையில், மஹாத்மாகாந்தி காட்டிய வழியைப் பின்பற்றி அன்பு, பரிவு, சத்தியம், நேர்மை, ஆகியவற்றை லட்சியமாகக்கொண்டு இந்திய ஜனநாயகம் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. உலக அரங்கில் இந்தியா அடைந்துள்ள மதிப்புக்கு காரணமானவர்கள், மனிதசமுதாயத்திற்கு தன்னலமற்று, சேவை புரியும் நோக்கத்துடன் தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ள மாமனிதர்களே. சுதந்திரம் அடைய வேண்டும் என்ற லட்சியத்துடன் பாடுபட்ட அப்பெருந்தகையாளர்களால் இந்நாடு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமுதாய சமத்துவம் என்பனவற்றிலிருந்து மேம்பட்டு, ஆன்மீகத்துறையில் அதிகமாகப் பிரகாசிக்கிறது. மற்ற எல்லாத்துறைகளிலும் போலவே, கல்வியறிவின் தாக்கம் நமது சமுதாயத்தில் பிரதிபலிப்பதை நாம் காணமுடியும். சரிதைகள், சுயசரிதைகள் ஆகியவற்றின் முக்யத்துவம் இலக்கியத்துறையில் மிகுதியாக உணரப்படுகிறது.

மஹான்களின் வாழ்க்கை வரலாறு, சாமானிய மக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகிறது. அது அவர்களிடம் தூய்மையான பொருள் பொருந்திய வாழ்க்கையை நடத்தவேண்டும் என்ற ஊக்க உணர்வை ஏற்படுத்துகிறது. அதனால் மானிட இனமே சீர்திருந்துகிறது.

அமரர் ஸ்ரீபிரபாகர சாஸ்திரியாரின் சுயசரிதையான 'பிரக்ஞா பிரபாகரத்தை' இந்த விஷயத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

சுயசரிதைகளில் அதற்கு ஒரு தனித்துவமான இடம் உண்டு. அதற்கு முக்கியமான காரணம் 'ஒரு அறிவாளியின் ஆழ்ந்த உள்ளுணர்வு, உடல் ஆரோக்கியத்துடன் கூட ஆன்மீகத் தன்மையும் இணைந்த வாழ்க்கை ஆகியவை, இறுதியாகக்கிட்டும் ரட்சிப்புக்கு முன்னுரையாக அமைகிறது' என்பதை அது எடுத்துக்காட்டுவது தான். ஆச்சார்யர் முதலிலேயே 'மஹாத்மாகாந்தியின் தன்னலமற்ற தூய வாழ்க்கையே தனது பிரக்ஞாபிரபாகரத்திற்கு வழிகாட்டியாக இருந்தது' என்று சொல்லி இருக்கிற போதிலும், நீதி–நேர்மை, சத்தியம் ஆகியவற்றிற்கு உந்து சக்தியாக இருந்த குருநாதர் ஸி.வி.வி. யும் அதை கடைப்பிடிப்பவர்களுமே இந்நூலுக்கு காரணமாக இருந்த சக்திகள் என்று நிச்சயமாக நம்பலாம். இந்த ராஜ யோகா–தியான முறையை அனுஷ்டிப்பவர்களுக்கு 'பிரக்ஞா பிரபாகரம்' மாத்திரமே முழுமையான ரட்சிப்பை அடைவதற்கான ஒரே யோகமார்க்கமாக இருக்கும்.

பலருக்கு இது ஒரு வழக்கம் போல பக்கங்களைப் புரட்டிப் படிக்க வேண்டிய ஒரு வெறும் நூலாக இருக்கலாம். ஆனால் இது சரித்திரம் படைக்கக்கூடியது. தெலுங்கில் எழுதப்பட்ட இந்த நூல் ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டு, இப்போது தமிழ்வடிவில் வெளிவருகிறது. ஆன்மீக விதிகள் மற்றும் யோகா மார்க்கத்தில் பயிற்சி பெறும் மற்ற மொழி பேசுவோரின் வசதிக்காக வேறு பல மொழிகளிலும் விரைவில் இது வெளியிடப்படும். இந்தப் புனிதப்பணிக்காக நிதிஉதவி அளித்துள்ள எல்லோருக்கும் எங்கள் உளப்பூர்வமான நன்றி.

பிரக்ஞா பிரபாகரத்தை தமிழில் சென்னை திரு. வீ.ராஜகோபால் மொழி பெயர்த்திருக்கிறார். அவர் எழுத்துத்துறையில் நல்ல அனுபவம் உடையவர். அவர் எழுதியவை பல தமிழ்பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. முதல் பரிசு பெற்ற படைப்புகள் சிலவும் அவரால் உருவானவை. இனிய எளிய தமிழ்நடையில் அமைந்துள்ள அவரது இந்த மொழிபெயர்ப்பு 'படிப்பவர்களுக்கு விருந்து' என்றால் அது மிகையாகாது. யோக சாதகர்களின் உள்ளம் நிறைவு பெறும்படி, அர்ப்பணிப்பு உணர்வுடன் அமைந்துள்ள இந்த மொழிபெயர்ப்புக்காக அவருக்கு எல்லா நலன்களும் கிட்டுமாறு மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறோம்.

தெலுங்கு மொழிச்சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கும்போது உச்சரிப்பில் சில தவிர்க்க முடியாத வித்யாசங்கள் இருக்கலாம்.

குருதேவர் ஸ்ரீவேட்டூரி, பாட்டனார் ஸ்ரீ கொத்த ராம கிருஷ்ணய்யகாரு, யோகா நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

குறிப்பாக திருச்சி, திரு.கே.கணேசன் அவரது மனைவியார் திருமதி. சுகன்யா ஆகியோருக்கு நாங்கள் மிகுந்த நன்றி செலுத்துகிறோம். அவர்களுடைய உதவியும் ஒத்துழைப்பும்தான் இந்த நூலை நல்ல முறையில் வெளியிட வேண்டும் என்ற எங்கள் முயற்சி வெற்றியடைய காரணமாக இருந்தன.

இந்த புத்தகத்தை அழகிய முறையில் வடிவமைப்பதற்கு உதவி செய்த ஸ்ரீமதி யசோதா கிருஷ்ணா (வெங்கடேஸ்வரா பிரிண்டர்ஸ்) பெங்களூரு, ஸ்ரீமதி கௌரி, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி (கணினி தட்டச்சு – NET WORLD), சென்னை–28, திரு.எம்.குமார், கணினி வடிவமைப்பு. MA Graphics, சென்னை–14 ஆகியோருக்கும் நன்றி கூறுகிறோம். இந்த புத்தகத்தை சிறந்த முறையில் அச்சடித்துக்கொடுத்த காஸ்மாஸ் பிரிண்டர்ஸ், பெங்களூர் திரு. ஜி.ராகவன் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நூலில் குருநாதரின் குடும்ப விருட்சம், ஆச்சார்யாரின் வழிவந்தவர்கள், சம்பந்தப்பட்ட புகைப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் இந்த யோக மார்க்கத்தை பின்பற்றுபவர்களின் விபரம், இந்த ராஜயோகா முறை குறித்த, நாடிகுரு ஸ்ரீ என்.ஆர்.பி.வி. அவர்களால் தீக்ஷை கொடுக்கப்பட்டவர்களின் விபரம் ஆகியவையும் இதில் தரப்பட்டுள்ளன. குருதேவரின் பிரக்ஞா பிரபாகரம் காட்டும் நேர்மை, உள்ளார்ந்த விழிப்புணர்வு, அன்புடன் கூடிய தன்னலமற்ற சேவை, குணமளிக்கும் சிகிச்சையைத் தரவல்ல கலை ஆகிய யாவும், தமிழ் வாசகர்கள் இந்த யோக முறை பற்றி நன்கு அறிந்தகொள்ள உதவும். தமிழ் நாட்டிலும் மற்ற பிரதேசங்களிலும் உள்ள இந்த புதிய ராஜயோகா கற்பிக்கும் நிலையங்கள் பற்றிய விபரங்கள் தனியாக

கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ராஜயோக முறை பற்றி அறிய விரும்புபவர்கள் அந்த நிலையங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த யோக சாதகர்களுக்கு இன்னும் ஓர் மகிழ்ச்சி தரும் செய்தி. “மத்திய அரசின், சமூக கலாச்சாரத்துறையின் சார்பாக பெங்களூருவில் இயங்கும் இந்திரா காந்தி 'ராஜ்ய கலை மையம்'–தென் மண்டலம் – இந்த ராஜயோகா முறை பற்றிய நூல்கள் முழுவதையும் கணினி எண் வடிவில் (Digitalize) கொண்டு வர தங்கள் இசைவைத் தெரிவித்துள்ளது”.

விஜயவாடா ஸ்ரீ பி.எஸ்.ஆர் சர்மாகாருவும் மற்ற யோகா சாதகர்களும் சேர்ந்து இந்த 'ராஜயோகா முறை' தொடர்பான நூல்கள் அனைத்தும் வெளிவர உதவி புரிவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த ராஜ யோகா முறை குறித்து குருநாதர் கொண்டிருந்த விருப்பங்கள் நிறைவேறும் காலம் கனிந்து விட்டது என்றும் நம்புவோமாக.

அன்புடன்,
வேட்டூரி ஆனந்த மூர்த்தி
ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழகப்
பேராசிரியர் – (பணி–நிறைவு).

ஸ்ரீமான் வேட்டூரி பிரபாகர சாஸ்திரி
வாஞ்மய பீடம் – முதன்மை செயலாளர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி.

தாகூர் National Fellow (தஞ்சாவூர்)
மத்திய அரசு கலாச்சார அமைச்சகம்
புதுடெல்லி.

மொழி பெயர்ப்பாளர் உரை

ஸ்ரீவேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் சுயசரிதையான 'பிரக்ஞா பிரபாகரத்தை' தமிழில் மொழி பெயர்க்கும் நல்வாய்ப்பு கிட்டியதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்பறாது நீடிந்துவரும் நமது பாரம்பரியப் பண்பாட்டில் 'யோகா' என்பது மிக முக்கியமான அம்சம். சித்தர்களும், யோகிகளும் தமது யோக ஆற்றலால் பலவேறு அதிசயமான செயல்களை செய்துகாட்டினர் என்று நாம் படித்து இருக்கிறோம். அது போல உடல் நோயை தீர்ப்பதிலும் அது வராமல் தடுப்பதிலும் 'யோகா'வுக்கு சிறப்பான பங்கு இருந்தது. இப்பொழுது யோகா முறை உலக அளவில் பரவியிருக்கிறது.

கும்பகோணம் குருநாதர் மரியாதைக்குரிய மாஸ்டர் ஸி.வி.வியிடமிருந்து சாஸ்திரியார், கற்ற 'பிருக்த ரஹித தாரக ராஜயோகா' நமது மூதாதையர் அறிந்த யோகா முறையின் இருபதாம் நூற்றாண்டின் வடிவமே என்பது என் திடமான நம்பிக்கை. அந்த வகையில் இந்த யோகா முறையால் பலரது உடல்நோய், மனநோய்களைத் தீர்த்த சாஸ்திரியாரையும் ஒரு சித்த புருஷர் என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீசாஸ்திரியார் தமது குருநாதர் மாஸ்டர் ஸி.வி.வி. சமஸ்கிருதம் கற்காவிடினும் அம்மொழியிலுள்ள அரிய நூல்களின் சாரத்தை ஆங்கிலம் மூலம் கற்றறிந்தவர் என்பதாக விளக்கியிருப்பதை அத்தியாயம் 27ல் படிக்கும்போது அக்காலத்தில் சமஸ்கிருதம் வகித்திருந்த உயர் இடத்தைத்தான் இப்போது ஆங்கிலம் பெற்றிருக்கிறது என்பதை உணர முடிகிறது. தற்சமயம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிப்பதன் அவசியத்தையும் அது சுட்டிக்காட்டுகிறது என்பது என் கருத்து.

'இந்நூலைப்படிக்கும் அன்பர்களுக்கு மாஸ்டர் ஸி.வி.வி மற்றும் ஸ்ரீசாஸ்திரியாரின் அருளாசி கிட்டுவதாக' என வேண்டிக்கொள்கிறேன்.

ஜயவருடம் தைத்திங்கள் 25ம் நாள்

மயிலாப்பூர்,
சென்னை–04

வி. ராஜகோபால்

முன்னுரை

அறநெறிகளைப் பற்றி உயர்வாகப் பேசுகிற பலரை நாம் காண்கிறோம். அத்தகைய வெற்றுப் பேச்சுக்களால் சமுதாயம் பயன் பெறாது. தங்களது லட்சியங்களின்படி நேர்மையாக நடந்து கொள்கின்றவர்கள் பெரிய மனிதர்கள். அவர்களே உன்னதமானவர்கள். ஆன்மீகப் பாதைக்கு வழிகாட்டிகள்.

கபோத கதா – வரி 70, பக்கம் 22 வி.பிரபாகர சாஸ்திரி (1925)

நேர்மையான பணிகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், தெய்வீகத்தில் திளைத்திருப்பவரும், தன்னால் ஆவது ஏதுமில்லை எனவும் கண்ணுக்குத் தெரியாத தெய்வீகக்கரமே; தேவை உள்ளோருக்கும் அல்லல் படுவோருக்கும் உதவி புரிகிறது எனவும் உணர்ந்து அதன் பொருட்டு தன் திறமைகள், செல்வம் ஆகியவற்றை பயன்படுத்துபவரும் எவரோ அவரே உத்தம குணவான். அவருக்கு இங்குமட்டுமல்ல எல்லா இடங்களிலும் பேரானந்தம் கிட்டும்.

கபோத கதா–வரி 88, பக்கம் 27 வி.பிரபாகர சாஸ்திரி (1925)

மேற்கண்ட இரண்டு செய்யுள்களிலும் கல்விமானும், துறவியுமான ஸ்ரீ வேட்டூரி பிரபாகர சாஸ்திரியார் என்ற மேன்மையான மனிதரின் சிறந்த பண்புகள் உள்ளடங்கி இருக்கின்றன.

ஆன்மீகமும் பல்துறைப் புலமையும் ஸ்ரீ சாஸ்திரியாரிடம் அமைந்துள்ள பிரிக்க இயலாத இரு இயல்புகள். அவ்விரண்டும் எப்போதுமே அவரது ஆன்மாவின் உள்ளேயும் வெளியேயும் இணைந்தவாறு இருப்பவை. அவருடைய ஆன்மாவுக்கு உரமூட்டும் ஆன்மீக குருவான மரியாதைக்குரிய கும்பகோணத்தில் வாசம் செய்த ஸி.வி.வியின் (கஞ்சுபாடி வெங்கட்ராவ் வெங்காசாமிராவ் காரு) அருள் தான் அதற்குக்காரணம். (அந்த குருநாதர் மீது இந்த சிஷ்யருக்கு

அபரிமிதமான பக்தி). அதனால், அடிக்கடி தனது பெயரை அவருடைய ஆசானாக இருந்த 20ஆம் நூற்றாண்டின் இலக்கிய ஜாம்பவானான ஸ்ரீசள்ளபிள்ள வெங்கட சாஸ்திரியாரின் பெயரோடும், தான் கடைசியாகப் பணிபுரிந்த கல்வி நிலையங்கள் இருந்த திருப்பதியில் அருள் பாலிக்கும் ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமியின் திருநாமத்தோடும் இணைத்துச் சொல்லி தன்னை அடையாளப் படுத்திக்கொண்டார். 1940களில் திருப்பதிக்கு யாத்திரை செய்தவர்கள் கீழ்க்கண்ட இரண்டு காரணங்களுக்காக அங்கு சென்றார்கள் என்றே சொல்லலாம். ஒன்று – ஏழுமலை ஆண்டவனின் தரிசனம். இரண்டு – அடிவாரப் பல்கலைக்கழகம் சென்று ஸ்ரீசாஸ்திரியாரைச் சந்தித்து தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொள்வது. அக்காலத்தில் சமுதாயத்தினர் அவரிடம் வைத்திருந்த மதிப்பு அத்தகையது.

1948ல் தனது அறுபத்துஒன்றாம் பிறந்த நாளின்போது திருப்பதியில், தான் வழக்கமான காலை நேரப் பிரார்த்தனை செய்கையில் உள்ளுணர்வு உணர்த்தியபடி, தனது சுயசரிதையை அவா் எழுதத் தொடங்கினார். அந்த முயற்சியில் அவருக்கு மஹாத்மா காந்தியின் சத்திய சோதனை முன் மாதிரியாக இருந்தது. உண்மையில் சாஸ்திரியாரின் சுயசரிதம் அவருடைய வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை வரிசையாக தொகுத்துக்கூறுவது அல்ல. அது தன் குருநாதரின் அருட்சக்தியை உள்வாங்கிய அவரது வாழ்க்கை பற்றிய தெய்வீகப்படைப்பாகும்.

குருநாதர் ஸி.வி.வி. யின் 'பிருக்த ரஹித தாரக ராஜயோகா' என்பது இப்பூமியில் உள்ள மனித இனத்திற்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கக்கூடிய வரம் போன்றதாகும். இதை பயபக்தியுடன் கடைப்பிடிப்பவர்களுக்கு அவை எல்லாம் கிட்டும்.

ஸ்ரீ சாஸ்திரியார், அந்த குருநாதரின் முக்கிய சீடர்களுள் ஒருவராகவும் அவருடைய யோகா வரிசையில் ஒரு ஊடகமாகவும் (எண். 330) 1916ல் தீக்ஷை கொடுக்கப்பட்டார். அதிலிருந்து, அவருடைய யோகா பயிற்சி காலகட்டத்தில் ஸ்ரீசாஸ்திரியார், ஸித்தி கிடைக்கப் பெற்றார். அது அவருக்காக மட்டுமல்ல, அவரை நாடி வரும் நூற்றுக்கணக்கானவருக்காகவும் தான். அவரை, ஆறுதலுக்காகத் தேடி

வந்தவர்களுக்கு அது கிடைத்தது. அவர் கருணையும் தியாக மனப்பான்மையும் ஒன்றிணைந்த பூரணவடிவம். யோகா என்பது அவரைப் பொருத்தவரை எல்லையற்றதும் இதயத்திலே இருப்பதுமாகும். அந்த ராஜயோகத்தைப் பரீட்சித்துப் பார்த்தவர்கள் அதை உணர்ந்தார்கள் – உணர்வார்கள்.

'பிரக்ஞா பிரபாகரம்' தெலுங்கு மொழியில் எழுதப்பட்டிருந்ததால் தெலுங்கு அறியாத வாசகர்கள் அதைப் படிக்க இயலாதது குறித்து ஏமாற்றம் அடைந்தனர். ஆகவே, அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம் என்ற எண்ணம் எனக்கு உதித்தது. எனினும் சாமானிய வாசகர்கள் மூல மொழியினால் பெறும் தெளிவை, மொழி பெயர்ப்பில் கொண்டு வருவது கடினம் என்பதை நான் அறிவேன். ஆனாலும் இந்தப் பணியை 20.08.1978ல் (ஸ்ராவண பஹுஊள த்விதீயா) தொடங்கி 23–1–1979ல் முடித்தேன். நான் மொரிஷியஸ் அரசில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த போதிலும் இந்த மொழிபெயர்ப்புப் பணியை தினமும் ஒருபக்கமாவது, இல்லாவிடில் சில வரிகளையாவது செய்வது என சபதம் எடுத்துக்கொண்டேன். மொழி பெயர்ப்பு பூர்த்தியானவுடன் 1980 அக்டோபரில் இந்தியா திரும்பி கை எழுத்துப் பிரதிகளை தட்டச்சு செய்வதற்காக கொடுத்தேன். எனது மூத்த சகோதரர்கள் டாக்டர் வி. சுந்தரமூர்த்தி, ஸ்ரீகுருப்பிரசாதம், எனது பெரியப்பா மகன் ஸ்ரீவி.ஆஞ்சநேயலு, சகோதரி மகள் ஸ்ரீமதி யோக ஜ்யோத்ஸ்னா ஆகியோர் தட்டச்சு செய்யப்பட்ட பிரதிகளில் பிழைதிருத்தம் செய்யும் பணிகளை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் தேவையான இடங்களில் நல்ல மாற்றங்களையும் செய்தனர். அதற்காக அவர்களுக்கு நான் மிகுந்த நன்றி செலுத்த வேண்டியவனாக இருக்கிறேன். அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக வெறும் நன்றி தெரிவிப்பது போதாது. இந்தப் பணி முழுமையுமே என்னுடையது என்பது போல அவர்களுடையதும் ஆகும் என்று கூறுவதுதான் சரியாக இருக்கும்.

என் சகோதரர் ஸ்ரீ.வி.குருப்பிரசாதம் தீவிரமாக மாஸ்டர் யோகாவைப் பின்பற்றுபவர். அவர் 'நம்பிக்கையின் சான்றாவணம்' என்ற முகவுரையை இந்த நூலுக்காக எழுதிக்கொடுத்தமைக்காக அவருக்கும் எனது இதய பூர்வமான நன்றி. என் மரியாதைக்குரிய சித்தப்பா டாக்டர்

வி. சந்திரசேகர சாஸ்திரி (வயது 92), குருநாதர் ஸி.வி.வியின் நேரடி சீடர். அவர் வழங்கிய அறிவுரைகள்–ஆசிகளுக்காக அவருக்கு நான் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். இந்த நூல் வெளிவர உதவிய தெலுங்குப் பல்கலைக்கழகம் மற்றும் அச்சிட்டோர், சம்பந்தப்பட்ட கலைப்பணியாளர்கள் ஆகியோருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். என் முன்னுரையை, ஸ்ரீகுஷ்வந்த்சிங் தன் படைப்பு ஒன்றில் மேற்கோள் காட்டிய 'எல்லா வீலர் வில்காக்ஸ்' மற்றும் 'ஹஃபிஸ்' ஆகியோரின் சிந்தனைகளை எடுத்துக்கூறிவிட்டு நிறைவு செய்கிறேன்.

'எத்தனையோ கடவுள்கள்; எவ்வளவோ கோட்பாடுகள், எத்தனையோ பாதைகள் வளைந்தும், நெளிந்தும் செல்கின்றன. ஆனால் சோகத்தில் உள்ள இந்த உலகுக்கு தேவைப்படுவது எல்லாம் கருணையைக்காட்டும் கலை மட்டுமே'.
–எல்லா வீலர் வில்காக்ஸ்

மகிழ்ச்சி மட்டும் தான் நலமானது. தயவு செய்து இங்கே மகிழ்ச்சியுடன் இருங்கள், மகிழ்ச்சியுடனே இருப்பதற்கு உகந்த நேரம் இதுவே. மகிழ்ச்சிக்கான வழி மற்றவர்களுக்கு உதவி புரிவதே. மற்ற மனிதரை நோகடிக்காதீர்கள். –ஹஃபிஸ்

எதைப்போதித்தார்களோ அதன்படி அவர்கள் இருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. அதைப்போல நாம் அனைவருமே இந்த லட்சியங்களைக் கடைப்பிடிப்போமா என்பதையும் நான் அறியேன். ஆனால் ஸ்ரீசாஸ்திரியாரின் வாழ்க்கை, அத்தகைய கருணை–உதவிபுரியும் தன்மை ஆகியவை நிரம்பி, ஒளி வீசும் உதாரணமாகத் திகழ்கிறது. அதை அறிந்து கொள்வதுதான் இப்போதைய உடனடித்தேவை. தனிமனிதரின் மீட்சி என்ற நிலையிலிருந்து "சமுதாய சம உரிமை" என்னும் அளவுக்கு கால ஓட்டம் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிறது.

நம் அனைவருக்கும் மாஸ்டர் ஸி.வி.வி. அவர்களின் நல்லாசி கிட்டுவதாக.

வி. ஆனந்த மூர்த்தி.

02.08.1991
ஹைதராபாத்

(குறிப்பு: ஆங்கிலப் பதிப்பில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

மாஸ்டர் ஸி.வி.வி.யின் ஆசிகளுடன்

பெரிய மனிதர்களின் வரலாறுகள், எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டுபவையாக உள்ளன. ஸ்ரீவேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் சுயசரிதையான 'பிரக்ஞா பிரபாகரம்' அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த நூலில் எழுதப்பட்டுள்ள அவரது அனுபவங்கள் ஒவ்வொரு விதத்திலும் மிக மதிப்பு வாய்ந்தவை. அவருடைய தன்னலமற்ற வாழ்க்கை, மனித சமுதாயத்திற்கு அவர் புரிந்த ஆரவாரமற்ற சேவை, ஒரு ஒளிகாட்டும் விளக்கு. விரிவாகவும் நுட்பமாகவும் விவரிக்கப்பட்டுள்ள அவரது அனுபவங்கள் ஆன்மீக ரீதியிலும் தார்மீக ரீதியிலும் உள்ளபடியே 'மிகப்பெரிய உந்து சக்தி' எனலாம். அவர் என்ன சொன்னாரோ, என்ன எழுதினாரோ அதன்படியே அவர் வாழ்ந்தும் காட்டினார். ஆகவே, அவரது வாழ்க்கை நம்பகத்தன்மை மிக்கதாகும்.

ஒரு கவிஞர் என்ற முறையில் அவருக்கு ஒரு தனித்தன்மை இருந்தது. அவரது எண்ண ஓட்டங்கள் 'தூய்மை, அணிநயம், பாரம்பர்யப் பண்பு' ஆகியவற்றை பிரதிபலித்தன.

தெலுங்கு மொழியில் உள்ள ஸ்ரீவேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் சுயசரிதையை தெலுங்கு பேசாத மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் 'பிரக்ஞா பிரபாகரத்தை' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஸ்ரீவி. ஆனந்த மூர்த்தியின் செயல் பாராட்டுக்குரியது.

மாமனிதர்களின் சரிதங்கள் வருங்கால சமுதாயத்தினருக்கு தூண்டுதலாக இருந்து அவர்களை உன்னதமானவர்கள் ஆக்கக்கூடிய பொக்கிஷங்களாகும். உரிய காலத்தில் ஸ்ரீபிரபாகர சாஸ்திரியாரின் அனைத்து எழுத்துக்களையும் ஸ்ரீவி. ஆனந்த மூர்த்தி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும் என வாழ்த்துகிறேன். இந்த நல்லவேளையில், எனது மரியாதைக்குரிய சகோதரர் ஸ்ரீவேட்டூரி பிரபாகர சாஸ்திரியாருக்கு எனது பணிவன்பை தெரிவித்துக்கொள்வதோடு,பிரபாகர சாஸ்திரி நினைவு அறக்கட்டளைக்கும், ஸ்ரீவி. ஆனந்தமூர்த்தியின் முயற்சிகளுக்கும் ஆசிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒப்பம்) டாக்டர் வேட்டூரி சந்திரசேகர சாஸ்திரி

ஆகஸ்ட் 2, 1991

ஜூபிலி ஹில்ஸ் ஹைதராபாத்

(குறிப்பு: ஆங்கிலப் பதிப்பில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

மாஸ்டர் ஸி.வி.வி.க்கு வணக்கங்கள்
முகவுரை

உண்மையின் ஒரு வெளிப்பாடு

ஸ்ரீ வி.பி.எஸ் (வேட்டூரி பிரபாகர சாஸ்திரியார்) 23–6–1916ல் (ஊடகம் எண். 330) “பிருக்த ரஹித தாரக ராஜயோகவில்’’ தீக்ஷை கொடுக்கப்பட்டார். அது ஒரு புதிய நேரடி பரீட்சார்த்த யோக முறையாகும். அதை தொடங்கியது மிகுந்த மரியாதைக்குரியவரும் வணக்கத்திற்குரியவருமான கும்பகோணம் குருநாதர் (மாஸ்டர் ஸி.வி.வி) ஆவார். இது நேரடியான ஒரு யோக முறையாகும். ஏனெனில் அது மூலத்திலிருந்தே வழிகாட்டப்படுகிறது. அதை ஒரு பரீட்சார்த்த யோக முறை எனலாம். ஏனெனில் அது அன்னை வெங்கம்மா என்ற ஊடகம் வழியே பெறப்பட்ட அனுபவங்களுக்கு இசைந்து, குருநாதர் ஸி.வி.வி. செய்த பரிசோதனைகளைச்சார்ந்த முடிவாக இருக்கிறது. அது ஒரு நூதனமான யோகாமுறை. அதனுடைய லட்சியமும் அதை அடைவதற்கான வழி முறைகளும் தனித்தன்மையானவை. அதற்குமுன் அது போன்ற பரிசோதனைகளோ, திட்டமிடப்படுதலோ செய்யப்பட்டதில்லை.

தன் இளமைக்கால உத்வேகத்தோடு ஸ்ரீவி.பி.எஸ்., குருநாதர் ஸி.வி.வி.யின் பெருமைகளைக்கூறும் கவிதைகளைப் புனைந்தார். ஆனால் கவிதைகள் புனைவதில் அவருக்கிருந்த ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கண்ட குருநாதர் 'அவர் தன்னை முற்றிலும் உணரும் வரை அவ்வாறு செய்யக்கூடாது' என்று கண்டனம் தெரிவித்தார். “நீ என்னை பரிபூரணமாக உணர்ந்து கொள்ளும் வரை என்னைப் பற்றி விவரிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளாதே!. அவ்விதம் உணர்ந்து கொண்டு விட்டால் அதற்கான தேவையே இருக்காது’’ என்பது அவரது அறிவுரை. அதன் பிறகு சீடர் தன் ஆர்வத்துக்கு கடிவாளம் போட்டு நிறுத்திவிட்டு, குருநாதரின் அறிவுரைகளை இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்தார். தனது ஷஷ்டி அப்தபூர்த்திக்குப்பிறகு ஸ்ரீ வி.பி.எஸ். 'தான் முழுமையான அறிவு பெற்றுவிட்டோம்; எதையும் வெளியிடலாம்' என்ற உணர்வை அடைந்தார். தனது உள்மனதின் குரலின்

அறிவுறுத்தலினால் சுய சரிதைக்கான பூர்வாங்கப் பணிகளை செய்யத் தொடங்கினார். சுயசரிதைகள் என்பது பெரும்பாலும் ஒருவர் தனது அனுபவங்களைப்பற்றிய சுயபரிசோதனைகள் செய்வதாகவே இருக்கும். மஹாத்மா காந்திக்கு அது “சத்திய சோதனை”யாக இருந்தது. ஸ்ரீ வி.பி.எஸ்ஸுக்கு அது 'அறியாமையிலிருந்து தான் எப்படி விடுபட்டு ரட்சிக்கப்பட்டோம்' என்பது பற்றிய அனுபவங்களை விளக்குவதாக இருந்தது. அந்த விளக்கத்தின் தொடக்கமே அவரைப்பற்றிய அறிவிப்பாகவும் படிப்போரை ஈர்ப்பதாகவும் இருந்தது. “உள் மனதில் உறைந்திருக்கும் ஞானத்தை அளிப்பதும் சகல நோய்களிலிருந்தும் மீட்க வல்லதும், பெரியதற்கும் பெரியதான அந்த தெய்வீக வழிகாட்டியின் பொற்பாதங்களில் நான் புகல் தேடுகிறேன். 'பரிபூரணம் என்பது உண்மை, ஞானம் மற்றும் நிரந்தர பேரானந்தம் ஆகியவற்றின் வெளிப்பாடு' தான். என்னுடைய ஜீவன், அறியாமை என்னும் காட்டில் சிக்கி நிரந்தர பேரானந்தத்தை அடையும் பாதைக்கு எதிராகச் சென்றது. இந்த பூர்வாங்கத்தைப் பற்றி நான் விளக்க முயல்வதன் நோக்கம் என் நண்பர்களுக்கு நான் எவ்விதம் இந்த சிக்கலிலிருந்து விடுபட்டேன் என்பதை கூறுவதுதான்” இப்படித் தொடங்கும் அந்த விளக்க உரை கீழ்வருமாறு செல்கிறது.

“என் 25ஆவது வயதில் நான் ஒரு கொடிய உடல் நோயால் பாதிக்கப்பட்டேன் எல்லாவிதமான மருத்துவ சிகிச்சைகளும் அதற்கு நிவாரணம் தரவில்லை. நான், பேராசிரியர் போதராஜு நரசிம்மம் பந்துலுகாருவின் மூலம் கும்பகோணம் கஞ்சுபாடி வெங்கட்ராவ் வெங்காஸ்வாமிகாருவின் பெருமையை அறிய நேர்ந்தது. 'இந்த யோக முறையின் குருநாதர் ஸி.வி.வி.' என்று அறியப்பட்ட அந்தப் பெரிய மனிதரால் இந்த யோக முறையில் தீக்ஷை அளிக்கப்பட்டேன். அவர் தந்த யோக சிகிச்சை மூலம் நான் தேக ஆரோக்கியத்தை அடைந்தேன். அதிலிருந்து இந்த யோக முறை ஒன்றுதான் மீட்சிக்கான ஒரே வழி என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அவரிடமிருந்து, நான் வாழ்க்கை என்னும் புத்தகத்தை படிக்கக் கற்றுக்கொண்டேன். நம் உள் மன ஆழத்திற்கு சித்தத்தை செலுத்தச்செலுத்த, முடிவான திரும்புமுனைப் புள்ளியை அடையமுடிகிறது. அந்த திரும்புமுனையே நமது தூல உடம்பின் மையமாகிய குண்டலினி அல்லது மூலாதாரம். அதுவே உன்னதமான

சிருஷ்டி கர்த்தாவின் இருப்பிடமான மூலாதாரம். மூத்ரபுரீஷகோசத்திற்கிடையே அமைந்துள்ளது என்பதை அறிவது ஆச்சர்யமாக இருக்கும்.

ஒரு மரத்தின் நிழல் காலை வேளையில் தனித்து மரத்திற்கு வெளியே நீண்டு, இருப்பது போலத் தோன்றும். நண்பகலில் அதுவே மரத்தோடு இணைந்திருப்பதாக காணப்படுகிறது. அதுபோலத்தான் நம் உள்ளிருக்கும் உயரிய தெய்வாம்சத்திலிருந்து பௌதிக வேறுபாடுகள் தொடக்கத்தில் வித்தியாசப்பட்டு காணப்படுகின்றன. தொடக்கத்தில் வேறுபாடுகளுடனும் வித்தியாசங்களுடனும், தனித்துத் தெரியும் பௌதிக உள்ளுணர்வு, முடிவில் உள்ளிருக்கும் தெய்வீக உணர்வுடன் இணைந்து விடுகிறது. அப்படி இணையும்போது பௌதிக மட்டத்தில் காணப்படும் வேறுபாடுகளும் வித்தியாசங்களும் மறைந்து விடுகின்றன. உள்ளத்தில் ஒற்றுமையும், ஒருமையும் உண்டாகின்றன.

ஸ்ரீ.வி.பி.எஸ் 29.08.1950ல் பூத உடலை நீத்தார். அவர் எழுதத் தொடங்கிய சுயசரிதையின் வரைவு வடிவம் திடுமென நின்று போனது. மேலோட்டமாகப்படிக்கும் வாசகருக்கும் அப்படியே தோன்றலாம். ஆனால் உண்மையில் ஸ்ரீ.வி.பி.எஸ், குருநாதர் ஸி.வி.வி.யின் கருணையால், எவ்வித பௌதிக மாற்றங்களிலிருந்து காப்பாற்றப்பட்டார் என்பதை விளக்குவதாக இருந்தார். இந்த விளக்கம் அவர் இந்த விஷயத்தில் படிப்படியாகப் பெற்ற அனுபவங்களையும் பற்றியது. 'தான் உடல் நலிவுற்றது, அதிலிருந்து எப்படி மீண்டு நலம் பெற்றது, இந்த யோகாமுறை பற்றி படிப்படியாக தெரிந்து கொண்டது எப்படி' என்பன எல்லாம் பற்றி தான் எழுதி முடித்தவற்றில் அவர் விளக்கி இருக்கிறார். அந்த அளவுக்கு அவர் விளக்கி இருப்பது தேவையைப் பூர்த்தி செய்கிறது. இதே போன்று அவர் தனது நண்பர்கள் பெற்ற அனுவங்களையும் நிவாரணம் பெற்றதையும், வளர்ச்சி அடைந்ததையும் அவர்கள் கூறியபடியே விளக்க விரும்பினார். இந்தப்பகுதியை 'குருபூஜா' எனப் பெயரிட்டழைக்கவும் அவர் விரும்பினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த விஷயத்தில் அவர் விஷயங்களை சேகரித்தாலும் அவற்றை தொகுப்பது நடக்காமலேயே போயிற்று. 'அவரது நோய், எவ்விதம் அவர் யோகா தீக்ஷை பெற்றார், அதன் வளர்ச்சியின் போது அவர் பெற்ற அனுபவங்களால் கிட்டிய

தெய்வீகக் கண்ணோட்டம், குருநாதர் அளித்த செய்திகள் ஆகியவை' பற்றி மட்டுமே அவரால் விளக்கப்பட முடிந்தன. அந்த அளவுக்கு இச்செய்திகள் அடுத்த தலைமுறையைச் சென்றடைந்தன. ஆழ்ந்து படிப்பவர்களுக்கு இந்த நூல் இப்பொழுது கூட, இந்த யோகாவில் தீக்ஷை பெற்று நம்பிக்கையும் பக்தியும் கொண்டால் அதன் பின்னர் அனுபவங்களையும் அடைய உதவுகிறது. இது நிலைபெற்ற, அனைவரும் அடைகின்ற பொதுவான அனுபவம்.

குருநாதர் ஸி.வி.வி.யின் தெய்வீகச்செய்திகள் சமகாலத்திற்குப் பொருந்துவதாகவும் மேலான ஒரு நோக்கத்தைக் கொள்ளும் நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளன. இப்போது மட்டும் அல்ல எதிர்காலத்திற்கும் அவை பொருந்தும். யோகாமுறையைப் பயின்று அப்யசித்து வளர்ச்சி பெற்றதின் அடையாளம் சுயஅனுபவம் தான். அந்த அனுபவம் பெறுவதற்கு சாதனை அவசியம். சாதனைக்கு நம்பிக்கை தான் உந்துசக்தி. சாதனைக்கு ஸ்தூல உடல் இன்றியமையாதது. ஏனெனில் அனுபவத்தை உடலில் உள்ள மனதளவில் தான் உணர முடியும். ஒரு பிறவியில் அடையும் அனைத்து அனுபவங்களும், இறப்புக்குப் பின் மறைந்து விடும். அடுத்த பிறவியில் புதிய அனுபவங்கள் மீண்டும் கிட்டும். சாதனை, உடல் அளவில் உள்ள குறைகளை நிவர்த்திக்கிறது; தூய்மைப் படுத்துகிறது. தூய்மைப்படுத்துதல் இன்றி வளர்ச்சி இல்லை. வளர்ச்சி இல்லையேல் லட்சியத்தை எட்ட முடியாது. சாதனையினால் சுத்தி கிட்டுகிறது. சுத்தியினால் உத்தாரணம் வருகிறது. அதனால் கிடைப்பது உத்தாரணசித்தி. 'இவற்றிற்கெல்லாம் திருவடிகளில் சரணாகதி அடைவது, குருநாதா ஸி.வி.வி.யின் அறிவுரைகளை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் பின்பற்றுவது ஆகிய இவைதான் வழி; 'பக்தியுடன் பயிற்சி செய்தால் மட்டுமே லட்சியத்தை அடைய முடியும்' என்கிறார் குருநாதர். “யோகா பயிற்சியை குறைபாடுகள் இன்றி முழுமை செய்வதற்கு நாளாகலாம். ஆனால் அதில் தோல்வி என்பதே இல்லை” என குருநாதர் பிரகடனம் செய்கிறார். மேலும் 'இது ஒன்றே வழி; வேறு சிறந்த வழி இல்லை' என்றும் அவர் சொல்கிறார். இது வரை பெற்ற வளர்ச்சியும் அனுபவமும் சரியாகத்தான் உள்ளன. தூய்மையான, குறையற்ற, உள்மனதினுடைய குரலின் வழிகாட்டுதலைப் பொறுத்துதான் அந்த வழி

அமையும். தீவிரமான ஆர்வத்துடன் 'என்ன? எது?' என்று கேட்டறிந்து அவ்வழிகாட்டுதலை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பின்பற்ற வேண்டும். உள் மனதின் குரலில் அடைக்கலம் தேடுவதன் மூலம் அதைப் பயிலலாம். நம்பிக்கையுடன் அணுகும் போது சாதகனின் வளர்ச்சியைப் பொறுத்து வழிகாட்டுதல் கிடைக்கும். சாதகன் விரும்பிய அளவு கிடைக்காவிடினும் தேவைப்படும் அளவு கிடைக்கும்.

“வாகனம் சென்று கொண்டிருக்கும் போதே அதைப் பழுது பார்க்க வேண்டும். அதை நிறுத்திப் பிரித்துப் பார்த்து பழுதுபார்க்கலாகாது. அவ்விதம் செய்தால் வாகன ஓட்டியின் இயல்பு வாழ்வுக்கு தடங்கல் ஏற்படும். துறவு தான் வழி என்று இல்லை. இயல்பு வாழ்க்கைக்கு பாதகம் ஏற்படும் எதுவும் தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப வாழ்வு தொடரப்படவேண்டும். நீங்கள் சன்யாசி ஆக வேண்டாம். “கும்பகோணத்தில் என் அருகிலேயே நீ இருக்க வேண்டும் என்ற உன் விருப்பம், என் எதிரிலேயே இருந்து பலன் பெற வேண்டும் என்பதற்காகத்தானே? நான் எப்போதும் உனக்கு நன்மை செய்வதற்காகவும் உதவுவதற்காகவும் உன்னிலேயே இருக்கிறேன். என் எதிரில் இருந்து நீ, என்ன செயல்களை, என்ன சக்தியை உணர்ந்தாயோ அவற்றை நீ எங்கே இருந்தாலும் உணர்வாய். காலையில் செய்யப்படும் பிரார்த்தனையின் விளைவு மாலை வரை தொடர்ந்து இருக்கும். எந்த விதமான முன்னேற்றம் தேவைப்படுகிறதோ, அது கிடைக்கும்.

“ஒரு செயல்பாடு நடக்கையில் அதைச் செய்யும் சக்தி மின்சாரம் போன்றதல்ல. மின்சாரத்தை அளவுக்கு அதிகமாக உபயோகித்தால் தீங்கு விளையும். ஆனால் இந்த யோகமுறையில் இயங்கும் சக்தி ஒரு நிலை பெற்ற சக்தி அல்ல. ஆனால் தீவிரமாக இயங்கும் உள்ளுணர்வாகும். அது தீங்கு விளைவிக்காது. நீ அதை அதிகமான அளவில் விரும்பினாலும் அது நடக்காது. நீ கேள்வி கேட்டு அறிய தீவிரமாக விரும்பினால் அதுவே போதும். உன் உள்மனதின் குரல் உனக்கு வழிகாட்டும். நீ அதை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் பின்பற்றினால் படிப்படியாக நீ எங்கிருந்து அந்த வழிகாட்டுதலைப் பெறுகிறாய் என்பதை அறிய முடியும்.

“எந்த தனி மனிதனாலும் குறைகளற்ற நிலையை அடைய முடியாது. அன்பு என்பது தன்னிலிருந்து புறப்பட்டு சொந்தக்காரர்கள், சுற்றம் என மாறி, உலகளாவிய அளவில் பரவக்கூடியது. உன் அன்பு பரவக்கூடியதாக இல்லாமல் இருந்தால் நீ பரிபூரணத்தை அடைய முடியாது. அதை அடைந்த ஒருவனால்தான், தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டு மற்றவர்களையும் திருத்த முடியும். பரிபூரணம் என்பது ஒருமையானது. பிரிக்க முடியாதது. உலகளாவியது. இந்த பரிபூரணத்தை அடைய, நீ பரிபூரணத்திற்குள் விரிவடைய வேண்டும். மற்றவர்கள் மீது நீ கொள்ளும் அன்பும் விரிவடைய வேண்டும். அது தவிர்க்க இயலாத ஒரு பரிபூரணமாகும். அத்தகைய ஒரு மனப்போக்கை நீ வளர்த்துக்கொள்ளா விட்டால் நீ உலகியல் வாழ்வில் சிக்கி போராடிக்கொண்டு தான் இருப்பாய். நீ வெளியே காணும் வேறுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும், அகத்தே ஒருமையையும், ஒற்றுமையையும் நீ காணும்படி வைக்கும். அப்போதுதான் குறையற்ற நிலையை அடையமுடியும். அதுவே இந்த யோகாமுறையின் குறிக்கோள், லட்சியம். நமது குறையற்ற நிலை எதிர்காலத்தில் அடங்கியது. கடந்த காலத்தில் எட்டப்படவில்லை. கடந்த காலத்தின் அடிப்படையிலான அபிவிருத்தி, எதிர்காலத்தில் குறைகளற்ற நிலையை நீ அடைய வழிவகுக்கும்.

“நாம் தெய்வீக நிலையை நெருங்க நெருங்க, நமது ஞானமும் துல்லியமானதாகவும் குறையற்றதாகவும் ஆகும். மனிதன் வளர்ச்சி பெறப்பெற, தன்னை முறையாகவும் சரியாகவும் வழி நடத்தும் உள் மனதின் குரலைக்கேட்க அவனால் இயலும். அந்த வழியில்தான் அனைத்து ஞானமும் கிடைக்கத் தொடங்குகின்றது. மனிதன் வளர்ச்சி பெறும் போது அவனது எண்ணம், பேச்சு, செயல்பாடு எல்லாம் ஒருமைப்பட்டு, தூய்மை அடைந்து, குறைபாடுகள் அற்ற நிலையை அடைகின்றன. அதுவரை ஞானம் குறைபாடுகள் உள்ளதாகவே இருக்கும். பிரபஞ்சம், சிருஷ்டி ஆகியவற்றின் ரகசியம் தொடர்பாக, அது இன்னும் கூடுதலாகவே இருக்கும். இந்த திசையில் ஞானத்தைப்பெற முயற்சிகள் செய்யப்படுகின்றன. நாடி என்பதும் இந்த திசையில் இது போன்ற ஒன்று தான்.

“நாடி அல்லது இதர வெளி மூல ஆதாரங்களை நம்பத் தொடங்கினால் நீ உள் மனதின் குரலைக் கேட்க இயலாது. வெளி மூல

ஆதாரங்களை சார்ந்திருப்பது கைவிடப்பட வேண்டும். உள் மனதின் குரலைக்கேட்க முயற்சி செய். பின்னர் அதன் வழிகாட்டுதலின்படி நட. இறுதியில் சுயஅனுபவமே வளர்ச்சியின் தரக்குறியீடு. நீ என்னுடைய சீடனாக ஆக எது காரணமாக இருந்ததோ அதனைப் பின்பற்று. நீ நாடி பற்றி படித்த பின்பு எனது சீடனாகவில்லை. என் சீடனாக ஆன பின்பு தான் நீ நாடிபற்றித் தெரிந்து கொண்டாய். என் சொற்களும் செயல்களும்தான் எனது அதிகாரமாகும். அவை வெளி ஆதாரங்களைச் சார்ந்திருக்கவில்லை. நாடியின் அடிப்படையில் என் மீதும் என் செயல்கள் மீதும் நம்பிக்கை வைக்காதே.

“என் யோகா முறையை எவரும் முழுமையாகப் புரிந்து கொள்ளவோ, பற்றிக்கொள்ளவோ முடியாது. ஒரு ஆலமரத்தின் விதைக்கு எதிர்காலத்தில், தான் எப்போது, எந்த திசையில் கிளைவிட்டு வளரப் போகிறோம் என்பது தெரியாது. அது போன்றதுதான், இந்த உலகத்தின் சிருஷ்டியும் பரிணாம வளர்ச்சியும். இந்த யோக முறையும் அதே போன்றது தான். இதன் எதிர்கால வளர்ச்சி பற்றி கணிக்க முடியாது. இந்த யோகா முறையைப்பற்றி முழுமையான அறிவைப் பெறுதலும் அதன் வளர்ச்சி குறித்து முன் கூட்டியே நிச்சயமாக கணித்தலும் முடியவே முடியாது. எனக்கே கூட அது சிறிது சிறிதாகத்தான் வெளிப்பட்டது. இது வரை பெற்ற வளர்ச்சி சரியானபடியே உள்ளது. மேலும் உள்ள வளர்ச்சி இனி தான் தெரியும்.

தானாகவே அது பற்றிய கண்ணோட்டம் அமையும். அது வரை பொறுத்திரு. கொடுக்கப்பட்ட அறிவுரைகளை நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் இடைவெளியின்றி பின்பற்றி நட. குருநாதர் ஸி.வி.வி. ஒரு முறை ஊடகங்களிடம் “ஒரு விதை உங்களிடம் ஊன்றப்பட்டால் நீங்கள் தான் அதைப் பேணி வளர்த்து மரமாக்கி மலர்களும், பழங்களையும் பெற்று அனுபவிக்க வேண்டும்” என்றார்.

அவர் மேலும் “தான் அவர்களிடம் வெண்ணெயை கொடுத்திருப்பதாகவும் அவர்கள் தான் அதை நெய்யாக்க வேண்டும்” என்று உருவகமாகச் சொன்னார். அதை அர்ப்பணிப்பு உணர்வுடனும், நம்பிக்கையுடனும் தொடர்ந்து இடைவெளியின்றி செய்ய வேண்டும்” என்பதும் அவரது அறிவுரை.

'பிரக்ஞா பிரபாகரம்' என்பது குருநாதர் ஸி.வி.வி.யின் மீதும் அவருடைய யோகா முறையின் மீதும் ஸ்ரீ வி.பி.எஸ் வைத்திருந்த நம்பிக்கையின் விருப்பஆவணம். (Testament). அது இதைப் படிப்பவர்கள்மீதான நம்பிக்கையும் கூட. அது ஸ்ரீ வி.பி.எஸ். தன் குருநாதர் மீது கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை காட்டுகிறது. "குருநாதர் ஸி.வி.வி.யின் அளப்பரிய கருணை, முழு பக்தியும் நம்பிக்கையும் வைக்கும் போது உங்களை என்றென்றும் காத்து வரும். நல்ல ஆரோக்கியம், ஆனந்தமான வாழ்வு, பிரமிக்கத் தக்க தெய்வீக உணர்வு, ஆகிய மூன்றும் மழையெனப் பொழியும். இதற்கெல்லாம் சான்று நான்தான். இதை எல்லோருமே தெரிந்து கொள்ளுங்கள்" என்றார் ஸ்ரீ வி.பி.எஸ்.

ரோஜாவின் மொட்டு மலர்ந்து விட்டது. தன் முள்ளான இலைகளையும், தண்டையும் விட்டு அது நீங்கி விட்டது. தெய்வீகமான பேரானந்தம், சத்தியம், ஞானம் மகிழ்ச்சி ஆகியவற்றின் மணம் வீசத் தொடங்கி விட்டது. அது மனதை ஈர்ப்பதாகவும், கவர்ந்திழுப்பதாகவும் உள்ளது.

குருநாதர் ஸி.வி.வியின் பாதங்களின் அருகே அமரக் கொடுத்து வைத்து அவரைப் பின் பற்றுபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவரது போதனைகளில் நம்பிக்கை வைத்து அதன்படி நடப்பவர்களும் ஆசிகள் பெற்றவர்களே. குருநாதரின் (ஸி.வி.வி.) கண்ணோட்டம் அனைவருக்கும் நலன் தரவல்லது. அதைத்தவிர வேறுவழி இல்லை. குருநாதரின் தெய்வீக அருட்கருணை நம் அனைவருக்கும் ஆசிகள் வழங்கட்டும்.

வேட்டூரி குருப்பிரசாதம்

18.06.1991
ஹைதராபாத்

குறிப்பு :

இது குருநாதர் ஸி.வி.வி.யின் செய்திகள். பிரக்ஞா பிரபாகரம் மற்றும் பலவற்றில் கண்டுள்ளவற்றின் வார்த்தைக்கு வார்த்தையின்படியான மொழிபெயர்ப்பு அல்ல. அவருடைய தெய்வீகச் செய்திகளின் சாரத்தை தெரிவிப்பதற்கான எனது முயற்சியே இது.
(குறிப்பு: ஆங்கிலப் பதிப்பில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

எங்கள் மதிப்பிற்குரிய குருநாதர்

எங்களது மதிப்பிற்குரிய பெருமகன் (ஸ்ரீ வி.பி.எஸ்.) 'தெளிந்த அறிவுமிக்கவரும் விழிப்புணர்வும் ஆன்மீக சக்தியும் மிகுந்தவருமான மஹான்' பிரபாகர சாஸ்திரியாரின் யோக வாழ்க்கை பிரகாசமான அழகும், வீரியமான சக்தியும் பொருந்தியதாகும். அந்த வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட நோக்கம் கொண்டது. "இந்த உலகமே உறவுக்குள் உறவானது" என்ற தத்துவத்தை மெய்ப்பிக்கும் விதத்தில் அவர் வாழ்ந்து காட்டினார். அவர் இதயம் முழுவதுமே அன்பு நிறைந்ததாக இருந்தது. அவரது தெளிந்த அறிவு உயர்ந்த சக்தியைக்காட்டியது. அவருடைய பரிணாம வளர்ச்சிப்பாதையில் கண்ட, "என்றும் நிலைத்திருக்கும் பெருவாழ்வு அடைதல்" என்ற நிலையையே இன்று நாங்கள் "பிரக்ஞா பிரபாகரம்" என்ற இந்த நூலில் வெளிக்கொணர்ந்திருக்கிறோம்.

"நீ என்னை முழுவதுமாக அறிந்து கொள்ளுமுன் என்னைப்பற்றி புகழ் மொழிகளைக் கூற முயற்சிக்காதே. 'காலம் கனிவதற்காகக்காத்திரு'. அது தான் நீங்கள் எனக்கிட்ட கட்டளை. நான் அதற்குக்கட்டுப்பட்டவனாக காத்திருக்கிறேன். குருநாதரே! எனக்கு தரிசனம் தருவீராக! உங்கள் அருட்கடாட்சத்திற்கு தகுதி பெற்றவனாக என்னை ஆக்குவீராக".

மேலே கண்ட வரிகள் சாஸ்திரியார் கும்பகோணத்தில் இருந்த அவரது குருநாதரிடம் விண்ணப்பித்ததைக் குறிப்பதாகும். அம்மஹான் அசாதாரணமான ஒரு யோக முறையைக்கண்டு பிடித்ததுடன், தன் சீடர்களுக்கு இறவாப் பெருநிலையை வழங்கும் முடிவுடன் இருந்தவரும் ஆவார். இந்த யோக முறையில் சாஸ்திரியார் தீக்ஷை பெற்ற பிறகு, அவர் இரு முறை தன் குருநாதரின் சக்தி பற்றி சில கவிதைகளை எழுதியதாகத் தெரிகிறது. அது குருநாதருக்குத் தெரியவந்த போது தன்னைப்பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளும் வரை அவ்விதம் எழுதக்கூடாது என சாஸ்திரியாரை கண்டித்ததாகவும் கூறப்படுகிறது. முன்பு கூறப்பட்ட அந்த கவிதை அந்தச்சம்பவத்தை குறிப்பிடுவதாக உள்ளது. அதன் பிறகு சாஸ்திரியார் தன் குருநாதரைப்பற்றி எழுத முயற்சிக்கவே இல்லை.

1948ல் சாஸ்திரியாரின் ஷஷ்டிஅப்த பூர்த்தி (60 வயது) வைபவம் திருப்பதியில் நடந்தது. அந்த தினத்தில் பிரார்த்தனைகளின் போது

சாஸ்திரியார் தன் உணர்ச்சிகளை இவ்வாறு வெளியிட்டார்.

'இந்த தினத்தில் நான் அறுபது வயதை அடைகிறேன். தாயின் கருப்பையை அடைந்த பிறகு, நான் அறுபது வயதை அடைந்ததாகக் கருதுகிறேன். இந்த ஆண்டு முடிவடைந்ததும், நான் அறுபது வருடங்கள் என்ற சுழற்சியை பூர்த்தி செய்வேன். என் பதவியின் குறிக்கோள், நான் சிருஷ்டிக்கப்பட்டதன் நோக்கமாக எட்டப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

சாஸ்திரியார் தன் குருநாதரின் குரல் கூறுவதைக்கேட்டார். அது கூறியது. "நீ நேற்று வரை வெறும் பிரபாகரனாக இருந்தாய். இன்று முதல் பிரக்ஞா (விழிப்புணர்வு பெற்ற) பிரபாகரனாக ஆகிறாய். இனி நீ என்னைப்பற்றி ஏராளமாக எழுதலாம்.

சாஸ்திரியார் அன்றைய தினத்திலிருந்து "பிரக்ஞா பிரபாகரத்தை" எழுதத் தொடங்கினார். பிரக்ஞா பிரபாகரத்தை ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரு தொகுதிகளாக கொண்டு வர வேண்டும் என்பது அவரது திட்டமாக இருந்தது. ஒன்றில், இந்த யோகா முறையில் அவர் பெற்ற அனுபவங்களும், இன்னொன்றில் இந்த யோகா முறையால் பயன் பெற்ற அவரது நண்பர்கள் அடைந்த அனுபவங்களும் இடம் பெறும். இந்த நோக்கோடு அவர் எழுதத் தொடங்கி ஒரு அளவுக்கு நிறைவு செய்தார். தனது நெருங்கிய நண்பர்கள் மற்றும் சீடர்களிடமிருந்து அவர்கள் பெற்ற அனுபவங்களை இதற்காக அவர் கேட்டறிந்தார்.

ஏராளமான பணிகளுக்கும், செய்து முடிக்க வேலைகளுக்கும் இடையில் ஒவ்வொரு நாளும் இந்த நூலையும் எழுதி வந்தார். அன்னமாச்சார்யாவின் இசை விழாக்களை நடத்துதல், குமார சம்பவம், உத்தர ஹரிவம்சம் ஆகியவற்றின் மீதான விமர்சனங்களை எழுதுதல், அரிய கலைப்பொருட்களை சேகரித்து திருப்பதியில் ஒரு கலாச்சார அருங்காட்சியகத்தை அமைத்தல் ஆகிய பணிகளுக்கிடையே சாஸ்திரியாரால் இப்பொழுது வெளியாகியுள்ள இந்த முதல் தொகுதியை மட்டுமாவது எழுத முடிந்தது. இதற்கிடையில் கலைப்பொருட்களை சேகரித்து திருப்பதியில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கும் பணியில் அவர் ஓய்வில்லாமல் ஈடுபட்டதால் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு அவர் இறுதியை எய்த நேர்ந்தது. இந்த நூலுக்கான பணி முடிவடையாமல் போனது நமது துரதிர்ஷ்டம் தான். சோகத்தில் ஆழ்ந்திருக்கும் நமக்கு கடைசியாக கிடைத்தது இந்த நூல் மட்டுமே.

சாஸ்திரியார் மறைந்த முதல் ஆண்டு முடிவின் போது (1951) அவரது யோகா வாழ்க்கை தொடர்பான இந்த நூலை வெளியிடுவது எங்கள் நோக்கம்.

சாஸ்திரியாரை நான் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அறிவேன். 1939ல் அவர் சென்னையை விட்டு திருப்பதிக்கு செல்லப் புறப்பட்டார். அதிலிருந்து எப்போதாவது சென்னை வரும் நேரங்களில் எங்கள் இல்லத்தில் தான் தங்குவார். நான் அவரது யோக முறையின் மூலம் எனது உடல் நலத்தை மீண்டும் அடைந்ததிலிருந்து அவரைத் தீவிரமாகப் பின்பற்றத் தொடங்கினேன். நோய்வாய்ப்பட்ட பலர் மருத்துவ சிகிச்சையின் மூலம் நலம் பெற முடியாத நிலையில் இருந்து, யோகா முறையினால் நிவாரணம் பெற்றதை நான் அறிவேன். அவர்கள் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இப்போது இருக்கிறார்கள்.

சாஸ்திரியாரிடம் ஆன்மீக மனோ சக்தி எவ்வளவு ஆழ்ந்து பதிந்திருந்தது என்பதை நான் ஒரு சம்பவம் மூலம் எடுத்துக்காட்டுகிறேன். அன்னமாச்சார்யாரின் வர்தந்தி (மறைவு தினஆண்டுவிழா) முதல் முறையாக மிகுந்த ஆர்வத்துடன் திருப்பதியில் கொண்டாடப்பட்டது. பாகால வெங்கட (பி.வி.) ராஜமன்னார் (மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி) விழாவுக்கு தலைமை வகித்தார்.

இரண்டாம் நாளன்று ஸ்ரீமதி தங்குதூரி சூர்ய குமாரியின் இசை நிகழ்ச்சி நடந்தது. அதற்காக ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி இருந்தனர். ஆனால் அன்று கால நிலை சாதகமாக இல்லை. மேகக் கூட்டங்கள் திரண்டு மழை பெய்யும் போலத் தெரிந்தது. பெரிய காற்றும் சேர்ந்து அடித்தது. விழா நடக்கும் இடம் முழுவதும் தூசிப்படலமாயிற்று. ஆயிரக்கணக்கான பார்வையாளர்களில் பெண்களும் குழந்தைகளும் அதிகமாகக் காணப்பட்டனர். நெருக்கடி ஏற்பட்டு பெருங்குழப்பம் விளையுமோ என்பது போன்ற அச்சத்தை உண்டாக்கும் சூழ்நிலை உருவானது. இந்த பதட்டமான நிலையில் சாஸ்திரியார் எழுந்து ஒலி பெருக்கி அருகே சென்று “மழை வராது. ஒரே மனதோடு இங்குள்ளவர்கள் பிரார்த்தனை செய்து வேண்டிக்கொள்ளும்போது அதற்கு மாறாக மழை எப்படி வரும்? மேகக்கூட்டம் கலைந்து விடும். சுழற்காற்று தணிந்து போகும். அமைதியாக அமருங்கள். மழை வராது, வராது, வரவே வராது” என்று மூன்று முறை அறிவித்தார். என்ன

ஆச்சர்யம்! மேகங்கள் உடனே கலைந்தன. வீசி அடித்த காற்றின் வேகம் நின்றது. மழை வரவே இல்லை. அவரது மனோ சக்தி அவ்வளவு வலிமையானது என எவருமே அறிந்திருக்கவில்லை. இசை நிகழ்ச்சி நல்ல படியாக நடந்தேறியது. சாஸ்திரியாரின் ஆன்மீக சக்தி அத்தனை மகத்துவம் மிக்கது. இயற்கையின் மீதே வெற்றி கொள்வது என்பது இது தான்! இதைப்போன்று நமக்குத் தெரிந்த சாஸ்திரியார் பற்றிய நிகழ்ச்சிகள் பல!

சிரஞ்சீவித்துவத்தைப் பெற வைக்கும் யோகா முறையின் மகிமை பற்றி வார்த்தைகளால் விளக்க இயலாது. சாஸ்திரியாரின் இந்த நூலை வெளியிட நான் முன் வந்ததற்குக்காரணம் 'அச்சில் இது வெளியானால் சாஸ்திரியாரின் யோகா முறை பற்றியும் அதை உருவாக்கிய குருநாதர் ஸி.வி.வியின் ஆன்மீக உன்னதம் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவோருக்கு மிக உதவியாக இருக்கும்' என்பது தான். இந்த யோகா முறை பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் துணை புரியும் என நான் நம்புகிறேன்.

சாஸ்திரியாருடன் தனக்கு எழுந்த பழக்கத்தின் போது நிகழ்ந்த சம்பவங்களை "சிரத்தாஞ்சலி" என்பதாக எழுதி இருக்கும் கொத்த வெங்கடேஸ்வரராவுக்கு நாங்கள் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். அதில் பல முக்கியமான அனுபவங்களை அவர் விவரித்திருக்கிறார். சாஸ்திரியாரின் ஒரு சீடரான திம்மாவஜ்ஜல கோதண்ட ராமையா, இந்த வெளியீட்டைக்கொண்டு வருவதற்கு மிக அரிய உதவிகள் செய்துள்ளார். அவருக்கும் நன்றிகள்.

சென்னை

கர, ஸ்ராவண கம்பம்பாடி சத்யநாராயணா

பஹுளத்விதீயா

(பிரக்ஞா பிரபாகரத்தின் முதல் பதிப்பில் கம்பம்பாடியாரின் குறிப்புகள் உள்ளன. அதன் ஆங்கில மூலம் மணிமஞ்சரி தொகுதி–2 எண்–1ல் வெளியாகி உள்ளது. வாசகர்கள் படிக்க உதவியாக அதன் மொழி பெயர்ப்பை தந்துள்ளோம்).

அணிந்துரை

அன்பின் ஒரு காணிக்கை

*தன் நண்பர்களுக்காக தனது வாழ்வையே கொடுக்கும் ஒருவனுடைய அன்பை விட உயர்ந்த அன்பு வேறெதுவும் இல்லை. செயின்ட்ஜான்–**XV**.*

ஏசுநாதரின் இந்த உயரிய செய்திக்கு, ஸ்ரீ பிரபாகர சாஸ்திரியாரின் புனிதவாழ்க்கை ஒரு தலை சிறந்த எடுத்துக்காட்டு. அவருக்கு எல்லோரும் நண்பர்கள் தான். அதிலும் உடல் ஊனம், மனநோயுடன் செய்வதறியாது திகைத்திருப்பவர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள். அவர்களது துயரில் அவரும் பங்கு கொண்டு அவர்களது வேதனைகளை தன்னுடையதாகவே கருதி, அவர்கள் துயரைத்துடைக்க இரவும் பகலுமாக தவம் என்னும் அக்னிப் பிரவேசம் செய்து அந்த அனுதாப உணர்வால் கிட்டும் ஆத்மசக்தியால் அவர்களது துன்பங்களை துடைப்பார்.

அவர்களது இன்னல்கள் தீர உதவி செய்த பிறகும் கூட இனிமேலும் அவர்கள் துயர் அடையாதபடி கவனித்தவாறும் இருப்பார். அவர்களது முன்னேற்றத்தை கவனிப்பதோடு உதவி தேவைப்படின் மீண்டும் செய்வார். "துன்ப நேரங்களில் துணை புரிபவனே உற்ற நண்பன்" என்ற பழமொழிக்கேற்ற பண்பே இது. தெலுங்கு மொழியிலுள்ள மஹாபாரதத்தில், ஸ்ரீகிருஷ்ணரை நோக்கி கீழ்க்கண்டவாறு யுதிஷ்டிரர் கூறுவதாக சொல்லப்பட்டுள்ளது.

"ஓ மஹாத்மாவே. பூஉலக வேந்தரான பாண்டு மஹாராஜா எங்களுக்கு ஆபத்தை எதிர்கொள்ளவும், நன்மைகளைச் செய்யவும் உங்களைக் கொடுத்துவிட்டு இந்த உலகை விட்டு நீங்கிச் சென்றிருக்கிறார்"

சாஸ்திரியாரின் பாதுகாப்பு கிட்டியவர்கள் அவரைப்பற்றி இப்படித்தான் கூறுவார்கள் என்றால் அது மிகையல்ல. அவரால் மறுவாழ்வு அளிக்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன். நன்றி உணர்வினால் தூண்டப்பட்டு இருகரங்களையும் கூப்பி அவருக்கு என் அன்பினை காணிக்கை ஆக்குகிறேன்.

“தவத்தினால் நோய்களை எப்படிப் போக்குவது? மற்றவர்களின் நோயை ஒருவர் தவம் செய்து எப்படிப் போக்குவார்?” பலரும் நியாயமாக இப்படிக் கேட்பார்கள். நானும் அது போன்று கேட்பவனாகத் தான் இருந்தேன், அந்த அனுபவத்தை அடையும் வரை. அதனால் என் போன்றவர்களுடைய சந்தேகத்தை, அந்த அனுபவத்தினால் இப்போது தீர்க்க முயற்சிக்கிறேன். அது எனக்கு சாஸ்திரியாரின் தூய்மையான இனிய இயல்பை நினைவுக்கு கொண்டு வருவதோடு இந்த நூலை எழுதும் அவரது குறிக்கோளை ஓரளவு நிறைவேற்றுவதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

சாஸ்திரியார் “பிரக்ஞா பிரபாகரத்தை” எழுதத் தொடங்கும் போது அவர் “பிருக்த ரஹித தாரக ராஜயோகாவில்” 30 ஆண்டுகள் பயிற்சி பெற்ற அனுபவத்துடன் இருந்தார். இந்த நீண்ட காலத்தில் அவர் பல விசேஷ அனுபவங்களை அடைந்திருந்தார். அவர் தனது அனுபவங்களைப் பற்றி பல பகுதிகளாக எழுத நினைத்திருந்தார். அவற்றில் இந்த யோகா முறையில் தன்னைப் போல் தீக்ஷை பெற்றவர்களின் அனுபவங்களையும், அதனால் அவர்கள் எவ்விதம் பலன் அடைந்தார்கள் என்பது பற்றியும் எழுத எண்ணியிருந்தார். அத்தகையதொரு பெரிய திட்டம் நிறைவேறி இருந்தால் அது தெலுங்கு எழுத்தில் அமைந்த நூல்களுக்கு அழகு சேர்த்திருக்கும்; 'யோகா முறை, ஆன்மீக கலாச்சாரம் ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர்கள், மனம் உடல் பற்றிய ஆழ்ந்த நுட்ப அறிவுள்ளவர்கள், நோய்களுக்கு நிவாரணம் தருபவர்கள்' போன்றவர்களிடையே ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும்.

ஆனால் அவர் அந்த நூலை எழுதத் தொடங்கி, இந்தத் தொகுதியை நிறைவு செய்தபோது, திருப்பதி ஆலய அதிகாரிகள் ஒரு அருங்காட்சியகத்தை நிறுவும் பொறுப்பை அவரிடம் கொடுத்துவிட்டனர். அந்தப் பணிக்காக அவர் உணவு, தூக்கத்தை துறந்து புலிகள் உலவும் கடப்பா காடுகளிலிருந்து, கிருஷ்ணா ஜில்லாவில் உள்ள முக்தியாலா மலைகள், நிஜாம் சமஸ்தானத்தில் இருந்த நல்லகொண்டா (கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கம் மிகுந்த பிரதேசம் அது) ஆகிய தெலுங்கு மொழி பேசும் இடங்களில் சுற்றி அலைந்து, திருப்பதிக்கு பல அழகான ஜெயின, பௌத்த, ஹிந்து விக்கிரகங்களையும் தங்கச் சிலைகளையும் கொண்டு வந்தார். அவை கலாரசிகர்கள், சிலைகள், சிற்பங்களின் போஷகர்களின் கண்களுக்கு அரிய விருந்தாகும்.

இதிலிருந்து முற்காலத்தில் 'அஹிம்சையையும் சமத்துவத்தையும் போதித்த ஜைனமும், பௌத்தமும்' ஆந்திரப் பிரதேசத்தில் செழித்திருந்தன என்பது தெரிய வரும். அதன் விளைவாக அச்சமயங்களைப் பின்பற்றியவர்களால் அழகிய துறவியர் மடங்களும் கலைச்சின்னங்களும் உருவாக்கப்பட்டதையும் அறியலாம். காலப்போக்கில் மக்கள் ஜாதி அமைப்புகள், பலியிடுதல், சடங்குகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தத் தொடங்கி, தங்கள் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நிறுவிய கலைச்சின்னங்களை வேண்டுமென்றே அழித்தார்கள். இதற்கும் ரஸாக்கர்களும், கம்யூனிஸ்டுகளும் நடத்திய வன்முறைகளுக்கும் அழிவு வேலைகளுக்கும் வித்தியாசம் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. அன்றும் இன்றும், மனிதனில் உறங்கிக் கொண்டிருக்கும் மிருகம் விழித்துக் கொண்டு நாச வேலைகளில் ஈடுபடுவது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது. தான் சரியென்று கருதும் ஒரு விஷயத்தை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளச் செய்ய, வன்முறையில் ஈடுபடாமல் இருக்க மனிதனால் முடியாதா?

இந்தச் சிற்பங்கள், உலோக விக்ரகங்கள் தவிர சாஸ்திரியார், நிறைய வெளிவராத எழுத்துப் படைப்புகள், ஓவியங்கள், அக்காலப் போர்வீரர்கள் உபயோகித்த வாள்கள், கவசங்கள் ஆகியவற்றை காளஹஸ்தி எஸ்டேட்டிலிருந்து அதன் தலைவரின் அனுமதியுடன் சேகரித்து கொண்டு வந்தார். இது விஷயத்தில் அவருக்கு ஆந்திரப் பிரபாவின் ஆசிரியர் ஸ்ரீ நார்லா வேங்கடேஸ்வர ராவ் உதவியாக இருந்தார். ஸ்ரீ கோட சுப்பாராவ் தன் உயிருக்குச் சமமாக மதித்து, சேகரித்த விலைமதிக்க முடியாத ஓவியங்கள், விக்ரகங்கள் ஆகியவற்றையும் மிகுந்த முயற்சிகளுக்குப் பிறகு சாஸ்திரியார் திருப்பதி அருங்காட்சியகத்திற்கு கொண்டு வந்தார்.

அது போன்ற பணிகளில் ஒருபுறம் ஈடுபட்டவாறே, சாஸ்திரியார், வேறு பல செயல்களிலும் பங்கேற்றார். உதாரணத்திற்கு அன்னாமாச்சார்யாவிற்காக முதன் முதலில் நடத்தப்பட்ட ஆண்டுவிழா, அவரது பாடல்களை வெளியிடுதல், பாவுலுரு கணிதம், உத்தரஹரிவம்சம், லக்ஷணோத்தாரம், நன்னய்யாவிற்கு முந்தைய ஆந்திர மொழி பற்றிய ஆய்வு ஆகியவற்றை குறிப்பிடலாம். இவற்றை எல்லாம் அர்ஜுனனைப் போல பன்முக ஆற்றலோடு அவர் செய்து வந்தார்.

அருங்காட்சியகத்திற்காக கலைப் பொருட்களை சேகரிப்பதில் பல சிரமங்கள் இருந்தன. சரியான சாலை வசதிகள் கூட இல்லாத ஒரு கிராமத்தில் ஒரு அரிய சிற்பம் இருக்கும். அதைப் பெற தாமதமானால், யாராவது ஒரு கலைப் பொருட்களை சேகரிப்பவர் பம்பாய் போன்ற இடங்களிலிருந்து வந்து வாங்கிக் கொண்டு சென்றுவிடுவார். இப்படியாக அது தெலுங்கு தேசத்தை விட்டே போய் விடும். ஆனால் பாருங்கள், சாஸ்திரியார், உடல் சிரமத்தைப் பார்க்காமல் அந்த இடத்திற்கு எப்படியோ சென்று விடுவார். அந்த சிற்பம், ஆடு மாடு மேய்ப்பவர்களுக்கு அரிவாள் தீட்டப் பயன்பட்டுக் கொண்டிருக்கும். அல்லது யாருக்காவது துணிதுவைக்க உபயோகமாயிருக்கும். மண்ணில் புதைந்து இருக்கும். அதை தோண்டி எடுக்க வேண்டும் என யாரும் நினைக்க மாட்டார்கள். ஒரு வேளை யாராவது தோண்டி எடுத்து விட்டால் அக்கிராமத்தினர் அதன் முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டு, அதைத் தாங்கள் வழிபாடு நடத்த வைத்துக் கொள்ளப்போவதாக அறிவிப்பார்கள். அச்சிலையை எடுத்துக் கொண்டு போக அவர்கள் சம்மதத்தைப் பெறுவது என்பது 'மஹாபாரத அரக்குமாளிகையிலிருந்து பாண்டவர்கள் பத்திரமாக வெளியேறி ஏகசக்ரபுரம் சென்றதைப் போன்ற' கடினமான ஒரு காரியமாகும். இந்தப் பணியை சாஸ்திரியார் 7,8 மாதங்களில் குறைந்தபட்ச செலவில் தன் அன்பிற்குரிய மாணவர்களின் துணையோடு செய்து முடித்து விடுவார். உதயகிரி ஸ்ரீநிவாஸாச்சார்யா என்பவர் அவரது உதவியாளர்களில் ஒருவர். 'வேறு யாராவது இந்தப் பணியை, நிறையப் பணம் செலவிட்டும் அதிகமானவர்களின் உதவியோடும் இருபது ஆண்டுகள் ஆனாலும் செய்து முடிக்க முடியுமா?' என்று விஷயமறிந்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

இது சம்பந்தமாக ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. சாஸ்திரியார் தனக்கு சில மணிநேரமே அறிமுகமாயிருந்த ஒரு புதிய மனிதரிடமிருந்து ஒரு சிறிய சலவைக்கல் படிவத்தை வாங்கி குண்டூருக்கு கொண்டு வந்தார். அப்படிவத்தின் ஒரு பக்கத்தில் ஒரு சிற்பம் இருந்தது. அவர் அன்றிரவே திருப்பதிக்கு திரும்ப வேண்டும். தன் பிரயாண 'லக்கேஜ்களை' பலமுறை பரிசோதித்துக் கொண்டார். காரணம் அந்த 'சலவைக்கல் படிவத்தை மறந்து விடக்கூடாது' என்பதே. அதை அவர் மெல்லிய கண்ணாடிப் பொருளைப் போல் கவனமாக கட்டி எடுத்துக் கொண்டார். 'இது எல்லாம் எதற்காக?' என்று எங்களுக்குப் புரியவில்லை. “இது ஒரு விலை மதிக்க இயலாத கலைப்பொருள்.

“டுப்ரெல்” (கலைப் பொருள் சேகரிப்பதில் வல்லவரான ஐரோப்பியர்) இதற்குப் பத்தாயிரம் ரூபாய்கள் கொடுப்பார்” என அவர் ரயில்வே ஸ்டேஷனில் விளக்கம் அளித்தார். இந்த ஒரு சிறிய விஷயத்திற்கே இவ்வளவு முக்கியத்துவம் என்றால், அவர் திருப்பதியில் அமைத்த அருங்காட்சியகத்தின் மதிப்பை அளவிடமுடியுமா?

இந்தக் கலைப்பொருள்களும் சிற்பங்களும் உள்ள அருங்காட்சியகம் இப்பொழுது திருப்பதி ஆலய நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. இப்படிவங்களை சிறப்பாகப் பாதுகாத்து “அவை எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை? அவற்றிற்குரிய சமூக, சமய முக்கியத்துவம்” ஆகியவற்றை நிர்ணயிக்கும் பொறுப்பு ஆலய நிர்வாகத்தினருடையது.

அருங்காட்சியத்திற்காக அரிய பொருட்களை சேகரிக்கும் முயற்சியில் மேற்கொண்ட அலைச்சல்கள், அரியநூல்களை ஆய்வு செய்து அச்சிடும் பணிகள் இவற்றிற்காக உழைத்துக் கொண்டே இருந்ததில் சாஸ்திரியாரின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. அந்த சமயத்தில் குண்டூர் ஜில்லா “எத்தனபுடி” கிராமத்தில் ஒரு கிணற்றில் விழுந்துகிடந்த ஒரு கலைநயம் மிகுந்த சிலையை ஆய்வு செய்ய விதி அவரை இழுத்துச் சென்றது. அவர் அங்கு சென்ற நேரத்தில் பெருமழை கொட்டியது. இரட்டை மாட்டு வண்டியில் பயணம்! தேங்கி இருந்த நீரினால் சேறாகிவிட்ட இடத்தில் ஊன்றிய காலை எடுக்கக்கூட சிரமப்பட்ட நிலை! சாஸ்திரியார் வாலிபப் பருவத்தைக் கடந்த விட்டவரும் கூட.

அவர் வீட்டுக்குத் திரும்பிய போது கடும் காய்ச்சல் அடித்தது. படுக்கையில் இருந்த போதும் தன் உடல் உபாதையைக் கவனத்தில் கொள்ளாமல், எடுத்துக் கொண்ட பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். இந்த தடவை அவரது தேக ஆரோக்கியம் மிகவும் சீர்கேடடைந்தது. பல மனிதர்களை சாவின் கொடும் கரங்களிலிருந்து தன் யோகா பயிற்சியின் அற்புத சக்தியால் அவர் மீட்டிருக்கிறார். அவ்விதம் மீட்கப்பட்ட பலர் அச்சமயத்தில் அவர் பக்கத்தில் இருந்தனர். ஆனால் அவர்களால் அவரைக் காப்பாற்ற இயலவில்லை. புகழ்பெற்ற கவிஞர் ஸ்ரீவிஸ்வநாத சத்தியநாராயணா, எதிர்பாராத அவரது மரணச் செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சியுற்றார். தன்னையறியாமல் அவர் வாயிலிருந்து “ஓ மஹாத்மாவே! மரணம் உன்னைக்கூட வெற்றி கொண்டதா?” என்ற வார்த்தைகள் சோகத்துடன் வெளிப்பட்டன.

சாஸ்திரியாரின் அன்புக்கு ஆளானவர்கள் அனைவரின் இதயங்களிலும் எழுந்த உணர்ச்சிகளையே இவ்வார்த்தைகள் பிரதிபலித்தன. சாஸ்திரியாரின் மறைவுச் செய்தியும், அஸ்ஸாமில் நடந்த ஒரு பூகம்பத்தால் சில இமயமலைச் சிகரங்கள் மறைந்துவிட்ட செய்தியும் ஆந்திர தினசரிகளில் ஒரே நாளில் வெளியாகின.

இந்தப் 'பிரக்ஞா பிரபாகரம்' நூல் வெளியிடப்படுவது, அவரது பிரிவால் நேர்ந்த துயரச்சுமையுடன் தான். தெலுங்குப்பதிப்பை அச்சிடும் செலவு 20 ஆண்டுகளுக்கும் மேலாக சாஸ்திரியாரின் அன்புச் சீடராக இருந்த சென்னை, ஸ்ரீகம்பம்பாடி சத்யநாராயண சிரேஷ்டியால், அவர் தன் குருநாதர் மீது கொண்ட பக்தியாலும் கடமை உணர்வு காரணமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் செய்வது வெண்ணெய் வியாபாரம். அவரது இதயம் அவருடைய வியாபாரப் பண்டம் போலவே மென்மையானது. சாஸ்திரியார் சென்னைக்குச் செல்லும் சமயங்களில் அவருடைய நண்பர்கள் எல்லாம் ஸ்ரீசிரேஷ்டியின் இல்லத்தில் கூடி விடுவார்கள். சாஸ்திரியார் அங்குதான் வருகை புரிந்திருப்பார். ஸ்ரீ சிரேஷ்டி அந்த நண்பர்களை கவனத்துடன் வரவேற்று உபசரிப்பார். அவருக்கு நாங்கள் இன்றளவும் கூட கடமைப்பட்டிருக்கிறோம்.

சாஸ்திரியாருடன் என்னுடைய பழக்கம் :

நான் முதன்முதலாக 1939–ல் சாஸ்திரியாருடன் பழக்கம் கொள்கிற நல்வாய்ப்பினைப் பெற்றேன். அதற்குப் பத்து மாதங்கள் முன்பிருந்தே நான் மிகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தேன். அது 106 டிகிரி மலேரியா ஜுரத்துடன் தொடங்கியது. 'அலோபதிக்' முறை சிகிச்சையில் சில ஊசிகள் போட்டுக் கொண்ட பிறகு சிறிது நிவாரணம் கிடைத்தது. அந்த முறையின் கீழ் நான் தொடர்ந்து சிகிச்சை பெற்றால் எப்படி ஆகி இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அந்த சிகிச்சை முறையில் கொயினா தரப்படுகிறது என்று எனக்கு தெரியவந்தது. அது உடல் நிலைக்கு ஏற்றதல்ல என்று எனக்குப்பட்டது. ஹோமியோபதியில் 'கொயினா' உபயோகப்படுத்தப் படுவதில்லை. அது சிறந்த முறை எனத் தோன்றியது.

மேலும் இரண்டு மாதங்கள் ஆகின. இந்த பரிசோதனைகளால் பயன் ஏற்படவில்லை. என் மனதில் ஆயுர்வேத சிகிச்சை முறை பளிச்சிட்டது. பல கசப்பான மருந்துகளை விழுங்கினேன். அவற்றுள்

ஒன்று, ஒரு கல்கத்தா நிறுவனத்தின் தயாரிப்பான பஞ்ச திக்தா. 'பஞ்ச திக்தா' என்றால், 'ஐந்து கசப்புகள்' என்று பொருளாம். ஆனால் உண்மையில் அதைப் 'பிரபஞ்ச திக்தா' (உலகளாவிய கசப்பு) என்று தான் சொல்ல வேண்டும். அவ்வளவு கசப்பு! அதன் பின்னர் நான் நாட்டுவைத்தியர்களால் தயாரிக்கப்பட்ட மருந்துகளை உட்கொண்டேன். அதை எனக்கு கொடுத்த வைத்தியர் அதிக உஷாரானவர். என் அலட்சியப்போக்கை மாற்றுவதற்காக அவர் சில இனிப்பு திரவங்களைக் கொடுத்ததோடு, உணவு விஷயத்திலும் அதிகக் கட்டுப்பாடுகள் விதிக்கவில்லை. ஆனாலும் அவற்றால்கூடப் பலன் கிட்டவில்லை. அதன் பின் நான் மீண்டும் அலோபதிக்கு திரும்பினேன். அந்த நேரத்தில் என் உடல்நிலை அதிக மாற்றத்தை அடைந்தது. உடலின் எடை 22 பவுண்டுகள் குறைந்தன. மாலை வேளைகளில் உடலின் உஷ்ணம் 99.6^0(F) கிரிகளுக்கு சென்றது. மன அளவில் சகிப்புத்தன்மை குறைந்தே விட்டது. நரம்புகளின் ஸ்திரத்தன்மை குறைந்தது. சிறிய அதிர்ச்சியைக் கூட உடலால் தாங்க இயலவில்லை. தூக்கம் இல்லை. எதைச் சாப்பிட்டாலும், ஜீரணிக்க முடியாத நிலை. இந்த நிலையில் 'அலோபதிக்' முறை சிகிச்சை மறுபடியும் சிறிது உதவியாக இருந்தது. ஆனால் நோய் என்ன என்பதை கண்டறிய முடியவில்லை. “நான் எங்கோ பயந்துகொண்டுவிட்டேன்” என்று கூட ஒரு மருத்துவர் கூறினார். இந்த சந்தர்ப்பத்தில் நான் சென்னைக்கு 'லா அப்ரெண்டிஸ்' பரீட்சைக்காக செல்ல வேண்டி நேரிட்டது. ஆனால் எனக்கு 'ரயிலில் ஏறி இறங்கி, டிராம்களிலும் பஸ்களிலும் பயணம் செய்ய முடியுமா?' என்ற பயம் ஏற்பட்டது. எனினும் நான் சிரமப்பட்டு சென்னைக்கு பயணமானேன்.

ஒரு நண்பரை நான் சென்ட்ரல் ஸ்டேஷன் வருமாறு கேட்டிருந்தேன். அவர் உதவியால் ஒரு ஹோட்டலில் தங்கி பரீட்சையையும் எழுதினேன். சென்னையில் ஒரு பிரசித்தி பெற்ற டாக்டரிடம் கலந்தாலோசனை செய்தேன். அவர் ஒரு நர்சிங் ஹோம் நடத்தி வந்தார். அதில் பத்து நாட்கள் தங்கி பரிசோதனைகள் செய்து கொண்டால்தான் நோய் பற்றி உறுதியாக தெரிந்து கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். நர்சிங்ஹோமில் சேர்வதற்கு நாள் குறித்துக் கொண்டு நான் ஹோட்டலுக்குத் திரும்பினேன்.

நான் குண்டூரிலிருந்து புறப்பட்டு முன்பே, ஸ்ரீஉன்னவ லக்ஷ்மி நாராயணா மூலமாக சாஸ்திரியாரின் பெருமையைப் பற்றியும் 'அவரது

யோகா முறை, அதன் வழியாக நோய்களுக்கு சிகிச்சை பெறுவது' ஆகியவை பற்றியும் கேள்விப்பட்டிருந்தேன். நான் ஸ்ரீலக்ஷ்மிநாராயணாவிடமிருந்து அறிமுகக் கடிதம் வாங்கிக் கொண்டு 'எப்படி ஆனாலும் சரி' என்ற முடிவுடன் அவரைப் பார்க்கச் சென்றேன். மருத்துவமனை ஆலோசனை முடிந்ததும், நான்கு கமலா ஆரஞ்சுப்பழங்களை வாங்கிக் கொண்டு எண் 4, வெங்கட்ரங்கம்பிள்ளை தெருவில் இருந்த அவர் வீட்டிற்கு சென்றேன். ஆச்சர்யம்! பளபளப்பான மாநிறத்தில் இருந்த ஒரு பருத்த மனிதரை அங்கு பார்த்தேன். அவர்தான் சாஸ்திரியார் என்பது எனக்குத் தெரியவில்லை. அவரது சில நூல்களைப் படித்திருந்த நான் மனதளவில் அவர் உருவம், பேச்சு, பழக்கங்கள் பற்றி ஒரு எண்ணத்தை வளர்த்திருந்தேன். 'ஒல்லியாகவும் இல்லாமல் பருமனாகவும் இல்லாமல் பொன்னிறத்தோடு வைதிக பாணியிலான வழிகளில் கவர்ந்திழுக்கக் கூடிய தோற்றம் கொண்டவராகவும் அவர் இருப்பார்!' என்பது என் நினைப்பு.

சாஸ்திரியார் என்னை நட்புடன் வரவேற்று "மகனே – யார் நீ? என்ன வேண்டும்?" என விசாரித்தார்.

நான் அவரது குரல் அவ்வளவு கணீரென்று இருக்கும் என நினைத்திருக்கவில்லை. சுதாரித்துக் கொண்டு அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு "நான் குண்டூரிலிருந்து வருகிறேன்" என்றேன். நான் அவருக்குப் பதிலளித்துக் கொண்டிருக்கும்போதே, ஸ்ரீ உன்னவ வீட்டின் உள்ளேயிருந்து வந்தார். என்னை அவரே சாஸ்திரியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவரை அங்கு சந்திப்பேன் என நான் எதிர்பார்க்கவில்லை. ஏதோ வேலையாக சென்னைக்கு வருகை தந்த அவர், முதல் நாள் இரவில்தான் சாஸ்திரியாரின் இல்லத்துக்கு வந்திருக்கிறார்!

நான் சாஸ்திரியாரின் வீட்டுக்கு சென்றபோது அவர் பல் துலக்கிக் கொண்டு இருந்தார். அப்பொழுது காலை ஏழு மணிக்கு மேலே இருக்கும். அது எனக்கு அசாதாரணமாகத்தெரிந்தது. ஏனெனில் நான் அந்த நேரத்தில் அவர் குளித்து முடித்து பூஜைகளை எல்லாம் செய்திருப்பார் என்று எண்ணி இருந்தேன். எனக்கு அவரோடு பழக்கம் ஏற்பட்டு, அது வளர்ந்த பிறகுதான் நிலைமையைப் புரிந்து கொண்டேன். யோகா சிகிச்சைக்காக அவரை நாடி பலர் வருவார்களாகையால் அவரால் காலையில் சீக்கிரமாக எழ முடியாமல் உள்ளது. அவர்கள் எல்லாம்

சென்ற பிறகு கூட இரவில் நெடுநேரம் அவர்களது நோய்களின் காரணம் பற்றி அவர் மனதைச் செலுத்தி சிந்தித்துக் கொண்டே இருப்பார். தூங்கி விட்ட பிறகு கூட நடுவில் சில நேரம் விழித்துக் கொண்டால், விடியும் வரை மறுபடியும் சிந்தனையில் மூழ்கிவிடுவார். இதுதான் அவர் காலையில் நேரம் கழித்து எழுவதற்கு காரணம். வைதீகப் பழக்கவழக்கங்கள் உள்ள மற்றவர்களைப் போல காலை வேளையில் தன் வெளித் தோற்றத்தைக் கவனித்துக் கொள்ள அவருக்கு ஏது நேரம்? பிறருடைய துயரங்களின் பால் அனுதாபம் கொண்டு அவற்றைப் போக்குவதற்காக செய்யும் செயல்களே அவருக்கு 'நீராடிவிட்டு செய்யும் சடங்குகள்' போன்றவை. பல் துலக்கி முடிந்த பிறகு நான் கொண்டு சென்ற பழங்களை சுவைத்துவிட்டு 'இவை நன்றாகவே உள்ளன. ஆனால் தோல் கெட்டி. ஜூஸ் குறைவு' என்றார். இது அவரிடம் இயல்பாகவே இருந்த எதையும் நன்கு பரிசீலித்து அதன் தன்மையை எடைபோடும் பழக்கத்தையே காட்டுவதாகும். அதன் பிறகு அவர் கனிவுடன் எனக்கு யோகா சிகிச்சை தர ஒப்புக்கொண்டார். ஆனால் முதலாவதாக 'உன் உணவுக்கான ஏற்பாடுகள் எவை? என்று அவர் கேட்டார். நான் ஹோட்டலில் தங்கப்போவதாகச் சொன்னதும் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர் "ஹோட்டல் சாப்பாடு முழுமையானதல்ல. நீ நல்ல நல்ல காய்கறிகள், பால், பழங்கள் ஆகியவற்றைத்தான் உண்ண வேண்டும். வழக்கமான அரிசிச்சாதம், சாம்பார் ஆகியவை (பருப்பு+மிளகாய்+புளி+காய்கறிக் குழம்பு) இது சென்னையின் சிறப்பு) வேண்டாம். உன் நோய் இத்தகைய உணவால் சொஸ்தமாகும் என நினைக்காதே. கடவுள் தான் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பவர். அவரே காரணகர்த்தா" என்றார். நர்சிங் ஹோமைப் பற்றி நான் குறிப்பிட்டதும் "நீ அதில் சேர வேண்டாம்" என்றார். அதைக் கேட்டதும் 'என் நோய் தீர்க்கப்படும்' என்று புரிந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

"உன்னுடைய குரல் பலஹீனமாக உள்ளது" என்று சாஸ்திரியார் கூறினார். அது அந்த நேரத்தில் எனக்கு விசித்திரமாகப்பட்டது.

ஆனால் முழுவதுமாக உடல்நிலை தேறியபின் என் குரலை முந்தைய குரலுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டபோது 'சாஸ்திரியார் கூறியது சரிதான்' என்று தெரிந்தது. இதை நான் இங்கு ஏன் சொல்கிறேன் என்றால் சாஸ்திரியார் தன்னிடம் யோகா சிகிச்சைக்காக

வருபவர்களை எப்படி நுட்பமாக கவனிக்கிறார் என்பதை குறிப்பிடுவதற்காகத்தான். அவர் தன்னிடம் சிகிச்சை பெற வருபவர்களின் இயல்பையும், நோயையும் 'அவர்களது உடல்வாகு, பேச்சு, முகபாவம், கைகால்களை அசைத்தல்' ஆகியவற்றைப் பார்த்தே புரிந்து கொள்வார். அவரது மதிப்பீடு எப்போதும் தவறியது கிடையாது என்பதை நான் அறிவேன். இந்த திறமையை அவர் சிகிச்சைக்காக மட்டும் பயன்படுத்துவதில்லை. தினசரி வாழ்க்கையில் பொழுது போக்காகவும் உபயோகித்தார். ஒருவரது கையெழுத்தை வைத்தே அவரது இயல்பை உணரக் கூடியவர் சாஸ்திரியார். தனக்கு வரும் கடிதங்களை பிரித்துப் பார்க்காமலேயே 'அவை எங்கிருந்து வந்துள்ளது? உள்ளே இருக்கும் விஷயம் எது?' என்பதை யூகமாகச் சொல்லிவிடுவார். அதுபோன்ற செயல்களால் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு அவர் மகிழ்ச்சியை ஊட்டுவார்.

யோகா முறை சிகிச்சை தொடங்கிய முதல் மாதத்தில் என் உடல் முழுதும் ஒரு சக்தி ஊடுருவதுபோலத் தெரிந்தது. என் உடல் முழுதும் அப்போது வியர்த்துக் கொட்டும். சாஸ்திரியார் என்னை சாப்பிடச் சொல்லி அனுப்பி விடுவார். பிறகு 'மாலை வேளையை எப்படிக் கழிப்பாய்?' என வினவுவார். 'புதிய இடத்தில் என்ன செய்வது?' என்பது தெரியாமல் நான் அலுப்பு அடைந்துவிடக் கூடாது என அவர் அக்கறையுடன் இருந்தார். தன்னிடம் சிகிச்சைக்காக வருபவர்களின் உடல்நிலை, மனோநிலை ஆகிய இரண்டைப் பற்றியும் அவர் கருத்தில் கொள்வார். சிகிச்சை பெறும் காலத்தில் எந்தவிதமான மன உளைச்சலும் இல்லாமல் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம்.

நான் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டு பொழுதைச் செலவிடுவதாகச் சொல்லுவேன். பக்கத்தில் உள்ள ஸ்ரீ உன்னவ "படிப்பது என்றால் இவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. ஆகவே பொழுதுபோக்குவதில் இவருக்கு எந்த சிரமமும் இல்லை" என்றார். இதற்கு சாஸ்திரியார் "புத்தகங்களை எல்லாம் மூடி வை. சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கு" என்றார் கண்டிப்புடன். சாஸ்திரியார், பல புத்தகங்களைப் படித்த, ஓர் ஆராய்ச்சி அறிஞர். ஆனாலும் அவர் 'புத்தகங்கள் படிப்பவர்' என்ற காரணத்தால் யாருக்கும் முன்னுரிமை கொடுப்பதில்லை. அவரது அபிப்பிராயத்தில் நமது உடலும் மனமுமே

உண்மையான புத்தகங்கள்! அவை பல ரகசியங்களை வெளியிட வல்லவை. ஆகவே, அவற்றைப் படிப்பதில் ஈடுபட வேண்டும் என்பது அவர் அறிவுரை. இலக்கியம் பற்றிய அவரது கண்ணோட்டம் என்ன என்பதைப் பிறகு தெரிவிக்கிறேன்.

நான் மாலையில் அவரைச் சந்திக்கச் சென்ற போது, சாஸ்திரியார் 'எனக்கிருந்த பசி, நான் சாப்பிட்ட உணவு, பால், பழங்கள், பகலில் தூங்கியது, என் பொதுவான உடல் நிலை' பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார். அவர் குறிப்பிட்டவாறே நான் உணவு உட்கொண்டதையும் தூங்கியதையும் அறிந்து 'வண்டி சரியான பாதையில் தான் செல்கிறது' என உறுதி செய்து கொண்டார்.

சாஸ்திரியார் தனது நேரத்தை எல்லாம் மற்றவர்கள் நலத்திற்கான முயற்சிகளிலேயே செலவிட்டார். தன்னிடம் சிகிச்சைக்காக வருபவர்களை எல்லாம் தியானம் செய்யச் சொல்வார். தியானத்தின் போது என்ன நடந்தது என்று கேட்டு அவர்களை உற்சாகப்படுத்துவார். வீட்டு நிலைமை பற்றியும் உடல் நிலை சீராவது குறித்தும் விசாரித்து தவறுகள் இருந்தால் சரி செய்வதற்கான யோசனைகளையும் கூறுவார். முதல் முறையாக நான் சாஸ்திரியாரை பார்க்கச் சென்றபோது அவருடன் 43 நாட்கள் இருந்தேன். அப்பொழுது பல அசாதாரண நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றையெல்லாம் சொல்வதற்கு இங்கு இடம் இல்லை. ஒன்றிரண்டை மட்டும் தெரிவிக்கிறேன்.

நான் சாஸ்திரியாரை சந்திக்க முதலில் சென்றபோது என் உடல் 'நான் உண்பதை எல்லாம் செரிக்க முடியாமல்' இருந்தது. ஆழ்ந்த தூக்கம் என்பது இல்லை. சாஸ்திரியார் என்னிடம் பகலில் கூட தூங்குமாறு சொன்னதை மேலே கூறி இருந்தேன். அதை நான் அப்படியே எந்த அசௌகர்யமும் இல்லாமல் பின்பற்றினேன். சில நாட்களுக்குப் பிறகு சாஸ்திரியார் ஒரு நாள் “நீ காலையில் என்ன உணவு உட்கொண்டாய்?” எனக்கேட்டார். நான் இரண்டு இட்லிகள் எடுத்துக் கொண்டதாகக் கூறினேன். “அது முறையல்ல. காலை ஏழு மணிக்கு இரண்டு இட்லிகள். 11 மணிக்கு பகல் உணவா!” என ஆச்சர்யமான குரலில் சொன்னார்.

“நான் அதிகமாக சாப்பிட்டுவிட்டேனோ!” என்று திகைத்துவிட்டேன். சாஸ்திரியார் உடனே “இரண்டு இட்லிகள் உன் போன்ற உடல்வாகு உள்ள ஒரு மனிதனுக்கு மிகக் குறைவு! நான்கு

இட்லிகள் தான் சரியான அளவு'' என்றார். மறுநாளும் அதேபோல விசாரித்தார். "நான்கு இட்லிகள்'' என நான் பதிலளித்தேன். "அதன் பிறகு?'' என்றார் அவர். "வழக்கம் போல் அரை கப் காஃபி'' என நான் பதில் சொன்னேன். "இதுவும் சரியானது இல்லை. அரை கப் காஃபி'' இரண்டு இட்லிகளுக்கு! நான்கு இட்லிகளுக்கு ஒரு கப் காஃபி'' என்றார் அவர்.

மறு நாள் அதைப்போலவே நான் செய்தேன். "ஓ! இட்லிகள் மட்டும் தானா! இதில் உள்ள தத்துவத்தை நீ அறியவில்லை. ஆரம்பத்தில் இரண்டு இட்லிகள்; கொஞ்சம் காஃபி, பிறகு உப்புமா. அதற்குப்பிறகு தோசை. இதெல்லாம் ஆன பிறகு ஒரு கப் காஃபி'' என்றார் அவர்.

இதைக்கேட்டு நாங்கள் விலா நோகச் சிரித்தோம். இதைப்போன்று அவர் தூண்டத் தூண்ட, எட்டு இட்லிகள், 600 கிராம் காய் கறிகள், மதியம் இரண்டு கோப்பை தயிர், அரை டஜன் வாழைப்பழம், கிஸ்மிஸ், ஆரஞ்சு மற்றும் ஆப்பிள். (மதியம் தூக்கத்திற்குப்பின்). மாலையில் காஃபி, இரவில் சாப்பாட்டுடன் மாம்பழம் என சாப்பிடுவது கூடிக்கொண்டே போனது. 'இப்படி பேய் போல பெருந்தீனி தின்பேன்' என நானே நம்பவில்லை. ஆனால் இப்படிச் சாப்பிடாமல் இருந்திருந்தால் என் எடை 20 நாட்களில் 20 பவுண்ட் கூடி இருக்காதே!.

ஒரு நாள் அண்ணாமலைப்பல்கலைக் கழகக் கணிதப் பேராசிரியர் நரசிங்கராவ் வந்தார். சாஸ்திரியார் பங்கு பெற்ற "யோகா பள்ளி நண்பர்கள்'' குழுவில் அவரும் ஓர் உறுப்பினர். அவர் சாஸ்திரியாரின் இல்லத்தில் தங்கினார். ஒரு நாள் நானும் உடன் இருக்கையில் சம்பாஷணைகளுக்கிடையில் சாஸ்திரியார், தற்செயலாக என் கதையைச் சொன்னார். அந்த நேரத்தில் எனது உடலில் ஒரு வித அதிர்வலையின் எழுச்சி ஏற்பட்டது. மூச்சை உள் இழுப்பது, வெளிவிடுவது, ஆழ்ந்ததாகவும், நீண்டதாகவும் இருந்தன. என் முதுகெலும்பு, ஒரு படமெடுக்கும் பாம்பைப் போல நிமிர்ந்தது. இரு தோள்களும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மார்பு விரிவடைந்தது. மூச்சுவிடுவதை அளவெடுக்க முடியும் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் அப்படி அளவெடுத்தால் அப்போது நான் விடுத்த மூச்சின் நீளம் இரண்டு கெஜமிருக்கும் என்று நினைக்கிறேன்.

அந்த நிகழ்வு எங்கள் மூவருக்கும் வியப்பைத் தந்தது. "அவ்வளவு மூச்சு எப்படி வந்தது? ஏதாவது உடற்பயிற்சியா? இதெல்லாம் குருதேவருடைய அருள்தான்" என்றார் சாஸ்திரியார். குருதேவர் என்பது அவருக்கு கற்பித்த ஆசிரியர் தான்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். கல்வி கற்பித்தவர்கள் அனைவரையும் ஆன்மீக குருமார்களுக்கு ஒப்பிட்டு, அவர்களை தெய்வ அருள் பெற்றவர்களாகக் கருதுவது இந்தியாவில் நிலவும் வழக்கம். சாஸ்திரியார் தன்னால் நிவாரணம் பெற்றவர்களிடம் 'தான் வெறும் கருவிதான்–அனைத்தையும் செயல்படுத்துவது குருநாதரின் அருளே' என்று சொல்வது வழக்கம்.

நான் அங்கு தங்கி இருந்தபோது பலர் சிகிச்சைக்காக வந்தனர். அவர்களில் ரிக்ஷா இழுப்பவர்கள், தெருக்களை துப்புரவு செய்பவர்கள், அலுவலக குமாஸ்தாக்கள், உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், வைதீகர்கள், ஷீரடி சாய்பாபாவின் மஹிமையை பிரச்சாரம் செய்பவர்கள், சித்தப்பிரமை பிடித்தோர், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், வக்கீல்கள், காங்கிரஸ் கட்சியினர், கம்யூனிஸ்ட்கள், மாணவர்கள் எனப் பலதரப் பட்டவர்களும் இருந்தனர். தேள்கடி, உடல் எரிச்சல், காஸ்ட்ரிக் அல்ஸர், கல்லீரலில் கற்கள், நீர்க்கோவை, அடிவயிற்றில் நீர் சேர்தல் போன்ற உபாதைகளுக்கு சிகிச்சை அளித்து குணப்படுத்தி இருக்கிறார். இப்படி சிகிச்சை பெற்றவர்களில் மிகவும் இரங்கத்தக்க நிலையில் இருந்த ஒரு சிறுவன் பற்றிக் கூறுகிறேன். அவன் தந்தை ஒரு ரிக்ஷா இழுக்கும் தொழிலாளி. நான்கு நாட்கள் முன்பாக அச்சிறுவன் வழுக்கி கீழே விழுந்து விட்டான். அதன் பின்னர் அவனுக்கு சுயநினைவு இருந்தாலும் பேசமுடியவில்லை. அவனது கண்களின் கருவட்டங்கள் ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு பார்வையே விகாரமாக இருந்தது. வாயும் கோணலாகி விட்டது. கழுத்து ஒரு புறம் சாய்ந்து காட்சி அளித்தது. கைகால்கள் மடங்கி, இயங்க முடியாமல் இருந்தன. அவனை கைகளில் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவனைக் கண்ட உடனே சாஸ்திரியார், தன் கன்று அடிபட்டதைக்கண்ட பசு துடிப்பது போல பதைபதைத்தார். எங்களுக்கு ஒரு பக்கம் அச்சிறுவனைப் பார்ப்பதும் மறுபுறம் சாஸ்திரியாரைக் காண்பதும் வேதனையாக இருந்தது. அச்சிறுவனுக்கு எந்த உணவும் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்த அவர் அவனது பெற்றோரின்

வறுமையையும் அறியாமையையும் கண்டு வருத்தப்பட்டார். வீட்டுக்குள்ளிருந்து ஒரு கோப்பை காஃபியைக் கொணர்ந்து ஒரு ஸ்பூன் வழியாக தானே அச்சிறுவனுக்கு ஊட்டினார். அதன் பின் அவன் குணம் பெறுவதற்காக அவர் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். அது முடிந்தபோது அச்சிறுவன் ஒரு பக்கமாகச் சாய்ந்து உட்கார்ந்தான். சாஸ்திரியார் தன் கரங்களினால் அச்சிறுவனின் உடலை தேய்த்து, அவன் இருந்த நிலையைச் சரிப்படுத்தினார். தொடர்ந்து அவனால் நேராக உட்கார முடிந்தது. சுற்றிலும் இருந்து அதைப் பார்த்தவர்களின் முகங்கள் பிரகாசம் அடைந்தன.

அந்தச் சிறுவனை இப்போது எழுந்து நிற்கவும், நடக்கவும் செய்ய வேண்டும். சாஸ்திரியார் அவனை எழுந்து நிற்குமாறு சொன்னார். அவனால் எழ முயற்சி செய்ய முடிந்ததே தவிர நிற்க முடியவில்லை. சாஸ்திரியார், ஒரு படைப் பிரிவின் சார்ஜண்ட் தன் வீரர்களுக்கு ஆணையிடும் குரலில் அச்சிறுவனை எழுந்து நிற்கும்படி மீண்டும் கட்டளையிட்டார். ஒருவிதமாக அவன் எழுந்து நின்றான். அப்போது சாஸ்திரியாரின் தோற்றத்தைப் பார்க்க வேண்டுமே! ஒரு பக்கம் அவர் முகத்தில் மகிழ்ச்சி! மறுபக்கம் கிளர்ச்சி! அச்சிறுவன் நடந்தாலொழிய அவருக்கு திருப்தியில்லை. அச்சிறுவன் மெதுவாக இரண்டு, மூன்று முறை வாயிற் கதவு வரை நடந்து திரும்பினான். அதன்பிறகு வந்தவர்களிடமே அவனை அழைத்துக் கொண்டு வீடு செல்லுமாறு கூறினார். அவன் தந்தை, முன்போலவே பிள்ளையை கையில் தூக்கிக் கொண்டு செல்ல முற்பட்டார். சாஸ்திரியார் அதைத் தடுத்து சிறுவனை நடத்தியே வீட்டுக்கு அழைத்துப்போகுமாறு சொன்னார். பெற்றோரின் பின்னால் சிறுவன் நடந்தான். நாங்கள் வியப்புடன் பார்த்தவாறு நின்றோம்.

நான் அவருடன் இருந்த நாற்பது நாட்களிலும் இதுபோல் நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கத் தொடங்கினால் ஒரு புஸ்தகம் எழுதுமளவுக்கு நீளும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவரை நான் திருப்பதியில் சந்தித்த போது ஆரவாரம் அதிகமாக இருந்தது, சென்னையை விட அவர் அங்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து குணப்படுத்தியதைப் பார்த்தால் 'மனித இனம் இறப்பிலிருந்து விடுபட்டுவிடுமோ'! என எண்ணத்தான் தோன்றும். அந்தப்பதியில் 'ஆணையிட்டால் நோய்கள் பறந்தோடிவிடும்' என்பது போலத் தோன்றியது. சென்னையைப் போன்று

இல்லாமல் திருப்பதியில் சில வரவேற்கத்தக்க சம்பவங்களும், சோக நிகழ்ச்சிகளும் காணப்பட்டன. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் இறுதிக்கட்டத்தை அடைந்த சில நோயாளிகள் திருப்பதிக்கு வந்தனர். ஏன் அவர்கள் இறப்புக்கு உள்ளாக வேண்டும்? இது போன்று எண்ணிய சாஸ்திரியார் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டார். சிலர் பூரண குணம் அடைந்து இன்றளவும் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர். சில பேர் குணமடைந்து வருவது போல தோன்றினாலும் திடுமென்று உயிரிழந்தனர். நூற்றுக்கு நூறு சதவிகிதம் நோய்வாய்ப்பட்ட அனைவரும் குணமடைந்தால் அது, யோகா பயிற்சி முறை முழு நிறைவான நிலையை எட்டிவிட்டது என்றுதானே காட்டுகிறது? ஆனால் அத்தகையதோர் நலமிக்க நாள் இன்னும் வரவில்லை. பலர், உடல் நோயை ஆன்மீக சக்தியால் குணப்படுத்த முடியும் என்பதை நம்பமாட்டார்கள். அந்த அவநம்பிக்கை தவறானது என்று சொல்லி விடுவதற்குமில்லை. இது ஒரு அசாதாரணமான நிலை. நிறைய பரிசோதனைகளையும் நிரூபணங்களையும், காணாமல் இதன் மீது நம்பிக்கை வைக்க இயலாது. தொலைபேசிக் கருவியை முதல் முதலாக இயக்கிக்காட்டிய போது 'அது ஒரு ஜாலவித்தை, ஒருபுறம் அதை அக்கருவியில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில் மறுமுனையில் இன்னொருவர் இருப்பார். அவரது பேச்சை இவா் கேட்பதாகப் பார்ப்பவர்களை நினைக்கச் செய்யும் பிரமையை உண்டாக்கும் ஜாலம்' என்று ஒரு அரசியல்வாதி விமர்சித்தாராம். மேற்கத்திய நாடுகளில் முற்காலத்திய விஞ்ஞானிகள் சில புதிய கண்டு பிடிப்புகளை கண்டுபிடித்த போது, கற்றறிந்த பலர் கூட அவற்றை அலட்சியப்படுத்தியதோடு 'அது சாத்தானின் வேலை' என்று சொல்லி கண்டுபிடிப்பாளர்களை கொடுமைப்படுத்தியதாகவும் படித்திருக்கிறோம். கலிலியோ முதல் ஜகதீஷ் சந்திரபோஸ் வரை பல விஞ்ஞானிகள் அவ்விதம் பழிக்கு ஆளானதை வரலாற்றில் கண்டிருக்கிறோம். ஆனால் எதையும் பல முறை பரிசோதித்துப் பார்க்காமல் ஏற்றுக்கொள்வது என்பது எல்லாம் முற்காலத்தில் இல்லை. அதனால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டன என்பதையும் நாம் அறிவோம்.

இந்த பௌதிக உலகிலிருந்து ஆன்மீக உலகுக்கு ஏணி வைத்து ஏறும் முயற்சி பல அபாயங்களுக்கு வித்திட்டதாக இருக்கும். அது யாரும் நடந்தறியாத பாதை. வழிகாட்ட எவரும் இல்லை. அது எங்கு அழைத்துச் செல்கிறது என்பது தெரியாது. நம் வாழ்வில் அந்தக்

குறிக்கோளை எட்டுவோமா இல்லையா என்பதும் தெரியாது. இந்தப்பாதையில் ஆராய்ச்சிக்காக பயணிப்பவருக்கு பிரார்த்தனை ஒன்றே துணை.

“பொய்மையிலிருந்து என்னை சத்தியத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். இருளிலிருந்து வெளிச்சத்துக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். இறப்பிலிருந்து அமர நிலைக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்”

இதுவே அந்தப் பிரார்த்தனை. ஏசுநாதர் கூட பல நோயாளிகளை ஆன்மிக சக்தியால் குணப்படுத்தியதாகப் படித்திருக்கிறோம். கிறிஸ்தவர்களிடையே இன்றளவும் அத்தகைய நம்பிக்கைகளும் அனுபவங்களும் உள்ளன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஓர் உண்மையான நாவலின் கதையான 'தி சாங் ஆஃப் செயின்ட் பெர்னாடெட்' ஆகும்.

பல நாடுகளிலிருந்தும் நோயாளிகள் ஃபிரான்ஸிலுள்ள லூர்தஸ் சர்ச்சுக்கு வந்து பிரார்த்தனைகளில் கலந்து கொண்டு தங்களுடைய நோய்களிலிருந்து குணமடைந்தார்கள் என்று அதில் காணப்படுகிறது. முன்னதாக ஒரு மருத்துவக் குழுவினர் அந்த நோயாளியைப் பரிசோதித்து, நோயின் தன்மையைப் பற்றி விவரமாகக் குறிப்பு எழுதுகிறார்கள். பிரார்த்தனைகள் முடிந்து திரும்பும் நாளில் அந்நோயாளியை மீண்டும் பரிசோதித்து 'உண்மையிலேயே நோய் குணமாகி விட்டதா, இல்லையா?' என்று முடிவெடுத்து அதையும் எழுத்தில் பதிவு செய்கிறார்கள். அலெக்ஸிஸ் கோரல், எனும் நுண்ணுயிர் மற்றும் மருத்துவ அறிவியல் நிபுணர், நோபல் பரிசு பெற்றவர். இவ்விதம் நோய்கள் குணமாவதைப்பற்றி “மேன் தி அன்நோன்” (Man the unknown) என்ற தன் நூலில் அவர் எழுதி இருப்பதாவது:–

“.......... லூர்தஸின் மருத்துவக் குழுவினர், மிக முக்கியமான நோய்கள் அதிசயமாக குணமான ஆன நிகழ்வுகள் பற்றி பதிவு செய்திருக்கிறார்கள். நோய்கள் மீது பிரார்த்தனைகளின் தாக்கம் குறித்த கருத்து, காசநோய், கேன்சர், உடற்காயங்கள் போன்ற பலவிதமான நோய்களிலிருந்து உடனடியாக குணம் பெற்றவர்கள் மீது மேற்கொண்ட பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் பிரார்த்தனை தான். ஆனால் அந்த நோயாளியே கூடப்

பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை. அந்த நோயாளிக்கு எந்தவிதமான மத நம்பிக்கை இல்லாமலும் இருக்கலாம். அவரைச் சுற்றி இருந்த யாராவது அவருக்காக பிரார்த்தனை செய்தால் போதும். இது போன்ற உண்மைகள் மிக முக்கியமானவை. அவை நமக்குத் தெரியாத 'மனோதத்துவத்திற்கும் உடல் கூறுகளின் இயக்கத்திற்கும் இடையில் உள்ள' ஓர் உறவையே உறுதிப்படுத்துகின்றன. சுகாதார நிபுணர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள், சமூக இயலாளர்கள் ஆகியோர் அநேகமாக அதன் முக்கியத்துவம் குறித்து கவனிக்காமல் ஒதுக்கிவிட்டனர் என்பதையே இது நிரூபணம் செய்கிறது. மனிதனுக்கு ஒரு புதிய உலகை நோக்கி அவை வழி காட்டுகின்றன".

The most important cases at miraculous healing have been recorded by the Medical Bureau of Lourdes. Our present conception of the influence of prayer upon pathological lesions is based upon the observation of patients who have been cured almost instantaneously of various afflictions, such as peritoneal tuberculosis, cold abscesses, Osteitis, Suppurating Wounds, Lupus, Cancer etc. The only condition indispensable to the occurrence of the phenomena is prayer. But there is no need for the patient himself to pray or even to have any religious faith. It is sufficient that some one around him be in a state of prayer. Such facts are of profound significance. They show the vality of certain relations, of still unknown nature between psychological and organic processes. They prove the objective importance of the spiritual activities, which hygienists, physicians, educators and sociologists have almost always neglected to study. They open to man a new world....

இயற்கையின் பல ரகசியங்கள் அறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவாக இன்று வெளிவந்துள்ளன. ஆனால் 13 மற்றும் 14ஆம் நூற்றாண்டுகளின் அறிவியல் ஆராய்ச்சிகளை மட்டுமே பார்த்தவர்கள், இன்று அறிவியலில் புதிதாகச் சேர்ந்துள்ளவை பற்றி நினைத்துப் பார்த்திருக்கவே மாட்டார்கள். இன்றைய அறிவியல் ஆராய்ச்சி, உயிருள்ள, உயிரற்ற சில தன்மைகள் குறித்து ஆய்வில் ஈடுபடத்

தொடங்கியுள்ளது. இன்னும் ஒரு அடி எடுத்து அது நடைபோட்டால், பிரபஞ்ச இயலின் மையப் புள்ளியை அடைய முடியும். அறிவியல் ஆய்வாளர்கள், தங்கள் வழிமுறைகளையும், கருவிகளையும் தேவைக்கேற்றபடி மாற்றிக் கொள்கிறார்கள். இந்தப் புதிய துறையை ஆய்வு செய்வது குறித்த நவீன வழிவகைகளைக் காண்பது அவர்கள் தகுதிக்கும் திறமைக்கும் அப்பாற்பட்டதல்ல. ஆகவே எதையும் அவசரப்பட்டு ஒதுக்கித்தள்ளி விடுவது கூடாது என்பது என் பணிவான வேண்டுகோள்.

சாஸ்திரியாரின் அறிவார்ந்த சக்தி பன்முகங்கொண்டது. புதியவர்களுக்கு அவரது தனித்தன்மையைப் புரியவைப்பதற்கு அதிகத் திறமை தேவை. அதற்கு நிறைய இடம் வேண்டும். ஆகவே நான் ஒரு சிலவற்றை மட்டும் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்கிறேன்.

ஆக்கபூர்வமாக இலக்கியத்தில் எழுதுவது குறித்த அவருடைய கண்ணோட்டம் தனியானது. "நாம் அத்தகைய எழுத்துக்களில் எதைக் காண்கிறோமோ அது உண்மையல்ல. உண்மையாக இல்லாதவற்றில் ஒருவர் ஏன் நேரத்தை செலவிட வேண்டும்? ஒரு கவிஞர் மாண்பு உடையவராக இல்லாவிடில் அவரால் வாழ்க்கையின் பிரச்சனைகளை புரிந்துகொள்ள இயலாது. மாண்பு இல்லாத ஒருவர் எழுதுவது சுத்தமாக இராது. குறைந்த ஆழத்தில் அசுத்தமான நீர் கிடைப்பது போலத்தான் அது இருக்கும். உண்மையான கவிதைகளுக்கு 'வார்த்தை ஜாலங்களும் உவமை அணிகளும்' தேவை இல்லை. மாண்புமிக்க ஒருவரின் எழுத்துக்களில் இந்த அலங்காரங்கள் இயல்பாகவே இருக்கும். காரணம் எடுத்துக் கொண்ட பொருளின் மேன்மைதான். காந்திஜியின் எழுத்தை இதற்கு எடுத்துக்காட்டாக சொல்லலாம். மனித இனத்தின் அறிவையும் நலத்தையும் காக்கும் அறிவியல் நூல்கள் படிக்கத்தக்கவை. 'வாழ்க்கையின் உண்மைச் சம்பவங்களை கவிதைக்கு எழுதுபொருளாக்கிக் கொண்டால், எளிய சிறிய வார்த்தைகளில் அழகான கவிதைகளைப் படைக்கலாம்; நல்லொழுக்கமும் பரிவுணர்ச்சியும் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்" என்பது சாஸ்திரியாரின் கருத்து. இந்த வகையில் அவர் "தாயின் அந்தப் பிரலாபம்", "நன்றியுள்ள நாய்", "தன்னையே தியாகம் செய்து கொண்ட புறா", "ஒரு மூன்று நாள் ஆடம்பரம்" போன்ற தலைப்புகளில் சிறிய கவிதைகளை எழுதி இருக்கிறார்.

பண்டைய இலக்கியங்களில் பவபூதியின் 'உத்தர ராம சரிதம்' அவரை மிகவும் கவர்ந்தது. அந்த நாடகத்துக்கு அவர் கொடுத்திருக்கும் விளக்க உரை அவருக்கே உரிய தனித்தன்மை வாய்ந்ததாகும். காளிதாஸனின் பிரசித்தி பெற்ற சாகுந்தலத்தில் அவருக்கு அவ்வளவு ஆர்வம் இல்லை. துஷ்யந்தன் ஒரு ரீங்காரமிடும் வண்டைத்தேடும் சாக்கில் பலத்த ஆரவார, வீர தீர சாகஸச்செயல்களுக்கிடையே நாடகக்காட்சியில் பிரவேசிக்கும் நிகழ்வு அவருக்கு வெறுப்பையே தந்தது. அவருடைய கருத்தில் அந்த பாத்திரத்திற்கும் தற்கால திமிர் பிடித்த ரோமியோக்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. இலக்கியம் குறித்த அவருடைய தனித்தன்மை வாய்ந்த கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது சிரமம். அதற்கு நான் தகுதியானவனும் அல்ல. நான் மேலே இதை குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம் 'சுய தரிசனத்தைக் காண வேண்டும்' என்ற விழைவு, அவரது இலக்கியப்படைப்புகளில் எதிரொலிப்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான். அந்நாட்களில் 'இலக்கிய விமர்சனமும், வரலாற்று ஆராய்ச்சியும் பொறாமைகள், வெறுப்புகள் ஆகியவற்றில்' சிக்கிவிட்டதைக் கண்டு மனம் நொந்த அவர், முடிவாக அவற்றைக் கைவிட்டுவிட்டு, தன் வாழ்க்கையை மக்கள் சேவையில் அர்ப்பணித்துவிட்டார். இது தொடர்பாக கீழ்கண்ட சில வாக்கியங்கள் அவரது எண்ண ஓட்டத்தை காட்டும்.

“தொடக்கத்தில் எனக்கும் ஆக்கபூர்வமான கவிதைகள் இயற்றும் கலையில் ஆர்வம் இருந்தது. கவிதைகள் வெளிவந்தன. ஆனால் அவை எனக்கு அருவருப்பையே ஊட்டின. இனிமேல் நான் இதுபோன்ற போலியான, வெறுமையான பொழுது போக்குகளில் ஈடுபடமாட்டேன். பாரீர்! தள்ளாமை, மரணம் என்று இரு நச்சுப்பூச்சிகளையும் ஒரு தோட்டக்காரனைப் போல் அகற்றி, வாழ்க்கை எனும் விருட்சம் பழங்களைத் தரும்படி செய்து, அதிலிருந்து எண்ணற்ற புதிய மரங்களையும் உண்டாக்குவேன்.

கடவுளே! இப்பொழுதிலிருந்து நான் எண்ணம் பேச்சு, செயல் ஆகியவற்றில் தூய்மையோடு என்னை உங்களிடம் அர்ப்பணிக்கிறேன். மற்ற செயல்பாடுகளை எல்லாம் நிறுத்திவிட்டு மற்றவர்களின் நலனை மட்டும் மனதில் கொள்ளுவேன். பணம், காசு போன்ற பிரமைகள் என் மனதில் இனி இடம் பெறாது. ஓ பிரபுவே! சத்தியம். பரிவுணர்வு,

மற்றவர் நலம் பேணுதல் ஆகியவை நிரம்பிய தியானம் எனும் பாதையை விட்டு நான் விலகமாட்டேன்''.

அவருடன் நெருக்கமாக இருப்பது பயனற்ற, வெறும் வறட்டுத் தத்துவ வாழ்க்கையை நடத்துவதாகத்தான் இருக்கும் என்று நினைக்க வேண்டாம்.

அவர் ஒரு உண்மையான சத்தியத் தேடலில் ஈடுபட்டவர். கலையின் மீது பக்தியும் வாழ்வின் மீது ஆர்வமான ஈடுபாடும் கொண்டவர். இந்த தன்மைகள், அவர் எடுத்துக் கொண்ட அனைத்துப் பணிகளிலும் எதிரொலித்தன. அவருக்கு விதவிதமான கலர் பென்சில்கள், பேனாக்கள், கைத்தடிகள் போன்றவற்றை சேகரிப்பதில் அதிக விருப்பம். அவற்றை சேகரிப்பதில்தான் அவருக்குப் பங்கு உண்டு. ஆனால் அவற்றை உபயோகிப்பதில் எங்கள் அனைவருக்குமே உரிமை இருக்கும். அதைப்போன்றே அவருக்கு ஃபவுண்டன் பேனாக்களை சேகரிப்பதில் ஆர்வம் இருந்தது. எந்த ஃபவுண்டன் பேனாவில் எழுதினால் கை எழுத்து அழகாக இருக்கும் என்று கண்டறிய அவர் முனைவார். அவரைச்சுற்றி இருப்பவர்கள் அவரவர்களின் பேனாக்களை கொடுக்க போட்டி போடுவார்கள். மிகச்சிறிய தேங்காய் ஓடுகளை சேகரித்து அவர் மெருகேற்றுவார். பிறகு அவற்றை வெள்ளித்தகட்டால் மூடச் செய்வார். பொடி டப்பாக்களைப் போல தோற்றமளிக்கும் அவற்றை தனது நண்பர்களுக்குப் பரிசாகக் கொடுப்பார். அதுபோன்ற ஒன்றை அவர் எனக்கும் கொடுத்தார்.

நான் பொடிபோடும் பழக்கம் இல்லாதவனாதலால் "எப்படி அது எனக்குப் பயன்படும்'' என நினைத்தேன். அது பொடி டப்பாவாக இருக்கும் பட்சத்தில் அவர் அவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்க மாட்டாரே! "அதில் பஞ்சை நிரப்பி, அதில் 'அத்தர்' அல்லது யூடிகொலோன் போன்ற வாசனைத்திரவியத்தை ஊற்றினால் அது முகர்ந்து பார்த்துக் கொள்ளப் பயன்படும்'' என்று அவர் யோசனை கூறினார்.

அது போன்றே அவர், பல கைத்தடிகளை 'பாலிஷ்' செய்து நண்பர்களுக்கு பரிசாகத் தருவார். அதைப்போன்ற பல தடிகளை அவர் வைத்திருந்தார். அவற்றில் சில, பனைமரச் சட்டங்களை செதுக்கிச் செய்ததாக இருக்கும். சில, பாம்புகளைப் போன்று நெளிசல்களுடன்

இருக்கும். சில வெள்ளிப்பூண்கள் போட்டவையாக இருக்கும். பிரார்த்தனைக் கூட்டத்தில் பயன்படுத்த புள்ளிமான்தோல், புலித்தோல் ஆகியவை அவருக்குக் கிடைத்தன. தெலுங்கு தேசத்தின் பல பகுதியிலிருந்தும் அவரைத் தேடி எல்லா ஜாதியினரும், வகுப்பினரும் வந்தார்கள். தன் பேச்சுத்திறமையால் அவர் அனைவரையும் மகிழ்விப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக, மொழிகளின், வித்யாசமான உச்சரிப்புகளையும், அசாதாரணமான வார்த்தைகளையும் எடுத்துச் சொல்லி அவை தொடர்பான வரலாற்றையும் விளக்குவார். தோசை, என்ற வார்த்தைக்கு இரு பொருள் உள்ளதையும் 'அரசை' (உள்ளங்கை) என்ற தெலுங்குச் சொல்லுக்கு உள்ள வித்தியாசமான அர்த்தங்களையும் சுவாரஸ்யமாக எடுத்துக்கூறுவார்.

மிகுந்த கவனமாக, 'பழங்களைப் பறிப்பதற்குரிய காலம் அவற்றை எப்படி உபயோகிப்பது, பல வகையான கறி–கூட்டுகளின் சுவை' ஆகியவை பற்றி தெரிவிப்பார். தன்னுடைய சிறிய படைப்பான "தாயாரின் பிரலாபம்", (கடுபுதீபு) என்னும் கவிதையில் அவர் குண்டூர், கிருஷ்ணா ஜில்லாக்களில் பிரசித்தமான 'கோகு சட்னி' பற்றி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.

"இளம் கோகு இலைகளை, பச்சை மிளகாய் சேர்த்து பக்குவமாக்கி அவ்வப்பொழுது உபயோகித்துக் கொள்ள ஊறுகாய் போலச் செய்வார்கள். அதை நினைக்கும் பொழுது நாக்கில் நீர் சுரக்கும்".

இந்த யோகாமுறையைப் பயில்பவர்களுக்கு சத்துள்ள உணவு அவசியம். ஆனால் சாஸ்திரியார் சென்னையில் இருந்த அந்த நாட்களில் அவருடைய மாதச் சம்பளம் ஐம்பது ரூபாய்கள் மட்டுமே. அவரது குடும்பமோ பெரியது.

மேலும் அநேக விருந்தாளிகள் அடிக்கடி அவரது இல்லத்துக்கு வருகை புரிவார்கள். சம்பளத்தில் பாதிக்குமேல் வீட்டு வாடகைக்கே போய்விடும். பிறகு அரிசி, பருப்பு, காய்கறிகள், பால், நெய், விறகு, ஆடைகள் இதெல்லாம்! ஓ! சாஸ்திரியார் இவற்றை எல்லாம் எப்படி வாங்கினார்? சிகிச்சை பெற வருபவர்களிடமிருந்து அவர் ஒரு பைசா கூடப் பெற மாட்டார். யாராகிலும் சில பழங்களை கொண்டு வந்தால் 'சிகிச்சைக்குப் பிரதிபலனாக அவர்கள் அவற்றை தர முயல்கிறார்களோ'

என சந்தேகப்படுவார். சூரியோதய காலம் – அஸ்தமன நேரம் சிகிச்சைக்கு ஏற்றது. அப்போது கடும்பட்டினிதான், குடும்பத்தை நிர்வாகம் செய்வது யோகா பயிற்சியை விட கடுமையானது என எனக்குத் தோன்றியது. வறுமையே கூட அவரை தெய்வீகத்தை நோக்கித் திருப்பியது எனலாம். இந்த கஷ்டங்களை எல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் சாஸ்திரியார் தனது குரலை உயர்த்தி ஒரு சிறுவனைப் போல் "எல்லாச்சுமைகளையும் உன் மீது போட்டு விட்டு நான் பயமில்லாமல் இருக்கிறேன்" என்றோ, அல்லது "சூரிய வெப்பம் தகிக்கும் இந்த நேரத்தில் உன் கருணை, கற்பக விருட்சத்தின் நிழலைப் போல உள்ளது" (பக்த ராமதாஸரின் பாடல் வரிகள் இவை) என்றோ பாடுவதைக் கேட்க நாங்கள் திகைப்படைவோம்.

சில நேரங்களில் வீட்டில் சமைக்க அரிசி கூட இராது. 'கடவுள் என்ன அருள் செய்கிறார்?' என்று பார்ப்பதற்காக அவர் காத்திருப்பார். அது போன்ற ஒரு நாளில், நெல்லூரில் இருந்து ஒரு அன்பர் (செல்வந்தர் தான் போலும்) வந்து 1½ கிலோ அரிசியைக் கொடுத்தார். அவர் அன்று வரவேண்டியதில்லை. வேறு ஒரு நாளில் வரவேண்டியவர். அவருக்கு சாஸ்திரியாரின் வீட்டு நிலவரமும் தெரியாது. இன்னொரு தினம் "அன்னாசிப் பழத்தை தின்பது நல்லது" என்று பேச்சின் நடுவே சொல்லிக் கொண்டிருந்தார் சாஸ்திரியார். அடுத்த கணம் ராஜமஹேந்திரபுரத்திலிருந்து ஒரு அன்பர் வந்து ஒரு கூடை அன்னாசிப் பழங்களை அவரிடம் கொடுத்தார். வறுமை வாட்டினாலும் கூட, சாஸ்திரியார் அதில் கூட ஒரு திருப்தியை அனுபவித்தார். ஒரு நாள், இரவு உணவுக்குப் பிறகு, தூங்குவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது அவர் "அப்பனே! ஜார்ஜ் மன்னருக்குக் கூட எனக்கு இருக்கும் நிம்மதி இருக்காது. சாயங்காலம் என்னைப் பார்க்க நோயுடன் வந்த பலர், சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டே திரும்பினர். கடவுள் என் மூலமாக அதுபோன்ற நல்ல செயல்களை நடத்திக் கொண்டிருக்கிறார் என்ற திருப்தியுடன் நான் சந்தோஷமாகத் தூங்குவேன். ஒவ்வொரு நாளும் அவர் அமுதத் துளிகளைக் கொடுப்பது போல எனக்கு ஆசி புரிந்துகொண்டே இருக்கிறார். உடனடியாக கிடைப்பதாலும், அனுபவிக்க முடிவதாலும் அது எனக்கு ஆனந்தத்தை தருகிறது. எனக்குப் பொருளை சேகரிக்க வேண்டிய தேவையும் இல்லை. அதைக் கட்டிக்காக்க வேண்டிய அவசியமும் இல்லை" என்று கூறினார். இந்த அழுத்தமான உண்மையைக் கேட்கும் எவருக்கும், அவர் ஒரு யோகி

“தனக்கு வரும் கஷ்டங்களையும், தடைகளையும், இன்னல்களையும், தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளும் சக்தி படைத்தவர்” என்பது புலப்படும்.

சாஸ்திரியார் தனது யோகா முறை சிகிச்சையை எப்படிச் செய்தார் என்று அறிந்து கொள்ள வாசகர்கள் ஆவலாக இருப்பார்கள். காலை வேளையிலும், மாலை வேளையிலும் அவர் ஓர் இடத்தில் கைகளைக் கூப்பியவாறு அமர்ந்து தன் குருநாதரை மனதுக்குள் நினைத்துக் கொண்டு சிறிது நேரம் தியானத்தில் ஈடுபடுவார். அவருக்குள் என்ன நடக்கிறதென்று எங்களுக்குத் தெரியாது. அந்த நேரத்தில் நோயாளிகள் அவர் அருகே உட்கார்ந்தவண்ணம் கருணைக்கடலான இறைவனிடம் தங்கள் நோயை நீக்கிடுமாறு மௌனமாகப் பிரார்த்திப்பார்கள். விழிகளை மூடிக்கொண்டவாறே அவர்கள் தங்களுக்குள் நிகழ்வனவற்றை மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிலருக்கு விசித்திரமான அழகிய காட்சிகள் தெரியும். சிலர் தங்களுக்குள் ஏதோ ஒன்று ஊடுருவி நோய்வாய்ப்பட்ட உடற்பகுதியை சாந்தப்படுத்துவதாக உணர்வார்கள். சிலர் எல்லாக்கவலைகளையும் மறந்து தூங்கியே விடுவார்கள். முடிவில் அவர்கள் அனைவரும் தங்களது உடல் உபாதையிலிருந்து விடுபட்ட புத்துணர்வு கொள்வார்கள். இதுபோன்று சில தினங்கள் செய்த பிறகு படிப்படியாக அவர்கள் முழுமையான நிவாரணம் பெற்று பூரண நலத்தோடு திரும்புவார்கள். தியானத்தின் போது ஏற்பட்ட அசாதாரண நிகழ்ச்சிகளை அவர்கள் அவ்வப்போது பதிவு செய்வார்கள்.

சாஸ்திரியார் தன் அருகே வந்து உட்கார்ந்தவர்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்கவில்லை; வெகு தொலைவில் இருந்தவர்களுக்கும் அளித்திருக்கிறார். எல்லா விதமான வழிகளும் அடைபட்டுப் போனபின் சிலர் தங்கள் நோய்களைப் பற்றி அவருக்கு தந்தி மூலம் செய்தி அனுப்புவார்கள். அது அவர் கையை அடையும் முன்பே அவர்களுக்கு நிவாரணம் கிட்டிவிடும்.

சில நேரங்களில், தனி நபர்களின் நோயைத் தீர்த்தது மட்டுமல்ல, தேசத்திற்கே தீமை அளித்த பிரச்சனைகள் தீர்வதற்காகவும் தவம் இயற்றி இருக்கிறார். 1948ல் ராயல சீமாவில் நேரிட்ட பஞ்சம், 1947க்கு முந்தைய இந்திய சுதந்திர இயக்கம் ஆகியவை தொடர்பாக அவர் மேற்கொண்ட

விசேஷமான தவமும் அதனால் பெற்ற விதவித அனுபவங்களும் குறிப்பிடத்தக்கவை.

காந்திஜி உண்ணாவிரதம் மேற்கொண்ட சமயங்களில் அவருடைய உடல்நலத்திற்காக சாஸ்திரியார் புரிந்த தவங்களைப் பற்றி இங்கே நான் குறிப்பிடாமல் இருக்கக் கூடாது. இயல்பாக இருந்த அடக்கம் காரணமாக, இதுபோன்ற விஷயங்களை சாஸ்திரியார் பகிரங்கப்படுத்துவதில்லை. "தங்களுடைய உயிர்கள் ஒன்று, உடல்கள் தான் வேறு" என்பது போன்று காந்திஜியின் அஹிம்சை தத்துவம், ஹரிஜன முன்னேற்றம், ஆலயப்பிரவேச இயக்கம்" ஆகிய கொள்கைகளை அவர் முழுவதுமாக ஆதரித்தார். இந்த அசாதாரண அதிசயிக்கத்தக்க விஷயங்கள் அனைவரும் அறிய வேண்டியவை. ஆனால் இடம் தேவை என்பதால் அது போன்றவற்றை விவரமாகச் சொல்லாமல் விட்டு விடுகிறேன். அவரைப்பற்றி அறிந்தவர்கள் அனைவருக்குமே இவை தெரியும்.

பிருக்த ரஹித தாரக ராஜயோகா முறையில் சாஸ்திரியார் போலவே பலர் தீக்ஷை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவரைப் போல் யோகா முறை சிகிச்சையை பல ஆண்டுகள் தினமும் தீவிரமாகவும், வெற்றிகரமாகவும் செய்தவர்கள் வேறுயாராவது இருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. அவர்களில் பலர் இச் சிகிச்சை முறை பற்றி மாறுபட்ட கருத்தைக்கொண்டிருந்தார்கள். முதலாவது 'இச்சிகிச்சை அளிப்பவர் அபாயங்களுக்கு உள்ளாவார்; இரண்டாவது இந்த யோக முறை, சிகிச்சைகளுக்காக உருவானதல்ல' இந்த மாதிரியானவையே அவர்களுடைய கருத்துக்கள். இந்த விஷயத்தில் சாஸ்திரியாரிடமிருந்து நான் அறிந்தவை கீழ்வருமாறு:–

முதலாவது: இந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் முக்கிய கொள்கை–சிகிச்சை அளிப்பவர், நோயாளி அனுபவிக்கும் வேதனையை தானே அனுபவிப்பது போல அனுதாபத்துடன் உணர வேண்டும். அப்படிப்பட்ட அனுதாப உணர்வு நோயாளியின் வேதனையை நீக்கும். சிகிச்சை அளிப்பவர் 'பார். நான் ஒரு வசியம் செய்கிறேன்' என்ற மனநிலையில் இருந்தால் சிகிச்சை பலனளிக்காது. அதே மாதிரி சிகிச்சை பெறுபவரும் "நீங்கள் எப்படி என்னை வசியப்படுத்தப் போகிறீர்கள்? பார்க்கிறேன்" என்ற மனப்போக்கைக்கொண்டாலும் பலன் கிட்டாது.

தொடக்கத்தில் சாஸ்திரியார் மற்றவர்களின் நோயைக் கண்டு மனவேதனைகள் அடைந்து வந்தார். ஆனால் அந்த வேதனையினால் பலன் இருக்கும் என்பதையும், அதனால் அவர்கள் நலம் அடைகிறார்கள் என்பதையும் அவர் அறியவில்லை. சில நேரங்களில் அதன் தாக்கத்தை அறிந்த பிறகு, 'நோயின் உபாதையால் பிறர் அவஸ்தைப்படுவதைக் கண்டு தான் துக்கமடைவதாலும், தனக்குள் அனுதாப உணர்வு எழுவதாலும் அவர்களுக்கு குணம் ஏற்படுகிறது' என்பது அவருக்குத் தெரிய வந்தது.

'நான், நீ' என்ற வேறுபாடுகள் உள்ள எண்ணம் இருந்தால் சிகிச்சை பலன் தராது. மேலும் 'எல்லா மனிதர்களும் ஒரே குடும்பத்தவர்' என்ற மன வளர்ச்சி, அருமையான சிகிச்சை தருபவருக்கு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு அது அருமையான பலன் தருவதாக இருக்கும். இந்த யோகா முறையில் பயிற்சி பெற்றவர்களிடையே சாஸ்திரியாருக்கு இருந்த தனித்திறமைக்கு காரணம் அவருக்கு இருந்த அளவற்ற கருணை உள்ளம் தான். ஆனால் 'நோயாளிகளின் வேதனையுடைய நிழல், அவர்களுக்கு சிகிச்சை அளிப்பவரின் உடல் மீதும் படும் என்பதும் உண்மை. 1926ஆம் ஆண்டு, சாஸ்திரியார் உளப்பூர்வமாக இந்த சிகிச்சையை நோய் வாய்ப்பட்டவர்கள் குணம் அடையும் பொருட்டு கொடுக்க முற்பட்ட போது, அவரது நண்பர்கள் பலர் மேலே சொன்ன காரணத்தைக்காட்டி அவரைத் தடுக்க முற்பட்டனர் என்று தெரிகிறது. சாஸ்திரியார் தியானம் செய்யும் போது தன் குருதேவரிடம் கீழ்க்கண்டவாறு சொல்லி முறையிட்டார்.

“நோயாளிகளின் உபாதை இந்தக்காரணத்தினால் தீரும் என்றால் நான் மனப்பூர்வமாக அவர்கள் படும் வேதனையை ஏற்றுக்கொண்டு துன்பப்பட தயாராக இருக்கிறேன். அவர்கள் நோயை தீர்ப்பது 'நான் இல்லை' என்பதை நான் அறிவேன். எனக்குப் பின்புறமாக நீங்கள் இருக்கிறீர்கள். கருணை உள்ளம் படைத்த நீங்கள் 'என் மூலம் மற்றவர்களின் நோயைத் தீர்த்து விட்டு என்னை இன்னலுக்குள்ளாக்குவீர்கள்' என நான் பயப்படவில்லை. உங்கள் பின்னால் ஒளிந்து கொள்ள எனக்குத் தெரியாதா?”.

இது தொடர்பாக, சாஸ்திரியார் எழுதிய சில கவிதைகளில் உள்ள வரிகள் கீழே தரப்பட்டுள்ளன. “மஹாப் பிரபுவே! ஆத்மாவின் உள்ளே

உறைபவரே! என்னைச்சுற்றியுள்ள அறியாமையை நீக்கி நீங்கள் அங்கே வந்து நிலைபெற்று இருங்கள். என்னுடைய சின்னத்தனமான 'தன்னை முன்னிருத்தும் போக்கை' அகற்றுங்கள். என்னை உங்களோடு இணைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் என்னிலேயே இருப்பதை உணராமல் பல இக்கட்டுகளுக்கு உள்ளாகினேன். கடைசியாக என் மார்க்கம் எது என கண்டுபிடித்து விட்டேன். என் துக்கம் நீங்கியது, பிரபுவே! இந்த மனித உடல் பிரார்த்தனைக்கு உறைவிடமாகி விட்டது. உங்களை அதில் நிலை நிறுத்தி, உங்களது அகண்ட பரிபூரண ஆட்சியை நிறுவுங்கள். என் உடல் ஒரு நிலைக்கண்ணாடி போன்றது. அதை சுத்தமாக்கித் துடையுங்கள். பிரபஞ்சம் முழுவதும் உங்களுடைய பெருமை மிகு பிரகாசமான ஒளியால் நிரம்பட்டும். பிரபுவே! உங்களை என் அறிவு நிரந்தரமாக உணர்ந்து ஒவ்வொரு விநாடியும் என்னை ஆட் கொள்ளட்டும். நீங்கள்தான் எப்போதும் என் பின் மறைந்து கொண்டு என்னோடு கண்ணாமூச்சி விளையாட்டு ஆடுகிறீர்களா? உங்களை நான் கண்டு கொண்டேன். இனி எப்போதும் விழிப்பாக இருப்பேன். நான் உங்கள் பின்னால் ஒளிந்து கொள்வேன். பிரபுவே நான் ஒரு போதும் தடுமாற மாட்டேன், பயப்படமாட்டேன். உங்களால் ரட்சிக்கப்பட்ட நான் இனி பேரானந்தத்துடனேயே இருப்பேன்".

அந்த தினத்திலிருந்து தனது பூத உடலை நீங்கிச் செல்லும் கடைசி நிமிஷம் வரை சாஸ்திரியார் பலரது கொடிய நோய்களை, மனதை ஒரு முகப்படுத்திய பக்தியால் தீர்த்து வைத்திருக்கிறார். அவ்விதம் தனது யோக முறையால் சிகிச்சை அளிப்பதன் விளைவாக அவருக்கு ஏதாவது தீங்கு வரும் என்றால் அவர், நீண்ட நாட்களுக்கு முன்பே தனது பூத உடலை விட்டு நீங்கியிருக்க வேண்டும்! அவர் காசநோய், ஆஸ்த்மா, மெனிங்கிடிஸ், இதய நோய்கள், பாம்புக்கடி போன்ற பல நோய்களுக்கு சிகிச்சை அளித்து தீர்த்து வைத்திருக்கிறார். அவருக்கு அதனால் எந்தத் தீங்கும் வந்ததில்லை. 25 ஆண்டுகளுக்கு மேலாக இவ்விதம் அவர் யோகமுறையால் சிகிச்சை அளித்து வந்தார். அவர் இந்த விஷயத்தில் மிக உயர்ந்த ஞானம் உடையவர். 'மற்றவர்களின் நோயைப் போக்கும் முயற்சியில் நமது நோயும் தீர்கிறது' என்று சொல்வது அவர் வழக்கம். எங்களில் பலரது சொந்த அனுபவங்களிலிருந்து இதை நாங்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். மகாகவி ஷேக்ஸ்பியர் "கருணையின் தரம்" பற்றி சொல்லி இருப்பது இந்த விஷயத்தில் உண்மையாகும்.

"கருணையின் தரம் குறைபாடு உடையதல்ல.
அது சொர்க்கத்திலிருந்து மென்மையான
மழையைப் போல் விழுகிறது.
கீழே உள்ள உலகில், அது இரட்டிப்பு ஆசிகள்
பெற்றதாகிறது.
யார் கொடையாளியோ அவரை அது
ஆசீர்வதிக்கிறது–தன்னுடன் சேர்த்துக்கொள்கிறது.
(ஷேக்ஸ்பியர்)

ஏசு கிறிஸ்து சொன்னார்:–

கருணை உள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.
ஏனெனில் அவர்கள் கருணையை பெறுகிறார்கள்
(மாத்யூ வி எஸ்).

இரண்டாவது 'இந்த யோகா முறை நோய்களுக்கு சிகிச்சை தர ஏற்பட்டதல்ல' என்று கூறுவோருக்கு சாஸ்திரியார் சொல்லும் பதில்: "சிகிச்சைகள் தரவல்லது அல்ல என்றால் இந்த யோகா முறை யாருக்கு வேண்டும்? எவரும், தன் உடலில் சில அதிர்வலைகளை ஏற்படுத்துகிறது என்பதற்காக இந்த யோகா முறையைப் பயில மாட்டார்கள்."

எது எப்படி இருந்தாலும், சாஸ்திரியாரின் யோகமுறைப்பயிற்சி, அவரது இயல்புக்கு ஏற்ப ஒரு தனித்திருப்பம் கொண்டதாக இருந்தது. ஆன்மீகத் தியானத்திற்கு வழியாக இருப்பதுகூட, உண்மை –கருணையுடன் கூடிய பயனைத் தர வேண்டும்' என்பது அவருடைய திடமான நம்பிக்கை. அவருடைய தன்னலமற்ற தியாக உணர்வு எனக்கு 'ஜீமூத வாகனா' மற்றும் புத்த ஜாதக (JATAKA) கதைகளை நினைவூட்டியது. அவை, புத்தர் பெருமானின் கருணை மற்றும் தன்னலமற்ற தியாகம் ஆகியவற்றை படம் பிடித்துக்காட்டுகின்றன.

சாஸ்திரியாரிடம் சென்று நோய்க்கு நிவாரணம் பெற்றுத் திரும்பியவர்கள், தங்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்த தெய்வீக நிதர்சனத்தைப் பற்றி அறியும் ஆராய்ச்சியை மேற்கொள்ளுவார்கள். மேலும் தாங்கள் அனுபவித்த நோயினை தொடக்க நிலையாகக்கொண்டு அவர்களை குணப்படுத்திய அனைத்திலும் உறைந்திருக்கும் கருணைமிக்க ஆன்மாவை உணரும் முயற்சியிலும் ஈடுபடுவார்கள்.

'நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முன் வருபவர் தன்னையே அந்நோயாளிகளோடு அடையாளப்படுத்திக்கொள்ளாவிட்டால், பலன் ஏதும் கிட்டாது' என்று குறிப்பிட்டிருந்தேன். இந்த வகையில் சிகிச்சை என்பது, பலரின் பின்புலமாக இருக்கும் ஒரு நிதர்சனத்தை அடையாளம் காண்கின்ற பயிற்சியும் ஆகும். இதன்படி சிகிச்சை என்பது உண்மையில் 'நம்மை நாமே அடையாளம் காணுகின்ற' யோகப் பயிற்சியேயாகும்.

ஓர் உண்மையான யோகி, ஒரு நபர் நோயால் துன்பப்படுவதைப் பார்த்துக்கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும்? கீதையின் உன்னதமான ஓர் அறிவுரையை இங்கு நினைவுபடுத்திக்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

आतमौपम्येनसर्वत्र समं पश्यति यो अर्जुन
सुखं वा यदि वा दु :स्वंयोगी परमो मतः

"ஹே அர்ஜுனா! யார் ஒருவர் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் எல்லாவற்றையும் தன்னுடைய வடிவத்தில் சமமாகப் பார்க்கிறாரோ, அவர் அப்பழுக்கற்ற யோகியாகக் கருதப்படுகிறார்" (கீதை VI–32: ராதாகிருஷ்ணாவின் மொழி பெயர்ப்பு).

சாஸ்திரியார் தனது யோகாமுறை சிகிச்சையால் குணம் பெற்றவர்களிடம் "உங்கள் நோயை தீர்த்தது நம் எல்லாருடைய உள்ளத்திலும் உறைந்திருக்கும் கருணா மூர்த்தியான இறைவன் தான், நான் அல்ல" என்று கூறுவார் என முன்பே குறிப்பிட்டிருந்தேன். அவருடைய குருதேவர் அவருக்கு மனித உருவான மகோன்னதமான வடிவம். ஆனால் சாஸ்திரியார் தன் குருநாதரின் பெயரை ஒரு போதும் குறிப்பிட்டதே இல்லை. காரணம் அந்த குருநாதர் தன்னைப்பற்றியோ தன் யோகா முறையைப்பற்றியோ எந்தப் பிரச்சாரமும் செய்யப்படுவதை விரும்பியதில்லை. சாஸ்திரியார், அந்த விதியை இறுதி வரையிலும் கடைப்பிடித்து வந்தார். அது மட்டுமல்ல அதே விதியைப் பின்பற்றியும் 'தன்னைப்பற்றியும் பிரச்சாரம் செய்யக்கூடாது' என தன் அபிமானிகளை அவர் தடுத்து வந்தார். இந்தக்காரணத்தினாலேயே அவரது பணிகளைப் பற்றி எவ்வளவு அறிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவுக்கு உலகம் அறிந்து கொள்ளவில்லை. பலர், முதல் முறையாக செய்தித்தாள்களில் வெளிவந்த வெள்ளம் போன்ற துயரச்செய்திகளாலும் அவரது

சிகிச்சையால் பலன் பெற்றவர்கள் சொன்ன தகவல்களாலும்தான் 'அவர் அந்த மாதிரியான ஒருயோக முறையை கையாளுகிறார்' என்பதையே அறிந்து கொண்டார்கள். அவரது பிறப்பு ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதால் அவரது மறைவிற்குப்பின் உலகம் அவரை நன்றியுடன் நினைவு கொள்கிறது.

சாஸ்திரியார் கடைப்பிடித்த யோகாமுறை 'பிருக்த ரஹித தாரக ராஜயோகா' ஆகும். 1910ல் ஒரு பெரிய மனிதர் கும்பகோணத்தில் அதை ஸ்தாபித்தார். அவரது பெயரிலே உள்ள முதல் எழுத்துக்களே (C.V.V.) இந்த யோக முறையின் 'மந்திரம்' எனப்படுகிறது. கூப்பிய கரங்களுடன் அவரை தியானம் செய்பவர்களுக்கு 'பிரம்ம ஞானத்தை' அளிப்பதாக அவர் வாக்குறுதியாகப் பிரகடனம் செய்திருக்கிறார். 'பிரம்மத்துடன் ஒன்றுபடுதல்' ஏதோ ஒரு 'தன்னை மறந்த நிலை' அல்ல என்பது அவர் கருத்து. “அது இப்பூத உடலை நீங்கிய பின் அடைவதும் அல்ல; அது இந்த மண்ணுலகில் உலகியல் உணர்வுகளுடன் இந்தப் பூத உடலைக் கொண்டே பெறுவதுதான்.” இந்தக் கண்ணோட்டத்தை உறுதி செய்யும் கொள்கைகள் பண்டைய நூல்களில் காணப்படலாம். ஆனால் எந்த ஒரு நூலின் அடிப்படையிலும் அவர் இந்த யோக முறையை தொடங்கவில்லை. அது ஒரு புதிய சிருஷ்டி. முற்றிலும் சுயசார்பு உடையது. அவரிடம் ஆன்மீக சக்தி மிகுந்திருந்தது. இந்த யோகாமுறையைப் பின்பற்றுபவர்கள் அவரை 'உயர்ந்த ஞானத்தின் ஸ்வரூபம்' என்று கருதுகிறார்கள்.

வெளியே தெரியும்படியான வழிபாடுகள், பக்திப் பாடல்கள், தீப ஆராதனை ஆகிய சடங்குகளை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த யோகா முறையின் செயல்பாடு, அவரைப் பற்றி மனதில் எண்ணி வணங்குவதிலிருந்தே, உடலில் தொடங்குகிறது. இதைப் பயிற்சி செய்பவரின் பங்கு 'தனக்குள் ஏற்படும் மாற்றங்களை ஒரு பார்வையாளரைப் போல் கவனிப்பது' மட்டும் தான். முத்திரைகள் எனப்படும் ஆஸனங்கள், பிராணாயாமம் அல்லது ஹடயோகப் பயிற்சி எல்லாம் தேவை இல்லை என அவற்றை அவர் தடையே செய்திருக்கிறார்.

இந்த யோகாமுறை, பயிலுபவரின் சுயஉணர்வு, பயிற்சியின் போது அவரது சொந்த கட்டுப்பாட்டில் தான் இருக்கும்.

இம்முறையில் உணவு விஷயமாக திட்டவட்டமான விதிமுறைகள் இல்லை. உடலுக்கு குளுமையையும் சக்தியையும் தரக்கூடிய சாத்வீக

உணவையே உண்ண வேண்டும். இந்த யோகாபயிற்சிக்காக இல்லறத்தை துறக்க வேண்டியதில்லை. சந்நியாசம் அனுமதிக்கப்படவில்லை. தனக்குரிய தொழிலைச் செய்து கொண்டே ஒருவர் இந்த யோகா பயிற்சியிலும் ஈடுபடலாம். மற்றவர்கள் அடையாளப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த யோக முறையில் பயிற்சி பெறும் எவரும் எந்தக்காட்சியையும் காட்டக்கூடாது. இந்த யோகாபயிற்சியின் போது 'அற்புதங்கள்' நடக்கக்கூடும். அவை ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்யப்படலாகாது. தவிர, அவை ஒன்றும் முக்கியமானவையும் அல்ல. இதைப்பயிலுபவர்கள், இந்த உன்னதமான யோக முறைக்கு கேடு வராதவாறு அறவழியில் நடக்கவேண்டும்.

இந்த யோக முறையைப்பற்றி எழுத இன்னும் நிறைய விஷயங்கள் உள்ளன. ஆனால் இப்போதைக்கு இது போதும் என நினைக்கிறேன். அதனால் என் ஆசானாகிய சாஸ்திரியாருக்கான இந்த அன்புச் செய்தியை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

கொத்த வேங்கடேஸ்வர ராவ்

பின்குறிப்பு :

மேலே உள்ளதெல்லாம், நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தெலுங்கில் எழுதியதன் மொழிபெயர்ப்பே. அப்பொழுது எனக்கு வயது 38. என்னுடைய மரியாதைக்குரிய ஆன்மீக குருவின் மறைவாகிய சோக நிகழ்வை நான் நேரில் இருந்து பார்த்தவன். உணர்ச்சி மிகுதியின் காரணமாக சிலவற்றை நான் எழுதியிருப்பது மிகையாக இருக்க நேர்ந்திருந்தால் அது இயல்புதான். அது போன்ற முக்கியமில்லாதவைகளை நீக்கிவிட்டு, 30வருடங்களுக்குப் பிறகு, என் 68வது வயதில் அவற்றை திரும்பிப் பார்த்தால் அவை அநேகமாக சரியாக இருக்கின்றன என்றே சொல்வேன். என் ஆன்மீக குருவின் "நோயைக் குணமாக்கும் சக்தி"யின் மெய்ம்மைக்கும், 'அது தொடர்ந்து நீடித்து வருகிறது' என்பதற்கும் சாட்சிகளாக இன்றும் கூட அவரது சிஷ்யர்களான (1) திருப்பதி ஸ்ரீனிவாசாச்சாரி (2) குண்டூரில் வசிக்கும் ஸ்ரீ ராமகோட்டையா ஆகியோர் இருந்து வருகிறார்கள்.

சாஸ்திரியாரின் புதிய யோகாமுறை பற்றி மேலும் சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்ற உந்துதலை அடக்கிக் கொள்கிறேன். ஏனெனில், இந்த யோகா முறை, அமரநிலை, தெய்வீக வடிவம், அளவற்ற

ஞானம், பேரானந்தம் ஆகியவற்றை அளிக்கவல்லது என்பதைத் தவிர, இதைப் பற்றி நம்மில் யாருக்கும் வேறு அதிகம் தெரியாது. இதை அறிமுகப்படுத்தியவர், இதைப்பற்றிய முழுமையான அறிவு இல்லாமல் இது பற்றி எழுதக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். அதில் ஈடுபாட்டுடன் பயிற்சி மேற்கொள்வதே அதைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வழி.

கடைசியாக, நான் வெகுநாட்களாக நன்றிக் கடன்பட்டிருக்கும் மாது சிரோமணி மஹாலக்ஷ்மி அம்மையாருக்கு என் பக்தியையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அம்மையார் சாஸ்திரியாரின் வாழ்க்கைத் துணைவியார் ஆவார். அவர்கள், சாஸ்திரியாரின் துணைவியாக நாற்பது ஆண்களுக்கும் மேலாக இருந்து, இரவும் பகலுமாக தங்கள் இல்லத்தை ஓர் ஆசிரமம் போலாக்கி வெவ்வேறு குணங்களும் ருசிகளும் உடைய அவரது சீடர்களுக்கு, ஒரு தாயைப் போன்ற பரிவுடன் உணவு படைத்திருக்கிறார். அவர் மௌனமாகவே இருந்து தன் கணவரின் அனைத்து ஆன்மீகப் பரிசோதனைகளுக்கும், கடினமான அனுபவங்களுக்கும் உதவியாக இருந்து வந்திருக்கிறார்.

சாஸ்திரியாரின் இல்லத்தில் கூடி அவரிடம் பயிற்சி பெற்ற அனைவருமே அந்த அன்புமிகுந்த அன்னையாருக்கு நன்றிக்கடன் பட்டவர்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமும் கிடையாது. அம்மாதரசி, தன் குழந்தைகளுக்கு மட்டுமல்ல அவரது இல்லத்தில் குழுமிய எங்கள் எல்லோருக்குமே தாய் தான்.

தன் கணவரின் சில தனித்துவமான அனுபவங்களை அவரும் சேர்ந்து உணர்ந்திருக்கிறார் என இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய ஒத்துழைப்பு இல்லாமல் சாஸ்திரியார் அந்த அனுபவங்களை பெற்றிருக்க மாட்டார். பிரக்ருதியும் புருஷனும் போல, இந்த யோக முறையின் திட்டத்தில் அந்த இரு ஆத்மாக்களும் ஒன்றுக்கொன்று உதவியாக இருந்தன என்பதுதான் உண்மை.

(பிப்ரவரி 1981) கொத்த வெங்கடேஸ்வரராவ்

பிருக்தரஹித தாரக ராஜயோகா – ஒரு குறிப்பு

(பிருக்த ரஹித தாரக ராஜயோகா பற்றி அமரர் பிரபாகர சாஸ்திரியாரின் சீடர் ஸ்ரீகொத்த வெங்கடேஸ்வரராவ் எழுதியுள்ள குறிப்பு கீழே தரப்பட்டிருக்கிறது).

இந்த யோக முறையை தன் வாழ்நாளில் (1868–1922) கண்டறிந்தவர், 'விசாரணை செய்பவர்களுக்கான தகவல் (Information)' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள பிரசுரத்தின் சாராம்சம் வாசகர்கள் பயன் பெறுவதற்காக, கொடுக்கப்பட்டுள்ளது.

1) வாழ்க்கையின் உள்ளார்ந்த தொடக்கமும் ஊற்றுக்கண்ணும் அதன் ஆக்கபூர்வமான சுதந்திரமும், இந்த யோகாவின் ஆதிகுருநாதரை, 1910ஆம் ஆண்டில் 'நேரானது' என்று அழைக்கப்பட்ட ஒரு புதிய பரிமாணத்தை இம்மண்ணுலகில் புதிதாக அமைக்க வைத்தது. அந்த தொடக்கம், அவருடைய கரங்களில், யார் விரும்புகிறார்களோ அவர்களுக்கு வழங்கும் பொருட்டு, 'சுய முன்னேற்றத்திற்கான சில அறிவுரைகளை' கொடுத்தது. இந்த யோகா முறையின் குருநாதர் தன்னைச் சுற்றி நெடுநாட்களாக நண்பர்களாக இருந்தவர்களையும் உறவினர்களையம் சேர்த்துக் கொண்டார். அவர்களே யோக சங்கத்து நண்பர்களின் கருவும் ஆவர்.

2) அந்த மூலத் தொடக்கம் 'ஏதோ சந்தர்ப்பத்தினால் நிகழ்ந்தது' போல அதில் சேர விரும்புபவர்களை தனக்குள் சேர்த்துக் கொண்டதுடன் அவர்கள் மூலமாக தன்னை வெளியிட்டுக் கொள்வதற்கான ஒரு ஊடகமாகவும் ஆனது. இந்த மனித சமுதாயம் முழுவதும் இயல்பாகவே நாளடைவில் இந்த திட்டத்தின் கீழ் வந்துவிடும். இதற்காக தனியான பிரச்சாரம் தேவை இல்லை. அது மனித சமுதாயத்திற்குரியது. மனித சமுதாயம் அதற்குரியது.

3) இந்த முறையில் சேர்ந்து தீக்ஷை பெறுபவர்களுக்கு வாழ்க்கையில் ஓர் புதிய ஒளிவீச்சு கிடைத்திருக்கிறது. அதனால்

அடிப்படையிலேயே புதியதோர் வாழ்வுக்கான பரிணாம வளர்ச்சியை அடைவதுடன், அவர்கள் இறுதி அற்ற, உயர்வான உணர்வுகளையும் பேரானந்தத்தையும் பெற இயலுகிறது. இப்போது உள்ள உடலினால் அது போன்ற உணர்வுகள் உண்டாக்கும் மனக்கிளர்ச்சியை அவர்களால் தாங்கிக் கொள்ள இயலாது. இந்தக் குறைபாடுதான் முந்தைய யோகாபழக்கங்களால் கிட்டுகிற பேரானந்தத்தினால் ஏற்படும் 'நினைவுகள் அற்ற' நிலைக்கு காரணமாகிறது. இந்த நிலை உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு கனவு காணுவதைப் போன்றதாகும். இதில் சுயநினைவு எவ்வளவு சீக்கிரம் வந்தாலும், நினைவுகள் எவ்வளவு சீக்கிரம் தெளிவு அடைந்தாலும் கூட சிந்தனையில் தொடர்பு அறுபட்டுப் போவது உண்மை. இப்படி தொடர்பு அறுபடுவது ஏதோசில வழிவகைகளை கையாளுவதால் அல்ல, நம் உடல் அமைப்பின் ஆழத்தில் இல்லாமல் இருக்கும் ஏதோ ஒன்றினால் தான் இது நடக்கிறது. இந்தப் புதியயோகா முறை, தொடர்பறாத ஒரு நிலையை உருவாக்குகிறது. மனித சமுதாயத்திற்கே இது ஒரு புதிய முறை. ஆகவே இது ஒரு 'புதிய பரிணாம வளர்ச்சி' எனப்பெயர் பெற்றுள்ளது. இந்த தொடர்பறாத நிலை, மூல முதல் பொருளின் நேரடி நடவடிக்கையினால்தான் சாத்தியமாகும். எந்த ஒரு மனிதராலும், அவர் எவ்வளவு உயர்ந்த ஆன்மீக நிலையில் இருந்து உலகை இயக்குபவராக இருந்தாலும் அவரால் இந்த நிலையை அடைய முடியாது என்பதை இதனால் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

5) தன் நேரடி நடவடிக்கையால், மூல முதல் பொருள் இப்போது பௌதிக நிலையை அடைந்து மனித சமுதாயத்தை புதியதாக மாற்றி அமைக்கிறது. புதிதாக வடிவெடுக்கச் செய்கிறது.

இந்த முறையின் குருநாதர் மூலமாக அவரை மையமாகக் கொண்டு ஒரு விரிவடையும் அமைப்பு உருவாகிறது. அது தன் வீச்சுக்குள் மனித சமுதாயத்தை கொண்டு வந்துவிடும்.

6) இப்போதுள்ள, பல அடுக்குகளாலான தொடர்புகள் அற்ற உள்உணர்ச்சி எனும் மனநிலைக்கு காரணம், மனிதனின் மூல பிரக்ருதியான குண்டலினியில் உண்மையான மையம்

இல்லாததே. நாம் அதன் விளையாட்டுக் கருவிகள். குண்டலினி என்பது, இறைவன் வரவிற்காக காத்திருக்கும் ஓர் ஆலயமாகும். இறைவன், மூல முதல் பொருளின் ஒரு ஒளிப்பொறியாக வந்து அதில் குடிபுக இருக்கிறார்.

7) அந்த ஒளிப்பொறி, அல்லது தூண்டுதல், உள்ளிருந்து வெளியே வரும் ஒரு செயல் வடிவுடன் மனிதனை உண்மையான, சுய தேவை பூர்த்தி அடைந்தவனாக ஆக்கிடும் மையமாகிறது. அந்த சுயமாக, உருவெடுத்த வஸ்துவாகிய குண்டலினி இந்தப் பரிணாம வளர்ச்சியின் பகுதியாகும். அது மனிதனின் உணர்வுகளில் உள்ள பௌதிகம் முதலாக உயர்ந்த ஆன்மீக நிலையிலான அனைத்தையும் ஒன்றுபடுத்தி அவை அனைத்தின் குணாதிசயங்களையும் தன்னில் வெளிப்படுத்துகிறது.

8) தீக்ஷை பெறும் போது வெளியாகும் புதிய ஒளிப்பொறியானது, உயர்நிலையிலிருந்து பௌதிக நிலைக்கு இறங்கிவரும் ஒன்றாகும். தீக்ஷை பெற்ற கணத்திலிருந்து, நாம் உடல் என்று சொல்வதில் உள்ள இடங்களை எல்லாம் அது நிரப்பத் தொடங்குகிறது. எவருமறியாமல், அனைத்து பாகங்களிலும் அது பரவி நிலைபெறும் வரை இந்த செயல் நீடிக்கிறது. இந்த யோகாமுறையில், பயிற்சி என்பது புதிய அமைப்பில் புதிய செயல் வடிவம் கொள்ள வைப்பதற்கான ஒரு வழி தான். அதன் படி இந்த யோகா முறையானது ஒரு புதிய அமைப்பை நோக்கி முன்னேறச் செய்யும் ஒரு கல்விப்பயிற்சிதான். இது வரை கண்டறியப்பட்ட உயர்ந்த சாதனைகள் யாவும் கூறுகின்ற உண்மை மற்றும் நீடித்து நிற்கும் தன்மை ஆகியவற்றில் இல்லாத ஒன்றைத் தருகிறது இது.

9) அதன் விளைவாக, மனித சமுதாயம் இது வரை தொடர்ச்சியாக சந்தித்து வரும் தீமைகள் எல்லாம் விலகும். இது போன்ற நிலை வருமானால், ஒரு முதுமொழி சொல்வது போல 'யமனுக்குக்கூட' வேலையில்லாமல் போகும்.

10) பிருக்த, தாரக போன்றவை: இப்போதுள்ள மனித உடலமைப்பு மனிதனின் குண்டலினியுடைய சிருஷ்டியாகும். அது இதுவரை 3½ சுருள்களில் மறைந்துள்ளது. இந்த மறைப்பு 'பிருக்த' எனப்படுகிறது.

தாரக: இந்த புதிய ஒளிப்பொறி இந்த மறைப்பை (ரஹிதா) நீக்குவதுடன், நான்காவது பரிணாம வளர்ச்சி நிலையை (தாரக) தொடங்குகிறது.

ராஜயோகா: ராஜயோகா முறை என்பது முக்கியமான மனப்பயிற்சிதான். அதில் யோகாசனம், முத்திரை, பிராணாயாமம் மாதிரி மூச்சுப் பயிற்சிகள் போன்றவை இருக்காது.

ஆகவேதான் இந்த யோகாமுறை பிருக்த ரஹித தாரக ராஜயோகா என்று பெயர் கொண்டுள்ளது. (குறிப்பு :- இந்த விளக்கம் விசாரணைகளுக்கான தகவல் அறிவிப்பில் இருக்காது. அதன் சுருக்கம் 1 முதல் 9 வரையில் உள்ள பத்திகளில் (பாரா) தரப்பட்டுள்ளது.

– கொத்த வெங்கடேஸ்வர ராவ்: பிப்ரவரி – 1981.

பிரக்ஞா பிரபாகரம்

ஒரு புகழ்மாலை

இந்த பிரபஞ்சம் முழுதுமே கடவுளின் இருப்பிடம். அதன் ஒவ்வொரு துகளிலும் அவர் நீக்கமற நிறைந்திருக்கிறார். 'இவ்வுலகில் நாம் காண்கின்ற அனைத்துமே அவருடைய உடைமை. வேறுவிதமானதல்ல' என்று கற்றறிந்த ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால் இந்த உணர்வு எல்லாரிடமும் எல்லாவிதமான பிரிவினரிடமும் இருப்பதில்லை. இந்த உணர்வைப் பெறாதவர்கள் இறைவனைத் தேடி வீணில் அலைகிறார்கள். “அவரை எவ்விதம் காண முடியும்?” எதன் மூலம் நாம் அவரை நெருங்குவது? எப்படி அடைவது?” இது போன்ற கேள்விகள் எல்லாம் பொதுவாகக் கேட்கப்படுகின்றன. ஆஸ்திகர்களும் கூட, பக்தர்களும் கூட இதுபோன்ற கேள்விகளை எழுப்புகிறார்கள்.

நாத்திகர்களும் இத்தகைய கேள்விகளை கேட்கிறார்கள், ஆனால் சிறிது வித்யாசத்துடன். இது கலாச்சாரம் தொடர்பான கருத்து வேறுபாடு! நாத்திகர்கள் கேட்கும் கேள்விகளும் அவர்களே சொல்லிக் கொள்ளும் பதில்களும் : “கடவுள் இல்லவே இல்லை. இருக்கிறார் என்றால் எங்கே இருக்கிறார்?' அவரை ஏன் பார்க்க முடிவதில்லை? அவர் இருக்கும் இடத்தை எனக்குக் காண்பியுங்கள். நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்கள் என்றால் அவர் இருக்கும் இடத்தை எனக்கும் காண்பியுங்கள்.....”

நான் இத்தகையோரில் ஒருவனாகத்தான் இருந்தேன். பிரம்மஸ்ரீ வேட்டுரி பிரபாகர சாஸ்திரியாரின் திருப்பாதகமலங்களைப் பற்றிய பிறகு அவர் அருளால் நான் இப்போது மாறி இருக்கிறேன். 'இவ்வுலகில் உள்ள எல்லாமே கடவுளின் படைப்புதான்' என்று உணர்ந்துவிட்டேன். குருஜி தெய்வீகமானவர். தன்னுடைய சிஷ்யர்கள் மீது அவர் கொண்டிருந்த பரிவு அவ்வளவு இவ்வளவு அல்ல! அதை அனுபவித்து உணர்ந்தாலே நம்ப முடியும். அவர் எப்போதும், “தன் சிஷ்யர்கள் வேறு தான் வேறு” என்ற எண்ணத்துடன் இருந்தவர் அல்ல. அவர்களுக்கு ஏதேனும் துன்பம் வந்தால், அதை அவர் உணர்வார். “அவர்கள் மகிழ்ச்சி அடைய

வேண்டும்'' என்று வேண்டுவார். "அவர்களது மனத்துயர் சாம்பலாகிப் போய் நீங்கிவிட வேண்டும்'' என்று பிரார்த்திப்பார். "எந்த அசுத்தமும் தீயினால் தூசாகும்'' என அவர் அடிக்கடி எடுத்துரைப்பார். அந்த மஹாத்மாவின் தரிசனமே என் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைந்தது. அறியாமை என்னை விட்டு அகன்று, என் வாழ்வில் ஒரு புத்தொளி வீசத்தொடங்கியது.

அது 'பிரபாகரா' எனும் சூரிய உதயத்திற்கான விடிவெள்ளி. அதைப்பற்றி விரிவாகக் கூறுகிறேன். குருஜியைச் சந்திப்பதற்கு முன்பு சில வருஷங்களாக நான் உடல் நலமில்லாது இருந்தேன். மிகவும் அவஸ்தைப்படுவேன். பல டாக்டர்களைக் கலந்தாலோசித்தேன். ஆயுர்வேத மருந்துகளையும் உட்கொண்டேன். ஆனால் பயன் இல்லை. 'தொட்டியில் குளியல்' போன்றவைகளாலோ, சமைக்கப்படாத காய், கனி வகை உணவுகளாலோ எதனாலும் நான் குணம் அடையவில்லை. 'ஹட யோகம்' போன்ற உடலை வருத்திச் செய்யும் யோகாசனங்களையும் செய்து பார்த்தேன். அவற்றாலும் நிவாரணம் கிட்டவில்லை. 'என் பலஹீனமான உடல் சொஸ்தம் அடையும்' என்ற நம்பிக்கை தளர்ந்த போது 'பிரபாகரா' என்ற 'நம்பிக்கைச் சுடரொளி' தோன்றி என்னைக் காத்தது. குருஜி, நான் இழந்த உடல் நலம், மனோ நலம் ஆகிய அனைத்தையும் எனக்கு மீட்டுக் கொடுத்தார். அவரது தரிசனம் மாத்திரமே என் மறுபிறவிக்கு காரணமானது. முதன் முதலாக அவரை 1943 டிசம்பர் 13ஆம் நாளன்று பார்த்தேன். அதற்கு முன் எனக்கு அவரைப் பற்றி ஏதும் தெரியாது. அவர் ஒரு சமஸ்கிருத அறிஞர், கல்விமான் என்று மட்டுமே நான் கேள்விப்பட்டிருந்தேன். என் உறவினர் ஸ்ரீ கொத்த வெங்கடேஸ்வரராவ் என்பவர் அவருடைய சிஷ்யராக குறிப்பிடத்தக்க காலம் வரை இருந்தார். அவர் என்னை சாஸ்திரியாரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி என் உபாதைகளைப் பற்றி விவரமாக எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட சாஸ்திரியார் "இன்று முதல், அவர் நன்றாக ஆகி விடுவார்'' என்றார் தீர்மானமாக. அந்த உறுதிமொழி எனக்கு தெய்வீக ஆசீர்வாதமாக ஆயிற்று. அந்த நொடியிலிருந்து நான் பின்நோக்கிப் பார்க்கவே இல்லை.

அந்த நேரத்தில் 'அவர் வழங்கிய ஆசீர்வாதத்தின் சக்தியை' நான் உணரவில்லை. 'ஒரு பக்திமானாகத் தெரிந்த சாஸ்திரியார், இப்படி ஆசிகள் புரிவது வழக்கம்தான்' என்று சாதாரணமாக நினைத்தேன். அவர் முன் தண்டனிட்டு வணங்கும் எல்லோரையும் "நல்லதே நடக்கும்" என்று அவர் வாழ்த்துவார். அதுதான் எனக்கும் நடந்தது. பின்னர்தான் என் எண்ணம் தவறென்று புரிந்தது. காரணம் சாஸ்திரியாரின் கருணைதான். அவரோடு பழகப்பழகத்தான் 'சாஸ்திரியார் என் வாழ்க்கை பற்றியும் என் நோய் பற்றியும் மட்டுமல்ல, என் பூர்வஜன்மம் பற்றியும் அறிந்திருந்தார்' என்பதை உணரத் தொடங்கினேன். 'அவர் என் பெயர், என் குடும்பப் பெயர் ஆகியவை பற்றி விசாரித்தது, அவருக்குத் தெரியாததால் அல்ல; உறுதிப்படுத்திக் கொள்ளத்தான்' என்பதை நான் யூகிக்க முடிந்தது.

"சந்தேகமில்லை. நீ அதே பழைய ராமகோட்டையா தான். நமது பழக்கம் சில நூற்றாண்டுகள் பழமையானது. இது மேலும் நீடிக்கும்" என்றார் அவர். அவர் பூத உடலை நீத்து, சுமார் நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டது என்றாலும் அவர் நமது இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். நமக்காக பாடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர், முதல் முறையாக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரை சந்தித்த போது–அல்லது பரமஹம்ஸர் விவேகானந்தரை கண்டபோது–பரமஹம்ஸர் 'உன்னைத்தான் பலகாலமாக எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்' என்றார். அதுதான் குரு–சிஷ்ய நிலையின் நெருக்கத்திற்கு அடையாளம்.

அன்று மாலை பிரார்த்தனைக்கூடத்தில் சாஸ்திரியார் என்னிடம் "மனதில் எந்த எண்ணத்தையும் வைத்துக் கொண்டு கட்டிப்போடாமல் அதற்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டு உடலுக்கு ஓய்வு கொடு. கண்களை மூடிக்கொண்டு மனத்தின் போக்கை கவனி" என்று அறிவுறுத்தினார்.

நான் அந்த நேரத்தில் "கண்களை மூடிக்கொண்டு பார்ப்பது" என்ற சித்தாந்தத்தை சிறிதும் அறியாமல் இருந்தவன்.

கண்களைத் திறந்தவாறு இருக்கும்போது கூட நாம் சூரியன், சந்திரன், மலைகள் ஆகியவற்றை பார்க்கத்தான் முடியும்! ஆனால் அவற்றை இயக்கும் உண்மையான சக்தியைக் காண முடியாதே! குருஜி அறிவுரை கூறியபடி நான் கண்களை மூடியவாறு பார்க்க முயன்ற போது 'என்னுள்ளே ஒரு விவரிக்க இயலாத ஒளி, நம்பிக்கையின் கீற்றாகத் தோன்றியதையும் அது இருளை நீக்கி உள்ளிருந்த என்னை வெளிச்சத்திற்கு கொண்டு சென்றதையும்' உணர்ந்தேன். அதன் மூலம் அதுவரை என்னை ஆட்டிப்படைத்த பீதியினின்றும் விடுபட்டேன். சந்தேகத்திற்கு சிறிதும் இடமில்லாமல் ஒரு புதிய உற்சாகம் என்னுள் நிரம்பியது. பின்னர் அதை நான் கீழ்வருமாறு விளக்கினேன்.

1. எனக்கு அச்சம் சிறிதும் இல்லை. எனக்கு எந்த நோவும் இல்லை. உலகத்தையே இயக்கும் பிரம்மத்தை என்னுள்ளேயே நான் கண்டேன்.

2. என்ன ஆச்சர்யம்! 'போ என்ற ஒரு வார்த்தை சொன்ன உடனேயே, என்னை வாட்டிய ஒவ்வொரு வலியும் ஓடிவிட்டதே! இத்தகைய ஆணையை மன்னர்களைத்தவிர வேறு யாரால் பிறப்பிக்க முடியும்?

3. இந்த உலகில் மஹனீயர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். சத்குருஸ்வாமி பிரபாகரரில் அத்தகைய ஒரு மஹனீயரை தரிசித்தேன். (மஹனீயர்கள் – ஞானிகள்).

பிரார்த்தனைக்குப்பின் சாஸ்திரியார் என்னிடம் “இப்போது எப்படி இருக்கிறது உனக்கு?” எனப் பரிவுடன் விசாரித்தார். நான் உற்சாகத்துடன் “மிக நன்றாக இருக்கிறேன் ஐயா! கண்களை மூடிக்கொண்டு பார்ப்பது என்றால் என்ன என்பதை நான் இப்போதுதான் அறிந்து கொண்டேன். எனக்கு எந்த விதமான நோவும் இல்லை” என்று பதிலளித்தேன். அதைக்கேட்ட சாஸ்திரியார் மேலும் மிகுந்த பரிவுடன் “இனி எப்போதுமே நீ நன்றாக இருப்பாய்! உன் உடலில் எந்த உறுப்பும்

பழுதடையவில்லை. ஆனால் அவற்றில் சில, வேலையை நிறுத்தி இருந்தன. இனி எல்லாம் நன்கு செயல்படும்'' என்று சொன்னார்.

இந்த முதல் 'யோகா' பயிற்சியை கொடுத்த பிறகு சாஸ்திரியார் எனக்கு யோகாவின் அடுத்த பாடங்களை கற்பித்தார். அவர் என்னை 'ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் ஆறு மணிக்கு நடக்கும் பிரார்த்தனையில் பங்கேற்குமாறு' அறிவுறுத்தினார். 'அதுவரை உணவை ஏற்க மறுத்து சண்டித்தனம் செய்த' என் வயிற்றை சிற்றுண்டிகளால் நிரப்பிக்கொண்ட பிறகே பிரார்த்தனைக்கு வருமாறு' கூறிய அவரது அறிவுரை எனக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது.

நான் பல டாக்டர்களை, ஸ்வாமிகளை, யோகிகளை சென்று பார்த்திருக்கிறேன். யாருமே இது மாதிரி எனக்கு அறிவுரை சொன்னதில்லை. சாஸ்திரியார் என் மனதில் ஓடிய எண்ணங்களை அறிந்து கொண்டவர் போல் தோன்றினார். ''பார் நான் சரியாகத்தான் சொல்கிறேன். இந்தப்பயிற்சி மிக அவசியமானது. இன்றிலிருந்து பசியை தீர்த்துக்கொள்வதற்கு விதிகளோ, ஒழுங்குமுறைகளோ கிடையாது. ஒன்றை கவனத்தில் கொள். எல்லாமே கடவுளின் கொடை'' என்றார் அவர். அந்தக்கணத்திலிருந்து சாஸ்திரியார் சொன்னதை கவனித்துப்பார்க்கத் தொடங்கினேன். அதன் பின் சாஸ்திரியார் எனக்கு இன்னும் ஒரு யோகா பாடத்தை கற்றுக்கொடுத்தார். ஒரு நாள் சாஸ்திரியார் என்னிடம் ''இங்கே உட்கார்ந்தவாறு என்ன தியானம் செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். நான் ''இழந்த என் தேக ஆரோக்கியம் மறுபடி கிட்ட வேண்டும் என்றுதான் எனப்பதிலளித்தேன். அவர் ''அதற்கு இது அல்ல வழி. உன் தேகாரோக்கியம் எப்போதும் நன்றாகவே இருக்கிறது என்று நான் சொல்லவில்லையா? இதற்கு முன்பே நன்றாக இருக்கும் ஒன்றை அல்லது கெடமுடியாத ஒன்றை மறுபடியும் நன்றாக ஆக்கும் முயற்சி நேரத்தை வீண் செய்வது அல்லவா? அப்படிச் செய்வது ''உன் உடல்நிலை நன்றாக இல்லை'' என்று நீ ஒப்புக்கொள்வது போல ஆகும். ஆகவே இது போன்ற எண்ணங்களே உன் மனதில் எழக்கூடாது. தன் விருப்பத்தை நிறைவேற்றுமாறு கடவுளை வேண்டுவது

பிரார்த்தனை ஆகாது. அதனால், நீ உன் சுற்றுப்புறம் நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய் போதும்'' என்று சொன்னார். இந்த யோகா தனித்தன்மை வாய்ந்தது, எளிமையானது, தெளிவானது, பரவலானது. முழுதும் சாரம் உடையது. இதைப்பற்றி நான் சுருக்கமாக விளக்குகிறேன்.

ஒரு பிரார்த்தனை ‘‘ஒரு தனி மனிதர் பற்றியதாக அல்லது ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றியதாக மட்டுமே இருக்கக்கூடாது. இரண்டு விஷயங்கள் இதில் தெளிவாக உள்ளன. ஒன்று உடலை நல்ல ஆரோக்யமாக வைத்துக்கொள்வது. இரண்டாவது அத்தகைய ஆரோக்யமான உடல்நிலை குறித்த பற்று இருப்பதை நீக்க வேண்டியது. இந்த உடலினால் செய்யப்படும் செயல்களின் பலன்கள் உனக்கு மட்டும் உரியதாகக்கூடாது. உலகில் உள்ள மற்றவர்களைப் போலவே நீயும், அதனால் பயன்பெற வேண்டும். ஆகவே நீ உணவு உட்கொள்ளுவது உனக்காக மட்டும் இருக்கக்கூடாது. 'உனக்காகவும் கூட' என்பதாகத்தான் இருக்க வேண்டும் அப்படிப்பட்ட மனிதர்கள் ‘‘போக்தர்கள்'' (உணவு உண்பவர்கள்) என்று அறியப்படுகிறார்கள். பொதுவாகச் சொல்வதன்படி கூட 'போக்தா' என்பவர் உலகை விட்டு சென்ற ஆன்மாக்களுக்காக உண்பவர் எனப்படுகிறார். அவ்விதமானவர்தான் தனக்காகவும் உண்பவர் என்பதாக ஆகிறார். கீழ்க்கண்ட ‘‘யோகா மந்திரம்'' அதை இவ்விதம் விவரிக்கிறது.

‘‘சஹனா வவது சஹனௌ புனக்து''

உன்னை நீயே பாதுகாத்துக்கொள்ளலாம் என்று நினைப்பது அறியாமை. 'சஹனா வவது' என்பது சரிதான். அதுவே ஞானம். நாம் அனைவரும் ஒன்றுபட்டிருக்கும் போது அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறோம். இரண்டாவதாகக்கூறப்பட்டுள்ள 'சஹனௌ புனக்து' என்பது நாம் எல்லோரும் எல்லாவற்றையும் எல்லோருக்குமாகவும் அனுபவிக்கிறோம். இது தான் சரியான கூட்டுறவு வாழ்க்கை! கார்ல்மார்க்ஸ் 'ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டி கிடைக்க வேண்டும்' என்றார் அதற்கு

மாறாக நமது ரிஷிகள், 'ஒவ்வொருவரும் அவரவர்க்கு உரிய உணவை சரியாக ஜீரணிக்கும் சக்தியைப் பெறவேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள். என்ன ஒரு பொருள் பொதிந்த தத்துவம்! 'இதுதான் சாஸ்திரியாரின் தாரக மந்திரம்'! இதை அவர் அடிக்கடி வலியுறுத்திச் சொல்லுவார். அதை அவர் கடைப்பிடிக்கவும் செய்தார். அவரது பிரார்த்தனைக்கூட்டங்களில் 'நன்கு உண்ணக்கூடியவர்கள், தண்ணீரை மட்டுமே குடித்து வயிற்றை நிரப்பிக் கொள்பவர்கள்' ஆகிய இருசாராரும் வந்து கலந்து கொண்டனர். பிரார்த்தனை முடிந்தபிறகு நன்கு உணவு உண்டவர்களுக்கு பசியுண்டாகும். தண்ணீரை மட்டுமே அருந்தியவர்கள் திருப்தியிடன் ஏப்பம் விடுவார்கள். பிறகு சாஸ்திரியார் “நாம் உணவு உட்கொள்ளும் போது அதில் ஒரு பகுதியே நம் உடல் வளர்ச்சிக்காகப் போகிறது. மீதம் உள்ள பெரும்பகுதி மற்றவர்களுக்காக உபயோகப்பட வேண்டும். உணவு கிடைக்காத மக்களுக்கும் அது கிடைக்க வேண்டும் என்பதற்காக நாம் இவ்விதம் உண்ண வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் உண்மையான 'போக்தாக்கள் எனப்படுவோம்' என்பார்.

இன்னும் ஒரு நுட்பமான யோகா பயிற்சியும் யோகா வகுப்புகளில் கொடுக்கப்படுகின்றது. இதை தானாகவே உணர முடியாது. இதை கண்களால் காணவும் முடியாது. அது ஒருவனுடைய உட்புறத்தில் நடைபெறுகிறது. 'அதற்கு 'பிராண சிகிச்சை' என்று பெயர்' குருநாதர் ஸி.வி.வி. குறிப்பிட்டபடி அதன் பொருள் “உடல் நோயால் பலஹீனமடைந்தவர்களுக்கு பிராணசக்தியை உங்கள் பிரார்த்தனைகள் மூலம் அளிப்பது” என்பதாகும். யாருக்கு பிராணசக்தி அவசியம் தேவைப்படுகிறதோ அவருக்கு அதை அளிப்பதுதான் முக்கியமான யோகா பயிற்சி! அத்தகைய சக்தியை கடவுளின் அருளாலேயே ஒருவர் பெற முடியும். இப்பொழுது ஒரு சந்தேகம் எழலாம். “நம்மிடம் உள்ள 'வரம்புக்கு உட்பட்ட பிராணசக்தியை' மற்றவர்களுக்கு நாம் கொடுத்தால் நமது நிலை என்னவாகும்?” ஒன்றுமே நிகழாது. நீங்கள் 'உங்களுடைய உயிர் உங்களுடைய உடைமை' என்று எண்ணிக் கொண்டிருக்கும்வரை,

'அதை எப்போதாவது பறி கொடுக்க வேண்டி இருக்குமோ என்ற பயம் உங்களிடம் இருந்து கொண்டே இருக்கும். நீங்கள் "நம்மிடம் உள்ள பிராண சக்தி" கடவுளுக்கு சொந்தம்; அது நிரந்தமானது. நாம் முற்றிலுமாக கடவுளால் இயக்கப்படும் ஒரு கருவியே"என்று எண்ணுவீர்களேயானால் எந்தவிதமான பயத்துக்கும் இடமே இல்லை. எந்த குறைபாடும் உங்களுக்கு நேராது. இந்த மன நிலையை அடைவதற்கு வழி, ஒரு தயக்கமும் இன்றி முழுவதுமாக கடவுளிடம் சரணாகதி அடைந்து, தன்னை ஒப்படைத்துக் கொள்வதே! இது ஏதோ தத்துவார்த்துவமான ஒன்றின் பகுதி அல்ல. பரமகுருநாதர், தன் சீடர்களுக்கு உபதேசிக்கு முன்பாகக் கண்டறிந்த உண்மை.

நான் இதுபோன்ற நிகழ்வினை முதன் முதலாக வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் பிரார்த்தனைக் கூட்டத்தில் பார்த்தேன். உடல் நலிவுற்று வாடும் பலர் அவரைப் பார்க்க வருவார்கள். பிரார்த்தனையில் கலந்து கொண்டபின் உடல்நலம் பெற்று அவர்கள் திரும்புவார்கள். இன்றைய நாட்களிலும் இந்த யோகா பயிற்சி நடைபெறும் கூட்டங்களில் இது மாதிரி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. சாஸ்திரியாரின் அளவற்ற அன்புக்கும் கருணைக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு அவர் பூத உடலைவிட்டு நீங்கிச் சென்ற பிறகுகூட அவர் எப்போதும் போல நமக்கு வழி காட்டிக்கொண்டே இருக்கிறார். தற்சமயம் இந்த 'யோகா' பயிற்சிக் கூட்டங்களில் பங்கேற்று பயிற்சி பெறுபவர்களும் இதே போன்று நன்மைகளை அடைந்து கொண்டு தான் வருகிறார்கள். இதுவும் சாஸ்திரியார் மக்கள் மீது வைத்துள்ள கருணைக்கு ஓர் அடையாளம்.

சாஸ்திரியார் இன்னும் ஒரு விஷயத்தை அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்லுவார். "பரப்பிரம்மத்தை தேடிக்கொண்டு யாகம் செய்பவர்கள், அவரை ஒரு போதும் அடைய மாட்டார்கள்! காரணம், அவர்கள் பரப்பிரம்மத்தைக் காண வேண்டும் என்பதற்காகவே ஸ்வர்கம் செல்வதை குறியாகக் கொண்டுள்ளதால், அதுவே அவர்களுக்கு ஒரு தடையாகிறது. இது 'மேலிருந்து கீழான' அபிவிருத்தி. இந்த வழியில் செல்லாமல், நீங்கள், சுற்றிலும் உள்ள ஒவ்வொருவரையும் தூய சிந்தனை உள்ளவர்கள்

என்று ஏற்றுக் கொண்டு, அவர்கள் யாவரையும் இறுதி ரட்சிப்பு அடைவதற்கு தகுதியானவர்களாக ஆக்க முயற்சி செய்தால் அது தரைமட்ட அளவு அபிவிருத்தியாகிறது. இந்த முறையைத் தான் மஹாபக்த பிரகலாதன் தன்வாழ்நாளில் கடைப்பிடித்தான். லக்ஷ்மி நரசிம்ஹ பிரபு அளிக்க முன் வந்த ஸ்வர்க போகத்தை ஏற்றுக் கொள்ள அவன் மறுத்தான் அதற்கு அவன் சொன்ன காரணம் “தன் தந்தையையும் அவரைப் போல் உள்ள மற்ற அறியாதவர்களையும் மன்னித்து ஸ்வர்கத்தில் இடம் கொடுத்தால் ஒழிய தனக்கு அது வேண்டாம்” என்பது தான். மஹான்கள் 'மானிட இனம் பயன் அடைவதற்குத்தான்' யாகம் செய்கிறார்கள். கௌதம புத்தர் கூட கடுந்தவமிருந்து ஞானம் பெற்றபின், கருணை, அன்பு, அஹிம்சை, சத்தியம் ஆகியவற்றையே மக்களுக்குப் போதித்தார். சாஸ்திரியார் இது போன்ற மனப்பான்மையைத் தான் எல்லோரிடமிருந்தும் எதிர்பார்க்கிறார். ஸ்ரீமத்ராமாநுஜரும், ஸ்ரீமான் எக்கிராலா கிருஷ்ணமாச்சார்யாவும் இந்த பிரிவு வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாம்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் சில 'உயரிய உணர்வுகளை' வெளியிட நான் விரும்புகிறேன். இந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது, நான் திருப்பதிக்குச் சென்று வந்ததை நினைவு கூர்வது வழக்கம். முதன் முறையாக சாஸ்திரியாரைச் சந்திப்பதற்கு முன்னர், நான் போய் வந்த வழி எனக்கு நன்கு நினைவில் இருந்தது. 'சாஸ்திரியாரின் அண்மையை அடைந்தோம்' என்ற எண்ணமே எனக்கு பெருமளவு மகிழ்ச்சியை அளித்தது. அந்த எண்ணத்துடனேயே நான் சாஸ்திரியாரின் முன் பணிந்து நமஸ்காரம் செய்தேன். சிறிது காலம் ஆனதும் ஒரு நாள் ஸ்ரீ சாஸ்திரியார் “பார்! ராமகோட்டையா! நான் எப்போதும் உன்னில்தான் இருக்கிறேன். அதை மறந்துவிட்டு நீ என்னைத்தேடி திருப்பதிக்கு ஓடி வருகிறாய். உன் நம்பிக்கையை உறுதிப் படுத்துவதற்காக நான் உனக்கு முன்பாக திருப்பதிக்கு பயணம் செய்து நீ வருவதற்கு முன், இந்த அறையில் வந்து உட்காருகிறேன். இவை எல்லாம் முழுக்கவும் நேரத்தை வீணடிப்பவை. இதைப்போல் மறுபடியும் செய்யாதே என்றார் என்னிடம்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரார்த்தனைக் கூடத்தில், நான் குருஜியிடம், ஸ்வாமி, நீங்கள் குருநாதர் ஸி.வி.வி.யின் சிஷ்யர் என்பதால் அவரைப் போற்றுகிறீர்கள். எங்களையும் அதுபோல் செய்யுமாறு செய்கிறீர்கள்.

ஸ்ரீஎம்.என்.னின் சிஷ்யர்கள் 'குருநாதம் எம்.என்.க்கு நமஸ்காரம்' என்கிறார்கள். ஸ்ரீஇ.கே.யின் சிஷ்யர்கள் "குருநாதர் இ.கே. நமஸ்காரம்' என்று அவரவர்களின் குருநாதர்களைக் குறிப்பிட்டு மரியாதை செலுத்துகிறார்கள். உங்களுடைய சிஷ்யனாக இருப்பதால் நான் உங்கள் பெயரைக் குறிப்பிட்டு நமஸ்காரம் என்று சொல்லி மரியாதை செலுத்தலாமா? என்று மிக ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் கேட்டேன். சாஸ்திரியார் அன்புடன் "பார் அப்பா. நான் உன்னிலேயே இருக்கிறேனா, இல்லையா? நீ என்னை நமஸ்காரம் செய்யும் போது, அதை ஏற்றுக் கொள்வதற்காக நான் உன்னிலிருந்து பிரிந்து, உன் முன்னால் அமர்ந்து கொள்கிறேன்" என்று பதிலளித்தார். நான் என் தவறை உணர்ந்தேன். சாஸ்திரியாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "என்னுடன் அவர் இருக்கும் நிலையை மாற்ற வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டேன்.

அதன் பின்னர் சாஸ்திரியார் எனக்கு மேலும் ஒரு உயர்வை வழங்கினார். ஒரு நாள் நான் தியானத்தில் ஈடுபட்டிருந்த போது, அவர் என்னிடம் "இதுவரை நீ பிரார்த்தனைக் கூட்டத்தில் கூடியிருக்கும் மற்றவர்களின் நலத்துக்காக பிரார்த்தனை செய்து வருகிறாய். நீ 'பிரார்த்தனையில் கலந்து கொள்பவர்களில் யார் செல்வந்தர், யார் வறியவர், யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர்' என்று கவனம் செலுத்துவதில்லை என்றாலும் உன் பார்வை வேறு ஒரு கோணத்தில் இருக்கிறது. அதாவது இவர் குருஜிக்கு வேண்டியவரா,அவருடைய உறவினரா, சொந்தக்காரரா என்றெல்லாம் நினைக்கிறாய். இன்று முதல் அத்தகைய எண்ணங்களையும் மனதிலிருந்து நீக்கிவிடு. 'இங்கு பிரார்த்தனை செய்வோர் எல்லோருமே பிரிக்க முடியாத ஒரே தொகுதியினர் தான்' என்று பார்க்கத் தொடங்கு. பிரார்த்தனைக்கு வருபவர்கள், வராதவர்கள் யோகா பயிற்சி செய்கிறார்களா இல்லையா,

என்றெல்லாம் பார்ப்பது தவறு. ஒவ்வொருவரும் உன்னைப் போலவே உறவால் பிணைக்கப்பட்டவர்கள்தான். இங்கு சிகிச்சை பெறுவதற்காக வருபவர்கள் கூட யோகா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான்.'' இங்கு வராதவர்கள் அல்லது வர முடியாதவர்கள் கூட நமது சகோதரத்துவத்தை சேர்ந்தவர்கள்தான். கவனத்தில் வைத்துக்கொள். பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள் என்றெல்லாம் வித்யாசம் பார்க்க வேண்டாம். எல்லோர் மீதும் சமமாக அன்பையும், பரிவையும் செலுத்து. இப்பொழுதிலிருந்தே இதனை கடைப்பிடிக்க முயற்சி செய்'' என்று உத்தரவு பிறப்பித்தார். அவர் மேலும் பரிவுடன் “இத்தகைய எண்ணத்தை ஒருவரிடம் சுலபமாக பதிய வைக்க முடியாது. இதைச் சொல்வதாலோ, சொல்லக் கேட்டாலோ கூட அதை கிரஹித்துக் கொள்ள இயலாது. அதைப்பற்றிக் கவலைப்படாதே. மனந்தளராதே. இது பற்றி வெட்கமும் அடையாதே. தோல்வி மனப்பான்மையும் கொள்ளாதே. இது போன்றவை எல்லாம் சாதாரண மனிதர்களின் இயல்பு. ஆனால் இது ஒரு யோகியின் தன்மை ஆகாது. முன் நோக்கி நடைபோடு. உன் ஆச்சார்யரிடம் பூரண சரணாகதி அடைந்து உன்னை ஒப்படைத்துவிடு. நான் எப்பொழுதும் உனக்கு பின்பலமாக இருப்பேன்'' என்றார் தொடர்ந்து.

இந்த வார்த்தைகள், ஸ்திர மனது இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்த எனக்கு மிகவும் ஆறுதலைத்தந்தன. இதுவரையிலும் நான் பிரார்த்தனைக்கு வருபவர்களைப் பார்த்ததும் “அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? அவர்களுக்கு என்ன கஷ்டம்? அவர்களுக்கு என்ன தேவை?'' இவ்வாறெல்லாம் நினைக்கத் தொடங்குவேன். குருஜியின் கருணையால் அத்தகைய நினைப்புகளும், சந்தேகங்களும் என்னை விட்டு அறவே விலகின. எல்லோரையும் ஒரே விதமான கண்ணோட்டத்திலேயே பார்க்கத் தொடங்கினேன். “என் சுற்றுப்புறம், சூழல் யாவும் கடவுளின் கருணையால் நிரம்பட்டும்'' என்ற ஒரே எண்ணம் என்னுடைய மனதில் இடம் பிடிக்கத் தொடங்கியது. இந்த எண்ணமே அற்புதங்கள் நிகழக்காரணமானது. என்னைச் சுற்றி இருந்த மக்களின் வேதனைகள் மறைய ஆரம்பித்தன. சாஸ்திரியார் இதனை 'ஏகாக்ரத

விருத்தி' அல்லது 'ஒருமித்த சிந்தனை மனப்பாங்கு' என்று குறிப்பிட்டார். "ஏகாக்ரத விருத்தி அல்லது 'ஒருமித்த சிந்தனை மனப்பாங்கு' என்றால் 'நீங்களாகவே உறுதியுடன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்' என்று பொருள்படுகிறது. அதற்கு எந்தவிதமான தூண்டுதலும், வற்புறுத்தலும் இருக்கக்கூடாது. எதனுடைய தாக்கத்தினாலும் அது அமையக்கூடாது" என்று சாஸ்திரியார் விளக்கம் அளித்திருக்கிறார். நாளாக நாளாக என்னுள் ஒரு புதிய கேள்வி எழத் தொடங்கியது.

"பிரார்த்தனைக் கூடத்திற்கு வருபவர்கள் அனைவரும் 'ஒரே வகையானவர்கள்' அல்லது 'வகுப்பினர் அல்ல'. ஒரே மாதிரியான நோயினாலோ, உபாதையாலோ பாதிக்கப்பட்டவர்களும் அல்ல! ஒவ்வொருவருடைய நோவுக்கும், வேதனைக்கும் மற்றவர்களுடைய கஷ்டங்களுக்கும் இடையே பெரும் வித்யாசங்கள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பாவிக்க வேண்டும் என்றீர்கள். மிக அதிகமாக ஒருவர் வேதனைப்படுவதை நான் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?" இவ்வாறு என் மனத்தில் எழுந்த சந்தேகத்தை உணர்ச்சி பூர்வமாக சாஸ்திரியாரிடம் வெளியிட்டேன். அவர் மேலும் உறுதியாக "அதிகமாக வேதனைப்பட்டுக் கொண்டு வருபவர்களிடம் 'சிறிது கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும்' என்பது மோசமான எண்ணம் ஆகாது. வேறு எந்த விதமாகவும் குணப்படுத்த முடியாத நோயாளிகள்மீது நீ தனிக்கவனம் செலுத்தலாம்" என்று எனக்கு அறிவுரை கூறினார். ஆனால் நான் விடாமல் 'ஒருவர் மீது தனிக்கவனம் செலுத்துவது மற்றவர்களை கவனிக்காமல் விடுவது போல் ஆகாதா? அது பாவம் ஆயிற்றே" என்று சொன்னேன். அதற்கு சாஸ்திரியார் "நான் சொல்வதைக் கவனி. குழப்பம் அடையாதே. உன் கண்ணோட்டத்தில் எல்லா நோயாளிகளும் சமமானவர்களே! அது உண்மைதான். விதவிதமான நோயாளிகளுக்கு நீ வெவ்வேறு விதமாக சிகிச்சை அளிக்கிறாய். இதை ஒரு போதும் பாரபட்சம் என்று கூற முடியாது! ஏதோ 'தனிப்பட்ட பற்று' என்பதாகவும் அது ஆகாது. மரணத்தின் பிடியில் சிக்கி இருக்கும் ஒருவருக்கு நீ ஒரு தனித்த முறையில் சிகிச்சை அளிக்கிறாய். அது ஒப்புக்கொள்ளக்கூடியதே!" என அவர் விளக்கினார்.

அதிலிருந்தே நான் கூட்டத்திற்கு வருபவர்களுடைய பலம், பலஹீனம், தேவைகள் ஆகியவை பற்றி சிந்திப்பதை நிறுத்தினேன். எழக்கூடிய சந்தேகங்களும், கேள்விகளும் தாமாகவே மறையத் தொடங்கின. என் முன்னால் ஒரு தெளிவான பிரகாசமான பாதையை நான் காணத்தொடங்கினேன். இது எனக்கு ஏற்பட்ட இன்னொரு உயர்வாகும்.

அதன் பின்னர், ஒரு நாள் குருஜி “இன்றிலிருந்து உன்னில் 'ஏகாக்ரதயோகா' இருப்பதை நீ உணரமாட்டாய். நினைவுகளே அற்ற வெற்றிடமாக உன் மனதை ஆக்கிக் கொள். எந்தவிதமான சிறிய விஷயங்களும் அதில் இடம்பிடித்துக் கொள்ளாமல் பக்குவப்படுத்து. நீ இதுவரை கடந்து வந்த மூன்று நிலைகளையும் விட்டு வெளிவந்து விடு. இதுவரை வாழ்வுக்கு உதவியாக இருந்தவற்றை உதறித்தள்ளு. பிறகு உன் திறமையால் உன் மனதுக்குள் ஒவ்வொன்றையும் அடைவாய். பின் 'இது என் தேகம், இது என் வாழ்க்கை' என்பது போன்ற எண்ணங்கள் மெதுவாக விலகத்தொடங்கும். உன் மனம் 'அத்தகைய 'எண்ணங்கள் அற்ற வெற்றிடமாக' ஆகும் போது அதில் முழு அமைதி நிலவத் தொடங்கும். வாய் அளவிலான மௌனம், அளவிலானதாக ஆகும். வாய் அளவு, உடல் அளவிலான மௌனம் மறுபடி மன அளவிலான மௌனமாக மாற்றமடையும். அதுதான் முழுமையான அமைதி. வாழ்வு மனத்தின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்குமேயானால், சுவாசம், இதயத் துடிப்பு ஆகிய ஒவ்வொன்றுமே அதன் பகுதிதான்! மனத்தின் அசைவு நின்றால் எல்லாமே நின்றுவிடும். அதன்பிறகு நீ மூச்சை உள் இழுக்கவோ, வெளிவிடவோ வேண்டிய தேவை இராது. எல்லாமே அமைதியாகிவிடும். மனமும் எந்தவிதமான சிந்தனையும் இன்றி முழு அமைதி அடையும். அதுபோன்ற நிலையை அடைந்த பிறகு உன் மனம் தெய்வீக ஒளியைக் காணும். அந்த ஒளியைத் தவிர அங்கே வேறு எதுவுமே இல்லை என்னும் திட நம்பிக்கை பிறக்கும். மெதுவாக, அந்த வெறுமையிலிருந்து உதயமாவது 'அந்த வெறுமை தான்' என்பதை நீ உணரத் தொடங்குவாய்” என்று என்னிடம் சொன்னார். ஸ்ரீமான் எக்கிராலா கிருஷ்ணமாச்சார்யா என்ற குரு இந்த உண்மையை அவருடைய 'கொத்த வைபவம்' என்ற நூலில் இவ்விதம் விளக்குகிறார்.

'ஏமி லேனதிககனான இமிதி உந்தி'
'அன்னி உன்னதி பூமின அவதாரிந்து'

<u>இதன் பொருள் :</u>

“ஆகாயத்தில் வெற்றிடத்தில் மறைந்திருக்கும் நான் இந்த எல்லாமே இருக்கின்ற உலகில் உதயமாவேன். அங்கு எல்லாம் உள்ளன. இதே விஷயம் தைத்ரீய உப நிஷதத்திலும் கீழே கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.”

'உன் அறிவின் ஒளிக்கதிர், நீ உன் உள் இழுக்கும் – வெளிவிடும் மூச்சுகாற்றின் வழியே சென்று உன் சிரஸை அடைகிறது. பின்னர் அறியாமையைக் கடந்து தெய்வீக ஒளியைக் காணுகிறது.'

குருஜியின் கருணையால் அதே கருத்தோட்டம் இப்போது என்னில் செயல்படுகிறது. அது ஒரே நேரத்தில் பல்வேறு மக்களை பல்வேறு இடங்களில் குணம் அடையச் செய்கிறது. அதனால்தான் குருஜியின் 'திறன்மையம்' 'பிந்து'வாகவும், அதன் சுற்றளவாகவும் இருக்கிறது.

மஹா குருஜி ஸ்ரீ வேட்டூரி பிரபாகர சாஸ்திரியாரின் தெய்வீக ஆசிகள் உங்கள் அனைவர் மீதும் பொழியட்டும். அதன் மூலம் நீங்கள் எல்லாம், நல்ல நிம்மதியான நல்வாழ்வைப் பெற வேண்டும் என உளப்பூர்வமாக வேண்டுகிறேன்.

குண்டூர் கொத்த
ராமகோட்டையா
ஆந்திரப்பிரதேசம்

குருநாதர் ஸி.வி.வி.க்கு நமஸ்காரம்
பிரக்ஞா பிரபாகரம்

1

அடித்தண்டு

“நாம் எந்த வழியாக நிரந்தரமான பேரானந்தத்தை அடைகிறோமோ. அதுவே, சகல பாபங்களையும் போக்கும். அது தெய்வீக ஞானத்தைத் தரும் உன்னத சக்தி. நமது புனித குருநாதரின் அந்த பாதங்கள் நம்மை காக்கட்டும்”.

இந்த நூலை நான் எழுதுவதன் நோக்கம், என் போன்ற ஒரு பலஹீனமானவனை 'எல்லாவற்றையும் உணர்ந்தவரும், சத்தியமானவரும் பேரானந்தம் தரக்கூடியவருமான இறைவன்' அறியாமை எனும் திசை தெரியாத காட்டில் அலைவதினின்றும் எப்படி, தடுத்துக்காத்தார் என்பதை என் நட்பு வட்டாரத்திற்கு தெரிவிப்பதற்காகத்தான். இந்த சுயசரிதையை எழுதுவதில்– நிகழ்வுகளை விளக்குவதில் எனக்கு மஹாத்மாகாந்தி ஒளிமயமான வழியைக்காட்டி இருக்கிறார்.

சொரசொரப்பான பச்சை நிற இதழ், எப்படி ஒரு ரோஜா மொட்டை மூடி இருப்பது முதலில் தெரியுமோ, அது போல 'பிரபாகரா' என்று அறியப்பட்ட நான்தான் இந்த எழுத்துக்களில் முதலில் தெரிவேன். ஆனால் என்னுள் உள்ள தெய்வீகத் தன்மை மலர்ந்து யார் பற்றிக்கொள்கிறார்களோ அவர்களுக்கு நறுமணத்தை பரப்பி தன் மென்மையை உணர்த்தும் போது, நான் மலரைத் தாங்கிப் பிடித்திருக்கும் காம்பு போல் தான் காட்சி அளிப்பேன். அப்படிக்காணும் போது இந்த சுயசரிதை பிரபாகராவின் வாழ்க்கை விளக்கம் அல்ல, 'ஒரு புரிதல்' என்பது புலப்படும். அது பிரபாகராவின் வாழ்வில் நிகழ்ந்தவைகளைப் பதிவு செய்பவைகளாக இருந்தால்கூட அப்பதிவுகளில் உள்ள 'பிரபாகரா', என் முந்தைய தன்மையிலிருந்து முற்றிலும் மாறிய ஒரு 'பிரபாகரா'கவே இருக்கும்.

என் எழுத்துக்களில் எந்தக் கடுமையோ, குறிக்கோள் அற்ற தன்மையோ பொய்யோ, மோசமானவைகளோ வராமல் இருக்கட்டும். என் இருதயத்தில் கருணை சுரக்கட்டும். அது சத்தியம், பேரானந்தம் ஆகியவை சம்பந்தப்பட்ட மஹத்துவத்தையே பரப்பட்டும். அத்தகைய கருணைக்காக என் குருநாதரைப் போற்றி பிரார்த்திக்கிறேன்.

2

பிறப்பு

1888ஆம் வருடம் பிப்ரவரி 7ஆம் தேதி, ஹிந்து ஆண்டு சர்வஜித்[1], பதினோராவது மாதத்தின் இருண்ட பதினைந்தாவது நாள் (கிருஷ்ணபக்ஷம்) ஜேஷ்டநக்ஷத்திரம் நான்காவது பாதம், காலை 19 நாழிகையின் போது கிருஷ்ணா நதிக்கரையில் இருந்த 'பெத்தகள்ளேபள்ளி' என்ற கிராமத்தில் நான் பிறந்தேன். நான் பிறந்த நேரத்தில் என் தந்தையார் கவனமாகக் கணித்த என் ஜாதகம் இன்னும் இருக்கிறது. நான் அதை இங்கே மறுபடியும் குறித்துக்காட்டப்போவதில்லை. ஜோதிடர்கள் அதைத்தீவிரமாக ஆராய்ச்சி செய்து குழம்ப வேண்டாம் என்பது என் விருப்பம்.

பழங்காலத்தில் எங்கள் கிராமத்தில் அனைத்து சமுதாய மக்களும் செழிப்பாக இருந்தனர். பிராமணர்கள் வேதசாஸ்திரங்களில் பண்டிதர்களாக திகழ்ந்தனர். நான் சிறுவனாக இருக்கையில் அக்கிராமத்தைச் சேர்ந்த பல கல்விமான்கள் இலக்கியம், வேதங்களில் புலமை மிக்கவர்களாக இருந்ததை நான் அறிவேன். நான் ஒரு வெலநாடு[2] வைதீக பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவன். என் கோத்திரம் ஶ்ரீவத்ஸம். சுந்தர சாஸ்திரி – சேஷம்மா ஆகியோர் என் பெற்றோர். அந்த மேன்மக்களுக்கு நான்கு பிள்ளைகளும் நான்கு பெண்களும் பிறந்தனர். இது நாள் வரையிலும் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஒரு அண்ணனும், சகோதரியும் எனக்கு மூத்தவர்கள். மற்றவர்கள் எனக்கு இளையவர்கள். என் தாயார் ஒரு கண்ணியமான மாது சிரோமணி.

என் தந்தைக்கு வேதங்கள், ஜோதிடம், சிற்பம் மற்றும் சமஸ்கிருதம் ஆகியவற்றில் சராசரியான அறிவு உண்டு. தெலுங்கு மொழி இலக்கியத்தில் அவர் வல்லவர். சரளமாகக்கவிதைகள் இயற்றுவார். அவர் இந்திய நாட்டுமருத்துவத்தை நன்கறிந்தவர். பாரம்பர்யமான வைதீக வழிவந்தவர். ஆனாலும் என் தந்தை மருத்துவ தொழில் புரிவதிலேதான் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். எங்கள் தாய்–தந்தையர் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த பாசமும் நேசமும்

கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள். ஒருவரை விட்டு ஒருவர் சில நாட்கள் கூடப் பிரிந்து இருந்ததாகத் தெரியவில்லை.

சமீபகாலத்தில் நான் கண்டுணர்ந்தது, தூய்மையான பக்தி மிக்க மகிழ்ச்சியான ஒரு தம்பதியருக்குப் பிறக்கும் குழந்தைகளின் வாழ்நாள் அதிகமாக இருக்கும் என்ற உண்மையைத்தான். அவர்கள் நற்குணம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். என் இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்த என்னிடம் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. எங்களுடைய குடும்பமே அதற்கு ஒரு உதாரணம். எங்கள் பெற்றோரின் ஆழ்ந்த புரிந்து கொள்ளுதலுடன் கூடிய அன்பும், பாசமுமே எங்களது பாதுகாப்புக்கும் உடல் நலத்துக்கும் காரணம் என்பது என் நம்பிக்கை. என் தகப்பனார் தேகதிடத்துடனும் ஆரோக்கியமாகவும் எண்பத்திமூன்று நீண்ட ஆண்டுகள் வாழ்ந்தார். அவரது தந்தை கூட 83 வயதுவரை இருந்தார். என் பாட்டனார் அவரது கடைசி விநாடிகளில் என் தந்தையை அழைத்து “மகனே! நீ என்னைப்போலவே 83 ஆண்டுகள் வாழ்வாய்” என்று சொன்னார். என் தந்தை, அந்த ஆசியை பலமுறை நினைவு கூர்ந்து சொல்லி இருக்கிறார். அந்த ஆசீர்வாதம் என் தந்தையைப் பொறுத்தவரையில் உண்மையாயிற்று. எங்கள் பெற்றோர் செல்வந்தர்கள் அல்ல. ஆனால் அவர்கள் செல்வம் படைத்தவர்களை விட மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அந்தக்கிராமத்தில் இருந்த எங்கள் வீடு, குழந்தைகளோடும் பேரக்குழந்தைகளோடும், பிஞ்சுகளும், காய்களும் குலுங்கும் வெள்ளரிக்கொடியைப் போல செழித்திருந்தது. எங்கள் இல்லத்தில் சுமார் 100 பிறந்த தினங்கள் தன் வாழ்நாளில் நடந்திருப்பதாக என் தந்தை சொல்லுவார்.

3

குழந்தைப் பருவத்து நினைவுகள்

ஒரு நாள் மற்ற சிறுவர்களுடன் நான் விளையாடிக்கொண்டிருந்தேன். ஆடைகள் ஏதும் இன்றி இருந்த நான் தெருவில் கிடந்த ஒரு காகிதத்தை எடுத்து ஏதோ தெரிந்ததைப்போல் எனக்குள்ளாகவே வாசித்துக்கொண்டிருந்தேன். இது 'கொட்டரவு சுந்தரராமய்யா பந்துலு' என்ற நல்லெண்ணம் கொண்டவரின் கவனத்தை ஈர்த்தது. அவர் எங்கள் கிராமத்திலேயே பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார். 50 ஆண்டுகளுக்கு மேலாக கிராமத்திலேயே தங்கி இருந்து, அங்குள்ளவர்களுக்கு இலவசமாக ஆரம்பக்கல்வி கற்பித்து வருபவர். அவர் என் கையைப் பிடித்து எங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று, என் தாயாரிடம் ஒரு துணியை வாங்கி எனக்குக்கட்டிவிட்டு, அவர் நடத்தும் பள்ளிக்கு கூட்டிச் சென்று இரண்டு நாட்களில் 'அ,ஆ' கற்றுக்கொடுத்தார். பிற்பாடு என் தந்தை எனக்கு அக்ஷராப்யாசத்தை[3] அதே ஆசிரியரைக்கொண்டு நடத்தச் செய்தார். இதுவே முதல் முதலாக நான் என்னையே அறிந்து கொள்வதற்கான அறிகுறி ஆனது.

என் பள்ளிப்படிப்பு பற்றி குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஏதும் இல்லை, மற்ற பாடங்களில் நான் முதலாவதாக இருந்தாலும் கணக்கில் பின்தங்கியே இருந்தேன். எனக்கு தெலுங்கு மீது மிக அதிகப் பற்று. என் ஆசிரியர்கள் என்னை தெலுங்குப் பாடல்களைச் சொல்லச் சொல்லிக்கேட்டு மகிழ்வார்கள். ஆனால் எனக்கு ராகம், ஸ்வரம் பற்றி எல்லாம் அப்போது ஏதும் தெரியாது. ஏன் இப்போது கூட அப்படித்தான்! இசையில் ஞானம் இல்லாவிடினும், என் வயதுள்ள மற்ற மாணவர்களை விட நான் பாடல்களைக்கற்றுக்கொண்டு ஏற்ற இறக்கத்துடன் பாடுவது என் ஆசிரியர்களுக்கு திருப்தியாக இருந்தது. சுற்றுவட்டாரக்கிராமங்கள் எல்லாவற்றிலும், ஏன் எங்கள் கிராமத்தில் கூட வேறு எந்த வீட்டில் இல்லாத அளவில் எங்கள் வீட்டில்தான் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் வேதங்கள், அகராதிகள் மற்றும் குறிப்பெடுத்துக் கொள்ள உதவும்

நூல்கள் இருந்தன. அந்த நூல்களைப் பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொள்ள, பலரும் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். நான் இடைவெளி இல்லாமல், எவ்வளவு தூரம் எனக்குப் புரிகிறதோ அந்த அளவுக்கு அந்த நூல்களைப் படித்துக் கொண்டிருப்பேன். என் தந்தை அடிக்கடி எனக்கு 'தெலுங்கு மொழியின் சுவை, அதிலுள்ள நுட்பங்கள்' பற்றி சொல்லித் தருவார். இவற்றால் ஈர்க்கப்பட்ட நான் ஆங்கிலத்தை கற்றுக்கொள்ள மறுத்தேன். சமஸ்கிருதமாகவோ, தெலுங்காகவோ இருந்தால் எங்கள் கிராமத்திலேயே ஒரே நாளில் சில மணி நேரங்கள் செலவிட்டு கற்றுக்கொள்ள முடியும். ஆங்கிலத்தை கற்றுக்கொள்ள 'பந்தர்' (மசூலிப்பட்டினம்) போன்ற பெரிய நகரத்திற்குப் போய் காலை 11 மணியிலிருந்து 5 மணி வரை ஒரு பள்ளியில் படிக்க வேண்டும். அதற்காக நான் 'பெற்றோர், நல்ல உணவு, பழகிய சிநேகிதர்கள்' ஆகிய எல்லாவற்றையும் துறந்து விட நேரிடும். அந்த நேரத்தில் அது எனக்கு மன வருத்தத்தை கொடுத்தது. என் பெற்றோர்களுக்கும் தொலைவிலுள்ள இடத்திற்கு நான் செல்வது விருப்பமில்லை. பெற்றோரின் பாசமும், வசதிகள் செய்து தர தேவையான பணம் இல்லாததும் கூட அதற்குக்காரணங்கள் எனலாம்.

எங்கள் கிராமத்தில் இருந்த 'மத்தூரி ராம அவதானுலு' என்ற பெரியவரிடம் நான் சமஸ்கிருதத்தையும், வீட்டிலேயே தெலுங்கையும் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். அந்தப் பெரியவரும், என் தந்தையும் சிறுவயதிலிருந்து நண்பர்கள், சம வயதினரும் கூட. அவர் பிரம்மமுஹூர்த்தம்[4] எனப்படும் அதிகாலையில் எழுந்திருந்து சந்தியாவந்தனம் போன்ற சடங்குகளைச் செய்வார். பிறகு உஞ்ச விருத்தி[5] எனும் சடங்கிற்காகப்புறப்பட்டுச் சென்று காலை 9 மணிக்குள் திரும்புவார். பத்து மணி அளவில் சாப்பிடுவதற்கு முன் 'மாத்யாஹ்னிகம்'[6] என்ற சடங்கினைச் செய்வார். அதன் பிறகு மாணவர்களுக்கு கற்பிக்கத் தொடங்குவார். இது அவர் தினமும் வழக்கமாகச் செய்கின்ற செயல்கள். ஏதாவது காரணத்தால் பத்துமணிக்கு அவரால் உணவு உட்கொள்ள முடியாமற்போனால் அவருக்கு ஒற்றைத்தலைவலி வந்து விடும். அவர் மிகவும் ஒல்லியான தேகவாகு உடையவர். எங்கள் கிராமத்தில்

உள்ளவர்கள் அவரைப்பற்றி அதிகம் பேசிப்பழக்கப் பட்டவர்கள். என் தந்தை, ஸ்ரீராம அவதானுலுவுக்கு உடல்நிலை சரியில்லாவிடில் முழு கிராமமே நோய் வாய்ப்பட்டிருப்பதாகக்கருதுவார். அவரும் ஸ்ரீசுந்தர சாஸ்திரியின் இல்லத்தில் யாருக்காவது உடல்நிலை சரியில்லாவிட்டால், அது கிராமம் முழுதுமே கவலைப்பட வேண்டிய விஷயம் என்பார். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அக்கறை, அவர்களது சொந்த குடும்பத்து உறுப்பினர்களின் உடல் நலத்தை விட அதிகம் என்பதை காட்டுவதற்குத்தான்.

எங்கள் வீட்டருகே இருந்த நெசவாளர் தெருவில், அவர்களுடைய சமுதாயக் குருவான பாவனரிஷியின் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். எனக்கு அப்பொழுது 8 அல்லது 9 வயது இருக்கும். ஏழு–எட்டு மணி அளவில் என் இரவு உணவு முடிந்ததும் அவ்விழாவைக்காணச் சென்றேன். அங்கே இருந்த போது எனக்கு திடீரென நினைவு தடுமாறி மயக்கம் வந்து விட்டது. 'உடல் ஒரு மாதிரி' இருக்கிறதென்று நான் சொன்னதை சிலர் கேட்டிருப்பார்கள் போலும். அவர்கள் என்னை வீட்டிற்கு கொண்டு சேர்ப்பித்தனர். எவ்வளவு நேரம் ஆனது என்று எனக்கு தெரியவில்லை. நினைவு வந்து நான் கண் விழித்த போது என் தந்தை அருகே இருந்து கவனமாக 'சிவ கவசம்' சொல்லிக்கொண்டிருந்ததைக்கண்டேன். எனக்கு எந்தவித வலியும் இல்லை. அதோடு சரி. அதன்பிறகு எந்த விழா, கோயில் உற்சவங்கள் எதையும் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமே எனக்கு எழவில்லை. நான் நெசவாளர் விழாவில் ஏன் நினைவு இழந்தேன் என்று எவருக்குமே தெரியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின் அதைப்பற்றி நான் உணர்ந்தேன். உரிய இடத்தில் அதைப் பற்றி சொல்கிறேன்[7].

அதே போன்ற வேறு ஒரு சம்பவம் எனக்குப் பத்து வயது கூட ஆகாதிருந்த போது நடந்ததை நான் நினைவு கூறுகிறேன். எங்கள் கிராமத்தில் காலராநோய் திடுமெனப் பரவத் தொடங்கியது. அதன் கடுமையைப் பற்றி முதல் நாள் கூடி விவாதித்தவர்களே, மறுநாளே

அதற்கு ஆளாகிய நிலைமை எழுந்தது. அக்கிராம மக்கள் பலவித நடவடிக்கைகளை எடுத்தனர். கிராம தேவதைகளை வேண்டிக்கொண்டு பிரார்த்தனைகளும் செய்தனர். சில நாட்களில் நோயின் தீவிரம் குறைந்தது. அதன்பின் கிராமத்தினர் கிராம தேவதைகளுக்கு விழா எடுத்தனர். அத் தேவதைகளுக்கு பலியிடுவது, அவற்றின் முன் 'பம்பை' என்ற வாத்தியத்தில் ஒலி எழுப்பியவாறு பாடுவது ஆகியவற்றைப் பார்த்த எனக்கு குமட்டல் ஏற்பட்டது. பயமும் உண்டானது. “அத்தேவதைகள் அவ்வளவு பயங்கரமானவர்களா? இதெல்லாம் என்ன மாதிரி வழிபாடு?” இப்படி நான் கேட்க ஆரம்பித்ததும் என் அருகே இருந்தவர்கள் சங்கடப்பட்டு 'என்னை சும்மா இருக்குமாறு' சொல்லி கண்டித்தனர். 'இல்லாவிட்டால் தெய்வங்கள் என் மீது கோபம் கொள்ளுவார்கள். கிராமத்திற்கும் கெடுதல் நேரும்' என்றும் அவர்கள் எச்சரித்தனர். விழாவின் கடைசி நாளில் 'கொர்லங்கா' எனப்பட்ட தெய்வத்திற்காக ஒரு வண்டி தயார் செய்யப்பட்டு அதில் ஐந்து கூரான கழிகளின் உச்சியில் உயிரோடு இருந்த பன்றிக்குட்டிகளைச் சொருகினார்கள். அவற்றின் மரண ஓலத்துடன் ஊர்வலம் கிராம எல்லைக்கு சென்றது. அங்கே தெய்வங்கள் வழி அனுப்பி வைக்கப்பட்டன. அந்த கொடுமையான காட்சி இன்றளவும் என் நினைவில் நிற்கிறது. அந்த சடங்கு நன்றாக நடைபெற்றது என ஊரார் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் எனக்கோ மனக்கிளர்ச்சி – துக்கம்! அந்த சம்பவம் என்னுள் 'மரணம், அதற்குப் பிந்தைய நிலை, பிறப்பு, பிறப்புக்கு முந்தைய நிலை, தெய்வ வடிவங்கள்' ஆகியவை பற்றிய கேள்விகளை எழுப்பியது. பெரியவர்களிடம் இது பற்றிக்கேட்க முடியாது. நெருங்கிய நண்பர்களுக்கும் இது பற்றி எதும் தெரியவில்லை. இரவு வேளைகளில் கண்களை மூடிக்கொண்டு இந்த விஷயங்களில் உள்ள உண்மைகளை எனக்கு தெளிவாக்குமாறு பிரார்த்தனை செய்து பதிலுக்காகக் காத்திருப்பேன். கண்களை மூடிக்கொண்ட பின் என்னைச் சுற்றிலும் இருள் கடலைப் போல் சூழ்ந்து கொள்வதாக நான் உணர்வேன். காரிருளின் நடுவில் அமர்ந்திருப்பதாக எனக்குத் தோன்றும். அந்த காரிருள் 'நீண்டிருப்பதா? சதுரமானதா?' என ஆராயத் தொடங்கினேன். அது கோள வடிவில்

இருப்பதாகக்தோன்றியது. அதன் மையத்தில் குழப்பத்தினூடே “நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன்”என்று ஒரு ஒளிப்பொறி கிளம்புவதாகத் தோன்றியது. இதைப்போன்று பல இரவுகளில் தூக்கம் என் கண்களைத்தழுவும் வரை உணர்ந்திருக்கிறேன். முடிவில்லாத இருள். அந்த அச்சுறுத்தும் இருளின் நடுவே, 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு எனக்கு சிறிது ஊக்கத்தை கொடுத்தது. கண்களை மூடியவாறு அமர்ந்திருக்கும் அந்த நேரத்தில் நான் என்னையே வெளியில் பார்த்துக்கொள்வதாகத் தோன்றும். என்னையே உள் நோக்குவது எப்படி என்பது அச்சமயங்களில் எனக்குத் தெரியாது. அப்படி என்னால் பார்க்க இயலவில்லை. வெளியில் இருந்த இருள் வட்டத்திலிருந்து என் கேள்விகளுக்கு பதில் கிட்டவில்லை. 'நான் மரணமடைந்தால், அதன் பின் என்ன நடக்கும்?' இது போல நான் நினைப்பேன். பிறகு 'நாம் அந்த இருளில் வாழவில்லை' என்று எனக்குப் புலப்படும்; அதே சமயம் நான் உயிரோடு இருப்பதாக உணர்வேன். 'அச்சமின்றி இருக்கிறேன்' என்றும் தோன்றும். அந்தக் காரிருளில் 'நான் உயிர்த்துடிப்போடு அச்சமின்றி உள்ள ஒரு ஒளித்துகள்' என்பதாகவும் தோன்றும். நான் எவ்வளவு முயன்றும் அந்த அளவுக்குத் தான் என்னால் உணரமுடிந்தது. ஒரு நாள் எனக்குள்ளாகவே ஒரு கேள்வி எழுந்தது. 'நான் ஏன் பிறந்தேன்? நான் இறந்தால் ஏன் இறக்கிறேன்? பிறந்தால் நல்லது. இறந்து விட்ட பிறகு ஏன் மறுபடி பிறக்க வேண்டும்? அல்லது பிறந்து விட்ட நான் இறப்பு இல்லாமலேயே ஏன் இருக்கக்கூடாது?' இவற்றிற்கு எனக்குப் பதில்கள் கிடையாது. இத்தகைய மனப் போராட்டங்களுக்குப் பிறகு 'என் பிறப்பு பற்றியோ, இறப்பு பற்றியோ நான் ஏதும் அறியமாட்டேன்' என்ற முடிவுக்கு வந்தேன். எல்லாமே மர்மம் தான். நான், ஏதோ உயிர் எனும் ஒளிப் பொறியுடன் இருக்கிறேன். 'இந்த ஒளி அணையும் போது என்ன நடக்கும்' என்பதை யாரும் அறியமாட்டார்கள். ஒளி எங்கே இருக்கிறது? 'நான் உயிரோடு இருக்கிறேன்' என்ற உணர்வாகிய ஒளிப்பொறிதான் நிலைத்து நிற்கிறது. அது தீவிரமாகாதா? அதனுடன் திருவிழாக்கள் குறித்த என் வெறுப்பு அதிகமானது.

எங்கள் கிராமத்தில் சிவராத்திரி பண்டிகை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். எனக்குப் பத்து வயது இருக்கும். பக்கத்து கிராமங்களுக்கிடையே எங்கள் கிராமம் சிவபக்தர்களுக்கு ஒரு யாத்திரை ஸ்தலம். எங்கள் ஊர் ஆலயத்து சிவலிங்கமான நாகேஸ்வரஸ்வாமி, அமராவதியைப் போன்றே பழமையானது. அது எவ்வளவு பழமையானதாக இருந்தாலும் பௌத்தத்தை அழிப்பதற்கான அடையாளமாகவே அது நிறுவப்பட்டது என்பது என் நம்பிக்கை. எங்கள் ஊர்க்கோவிலில் உள்ள சிவலிங்கம், பௌத்த ஸ்தூபத்து தூணின் ஒரு பகுதியே என்பது என சமீபத்தில் நான் எடுத்த உறுதியான முடிவு. அக்கோயிலில் பௌத்த ஸ்தூபத்தின் கற்சிதைவுகள், தர்ம சக்கரத்தில் பாதியை காணலாம். கண்டகசாலா (இப்போது கண்டசாலா) என்ற ஊரில் இருந்த பௌத்த ஸ்தூபம் இடிக்கப்பட்ட போது, அதன் தூண்களும், கற்பாறைகளும் அநேக ஹிந்துக் கோயில்களை கட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டன. அத்தகைய ஒரு கல் தூணின் ஒரு பக்கத்தில் 'மங்கி' என்ற மன்னர் கல்வெட்டுகளை செதுக்கி இருக்கிறார். ஆறாவது, ஏழாவது நூற்றாண்டுகளில் குறைந்த பட்சம் சில பௌத்த ஸ்தூபங்களாவது இடிக்கப்பட்டிருக்கும். எங்கள் கிராமத்து ஆலயத்தில் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல் வெட்டில் 'அதன் சிவலிங்கம், அனந்தன், தக்ஷகன் மற்றும் கார்கோடகன் ஆகிய சர்ப்பங்களால் 'ஜெனமேஜெயன்' சர்ப்ப யாகம்[8] செய்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது' என்று செதுக்கப்பட்டுள்ளது.

அது சிவராத்திரி இரவு. நான், மஹாதீபஜோதி ஏற்றப்படுவதற்கு முன்பு ஆலயத்திற்கு சென்றேன். தனியாக அமைக்கப்பட்ட ஒரு நீண்ட சதுர அமைப்பில் சில 'மணங்கு' எடையுள்ள நெய் ஊற்றப்பட்டது. அது நிறைவடைந்த பின் நான் வீட்டுக்கு திரும்பும் போது, நெரிசலில் சிக்கி கீழே விழுந்துவிட்டேன். ஜனங்கள் என்மீது ஏறி கிழிந்த துணியை மிதித்துச் செல்வதுபோல மிதித்துக்கொண்டு சென்றனர். எனக்கு மூச்சுத் திணறியது. 'இறக்கப்போகிறோம்' என நினைத்தேன். எப்படியோ சிலர் என்னைப்பிடித்து கோயில் வாசலை விட்டு வெளியே ஒருபக்கமாகத்

தள்ளிவிட்டனர். நான் ஒரு தனி இடத்திற்கு தவழ்ந்து சென்று, நீண்ட நேரம் ஓய்வெடுத்துக்கொண்ட பிறகு, என் பழைய நிலைமைக்குத் திரும்பினேன்.

அன்றைய தினத்திலிருந்து நான் கோயில்கள், விழாக்கள் ஆகியவற்றிலிருந்து விலகியே இருக்க ஆரம்பித்தேன்.

இன்னொரு சமயம் எங்கள் கிராமத்திலும் அதைச்சுற்றிலும் ஒரு குழப்பம் உண்டாயிற்று. அதனால் கிராமத்துக்குடும்பங்கள் அனைத்தும் வெளிப்புறமாகச் சென்று அதிகாலை முதல் மாலைவரை தங்க நேர்ந்தது. அங்கேயே தங்கி, உணவு சமைத்து தெய்வங்களுக்குப் படைத்த பின்னர் தாங்களும் உண்பர். ஒவ்வொரு வீட்டின் முன் கதவிலும் வைஷ்ணவர்களின் சின்னமான நாமம் வரையப்பட வேண்டும். கிராமத்திலுள்ள ஆண்கள் ஒவ்வொருவரும் தங்கள் கழுத்தில் ஒரு சுரைக்காய் குடுவையை கட்டித் தொங்க விட்டுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாவிடில் கிராமத்திற்கு பெரும் தீமை ஏற்படுமாம். ஒவ்வொரு வீட்டு வாசல் கதவிலும் திருமண் (நாமம்) சின்னம் காணப்பட்டது. எங்கிருந்தோ சுரைக்காய்கள் வந்தன. (இதற்காகவே விற்பனை செய்யப்பட்டன போலும்). ஜனங்கள் கழுத்திலும் இடுப்பிலும் அதன் குடுவைகளை கட்டிக்கொண்டனர். எல்லோருமே கிராமத்தின் வெளிப்புறத்திற்குச் செல்ல ஆயத்தமாயினர். என் தகப்பனார் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். 'கிராமவாசிகள் இல்லாத நேரம்; திருடர்களுக்கு நல்ல வாய்ப்பாகி விடும்' என்பது அவர் வாதம். கிராம முன்சீப்பும், கர்ணமும் அப்பயத்தின் காரணத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்வதாக உறுதி அளித்தனர். ''யாராவது ஒருவர் கிராமத்திலேயே தங்கி விடுவதாக வைத்துக்கொள்வோம். எதேச்சையாக ஏதாகிலும் தீங்கு நேர்ந்தால் கூட அதற்கான பழி முழுதும் அப்படித் தங்கி விடுபவர் மீது தான் விழும்' என அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு, எங்கள் வீட்டில் ஏகமனதாக கிராமத்தை விட்டுச் செல்வது என முடிவெடுக்கப்பட்டது. அதற்காக புளியோதரை செய்து கட்டுச்சாதமாக எடுத்துக் கொண்டுபோவது எனத் தீர்மானமாயிற்று. 'அதை

தெய்வத்துக்குப் படைத்து விட்டு பிறகு சாப்பிடுவது, கொஞ்சம் மோர் குடிப்பது. பிறகு திரும்புவது' என்று திட்டமிட்டார்கள். அப்படி கட்டுச்சாதம் தயாரிப்பதற்காக கறிவேப்பிலை தேவைப்பட்டது. கிராம மக்கள் எல்லோருமே கூட்டமாக வெளியேறிக் கொண்டிருந்தனர். நான் அருகிலிருந்த ஒரு பிராமணர் வீட்டுக்குச் சென்று கொஞ்சம் கறிவேப்பிலை கேட்டேன். அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் அந்த மரம் இருந்தது. அவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியேறும் நேரம். “கதவுகளைப்பூட்டியாகி விட்டது. இனித் திறந்து பறிக்க முடியாது' என்று சொல்லிவிட்டு அவர்கள் போய் விட்டனர். நான் அந்த வீட்டின் பின்புறம் சென்று காம்பவுண்ட் சுவரைத்தாண்டி தெரிந்த கறிவேப்பிலை மரத்தை உற்றுப்பார்த்தேன். அந்த வழியாகச் சென்ற சிலர், நான் கறிவேப்பிலை மரத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்து “என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார்கள். எனக்கு சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது. 'ஒரு கொத்து கறிவேப்பிலை இருந்தால் வீட்டு வாசலில் கட்ட முடியும்' என்றேன். “எதற்காக?” என அவர்கள் வினவ, நான் “ஊரை விட்டு வெளியே போகும் போது வீட்டு வாசலில் கறிவேப்பிலையைக் கட்டினால் நல்லது என்று பெரியவர்கள் சொன்னார்கள்” என்றேன். உடனே யாரோ ஒருவர் காம்பவுண்டுச் சுவரைத் தாண்டிக்குதித்து மரத்தில் இருந்து நிறைய கறிவேப்பிலையைப் பறித்துக் கொண்டு வந்து அங்கிருந்தவர்களிடம் கொடுத்தார். நான் ஒரு கொத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றேன். மறுநாள் பலருடைய வீட்டு வாசல்களில் கறிவேப்பிலைகள் தொங்கின. அந்த வீட்டுக்காரர்கள் திரும்பி வந்ததும், கறிவேப்பிலை மரம் இலைக்கொத்துகள் இன்றி மொட்டையடிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து விசாரணைகள் மேற்கொண்டனர். நான்தான் அதற்குக்காரணம் என்பதை அறிந்ததும் எனக்குக்கிடைத்த வசவுகளும், கண்டனங்களும் சொல்லி முடியாது. என் விஷமத்தனத்திற்கு அது அதிகமான தண்டனை தான். பொய் சொன்னதற்கான விளைவை நான் அனுபவித்தேன்.

நான் இதை இங்கே சொல்வதற்குக்காரணம் 'சமுதாயத்தில் கடவுள் பெயரைச் சொல்லி பீதியைக்கிளப்பபுவது சுலபம். ஆனால் அதைப்

போக்குவது சிரமமானது' என்பதை தெரிவிப்பதற்குத்தான். மக்கள் கல்வி அறிவு பெற்று, சிந்திக்கத் தொடங்கும் வரை இத்தகைய தீமைகளை தவிர்க்க இயலாது. 'மதம், மருத்துவ சிகிச்சை, ஜோதிடம், கடமைகள், சம்பிரதாயம்'என்ற பெயர்களில் பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கின்றன. 'திருத்த முடியவில்லை' என்பது மட்டுமல்ல, அவை ஆழமாக வேர்விட்டு ஊடுருவி இருப்பதோடு பரவிக்கொண்டும் உள்ளன. மூட நம்பிக்கையோடு சில பழக்கங்களைப்பின் பற்றுபவர்கள் இருப்பதால் அவற்றை ஆதரிப்பவர்கள் லாபநோக்கத்திற்காக இப்பழக்கங்களை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களுக்கே அதில் நம்பிக்கை இருக்காது. சிலர் அறைகுறை அறிவுடன் எல்லாவற்றையும் செய்வார்கள்.

ஒரு சமீபகால நிகழ்ச்சி! என் நண்பர்களில் ஒருவருக்கு மூக்கில் 'அல்சர் புண்' ஏற்பட்டது. அவருக்கு ஆயுர்வேத மருத்துவத்தில் நம்பிக்கை உண்டு. ஒரு 'அலோபதிமருத்துவ நண்பர் “சாதாரணமான ஓர் அறுவையின் மூலம் அதைச் சரிப்படுத்தி விட முடியும்” என்று சொன்னார். மற்றொருவர் 'சிறிது நல்லெண்ணெனயில் ஒரு கைவிரல் நகத்தைப்போட்டு சூடாக்கி மூக்கில் வைத்தால் புண் குணமாகும்' என்றார். இன்னொருவர் 'மற்றவர்களின் நகத்தை விட நோயாளியின் கைவிரல் நகம்தான் அதிகப்பயன் தரும்' என்று ஆலோசனை சொன்னார். எனக்குக் கோபம் வந்து விட்டது. 'இவர் வேதனையில் அவஸ்தைப்படுகிறார். நீங்கள் அறிவுக்குப் பொருத்தமில்லாத சிகிச்சைகளைச் சொல்கிறீர்களே' என்று சொன்னேன்.

முதலில் யோசனை சொன்னவர் “இது அறிவுக்குப் பொருந்தாத வைத்தியம் அல்ல. இது போன்ற சிகிச்சையால் நான் பலரது நோய்களை தீர்த்திருக்கிறேன்” என்று பதிலளித்தார். இரண்டாமவர் “இது போன்ற சிகிச்சைகளை நம்மிடமிருந்து மேல் நாட்டார் கற்றுச் சென்றிருக்கிறார்கள். ஒருவரிடமிருந்து ரத்தம் எடுத்து இன்னொருவருக்குச் செலுத்துகிறார்களே, அது இது போன்றது தான். ஏன், எனக்கே கூட ஒரு கொப்புளம் ஏற்பட்டது. என் நகத்தையே

எண்ணெயில் போட்டு சூடாக்கி அதில் வைத்தேன். அது சரியாகி விட்டது” என வாதிட்டார். நான் மேலே பேசவில்லை. “ஆனாலும் இது ஏமாற்று வேலை” என்று எண்ணியவாறே மனவேதனைப்பட்டேன். என் வருத்தம் என்னவென்றால் இத்தகைய சிகிச்சைகளால் நோயாளிக்கு எந்த கெடுதலும் நேராது என்றாலும் “நோய் குணமாகாதே!” என்பது தான். நான் சென்னையில் இருந்த காலத்தில் கீழ்த்திசை (ஓரியண்டல்) நூலகத்திற்குச் சென்று “நகம்” என்பது பற்றிய விளக்கத்தை ஆராய்ந்தேன். ஆயுர்வேத மருத்துவமனையில் இருந்த என் நண்பர் ஒருவரிடம் இது குறித்து விசாரித்தேன். அவர் ஆயுர்வேத சிகிச்சை முறையில் “நகம் என்றால் விரல்களில் உள்ள நகம் அல்ல, நத்தை போன்ற ஒடு உடைய தண்ணீரில் வாழும் பிராணிகளுடைய வாசனை வீசும் மேல் ஓடு” என விளக்கினார். நானும் பல மருத்துவ நூல்களைப் படித்துப் பார்த்து 'அவர் கூறியது சரிதான்' எனத் தெரிந்து கொண்டேன். மூக்கில் கட்டி வந்து அவதிப்பட்ட நண்பரிடம் இதைப்பற்றிச் சொல்லி முறையான மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படி கூறினேன். அவரும் ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்து கொண்டு குணமடைந்தார். இது போன்று, விஞ்ஞான அறிவு இன்றி அபத்தமான செய்கைகளில் ஈடுபடுபவர்களும் இருக்கிறார்கள். மருத்துவ சிகிச்சைகள் கூட தக்க தயாரிப்பு இல்லாது, நோயாளிகளிடம் பரிசோதனை செய்வதாக உள்ளன. பல மருந்துகளில் சேர்க்கப்பட்டுள்ள மூலப்பொருள்கள் என்ன என்பதற்கு தெளிவான குறிப்புகள் இல்லை. நோய் என்ன என்று தெரிந்து கொள்ளப்படாமலே அவை பல நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டு, 'விளைவுகள் என்ன?' என்று சோதிக்கப்படுகின்றன. ஆத்மாவின் வழி காட்டுதலின்படி மனச்சாட்சியை ஊடுருவி, நீடித்த ஞானத்தையும் பேரானந்தத்தையும் அனுபவிப்பவர்கள் மட்டுமே உலகுக்கு பயன் அளிக்க கூடியவர்கள்.

எனக்குப் பத்து வயது இருக்கும் போது என் மிக இளைய சகோதரி நோய்வாய்ப்பட்டாள். “பிழைப்பாளோ மாட்டாளோ” என்று கூட சந்தேகம் ஏற்பட்டது. “ஏதாவது நடந்துவிடும்” என்ற பயத்தில் சிறிய வயதினருக்கு சீக்கிரமே சாப்பாடு போட்டுவிட்டனர். எனக்கு யாரும்

விவரம் சொல்லாவிடினும் வீட்டில் நிலவிய இறுக்கமான சூழ்நிலையிலிருந்து நான் அதை ஊகித்துவிட்டேன். யாருக்கும் தெரியாமல் வெளியேறி அருகிலிருந்த கோயிலுக்குச் சென்று கடவுளிடம் தெளிவற்ற சொற்களால் அக்குழந்தையை காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். மதியம் சாப்பாட்டுக்குக்கூட வீடு திரும்பவில்லை. வீட்டுச் சூழ்நிலையில் சிறிது இறுக்கம் குறைந்தது. இரண்டு மூன்று முறை வயிற்றுப்போக்கு ஆன பின், குழந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. எல்லோரும் உணவு உண்ணும்போது 'நான் வீட்டில் இல்லை' என்பதை கவனித்து தேடத் தொடங்கினார்கள். 'என் நெருங்கிய நண்பர்கள் வீடுகளில் கூட நான் இல்லை' என்பதை அறிந்து என் தகப்பனார் மிகக்கவலை கொண்டார். மாலை ஆயிற்று. பக்கத்தில் இருந்த கோயிலின் ஒரு மூலையில் நான் சுருண்டு படுத்திருந்ததைக்கண்ட அவர் என்னை எழுப்பி, என் தங்கை நலமாக இருப்பதை தெரிவித்துவிட்டு, வீட்டுக்கு அழைத்துச் சென்றார். சிறுவயது முதலே நான் வியாதிகள், சாவு இவை பற்றி தடுமாற்ற நிலையில் இருந்தேன். அன்றைய தினத்தில் நான் செய்வதறியாது இருந்தேன். என் பதட்டத்தை மற்றவர்கள் அறியாதவாறு மறைத்துக்கொண்டு எல்லாம் வல்ல இறைவன் சந்நிதி முன் பிரார்த்திக்க வேண்டும் என்பது என் நோக்கம். ஆனால் அதற்குப்பலன் இருந்ததென்று அப்போது நான் உணரவில்லை.

என் தந்தை தன்னைத்தேடி வரும் நோயாளிகளிடம் கடுமையாக இருப்பார். ஒரு முறை அவரிடம் வந்த நோயாளி ஒருவரின் பரிதாப நிலையைக்கண்டு "பணம் கொடு என்று கேட்காமல் வந்தவருக்கு சிகிச்சை அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். "அப்பா! தயவு செய்து இவருக்கு முதலில் சிகிச்சை அளியுங்கள். இவரிடம் இப்போது பணம் இல்லை. பின்னர் தருவார். கொடுக்காவிட்டால் போகட்டும். இந்த தர்ம காரியத்திற்காக உங்களுக்கு பலன் கிட்டும்" என்றேன். அவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு "பையா. என் குழந்தைகளிடம் நான் வைத்திருக்கும் அன்பினால்தான் நான் இப்படிக்கடுமையாக நடந்து கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால் என்னால் பணம் சம்பாதிக்க

முடியாது. சம்பாத்தியம் இல்லாமல் எப்படிக்குடும்பம் நடத்துவது? என் குழந்தைகளிடம் நான் வைத்துள்ள அன்புதான் என்னை இப்படி மற்றவர்களிடம் இரக்கமில்லாதவனாக்கி விட்டது" என்றார். நான் கண்ணீர் விட்டவாறே, மௌனமாக இருந்தேன். அதன்பின் அந்த உரையாடல் என்னை எப்போதும் வாட்டிக்கொண்டு இருக்க ஆரம்பித்தது. இந்த அனுதாப உணர்வின் செயல்பாடு பின்னர் தெரியவரும்.

4

புரோஹிதமும் – அதைக்கடைப்பிடித்தலும்

நான் புரோஹிதம் என்னும் தொழிலை வெறுக்கிறேன். “அதற்கு வேதங்களில் அனுமதி இல்லை” என்பது அல்ல காரணம். வேதங்களின்படி ஒரு பிராமணனுக்குரிய பொறுப்பு என்ன என்று பார்த்தால், அவை பல கடமைகளை விதித்திருக்கின்றன என்பதை அறியலாம். ஆனால் இன்று அவர்கள் புரிகின்ற தொழில்கள் வேதங்களால் தடை செய்யப்பட்டவையாக உள்ளன. ”சம்பளத்திற்காக கல்வி கற்பிப்பது, மருத்துவத் தொழில் புரிவது, சங்கீதம், வட்டிக்கு பணம் கொடுப்பது” ஆகிய பல தொழில்கள் பணம் சம்பாதிப்பதற்காக பிராமணர்களால் செய்யப்படுகின்றன. ஆனாலும் அவர்களை யாரும் ஏளனமாக நோக்குவதில்லை. அப்படி இருக்கும் போது புரோஹிதத்தை மட்டும் கண்டனம் செய்வானேன்?

சமுதாயத்திற்கு பயன்படும் எந்தத் தொழிலும் 'தகுதியற்றது' என்று சொல்லப்படலாகாது. “முன்னோர்களால் பின்பற்றப்பட்டது” என்றாலும் எனக்கு புரோஹிதம் ஏற்புடையதல்ல. அது ஒரு ஏமாற்றுவித்தையாகவே தோன்றுகிறது. புரோஹிதர்களின் சேவையை நாடுபவர்களில் தொண்ணூறு சதவீதத்தினர் அவர்கள் மீது மதிப்போ மரியாதையோ வைத்திருப்பவர்கள் அல்லர். புரோஹிதர்கள் செய்யும் சடங்குகள் “பாரம்பர்யமான வழக்கங்களை நாம் பின்பற்றுகிறோம்” என்ற திருப்தியை அவர்களுக்கு அளிக்குமே தவிர, விழிப்புணர்வு கொண்டு அவற்றை நடத்துபவர்கள் அல்ல அத்தகையோர்.

புரோஹிதர்கள் செய்யும் சடங்குகளும் வைதீகக்காரியங்களும் படிப்படியாக அவற்றின் மூலவடிவத்தையும் பயன்பாட்டையும் இழந்து வருவதோடு தற்சமயம் மற்றவர்கள் பார்ப்பதற்காக செய்யப்படுபவையாகவும் ஆகிவிட்டன. அவற்றை விரும்பிச் செய்ய நினைப்போர், தாமே செய்துகொள்ளக்கூடிய நிலையும் வந்து விட்டது. 'ஓர்

ஆன்மீகச் செய்கை' என அதை எண்ணுவோரே புரோஹிதத்தை பின்பற்றுகின்றனர். புரோஹிதம் தற்போது பாரம்பர்ய முறையாகி விட்டதால் அதில் நிறைய முறைத்தவறுகள் புகுந்துவிட்டன. இன்று ஆயிரத்தில் ஒரு பிராமணர் கூட முறைப்படி அக்னிஹோத்ரம் புரிவதில்லை. வேதங்கள் விதித்துள்ள "சிரௌதம்" என்னும் செயல் அநேகமாக இப்போது நடப்பதே இல்லை. உபநயனம், திருமணம், சடங்குகளைச் செய்யாமல் விட்டதற்கான பிராயச்சித்தம் இவற்றின் போது புனித அக்னி வளர்த்து அதை வணங்குவது, ஹோமங்கள் புரிவது ஆகியவை எல்லாம் இப்போது புரோஹிதர்கள் நடத்தும் கேலிக்கூத்தாகிவிட்டது. இன்று திருமணங்கள் மற்ற நிகழ்ச்சிகளில் புரோஹிதர்களுக்கு காட்டப்படும் மரியாதை, காளிதாஸனின் நாடகங்களில் வரும் விதூஷகனுக்கு காட்டப்படுவது போன்று தாழ்ந்துவிட்டது. குடும்பத்தினரை கவனிக்காமல் முன்னோர்களுக்காக சிரத்தையற்று செய்வது போன்று, தர்ப்பணம் செய்கின்ற புரோஹிதர்களும் இருக்கின்றனர். ஆகவே, நான் சிறுவனாக இருந்தபோதே புரோஹிதம் செய்யும் தொழிலுக்குப் போகக்கூடாதென்றும் அதை வைத்து கிடைக்கும் சம்பாவனைகளை – பிக்ஷைகளை ஏற்பதில்லை என்றும் தீர்மானித்துவிட்டேன். "இவற்றில் வல்லவன்" என்று சொல்லிக் கொள்ளவும் நான் விரும்பியதே இல்லை.

எனக்கும் உபநயனம் நடந்தது. சந்தியாவந்தனம்[9] போன்றவற்றை அவற்றின் விளக்கங்களுடன் நன்கு கற்றேன். கிராமத்திலேயே இருந்திருந்தால் நானும் வைதீகத் தொழிலில் இறங்கி இருப்பேன். ஆனால் கடவுள் என்னை காப்பாற்றி விட்டார். அருகே இருந்த சல்லபள்ளி எனும் ஊரிலிருந்த கற்றறிந்த பெரியவரான, 'அட்டேபள்ளி' ஸ்ரீ சோமநாத சாஸ்திரி சில சமயங்களில் எங்கள் கிராமத்திற்கு வருவார். இங்கிலாந்தின் அரசராக ஏழாவது எட்வர்ட் முடிசூட்டிக் கொண்ட நேரத்தில் நடந்த உள்ளூர் விழாவுக்காக சமஸ்கிருதத்தில் சில செய்யுள்களை எழுதினேன். சோமநாத சாஸ்திரியார் அவற்றைப் பார்த்துவிட்டு என்னைப் பாராட்டினார். அவரும் சங்கமேஸ்வர சாஸ்திரியாரும் சமகாலத்தவர்கள். இருவரும், கல்விமானும் தர்க்க

சாஸ்திர நிபுணருமான விஜய நகரம் வித்வான் பீமாச்சாரியாரிடம் பல ஆண்டுகள் கல்வி கற்றவர்கள். சோமநாத சாஸ்திரியார் எங்கள் கிராமத்திலேயே குடியேறினார். ஒரு முறை அவர் கடும் நோய்வாய்ப்பட்டு விட்டார். என் தந்தை அவருக்கு சிகிச்சை செய்து, நோய் குணமானது. அதன் பிறகு அவர், சல்லபள்ளிக்கு சென்று விட்டார்.

என் தந்தை மீதிருந்த மரியாதையின் நிமித்தம் எப்பொழுதாவது எங்கள் கிராமத்திற்கு வருவார். நான் அவரிடம் கல்வி கற்க விரும்பி சல்லபள்ளிக்குச் சென்றேன். என் கல்வி 'லகு–கௌமுதி'யுடன் தொடங்கியது. சோமநாத சாஸ்திரியார் எனக்கு பதஞ்சலி யோக சூத்திரங்களை கற்பித்தார். அப்போது நான் கற்றவை என்னுள் ஊடுருவி அற்புதமான சிந்தனைகளை தோற்றுவித்தன. அதிகாலையிலேயே சாஸ்திரியார் எழுந்து நீராடுதல் முதலிய சடங்குகளை முடித்துக் கொள்வார். நள்ளிரவு வரை பிரார்த்தனைகள் செய்வார். சுருக்கமாகச் சொன்னால் ஆன்மீக ஒளிப்பிழம்பாக விளங்கினார். எங்களை – அதாவது தன் சிஷ்யர்களை அவ்விதமே பயிற்றுவிக்க அவர் முயன்றார். ஆனால் எனக்கோ இந்த மாதிரியான சமயச் சடங்குகளைச் செய்வதில் ஆர்வம் சிறிதும் இல்லை. அப்போது சள்ளபிள்ளா வெங்கட சாஸ்திரியார் என்பவர், பந்தர் ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் தெலுங்கு பண்டிட்டாக இருந்தார்.

ஒரு சமயம் நான் என் ஆசிரியரின் வீட்டு வாசலில் உட்கார்ந்து பாடங்களைப் படித்துக் கொண்டு இருந்தேன். வீட்டுக்குள் துடைப்பத்தால் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். அந்தத்தூசி எல்லாம் என் மீது வந்து விழுந்தது. “பெருக்கித்தள்ளுவதால் கிளம்பும் தூசி இந்திரனின் செல்வத்தைக்கூட அழித்துவிடும் என்றொரு 'மூதுரை' உண்டு. நீ ஏன் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?” என்று என் ஆசிரியர் கேட்டார். “நான் வீட்டுக்குள் பெருக்குவதை கவனிக்கவில்லை” என்றேன். “அது அப்படி அல்ல. உனக்கு மூத்தோர் சொல்வதில் நம்பிக்கை இல்லை” என்று சொன்னார் அவர். நான் பேசாதிருந்தேன். அதன்பின் அவர் அங்கிருந்து போய்விட்டார். நான்

என் நண்பன் ஒருவனிடம் “என் மீது தூசி விழுந்தது அருவருப்பாக இருந்தது. அதில் சந்தேகமில்லை. நான் படிப்பதில் கவனமாக இருந்ததால் அதைக் கவனிக்காமல் இருந்துவிட்டேன். ஒரு விதத்தில் ஆசிரியர் கூறியது சரிதான். எனக்கு இந்த பழமொழிகளில் எல்லாம் நம்பிக்கை கிடையாது” என்ற சொன்னேன். சாஸ்திரியார் காதுகளில் அது விழுந்து என்னைக் கடுமையாகக் கண்டித்தார்.

5

அறிவு விரிவடைதல்

எனக்கு ஐந்திலிருந்து எட்டு வயதுக்குள் இருக்கும். ஏதோ ஒரு விசேஷத்திற்காக ஊர் ஆஞ்சநேயர் கோயிலில் 'பிராமண போஜனம்' எனும் விருந்து நடந்து கொண்டிருந்தது. நானும் அதில் இருந்தேன். யாரோ ஒருவர் பழுதடைந்திருந்த கோயில் கதவில் இருந்த ஓட்டை வழியாக உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் அதைக் கவனித்துவிட்டு சத்தம் போட்டார். வெளியே இருந்தவர் விலகிச் சென்றார். உணவு உண்டபின் நாங்கள் வெளியே வந்தோம். பசியோடு காணப்பட்ட ஒரு யாசகர் அங்கே நின்று கொண்டிருந்தார். நன்றாகச் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தவர், அவரிடம் “நீ தானே உள்ளே எட்டிப் பார்த்தது?” என்று வினவினார். “ஆமாம்! இது கோயிலாக இருப்பதால் உள்ளே என்ன நடக்கிறதென்று பார்க்க விரும்பினேன். நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தீர்கள். பசித்திருக்கும் எனக்கும் ஏதாவது கொடுப்பீர்கள் என்று நினைத்து இங்கே காத்திருக்கிறேன்” என்று பதிலளித்தார் அவர். “ராஸ்கல்! நீ பிராமண போஜனத்தையே தீட்டுப்படுத்திவிட்டாய்” என்று ஒருவர் இரைந்தார். அவர் “ஐயாமார்களே! நீங்கள் எனக்கு ஏதாவது உண்ணக் கொடுத்தால் என் வயிறு நிறையும். நீங்கள் சாப்பிடுவதை சும்மா பார்த்ததால் எனக்கு என்ன லாபம்? உள்ளே விருந்து நடப்பது எனக்குத் தெரியாது. அதனால் எட்டிப் பார்த்தேன்” என்று சொன்னார். “இன்னும் நிறைய பிராமணர்கள் போஜனம் செய்ய வேண்டும். எல்லோரும் சாப்பிட்டு முடியும் வரை உனக்கு ஒன்றும் தர முடியாது. ஓடிப்போ” என்று சொல்லிவிட்டு திருப்திகரமாக சாப்பிட்டதால், பருத்த தனது தொந்தியைத் தடவிக் கொண்டார் அவரிடம் கேள்வி கேட்டவர். வெளியே வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அந்த யாசகர் கண்களில் நீர் சோர, சூரியனைப் பார்த்துக் கைகளைக் கூப்பியவாறே “அப்பா! நீயே சாட்சி. நான் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை. இவர்கள் என்னை இழிவுபடுத்துகிறார்கள். என் மீது இரக்கம் காட்டு” என்று சொல்லிவிட்டு, அருகே ஒரு தொட்டியிலிருந்த தண்ணீரால் தன் சோக

முகத்தைக் கழுவிக் கொண்டு அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார். அவர் அப்படிச் சொன்னதும், செய்ததும் என் மனதில் ஆழமாகப் பதிந்து நிலைபெற்று விட்டது. என் உடல் நடுங்கியது. நான் அன்று வீட்டுக்குத் திரும்பிய போது எனக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. மூன்று நாட்கள் அது நீடித்தது. அம்மூன்று நாட்களிலும் அந்த பிராமணரின் அகந்தையும் அந்த யாசகரின் பரிதாபத் தோற்றமும் என் மனதில் அடிக்கடி தோன்றி என்னை வாட்டிக் கொண்டிருந்தன[10]. ஆனால் நான் என் பெற்றோரிடம் எதையும் சொல்லவில்லை. என் உடல்நிலை மெதுவாக சீரடைந்தது. அந்த மூன்று நாட்களிலும் என் மனதுக்குள் ஒரு எண்ணம் முளைவிட்டது. கோயிலில் நடந்த நிகழ்ச்சியால் என் அறிவு விசாலமடைந்தது என்றே சொல்ல வேண்டும். அதைப்பற்றி இப்போது எழுதுகையில்தான் அதன் தாக்கம் முழுவதும் எனக்குப்புரிகிறது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் என் அன்புக்குரிய தாயார் காலமாகிவிட்டார். இறுதிச் சடங்குகள் என் மூத்த சகோதரரால் நடத்தப்பட்டன. அவர் அவற்றைச் செய்கையில், இளைய சகோதரனாதலால் நான் அருகில் நின்று கொண்டிருந்தேன். “மூத்தவர்தான் பெற்றோரின் இறுதிச் சடங்குகளை நடத்த வேண்டும்” என்பது பாரம்பர்யமாக வரும் வழக்கம். நான் என் சகோதரர் செய்தது போல ஏதும் செய்யாது பேசாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்த்த சில வைதீகர்கள், என்னைக் கண்டித்தனர். ஆனால் எங்கள் பக்கத்து வீட்டுக்காரரும் வேத விற்பன்னருமான சாம்பசிவ சாஸ்திரியார் 'இந்த விஷயத்தில் சாஸ்திரம் சொல்வது என்ன?' என்பதை விளக்கி அவர்களை அமைதிப்படுத்தினார். இறுதிச் சடங்குகள் முடிந்த கடைசி நாளில் ஜாதிபேதம் பார்க்காமல் சுமார் எழுநூறு, எண்ணூறு பேருக்கு சாப்பாடு போட்டோம். அந்த யோசனை என்னுடையது. அதை நிறைவேற்றியது என் இளைய சகோதரர்கள். எங்கள் தெரு நெடுகிலும் சுத்தம் செய்து இலைகள் போட்டு பரிமாறினோம். சிலர் “தாழ்த்தப்பட்டவர்களுக்கு சாப்பாடு போட்டதால் தெருவே தீட்டாகிவிட்டது” என்று கூப்பாடு போட்டார்கள். கிராமத்தில் அதைப்பற்றி சில கூக்குரல்களும் எழுந்தன. ஆனால் நாங்கள் எடுத்த முடிவை வெற்றிகரமாக நிறைவேற்றினோம். சமீபத்தில் தான் “அந்த என் விருப்பம் நான் சிறுவனாக இருக்கையில் மனதில் பதிந்த ஒரு எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும்

என்ற நோக்கத்தினால் தோன்றியது'' என்பதை உணர்ந்து கொண்டேன்.

''முக்தியாலாவில்'' நடந்த என் மகனுடைய திருமணத்தின் போது ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட ஜாதியாருக்கு நல்ல சாப்பாடு போடப்பட்டது. அதில் துப்புரவுத் தொழிலாளர்களும் அடங்குவர். அப்பொழுது கூட என் இளைய சகோதரர்களே, அந்த என் எண்ணத்தை செயல்படுத்தினார்கள். எங்கள் குடும்ப நண்பரான முக்தியாலா ஜமீந்தார்தான் அந்த திருமணத்திற்கான முழுச்செலவையும் 'அவரது இல்லத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கானது' போல ஏற்றுக் கொண்டார். 'எல்லோருக்கும் நான் விருந்து அளித்ததற்கான காரணம்' சிறு வயதின் போது என் மனதில் வேர் ஊன்றிய எண்ணமானது செயல்வடிவம் பெற்றதுதான். மண்ணில் ஊன்றப்பட்ட ஒரு விதை வெளியே தெரியாமல் இருந்து, உரிய காலத்தில் எப்படி முளைவிடுகிறதோ அதுபோல, அடிமனதில் ஊடுருவிப் பதிந்த சில எண்ணங்கள், உரிய நேரத்தில் செயல் வடிவம் பெறுகின்றன. ஆனால் அச்செயல்கள், முந்தைய அனுபவங்களின் விளைவுதான் என்பது ஒரு போதும் புலனாவதில்லை. சில வேர் ஊன்றிய சடங்குகள் அல்லது செயல்கள் செய்யப்படுவதற்கு முன், நீண்டகாலம் கரு உருவாக மறைந்திருப்பதால், அதன் அடிக்காரணங்கள் எவை என்று தெரியாமலே போய் விடுகின்றன, அல்லது மறக்கப்படுகின்றன. அது போன்ற அடி மனத்தில் பதிந்து மறைந்துள்ள சிந்தனைகள் செயல்வடிவம் பெறும்போது அதற்கான மூல காரணம் தெளிவாகாமலேயே இருப்பதும் உண்டு. இந்த தெளிவு மனதில் வளர்ந்து முதிர்ச்சி அடைந்து முழுமையாக உணரப்படும் நிகழ்வு, ஒரு ஜன்மத்தில் நடப்பதாக இல்லாமலும் இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் அந்த முளைவிடும் விதை போன்ற புரிதல் அடுத்த விநாடியே உணரப்படலாம். வேறு சில சந்தர்ப்பங்களில் ஏழு ஜன்மங்கள் ஆனாலும் அது நிகழாமல் போகலாம்.

பரமாத்மாவைப் பற்றிய சிந்தனை, சுயதரிசன நிலையை அடையும் வரை, முளைவிடும் தன்மையிலேயே இருந்து, ஒரு தெளிவான பார்வை கிட்டும் போது மலர்ச்சி அடைகிறது. அதன்பின் அது வெளியே தெரிவதோடு, முதிர்ச்சி அடையும் நிலை ஏழு ஜென்மங்களுக்கு நீடிக்கிறது.

முதிர்ச்சிஅடைதல் என்பது, தன் ஆத்மாவை மிக உயர்நிலையில் மட்டுமல்ல அடி ஆழம் வரையிலும் காண்பதாகும். அது சாதாரண மனிதர்களுக்கு சாத்தியமல்ல. மனிதனுடைய அன்பு செல்லுமிடமெல்லாம் அது பரவுகிறது. இத்தகைய உயர்நிலையையும் அடி ஆழத்தையும் காண்பது 'திடும்' என நிகழாது. நீடித்த முயற்சியில்லாமல் இதை அடையவும் முடியாது. ஒரு மனிதனின் ஆத்மா 'எவ்வளவு தூரத்திற்கு மனித இனத்தின் மீது அன்பு செலுத்துகிறதோ' அந்த அளவுக்கு அவனால் சுய தரிசனம் பெற முடியும். அது எப்படி எனில் "ஒரு மரத்தின் வேர்கள் எவ்வளவு ஆழத்திற்குச் சென்று பரவுகிறதோ அந்த அளவுக்கு அதன் வளர்ச்சியும் இருக்கும்" என்பது போன்றதுதான். ஆணி வேரானது பூமியைப் பிளந்து கொண்டு அதன் அடி ஆழத்திற்கு செல்ல முடியாதா?

6

பழிவாங்கும் குணமுள்ள காக்கை

எனக்கு அப்பொழுது பதின்மூன்று வயது. சல்லபள்ளிக்கு அப்பொழுதுதான் படிக்கச் சென்றிருப்பேன். புளிய மரத்தின் இளந்துளிர்களும் பருப்பும், கலந்து செய்த 'சூப்' எனக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் வீட்டின் பின்புறம் ஒரு பெரிய புளியமரம் இருந்தது. பருவ காலத்தில் அதில் சிவப்பு நிறத்துளிர்கள் நிறையத் தோன்றும். நான் விடுமுறையில் வீட்டுக்கு வந்து “அவற்றைப் பறித்துத் தந்தால் எனக்கு 'சூப்' செய்து தருவீர்களா?” என்று அம்மாவிடம் கேட்டேன். அவர்கள் சம்மதித்தார்கள். நான் சுற்றுச் சுவர் வழியாக மரத்தில் ஏறி, ஒரு மூங்கில் 'துறட்டி' மூலம், இளந்துளிர்களைப் பறிக்க ஆரம்பித்தேன். ஒரு கிளையில் இருந்த துளிர்கள் சற்று எட்டாமல் இருந்தது. அதை நான் குறி வைத்து துறட்டியை நீட்டினேன். அக்கிளைக்குப் பக்கத்துக் கிளையில் ஒரு காக்கை கூடு கட்டி இருந்தது. நான் அதை கவனிக்கவில்லை. திடீர் என ஒரு காக்கை 'கா கா' என்று குரல் எழுப்பியவாறே வந்து தன் கூறிய அலகால் என் தலையில் கொத்தியது. ஓர் ஆணி அடித்ததைப் போல் எனக்கு 'சுரீர்' என வலி ஏற்பட்டது. அதே நேரம் 'கா கா' என குரல் எழுப்பியவாறே பல காக்கைகள் கூடி மரத்தைச் சுற்றி வட்டமிட்டன. என்னைக் கொத்திய காக்கை மறுபடியும் கொத்த வந்தது. நான் பயந்து போய் மரத்திலிருந்து இறங்கி வீட்டுக்குள் ஓடிவிட்டேன். மறுநாளே நான் மீண்டும் சல்லபள்ளிக்குப் புறப்பட்டேன்.

அதிலிருந்து நான் எப்பொழுது எங்கள் ஊர் திரும்பி வீட்டுக்கு வந்தாலும் அந்தக் காக்கையின் கோபத்திற்கு ஆளாக நேர்ந்தது. வீட்டின் பின்புறம் நான் சென்றால் அது பறந்து வந்து என் தலையில் கொத்த முயலும். சாப்பிட்டுவிட்டு கை கழுவ செல்லும் போதும், என்னைக் கொத்துவதற்காக வரும் அல்லது என் தலை மீது எச்சமிட்டு விடும். அந்த எச்சத்தை கழுவுவதற்கு நான் இரண்டாவது முறை குளித்திருக்கிறேன்.

அந்தக் காக்கையின் பழிவாங்கும் குணம் பல ஆண்டுகள் நீடித்தது. தெரிந்தே நான் அந்த காக்கைக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை. அதன் கூட்டுக்கும் என்னால் ஒரு சேதமும் ஆகவில்லை. ஆனாலும் அக்காக்கையின் ஆத்திரம் நெடு நாட்கள் தொடர்ந்தது. நான் சென்னைக்கு குடிவந்த பிறகு, மாதா மாதம் எங்கள் ஊருக்குச் செல்வது நின்றுவிட்டது. அந்தப் புளிய மரமும் பட்டுப் போயிற்று. அதன் பிறகு நான் ஒரு வருடத்திற்கு அல்லது சில வருடங்களுக்கு ஒரு முறை கிராமத்திற்கு செல்லும் போது அந்தக் காக்கையின் தாக்குதல் நின்று போயிற்று. அது வேறெங்கோ போய் விட்டது போலும். நான் இந்த சம்பவத்தை எழுதுவதன் காரணம் அதன் விளைவாக எனக்கும் நல்ல பாடம் கிடைத்தது என்பதால் தான். உண்மையில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி, என் சிந்தனையில் நெடுங்காலம் நிலைபெற்ற ஒன்றாகியது.

அந்தக் காக்கையின் பழிவாங்கும் குணம் எனக்கு சமீபத்தில் நான் 'பஸவ புராணம்' மற்றும் சில நூல்களை வெளியிட்டபோது சிலர் சினத்துடன் விமர்சித்ததை எதிர்கொள்ளும் பக்குவத்தை தந்தது. ஆத்திரத்திற்குப் பதில் ஆத்திரத்தைக் காட்டுவது சரி அல்ல. மிக மோசமான ஆவேசமும், பதிலுக்கு எதிர்ப்பை காட்டாவிட்டால் தானாகவே அடங்கிவிடும். ஒருவருடைய இதயத்துக்குள்ளாக அன்பு நிச்சயமாக புதைந்திருக்கும். ஆனால் என்ன சொல்ல வேண்டுமோ அதை நேருக்கு நேராக ஒளிவு மறைவில்லாமல் சொல்லிவிடுவது நல்லது (ஒரு சிலருக்குத்தான் இது பொருந்தும்). உள்ளிருக்கும் அன்பை தொட்டுவிட்டால் போதும், தன்னை அறியாமலே அவர்களது கோபம் மெதுவாக வலுவிழந்து குறைந்துவிடும். இது விஷயத்தில் அண்மைக் காலமாக நான் பல அனுபவங்கள் பெற்றிருக்கிறேன். இதைப் போன்று நடந்து கொள்வதற்கு என் குருநாதரின் அருளும் மஹாத்மா காந்தியின் தெய்வீக வாழ்வும் எனக்கு வழிகாட்டியாக உள்ளிலும் வெளியிலும் இருந்து என்னை முற்றிலும் மாற்றி இருக்கின்றன.

7

அறிதலும் அனுபவமும்

எனக்கு, கற்றறிந்த பெரியவர் சோமநாத சாஸ்திரியார் மீது மிகுந்த மதிப்பு உண்டு. ஆனாலும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்றோ, அவரைப் பின்பற்றினால் 'சுயதரிசனம் பெறுவோம்' என்றோ நான் எண்ணவில்லை. அவர் எங்களுக்கு யோக சூத்திரங்களை கற்பித்துக் கொண்டிருந்த போது 'யோகப் பயிற்சிகளால், தான் முழு நிறைவு பெறவில்லை' என்றும் 'அதற்காகச் செய்த முயற்சிகளால் தன் உடல் நலம் குலைந்தது' என்றும் அவர் தெரிவித்தார். எனக்கு 'யோக சூத்திரங்களால் எதையும் தான் அடைய முடியாதபோது அவர் ஏன் எங்களுக்கு அதைக் கற்பிக்க வேண்டும்?' என்று தோன்றியது. ஆனால் எனது அவநம்பிக்கையை வெளியிட்டால் அவர் கோபம் கொள்ளுவார் என்று நான் பேசாதிருந்துவிட்டேன். ஒரு சந்தர்ப்பத்தில் சாஸ்திரியார் அந்தக் கேள்வியை தனக்குத் தானே கேட்டுக் கொண்டு பதிலையும் சொன்னார். “உங்களில் யாராவது ஒருவர் தக்க குரு கிடைக்கிறாரா என்று முயற்சி செய்யுங்கள். எனக்கு அந்த அனுபவம் கிடைக்கவில்லை என்பதால் யோக அறிவியல் மெய்யானது அல்ல என நினைக்க வேண்டாம். ஆனால் நீங்களாகவே அதைப் பயிற்சி செய்ய வேண்டாம்”.

அந்த வார்த்தைகள் என் மனதில் நன்கு பதிந்தன. சோமநாத சாஸ்திரியார், மந்திர யோகத்தை நன்கு அறிந்து அதில் பயிற்சி பெற்றவர். ஆனாலும் அதன் பயன்களைப் பற்றி அவர் நினைத்ததே இல்லை. பயிற்சி செய்ய வேண்டும் என்பதற்காக அதைப் பயிற்சி செய்தார். அவ்வளவு தான். சமீபத்தில் அவருடைய யோகப் பயிற்சி பற்றி நான் நினைத்த போது, 'உபநிஷத்தில் அதே கண்ணோட்டத்தை பற்றி கூறப்பட்டுள்ளது' எனக்கு விடையாகக் கிடைத்தது.

என் இருபத்தி எட்டாம் வயதில் நான் 'பிருக்த ரஹித தாரக ராஜயோகா' முறையில் சேர்ந்து அற்புதமான அனுபவங்களைப் பெற்ற போது சாஸ்திரியார், தனது ஆழ்ந்த தியான நிலையில் ஒளி

வீசிக்கொண்டிருந்தார். நான் எங்கள் ஊருக்குச் செல்ல நேர்ந்தபோது, சல்லபள்ளிக்குப் போவேன். அவர் எங்கள் கிராமமான பெத்தகள்ளேபள்ளிக்கு 'தன் மாப்பிள்ளையையும் பெண்ணையும் பார்க்க வருவார். அப்போதெல்லாம் நான் போய் அவரைச் சந்தித்து நான் பெற்ற அனுபவங்களைக் கூறுவேன். அவர் மிகுந்த ஆர்வத்துடன், என்னுடன் ஒருதரமாவது கும்பகோணம் சென்று மாஸ்டர் ஸி.வி.வி.யுடன் பேசி அதனால் பயனடைய விரும்புவதாகக் கூறுவார். எனக்கும், அவருக்கு இந்த யோக முறையுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் அது நடக்கவில்லை.

எனக்கு முப்பத்தி எட்டாவது வயது ஆனபோது அவர் தன் பூத உடலை நீத்தார். அதன் பின் நான் தியானம் புரிகையில் அவரும், என் தந்தையும் என் மாமனாரும் என்னோடு தியானத்தில் சேர்ந்து கொள்வதாக உணர்வேன். நான் தியானம் புரியும்போது எனக்குக் கிடைக்கும் அனுபவம் அந்த மூவருக்கும் கிடைக்க வேண்டும் என்று தியானிப்பேன். அந்த நினைப்பே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்.

8

வேங்கடசாஸ்திரியாரிடம் கல்வி கற்றது

சோமநாத சாஸ்திரியார் நல்ல ஆசிரியர். நானோ அவரிடம் என்னைப் போன்று படித்தவர்களோ அவரைவிட்டுப் பிரியும் நோக்கத்துடன் இல்லை. ஆனால் பந்தரில் (மசூலிப்பட்டினம்) தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளியில் புதிய தெலுங்கு பண்டிட்டாகச் சேர்ந்த செள்ளபிள்ள வேங்கடசாஸ்திரியாரின்[11] புகழ் சுற்றுப்புறங்களில் எல்லாம் பரவி இருந்தது. அவருடைய அபாரமான கல்வியறிவும், புலமையும் மக்களை பிரமிக்க வைத்தது. ஆகவே அவரிடம் கல்வி கற்க நானும் வேறு மூன்று பேரும் ஆர்வம் கொண்டோம். என் சகாக்களான அவ்வாரி சுப்ரமணிய சாஸ்திரியும், பிஸிபாடி வேங்கடராம சாஸ்திரியும் முதலில் அவரை நாடிச்சென்றனர். எல்லாம் நல்லபடியாக அமைந்தால் என்னையும் அழைப்பதாக உறுதி கூறினார். நான் சம்மதித்தேன். சில நாட்களுக்குப்பின் நான் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். அப்பொழுது என் வயது அநேகமாக 16 இருக்கும். தெலுங்கில் எனக்கு ஏதாவது ஞானம் இருக்கிறதென்றால் அதன் பெருமை வெங்கட சாஸ்திரியார் என்ற மேதைக்குத்தான் போக வேண்டும். நான் அவரிடம் முறையாக கற்றுக்கொண்டதை விட அவர் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் மூலம்தான் அதிகம் தெரிந்து கொண்டேன். ஆன்மீக வழிகாட்டுதலைப் பொறுத்தவரை, நான் பந்தரில் இருந்த வரையிலே, அல்லது சாஸ்திரியாரிடம் எனக்கிருந்த தொடர்பினாலோ நான் எந்த ஊக்கமும் பெறவில்லை என ஒப்புக்கொள்கிறேன். அவரிடம் பயின்றது 'அவதான வித்யாவில் இலக்கிய ஆற்றல், கவிதைகள் இயற்றுவதிலும், பேச்சிலும் திறமை, யாப்பிலக்கணம், தர்க்கங்கள், அறிவினால் உண்டாகும் அகந்தை' ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள எங்களுக்கு உதவியது. ஆனால் உள்நோக்கியதான ஆன்மீகத்தேடல் அநேகமாக மறைந்தது. வேங்கட சாஸ்திரியார் வெளிப்படையான தன்மையும் சூதுவாதற்ற உள்ளமும் படைத்தவர். பந்தருக்கு வருவதற்கு முன் வாழ்க்கையைப்பற்றி அவருடைய கண்ணோட்டம், பயணங்கள், பண்டிதர்களுடன் பழகுதல் இவற்றில் இன்பம் காணுவதாகவே இருந்தது.

அவர் எங்களிடம் தனது இப்படிப்பட்ட அனுபவங்களையும்[12] தான் அரசவையில் பிரவேசித்ததையும் பற்றி விளக்குவார். அத்தோடு நில்லாமல் இன்னும் ஒருபடி மேலே போய், பண்டிதர்களுடன் பழகுதல், அரசவைப்பிரவேசம். இவற்றுக்கிடையில் தான் பெற்ற இன்ப அனுபவங்களையும் பற்றி எவ்வித தயக்கமும் இன்றி விவரிப்பார். எனக்கு அப்போது வயது 16. அவர் தயக்கமின்றி அந்த நேரங்களில் விளையாட்டாகச் சொல்லும் அசிங்கமான கிண்டல்களைக் கேட்க எனக்கு கூச்சமாகவும், சங்கடமாகவும் இருக்கும். அதுமட்டுமன்றி பண்டிதர்களுடன் பழகுதல் அரசரவைப் பிரவேசம் இவைகளின் இடையில் தன்னுடைய “சாதுர்யம் மூலம்” என்ற விவகாரங்களைப் பற்றி ஒளிவு மறைவின்றி விளக்குவார். அவைகளைக் கேட்டு வெட்கத்துடன் தலைகுனிந்து இருப்பேன்.

அந்த காலகட்டத்தில் என் மூத்த சகோதரருக்கு திருமணம் நடந்தது. ஸ்ரீ லங்கா நாகேஸ்வர சாஸ்திரி, திவி தாலுக்கா சோடவரம் கிராமத்தைச் சேர்ந்தவர். அக்கல்யாணத்தை நடத்தி வைத்த அவர், என் தந்தையின் சகோதரரின் மைந்துனரும் ஆவார். எனக்கு மாமா முறை. அவருக்கு என் மீது மிகுந்த அன்பு உண்டு. அவர் மனைவியை இழந்தவர். குழந்தைகளும் இல்லை. கல்வியில் நாட்டம் கொண்டிருந்த அவர் சிற்றின்பப்பிரியராகவும் இருந்தார். என் சகோதரரின் திருமணத்திற்குப் பிறகு அவர் ஒரு சிறுவனை தத்தெடுத்துக்கொண்டு அவனுக்கு உபநயனத்தையும் செய்து வைத்தார். என் சகோதரர் திருமணத்தின் போதும், உபநயனத்தின் போதும் அவர் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்தார். காலை, மாலை, இரவு என மூன்று வேளைகளிலும் அவை கோலாகலமாக நடந்தன. அதிகாரிகள் உட்பட பலர் அவற்றில் கலந்து கொண்டனர். உபநயனத்தின் பிறகு அந்த மாமா என்னை வற்புறுத்தி அவரிடத்தில் தங்கவைத்தார். நாட்டியம் ஆடிய பெண்களுடன் பேசிக் கொண்டிருந்த அவர் என்னிடம் சமஸ்கிருதத்தில் உள்ள காதம்பரி போன்ற காவியத்தின் கதைகளை, நாடகங்களை சொல்லுமாறு கூறினார். நானும் அதன்படியே சொன்னேன். ஆனால் அதேமாதிரி எவ்வளவு நாட்களுக்கு என்னால் அங்கிருக்க முடியும்? பத்து நாட்களுக்கு பிறகு நான் வீடு திரும்பினேன். அந்த நாட்டிய நங்கையரின் தனித்துப் பழகும்

குணமும், விளையாட்டான சீண்டல்களும், நான் கதை சொல்லும் போது நிகழ்ந்த கோமாளியின் (அவர் ஒரு படித்த வயதான பிராமணர்) விகடமும், ஒவ்வொரு ஆண்டின் கோடை காலத்தில் நான் அவர்கள் ஊருக்கு வந்து அவசியம் தங்க வேண்டும் (வெங்கட சாஸ்திரியார் விடுமுறை காரணமாக விரைவில் மசூலிப்பட்டினத்தை விட்டு செல்லப் போகிறார் என்பதால்) என்ற என் மாமாவின் அன்புக்கட்டளையும் என்னைக்கவர்ந்து விட்டன என்றே சொல்லலாம். ஆனாலும், எங்கள் கிராமத்தை விட்டுச் பந்தருக்கு சென்று ஒவ்வொரு நாளும் முறை வைத்து வெவ்வேறு வீடுகளில் சாப்பிட வேண்டும் என்ற ஏற்பாடு எனக்கு வெறுப்பை ஊட்டியது. எங்கள் ஊரிலிருந்து சில மைல்கள் தொலைவில் இருந்த பந்தருக்கு நான் நடந்தே கூடப் போயிருக்கிறேன். எனினும் அது எனக்கு சிரமமாகவே இருந்தது. இரண்டு மூன்று பர்லாங் நடப்பதைக்கூட நான் கஷ்டமாகவே நினைக்கத் தொடங்கி இருந்தேன். பல நேரங்களில் 'திரும்பிப் போய்விடுவோம்' என்று கூட தோன்றும். சில இடங்களில் சகதியாகவும் இருந்ததால் எனக்கு ஆத்திரம் கூட வருவது உண்டு. வீரேசலிங்கம்[13] பந்துலு நாட்டிய நங்கைகளைப்பற்றி எழுதி இருப்பதும், பேசி இருப்பதும் என் நினைவில் எழும். 'அவர்களுடைய நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்திற்கு போகக்கூடாது' என்று நான் சபதம் எடுத்துக்கொண்டேன். அது 1904ஆம் வருஷம். அதிலிருந்து நாட்டிய நங்கையரின் நிகழ்ச்சி எதையுமே நான் போய்ப்பார்த்ததாக நினைவில் இல்லை.

நான் பந்தரில் படித்துக்கொண்டிருந்தபோது, நான் கொண்டா வெங்கடப்பய்யா[14] அல்லது வல்லூரி சூர்யநாராயண ராவ்[15] ஆகியோர் வீட்டில் தங்குவேன். அந்நாட்களில் அவர்கள் என் மீது மிகுந்த அன்பு செலுத்துவார்கள். சூர்யநாராயணராவ் இருந்தவரை என் நலத்தைப்பற்றியும் விசாரித்துக்கொண்டே இருப்பார். முக்கியமாக அவர் தூண்டுதலின் பேரில்தான் நான் சென்னைக்கு வந்தேன். அப்பொழுது என் வயது 18. அவர் 'ரெண்டால' சுப்பாராவுக்கு[16] 'என்னை அறிமுகப்படுத்தும்' ஒரு கடிதம் கொடுத்தார்.

9

வால் நட்சத்திரம் தெரிந்தது

சென்னையில் என் மைத்துனர் காஜா வெங்கடசேஷய்யா, வேபா ராமேசம்[17] என்ற பிரமுகரிடம் குமாஸ்தாவாக இருந்தார். நான் அவருடைய உதவியோடு சென்னையில் தங்கினேன். சென்னையில் பண்டித கோபாலாச்சார்யலுவும்[18] புராணம் நாகபூஷணமும்[19] எனக்கு நண்பர்களாயினர். கோபாலாச்சார்யுலுவின் மூலமாக பனப்பாக்கம் அனந்தாச்சார்லு[20] அவரது புதல்வர் ஸ்ரீநிவாஸாச்சார்லு ஆகியோரின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. சென்னைக்கு வந்ததும் நான் வெஸ்லி மிஷன் உயர்நிலைப்பள்ளியில் தெலுங்கு பண்டிட்டாகச் சேர்ந்தேன். அங்கு இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தேன். அந்தக்கால கட்டத்தில் நான் கீழ்த்திசை மொழிகள் கை எழுத்துப் பிரதிகள் நூலகத்திற்கு அடிக்கடி சென்று அங்குள்ள புத்தகங்களை படித்து வருவேன்.

பலமுறை வேபா ராமேசம் அவர்களுடன் இலக்கியம் பற்றிய சம்பாஷணைகளில் ஈடுபட்டு பொழுது போக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அவர் மிகவும் கற்றறிந்தவர். கணிதம், வானியல், வரலாறு மற்றும் பல துறைகளில் ஆழ்ந்த ஞானம் உடையவர். அவரிடமிருந்து வானசாஸ்திர நுட்பங்கள் பலவற்றை நான் கற்றேன். அவரிடம் ஒரு டெலிஸ்கோப் இருந்தது. ஒரு சமயம் அவரது மனைவியார் மகப்பேற்றிற்காக தன் பெற்றோரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அந்த நாட்களின்போது இரவில் ராமேசம் அவர்களுடன் சேர்ந்து டெலிஸ்கோப் வழியே வானத்தை ஆராய்ந்து நட்சத்திர மண்டலங்களில் தெரியும் அதிசயங்களை கண்டு வியப்பெய்துவேன். அவர் எனக்கு வானியல் பற்றிய பல தகவல்களை சுவையாக விவரித்துச் சொல்லுவார். அவரிடம் 'எபிக்ராபிகா இண்டிகா' 'தி இண்டியன் ஆண்டிக்வரி' 'எபிக்ராபிகல் ரிப்போர்ட்ஸ்' போன்ற பல அரிய நூல்கள் இருந்தன. நான் அவற்றை இரவல் வாங்கிச் சென்று படிப்பேன்.

1910ஆம் ஆண்டு அடிவானத்தில் “ஹேலியின் வால் நட்சத்திரம்” தெரிந்தது. அது வெறும் கண்களுக்கு தெரிவதற்கு சில நாட்களுக்கு

முன்பு, நாங்கள் இருவரும் டெலிஸ்கோப், பைனாகுலர்கள் உதவியுடன் அதிகாலை வேளையில் ஆகாயத்தை ஆராய்வோம். அந்த வால்நட்சத்திரம் முதலில் சூரியோதயத்தின் போது கீழ்த்திசை அடிவானத்தில் புலனாயிற்று. ஆனால் சூரியகிரணங்களின் ஒளி அதிகமாக ஆக, கண்களுக்கு தெரியாமல் மறைந்தது. ஒரு நாள் நான் பைனாகுலருடன் மாடியிலிருந்து கீழே இறங்கி தெருவில் நடந்து செல்கையில் வானத்தைப் பார்த்தேன். ஆகாயத்தில் ஒரு ஒளி வீசும் துடைப்பத்தைப் போல் அந்த வால் நட்சத்திரம் தெரிவதைக்கண்டேன். சூரிய கிரணங்கள் அதிக பிரகாசத்துடன் பரவத்தொடங்குமுன் அதை ஸ்ரீராமேசத்துக்கு காட்டி விட வேண்டும் என்று எண்ணி மீண்டும் அவர் வீட்டுக்கு ஓடினேன். அவசரத்தில் மாடிப்படிகளில் அடிபட்டு, ரத்தம் கசிந்தது. நான் அதைப் கவனிக்கவே இல்லை. மேலே சென்று டெலிஸ்கோப்பை வானை நோக்கி திருப்பியவாறே ஸ்ரீராமேசத்தை அழைத்தேன். விரைந்து வந்த அவர் என் காலில் ரத்தத்தைப் பார்த்துவிட்டு 'அதென்ன?' என விசாரித்தார். அப்பொழுதுதான், நான் காலில்பட்ட காயத்தை கவனித்தேன். அதே நேரம் டெலிஸ்கோப்பில் வால்நட்சத்திரம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் ஸ்ரீராமேசும் அதைத் தெளிவாகப் பார்ப்பதற்குமுன், சூர்யனின் பிரகாசமான ஒளியில் வால் நட்சத்திரம் மங்கி விட்டது. ஸ்ரீராமேசம் என் பரபரப்பைக்கண்டு ஆச்சரியப்பட்டார்.

மறுநாள் அதிகாலையிலேயே மீண்டும் அவர் வீட்டுமாடிக்குச் சென்று டெலிஸ்கோப் வழியே வானத்தை ஆராயும் போது, முதல் நாள் தெரிந்த அதே இடத்திலேயே வால்நட்சத்திரம் நன்றாகத் தெரிந்தது. ராமேசத்துக்கு நான் அதைக்காட்டினேன். அவரும் மிகத் தெளிவாக அதைப் பார்த்தார். உடனேயே அது பற்றிய விபரமான ஒரு கட்டுரையை 'தி ஹிந்து' (ஆங்கில நாளேடு)வுக்காக எழுதினார். மறுநாள் அதைப்பற்றி மேலும் சில விவரங்களைக்கேட்டு அவருக்குத் தந்திகள் வந்தன. அதற்குப்பின் நான்கைந்து நாட்கள் ஆன பிறகு அந்த வால் நட்சத்திரம் அனைவரது கண்களுக்குமே தெரியத்தொடங்கியது.

தென்இந்தியாவில் ஹேலியின் வால் நட்சத்திரத்தை முதல் முதலாகப் பார்த்தது நான் தான். சமீபத்தில்தான் அப்படி அந்த வால்

நட்சத்திரத்தை முதல் முதலாக நான் பார்க்க நேர்ந்ததற்கு ஏதோ முக்கியத்துவம் இருக்க வேண்டும் என்று ஓர் எண்ணம் எனக்குள்[21] தோன்றியது. ஆகவேதான் அந்த விஷயத்தைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறேன். அதன் முக்கியத்துவம் பின்னால் தெரியவரும்.

10

பிரம்மச்சர்யமும் திருமண நிலையும்

நான் கெல்லட் உயர்நிலைப்பள்ளியில் தெலுங்கு பண்டிட்டாக இரு ஆண்டுகள் இருந்தேன். அப்போது எனக்கு திருமணம் நிச்சயமாயிற்று. என் பெற்றோர்கள் நான் ஊர் திரும்ப வேண்டுமென்று விரும்பினர். வழக்கமாக ஊருக்குச் செல்லும் வழியில் நான் மசூலிப்பட்டணத்தில் இறங்கி வல்லூரி சூர்ய நாராயண ராவின் வீட்டுக்குச் செல்வேன். இப்பொழுது பள்ளிக்கூடங்களுக்கு கோடை கால விடுமுறையில் போனேன். நான் சென்னைக்குச் செல்லுமுன்பாக சூரிய நாராயண ராவ் "அடிக்கடி ஊருக்குத் திரும்ப வேண்டாம், சீக்கிரமாகவே திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்வில் இறங்க வேண்டாம்" என்று எனக்கு அறிவுரை கூறியிருந்தார். "நேரம் கிடைக்கும்போது, 'கீழ்த்திசை மொழிகள் நூலகம்' சென்று புத்தகங்கள் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்" எனவும் ஆலோசனைகள் சொன்னார். ஐரோப்பாவில் பல பெரிய மனிதர்கள் திருமணம் ஆகாமலே வாழ்நாள் முழுதும் இருந்திருக்கிறார்கள் என்றும் அப்படி இருந்ததன் மூலம் அறிவை வளர்த்துக் கொண்டு, செல்வத்தையும் சேர்த்து அவற்றை சமுதாய நலனுக்காகச் செலவிட்டனர் என்றும் எடுத்துச் சொல்லி இருந்தார். 'சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்காகவே சிலராவது திருமணம் செய்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும்' என்று அவர் வலியுறுத்துவார். வழக்கம் போல இப்போதும் அவரைப் பார்க்கச் சென்றேன்.

நான் சென்னையிலிருந்து ஊருக்குத் திரும்புவது அவருக்கு அதிருப்தியைக் கொடுத்தது. கிணற்றடியில் நன்றாக குளித்த பிறகு இருவரும் சாப்பிட உட்கார்ந்தோம். எங்களுக்கு வேர்த்துக்கொட்டிக் கொண்டிருந்தது. அவருடைய தர்மபத்தினி பார்வதம்மா எங்கள் இருவருக்கும் கைவிசிறியால் வீசிக் கொண்டிருந்தார். அதனால் கசகசப்பான வியர்வை நீங்கி இதமாக இருந்தது. அடுத்த வேளை

உணவின் போது சூர்ய நாராயணராவ், நான் ஊர் திரும்புவதைப்பற்றி மறுபடியும் பேசினார்.

“நீ ஊருக்குத் திரும்பாமல் சென்னையிலேயே இருக்க வேண்டும் என்று சொன்னேனா இல்லையா? இப்போது ஏன் வந்திருக்கிறாய்? கல்யாணப் பேச்சுவார்த்தை நடக்கிறதா? கல்யாணம் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டாதே என்று நான் சொன்னேனா இல்லையா? ஐரோப்பாவில் பலர் சமுதாய நலனுக்காக அறிவை வளர்த்துக் கொண்டு செல்வத்தையும் சேர்த்துக் கொண்ட பிறகே உரிய வயதில் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி இருக்கிறேனா இல்லையா? கல்யாணம் செய்து கொண்டு ஒரு இளம்பெண்ணையும் வறுமையில் தள்ள வேண்டுமா? அறிவையும் செல்வத்தையும் விருத்தி செய்துகொண்டு, பெற்றோரை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளும் நிலைமை வந்தபிறகே ஒருவன் கல்யாணம் செய்து கொள்வது பற்றி யோசிக்க வேண்டும். இப்பொழுது கல்யாணங்கள் எல்லாம் எப்படி நடக்கின்றன? கல்வியறிவில்லாத இளம் பெண்களை மணந்து கொண்டு ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷத்திற்கொரு முறை குழந்தைகளை பெற்றுக் கொண்டு, வசதியில்லாத வீடுகளில் குழந்தைகளைக் கவனிக்க இயலாமலும், நல்ல சம்பாத்தியம் இல்லாமலும் அலுப்புத் தரும் வாழ்க்கையில் உழலத்தான் வேண்டுமா? நீயும் அப்படிப்பட்டவர்களின் வரிசையில் சேர்ந்து திண்டாடத் தான் போகிறாயா?” இப்படி அடுக்கிக் கொண்டே போய் அவர் என்னைப் பலவிதமாகக் கண்டித்துக் கொண்டிருந்தார். ஒரு கவளம் சாப்பாடு கூட உள்ளே இறங்காமல், நான் தலை குனிந்து வெட்கத்தால் குறுகியவாறு பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

அந்த சமயத்தில் அவரது மனைவியார் பார்வதம்மா குறுக்கிட்டார். “தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். ஐரோப்பாவில் இருக்கும் பிரம்மச்சர்யத்தைப் பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லது. நீங்கள் இவரிடம் 'நன்றாகச் சம்பாதித்தபின் பக்குவமான வயதில் கல்யாணம் செய்து கொள்' என்கிறீர்கள். பிரிட்டிஷ்காரர்கள் நமது செல்வத்தையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு சென்றிருப்பதால் அவர்களால் தேவையான

அளவு பணத்தையும் போதுமான அறிவையும் சேர்த்துக் கொள்ள முடிகிறது. ஊசி முதல் துணிமணிகள் வரை அவர்கள் உற்பத்தி செய்து நம்மிடம் விற்றுக்கொண்டிருப்பதால், நமது பணம் அவர்களுக்குப் போய்க் கொண்டே இருக்கிறது. அதனால் தங்கள் சமுதாயத்திற்கு அவர்களால் நன்மை செய்ய முடிகிறது. அப்படிப்பணம் சேர்க்க நமக்கு என்ன சந்தர்ப்பங்கள் இருக்கின்றன? பக்குவமான வயதில் கல்யாணம் செய்து கொள்வது ஐரோப்பாவில் உள்ளவர்களுக்கு சரியாக இருக்கலாம். ஆனால் நம் நாட்டவர்களுக்கு அது பொருந்தாது. ஆண்கள் ஐம்பது, அறுபது வரை பிரம்மச்சாரிகளாக இருப்பதும், பெண்கள் முப்பது நாற்பது வயது வரை கன்னிகளாகவே இருப்பதும் அந்த நாடுகளில் சகஜமாக இருக்கலாம். ஆனால் நமது நம்பிக்கைகளுக்கு அது சரிப்பட்டு வராது. நம் நாட்டு ஜனங்களுக்கு அந்த வயது எல்லாம் அதிகம். ஒருவர் பணம் சம்பாதிக்க முடியும். ஆனால் வயது அதிகமான பிறகு கல்யாணம் செய்து கொள்வது வெள்ளம் வடிந்த பின் நீரைத் தேக்கி வைக்கச் செய்யும் முயற்சி போன்றது தான்''.

''உயர்படிப்புப் படித்த பெண்களைக் கல்யாணம் செய்து கொண்ட கணவர்கள் படும்பாட்டை நீங்கள் கேட்டிருக்கிறீர்களே! ஹைதராபாத்தில் பிரசித்தி பெற்ற ஒரு டாக்டர், அதிகம் படித்த ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டாரே! அந்தப் பெண், அடிக்கடி வெளிநாடுகள் போய் மாதக்கணக்கில், ஏன், வருஷக்கணக்கில் கூடத் தங்கிவிடுகிறாளாம். அவர் சம்பாதிப்பதெல்லாம் அவளுடைய பயணத்திற்கான செலவுக்கே சரியாகப் போகிறதாம். அவருடைய பங்களாவில் சுவர்களெல்லாம் பாழாகிக்கிடக்கின்றன. படங்களில் தூசி, அழுக்கு! துடைத்து வைக்கக் கூட முடியவில்லையாம். 'என் கல்யாண வாழ்க்கையில் சுகமே இல்லாமல் போய்விட்டது என்று அந்த டாக்டர் தன் கஷ்டத்தை எல்லாம் ஒரு நண்பரிடம் சொல்லி அழவில்லையா! உங்களுக்கும் தெரிந்த அந்த நண்பர் சமீபத்தில் அதை உங்களிடம் விரிவாக எடுத்துச் சொன்னாரே!''

''சூரிய உஷ்ணத்திற்குத் தகுந்தபடி தான் நிழல் இருக்கும் என்பது பழமொழி. அது மாதிரிதான் இதுவும். தன்னைவிடப் படித்த பெண்ணை

கல்யாணம் செய்து கொள்ளும் ஒருவன் பலவிதங்களிலும் கஷ்டம்தான் பட வேண்டும். அதனால் ஒரு சௌகர்யமும் இல்லை.”

“இன்னும் கவனியுங்கள். தனக்குச் சமமான ஒரு பெண்ணை மணந்து கொண்ட ஒரு சாலைப் பணியாள் நாள் முழுதும் வேலை பார்த்துவிட்டு மாலையானதும் அவர்கள் வசிக்கும் மரத்தடிக்குச் செல்கிறான். அவள் மூன்று கல் வைத்து அடுப்பில் அவனுக்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கிறாள். அவன் குளிக்கும் போது முதுகு தடவிக் கொடுக்கிறாள். பிறகு அவள் கொடுத்த கஞ்சியை அவன் மகிழ்ச்சியுடன் குடிக்கிறான். பிறகு மரத்தில் கட்டிய தூளியில் குழந்தையைப் படுக்கவைத்து இருவரும் தாலாட்டுகிறார்கள். இதையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம்! அவர்கள் நடத்தும் வாழ்க்கையில் ஒர அந்யோந்யம் தெரியவில்லையா? தனியாளாக இருந்த நீங்கள் என்னை மணந்து கொண்டீர்கள். பிறகு குடும்பம் பெருகியது. நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள். அதை மறந்து விட்டீர்களா? நான் சமைத்துப் பரிமாறுவதை நீங்கள் திருப்தியாகச் சாப்பிடுகிறீர்களா இல்லையா? சமைப்பதற்கு ஆள் வைத்துக் கொள்ளாமல் இருப்பதில் சில அசௌகர்யங்கள் இல்லாமல் இல்லை. நான் பார்த்துப் பார்த்து காய்கறிகள் வாங்கி உங்கள் வாய்க்கு ருசியாக சமையல் செய்வதை சாப்பிட்டு நீங்கள் ஆரோக்கியமாகத்தானே இருக்கிறீர்கள்! நீங்கள் கோர்ட் வேலையிலிருந்து அலுப்பாக வீட்டுக்குத் திரும்பும் போது மகிழ்ச்சி கொள்கிறீர்களா இல்லையா? இது எல்லாம் போகட்டும். இந்தப் புழுக்கத்தில் நீங்கள் நிம்மதியாகச் சாப்பிட முடிகிறது, நான் விசிறியால் வீசி விடுவதால் தானே! இன்றைக்கு சமைத்தது சமையலாள் தான். ஆனால் கறிகாய்களை எல்லாம் நான்தான் பொறுக்கி வாங்கி வந்து நறுக்கிக் கொடுத்தேன். நான்தானே உங்களுக்கு பிடித்தமான பக்குவத்தில் சமைக்கச் சொல்கிறேன். சாஸ்திரியாருடன் உங்களுக்குப் பழக்கம் ஏற்பட்டு அவர் அடிக்கடி இங்கே வருவதால் நான் தெலுங்கு, சமஸ்கிருதம் இரண்டையும் அதிகம் படிக்க வாய்ப்பு கிடைத்தது. அதனால் மஹாபாரதம் மாதிரி புஸ்தகங்கள்

கிடைத்தன. நன்னய்யாவின் "நளோபாக்யானத்திலிருந்து சில வரிகளைச் சொல்கிறேன் கேளுங்கள்."

'பெரிய துக்கத்தினாலோ வியாதியாலோ பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு மனைவிதான் அருமருந்து. மனைவியுடன் கூட இருக்கும் ஒரு மனிதனுக்கு எவ்வளவு பெரிய கஷ்டம் எதிர்ப்பட்டாலும் அது சிரமமானதாகத் தெரியாது.'களைத்துப் போனாலோ, மனச் சோர்வு ஏற்பட்டாலோ, பசி, தாகம் வந்தாலோ ஏ மன்னவனே! ஒரு மனிதனுக்கு மனைவியானவள், ஆறுதல் தருபவளாக இருக்கிறாள்'.

இவைதான் அந்த வரிகள்" இப்படிப் பார்வதம்மா, பேசி முடித்ததும் என்னால் சரியாகச் சாப்பிட முடிந்தது. பேச்சற்றுப் போனார் சூரிய நாராயண ராவ். பிறகு "நீ வீட்டுக்குப் போ. எந்த தயக்கமும் இல்லாமல் கல்யாணம் செய்து கொள். உன்னைப்பார்த்தால் நீ அதற்காகவே வீட்டுக்குப் போகிறாய் என்று தெரிகிறது. சந்தோஷமாகப் போய் வா. ஆமென்" என்றார் வாய்திறந்து!

11

திருமணம்

எனக்கு 22 வயதில் திருமணம் நடந்தது. என் மனைவியின் பெற்றோர் எங்கள் கிராமத்திலிருந்து ஆறு மைல்கள் தொலைவில் இருந்த கண்டசாலாவில் இருந்தனர். அந்த ஊரில் தான் என் தாய் மாமனும் இருந்தார். அவருடைய பெயர் பிஸிபாடி வெங்கடாத்ரி. இப்போது வயது 90க்கு மேல் ஆனாலும் திடகாத்திரமாக இருக்கிறார். அவருக்கு ஏழு பிள்ளைகள். பெண்கள் இல்லை. எங்கள் குடும்பத்தில் அவர் பெண் கொடுக்க முடியாது என்பதால், தன் மைத்துனர் அதாவது என் மாமனாரிடம், அவர் மகளை எனக்குக் கொடுக்குமாறு வற்புறுத்தினார். 2 ஆண்டுகளுக்கு முன் காலமான என் மாமனாரின் மகன், நான் சோமநாத சாஸ்திரி மற்றும் வெங்கட சாஸ்திரியிடம் படித்தபோது என் சகமாணவன். என் மாமனார், எங்களிடம் போதுமான அளவு நிலங்கள் சொத்தாக இல்லாததால் எங்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்ள முதலில் தயங்கினார் என்றாலும் அவரது பிள்ளை என்னைப்பற்றி நல்ல விதமாக சொல்லியிருந்ததாலும், என் தாய்மாமன் இந்த சம்பந்தத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டதாலும் அதற்கு கடைசியில் சம்மதம் தெரிவித்தார். அவர் மிகவும் எளிமையானவர் என்பதோடு என் தந்தையைப் போலவே பெரியதொரு குடும்பத்தை பராமரிக்க வேண்டியவராகவும் இருந்தார்.

திருமணம் நடைபெற்றது. நான் அதை மிகவும் விரும்பினேன். காரணம் என் மனைவி என் தாயாரின் ஊரைச் சேர்ந்தவள் என்பதோடு அவரது குடும்பப்பெயரையும் வைத்திருந்தாள் என்பதுதான். திருமணமான உடனேயே நான் சென்னைக்கு வந்துவிட்டேன். மயிலாப்பூரில் இருப்பிடம். வேலை திருவல்லிகேணியில். காலை 9 மணிக்கு மயிலையில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு திருவல்லிக்கேணி பள்ளிக்கூடத்திற்கு நடந்தே போவேன். அதேபோல

பணி முடிந்ததும் மயிலாப்பூருக்கு திரும்ப நடந்தே வந்து அதே ஹோட்டலில் இரவு சாப்பாட்டையும் முடித்துக்கொள்வேன். அது தான் என் தினசரி வழக்கமாக இருந்தது. ஒரு வேளை ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கொள்ளவில்லையோ என்னவோ நான் பலவீனமாகவும் எப்போதும் களைப்புடனேயும் இருந்தேன். அதனால் வேறு எந்த தொந்தரவும் இல்லை. ஆனால் விடுமுறைகளின் போது கிருஷ்ணா ஜில்லாவில் இருந்த எங்கள் ஊருக்குப் போய் இருக்கும்போது நன்றாக சாப்பிட்டு உடல் திடத்துடன் இருப்பேன். என் எடையும் கூடிவிடும். பால், நெய், தயிர் போன்ற ஆரோக்கியமான பொருள்களுடன் கூடிய சாப்பாடு தான் அதற்குக்காரணம். குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒருமுறையாவது சொந்த ஊருக்கு சென்று விட்டு திரும்பும் போது உடல் திடத்துடனும் ஊக்கத்துடனும் இருப்பேன். ஆனால் சென்னைக்கு வந்ததும் படிப்படியாக அவற்றை இழப்பேன். அதே போன்றுதான் எனக்குத் திருமணமான பின் வந்த கோடை விடுமுறையில் நான் எங்கள் ஊருக்குச் சென்றேன்.

12

வாகன விபத்து

எங்கள் கிராமத்திலிருந்து ஆறுமைல் தொலைவில் 'அவனிகட்டா' என்ற ஊர் இருந்தது. அது தாலுகா தலைநகரம். என் மூத்த சகோதரர் அங்கே போஸ்ட் மாஸ்டராக இருந்தார். ஒரு முறை என் சகோதரர் குடும்பத்தைப்பார்த்துவிட்டு வர வேண்டுமென்று அங்கே போனேன். திரும்பும்போது எங்கள் கிராமத்தைச் சேர்ந்த யடவல்லி அப்பா அவதானுலு என்ற முதியவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் வேதங்கள், சாஸ்திரங்கள் கற்ற பண்டிதர். அவரும் 'அவனிகட்டா'விலிருந்து எங்கள் கிராமத்திற்கு ஒரு மாட்டு வண்டியில் வந்து கொண்டிருந்தார். அவருடைய மிக வயதான மாமியாரும் அந்த வண்டியில் இருந்தார். பண்டிதர் என்னையும் தங்களுடன் வண்டியில் வருமாறு சொல்லி அழைத்தார். என் மீது அவர் மிக்க அன்பு கொண்டவர். ஆகவே நான் மறுக்காமல் அவர் சொற்படி வண்டியில் ஏறிக்கொண்டேன் வழியில் கீழ்த்திசை மொழிகள் நூலகத்தில் நான் படித்த கை எழுத்துச் சுவடிகளைப் பற்றி சொல்லிக்கொண்டிருந்தேன். வண்டி கரடுமுரடான கிராமப்பாதையில் சுமார் ஒன்றிரண்டு மைல்கள் தூரம் போயிருக்கும்.

எங்கள் கிராமத்திற்கும் அவனிகட்டாவிற்கும் நடுவே கிருஷ்ணா நதி ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும் கோடைகாலத்தில் நீரோட்டம் மிகக்குறைவாகவும் ஆழமில்லாமலும் இருந்த சில இடங்களில் மாட்டுவண்டிகள் நதியைக்கடந்து செல்வது உண்டு. ஆனால் மாட்டு வண்டிகள் கரையிலிருந்து நதியில் ஒரு சரிவு அதிகமான தடத்தில் தான் இறங்க வேண்டி இருக்கும். நாங்கள் வந்த வண்டியும் அந்த இறக்கத்தின் வழியாகத்தான் போக வேண்டி இருந்தது. எங்கள் வண்டியை ஓட்டியவர் எங்களுடைய ஊரைச் சேர்ந்த விவசாயி. இறக்கம் வந்த இடத்தில் வண்டியிலிருந்து இறங்கி சுருட்டுப் பிடிக்கவும், இயற்கை உபாதையைத் தீர்த்துக்கொள்ளவும் வேண்டி கீழே இறங்கினார். அதே சமயம் வண்டி சரிவில் இறங்கிவிட்டது. வண்டிக்காரர் சற்றுத் தள்ளி பாதை ஓரமாக

நின்று கொண்டிருந்தார். வண்டி சரிவில் தானாகச் சென்று கொண்டு இருந்தது. எதிர்பாராதவிதமாக அதன் ஒரு சக்கரம் கழன்று விலகி கீழே உருண்டு சென்றது. அது கழன்றபோது வண்டியில் ஒரு குலுக்கல் ஏற்பட்டது. வண்டியின் பின்பக்கம் உட்கார்ந்திருந்த நான், வண்டி சரிவில் வேகமாக இறங்குவதையும் மாடுகள் தள்ளாடுவதையும் கவனித்தேன். வண்டியின் உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் அதைக்கவனிக்கவில்லை. ஒரு கணம் நான் 'ஏதோ நேரிட்டு விட்டது' என்பதை உணர்ந்தேன். மனதில் 'எல்லாம் முடிந்து விட்டது' என்ற எண்ணம் பளிச்சிட்டது. அது வரைதான் எனக்கு நினைவு இருந்தது. பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. நான் மயக்கமாகிவிட்டேன். சில நிமிஷங்கள்தான் அந்த நிலை. பிறகு நினைவு திரும்பிய போது அவதானுலுஜி வண்டிக்காரனை கோபத்துடனும், கண்ணீர் கலந்த கவலையுடனும் திட்டிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. “ராஸ்கல், லட்சம் ரூபாய்க்கு மேல்மதிப்புள்ள ஒருவரை கொன்று விட்டாயே” என்று அவர் இரைந்ததைக்கேட்ட நான் அவசரமாக “நான்உயிருடன் தான் இருக்கிறேன் ஐயா! பயப்படவேண்டாம்” என்று குரல் கொடுத்தேன். அவதானுலுஜி என் எதிரில் சிறு காயம் கூட இல்லாமல் நின்று கொண்டிருந்தார். எனக்கு நினைவு வந்து விட்டதாலும் அவதானுலுஜி அடி ஏதும் படாமல் இருப்பதையும் கண்டு நான் மிக திருப்தி அடைந்தேன். “சோமிதேவம்மா (அவரது மாமியார் பெயர்) எப்படி இருக்கிறார் ஐயா?” என நான் வினவியவுடன் “எனக்கு ஒன்றுமில்லை. உயிரோடு தான் இருக்கிறேன் கண்ணே” என்று சொன்னவாறே என் எதிரில் வந்த அவர் என் கையைப் பார்த்துவிட்டு “உன் கைக்கு என்ன ஆயிற்று?” என்று பதட்டத்துடன் கேட்டார். அதன் பிறகே நான் என் கையைப் பார்த்தேன். அது வரை எனக்கு நோவு தெரியவில்லை. என் வலது தோள்பட்டை விலகிவிட்டது. அதை உணர்ந்ததும் நான் வேதனை அடைந்தேன். ஒரு குமட்டல் ஏற்படும் அனுபவம் அது. என் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற நினைப்பில் இருந்த நான் அவதானுலுஜியிடம் “ஐயா என் தலைவிதியால் இப்படி ஆகிவிட்டது. என் பெற்றோரிடம் சொல்லி விடுங்கள். வண்டிக்காரனை ஒன்றும் தொந்தரவு செய்ய வேண்டாம். என்

உயிர் போனால் கூட அவனைக்காப்பாற்றுங்கள். எனக்கு தாகமாயிருக்கிறது."தண்ணீர்.. தண்ணீர்.." என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் நினைவிழந்தேன்.

சிறிது நேரத்திற்குப்பிறகு மீண்டும் நினைவு வந்தது. யாரோ என் முகத்தில் தணணீர் தெளித்தார்கள். ஈரத்துணியால் என் முகத்தைத்துடைத்தார்கள். அருகிலிருந்த கொத்தபேடா கிராமத்துப்பிராமணர்கள் எங்களுக்கு தண்ணீரும், மோரும் கொடுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். அதே நேரம் எங்கள் கிராமத்துக் கர்ணம் என் தந்தையின் ஆப்த நண்பருமான கொடாலி வெங்கய்யா தன் மாட்டு வண்டியில் அங்கே வந்தார். அவர் எனக்கு தேறுதலும் ஆறுதலும் சொல்லிவிட்டு, தன் வண்டியில் ஒரு துணையுடன் என்னை அவனிகட்டாவிற்கே அனுப்பிவைத்தார். அங்கு தான் மருத்துவமனை இருந்தது. என் தமையனாரும் அங்கே வசித்தார். கவிழ்ந்த மாட்டு வண்டியை தூக்கி நிறுத்தி, சரி செய்து மற்றவர்களை கள்ளேபள்ளிக்கு பத்திரமாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார் கர்ணம். சரிந்த தோள்பட்டையுடன் நான் பயணம் செய்த வண்டி மெதுவாக அவனிகட்டாவை அடைந்தது.

அன்று இரவு ஆர்.எம்.ஓ (ரெஸிடெண்ட் மெடிகல் ஆஃபீஸர்) ஊரில் இல்லை. கம்பவுண்டர் மட்டும் இருந்தார். இஸ்லாமியரான அவர் என் கையைச் சரிசெய்யும் முயற்சிகளை மேற்கொண்டார். எனக்கு குளோரபார்ம் போன்ற மயக்க மருந்து ஏதும் கொடுக்கப்படவில்லை. எனது வலது தோளின் மீது ஒரு துண்டை மடித்து வைத்து விட்டு அதே போல அக்குளில் இன்னொரு துண்டையும் வைத்து விட்டு ஒருவர் என் தலையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். இன்னொருவர் என் கையைப் பிடித்துப் பலமாக இழுத்தார். எனக்கு வலி தாங்க முடியவில்லை. திமிறிக்கொண்டு கத்தினேன். அவர்கள் என்னை விடுவதாக இல்லை. கெட்டியாகப்பிடித்துக்கொண்டு மறுபடியும் அதே போல் செய்தனர். என் தசைகள் எல்லாம் பிய்த்துக் கொள்ளுவது போல இருந்தும் அவர்கள் தொடர்ந்து அது போலவே செய்து

கொண்டிருந்தபோது 'மடக்'கென்று ஒரு சத்தம் கேட்க, அதைக்கேட்டதும் கம்பவுண்டர் 'என் தோள்பட்டை பழைய நிலைக்கு வந்து விட்டது' என்று சொல்லி விட்டு ஒரு பெரிய கட்டுப் போட்டார். அன்று இரவு கழிந்தது. ஆர்.எம்.ஓ மறுநாள் வந்தார். என் தோள் மிகவும் வீங்கி இருந்தது. ஜுரமும் வந்து விட்டது. அதே நிலையில் நான்கைந்து நாட்கள் இருந்தேன். வீக்கம் சிறிது வடிந்தாலும் தோளை அசைக்க முடியவில்லை. அந்த ஆர்.எம்.ஓ மிகவும் வயதானவர். பதவியிலிருந்தும், வாழ்விலிருந்தும் ஓய்வு பெறும் நிலையில் இருந்தார். வேலைக்கே சிறிதும் லாயக்கற்றவராகவும் காணப்பட்டார். அவரால் என் வலியைக்குறைக்க முடியவில்லை என்பதோடு, அதை அதிகப் படுத்தவும் செய்தார். சிறிது காலம் கழித்து அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதோடு வயிற்றுப்போக்கினால் உலகை விட்டே போயும் விட்டார். பின்னர், நான் எங்கள் கிராமத்திற்குத் திரும்பினேன். அங்கிருந்து பந்தருக்குச் சென்றேன். வல்லூரி சூர்ய நாராயணராவின் துணையோடு மருத்துவமனைக்குப் போய், சர்ஜன் சுப்பய்யரைப் பார்த்தேன். சூர்ய நாராயணராவின் வேண்டுகோளின்படி அவர் எனக்கு சிகிச்சை அளிக்க ஒப்புக்கொண்டார். எனக்கு குளோரஃபார்ம் கொடுத்து என் தோள் பட்டையை நேராக்கி கட்டுப்போட்டார். ஆனால் உடனடியாக 'பணம் பணம்' என்று கேட்கத் தொடங்கினார்.

மேலும் அதிககாலம் கடத்தாமல் நான் சென்னைக்குப் புறப்பட்டேன். டாக்டர் நஞ்சுண்டராவ் எனக்குப் பரிச்சயமானவர். அவர் என் தோளைப் பரிசோதித்துவிட்டு “இனிமேல் டாக்டர்களைப் பார்க்காதே. தோள்பட்டையின் மென்மையான தசைகள் மிகவும் சேதமடைந்துவிட்டன. நெய், தயிரோடு நல்ல சாப்பாடு சாப்பிடு. வெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயால் தினமும் தோள்பட்டையைத் தடவிவிடு. அதை அதிக நேரம் குழாயின் குளிர்ந்த தண்ணீரின் கீழ் வைத்திரு. சிறிது சிறிதாக உன் கை குணமடையும்” என்று அறிவுரை வழங்கினார். நான் சிலகாலம் அவர் கூறியபடி செய்தேன். ஆனாலும் என்னால் வலது கையை, உதவியில்லாமல் உயர்த்தவும், கரும்பலகையில் எதையும் எழுதவும் முடியாமல் இருந்தது.

அந்தக்கையால் ஒரு தண்ணீர் குவளையைத் தூக்கவும் கூட இயலவில்லை. நான் டாக்டரின் அறிவுரையை, தொடர்ந்து பின் பற்றி வந்தேன். ஆனால் நிவாரணம் கிடைத்ததா என்று சொல்ல முடியவில்லை எப்படியோ அந்த இடையூறுக்குப் பழக்கப்பட்டுவிட்டேன். அந்த நிகழ்வு என்னை மிகச் சோர்வடையச் செய்தது. வாழ்க்கையின் மீதே வெறுப்பு ஏற்படவும் தொடங்கியது.

என் குடும்பத்தவர் என்மீது மிகுந்த பரிவு காட்டினர். அவர்கள் அடிக்கடி பகிரங்கமாகவும் மறைமுகவாகவும் “பாவம்! இவன் கல்யாணத்திற்குப் பிறகுதான் இப்படி ஆகி விட்டான். அந்த சம்பந்தம் அவனுக்கு எந்த அதிர்ஷ்டத்தையும் கொண்டு வரவில்லை” என்று சொல்வது எனக்குக்கேட்கும். அதைப் பொறுத்துக்கொள்ள என்னால் முடியவில்லை. நான் “இதெல்லாம் விதி. முன்பே தீர்மானிக்கப்படுவது. நல்ல விஷயங்களைப் பற்றித் தான் நாம் யோசிக்கவேண்டும். முட்டாள்தனமாக சிந்தித்து கவலைகள் படக்கூடாது” என்று அவர்களுக்கு பதில் அளிப்பேன். ஒரு அப்பாவியான பத்துவயதுப் பெண் மீது அனாவஸ்யமாகப் பழிபோடுவதை என்னால் சகித்துக்கொள்ள இயலவில்லை. அந்தப் பத்துவயதுப் பெண்ணின் மீது நான் மிகப் பிரியம் கொண்டிருந்தேன். அவள் மூலமாக எனக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்த எண்ணம் என் இதயத்தில் வேர் ஊன்றி விட்டது.

13

சகுனங்கள் பார்த்தல்

நம் தேசம் முழுவதும் அறியாமையின் காரணமாக அர்த்தமற்ற மூடநம்பிக்கை களில் மூழ்கி இருந்தது. கல்விமான்களும் பெரிய மனிதர்களும் கூட ஏதாவது ஒரு வேலையின் நிமித்தம் வெளியே செல்வதாக இருந்தால், சகுனம் பார்ப்பது உண்டு. ஒரு சிறிய கிராமத்தில் அப்படிப் பார்க்கிறார்கள் என்றால் அதில் அர்த்தம் இருக்கிறது. வாழ்க்கையில் அதிகச் சிக்கல் இருக்கும் பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் அப்படிச்சகுனம் பார்ப்பது அபத்தமே. 'பஞ்ச (ஐந்து) சுபம், பஞ்ச (ஐந்து) அசுபம்' என்று சொல்வார்கள். பெரிய நகரங்களின் சாலைகளில் ஒருவருக்கு எதிரே 'திடீர்' என ஒரே நேரத்தில் சுமங்கலிகளோ, கணவனை இழந்தவர்களோ ஒற்றைப் பிராமணனோ, இரட்டைப் பிராமணர்களோ, வர நேரிடலாம். இப்படி எதிர்ப்படுவதை சிலர் கவனிப்பார்கள். ஆனாலும் கூட சகுன சாஸ்திரங்களில் சில விதி விலக்குகளும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்கு தக்கவாறு சாமர்த்தியமாக விளக்கம் அளித்து விவாதிப்பதும் நடக்கும். ஒரு வேலையின் பொருட்டு வெளியே புறப்படும் ஒரு பிராமணர் எதிரே அவரது பிள்ளையோ சகோதரரோ வர நேரிடலாம். அப்பொழுது புறப்படுபவரின் முகத்தில் கடுமையும் கவலை கலந்த கோபமும் தோன்றும். சில நேரங்களில் அதே வீட்டைச் சேர்ந்த கைம்பெண்ணோ, அடுத்த வீட்டில் இருப்பவரோ எதிர்ப்பட்டால் அத்துரதிர்ஷ்டசாலியின் மீது வசைமாரி பொழியப்படும். அல்லது பயணமே ஒத்தி வைக்கப்படலாம். ரத்து செய்யப்படுவது கூட நடக்கும்.

இதிலுள்ள முரண்பாடு என்னவென்றால் ஒரு கைம்பெண் வெளியே புறப்படும்போது தன்னைப்போன்ற இன்னொரு பெண் எதிரே வருவதை விரும்ப மாட்டாள். சகுனம் பார்ப்பதை வழக்கமாகக்

கொண்டவர்களில் பலர், கெட்ட சகுனம் எதிர்ப்பட்டால் திட்டமிட்ட பயணத்தை ரத்து செய்து விடுவார்கள் அல்லது மனச் சஞ்சலத்துடனேயே புறப்படுவார்கள். போன காரியம் நிறைவேறவில்லை என்றால் அவ்வளவு தான்! திரும்பிய உடன் 'புறப்படும் போது சகுனத்தடையாக ஒருவர் வந்ததால் தான் காரியம் கெட்டுவிட்டது' என்று புலம்புவார்கள். அப்படி வந்தவர் மீது, ஏன், அவர் குடும்பத்தவரின் மீதே வெறுப்புக்கொள்ளுவதோடு பகைமையும் பாராட்டுவார்கள். சிலர் கெட்ட சகுனங்களை தவிர்ப்பதற்காக மிக அதிகாலையிலேயே வீட்டை விட்டுப் புறப்படுவார்கள். அதிகாலையில் ஒரு நல்ல சகுனத்தைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையும் அதற்குக்காரணமாகும்.

தங்களது செயல்திறனால்தான் 'நல்லதோ கெட்டதோ நடக்கிறது' என நம்புபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்களது மனவலிமையாலும் செயலாற்றலாலும்தான், விரும்பியதை அடைய முடியும், என்பது அவர்களுடைய திடமான எண்ணம். தங்களது மன உறுதியின் காரணமாக, எத்தகைய முட்டாள்தனமான கண்ணோட்டத்திற்கும் அவர்கள் இடம் தரமாட்டார்கள். பல நேரங்களில் கெட்ட சகுனங்கள் எதிர்ப்பட்டாலும் நல்ல விளைவுகளும் ஏற்படுகின்றன! நல்ல சகுனங்கள் நேர்ந்தாலும் கெட்ட விளைவுகள் ஏற்படுவதை நாம் காணுகிறோம். இது போன்ற சகுன சாஸ்திரங்கள் எல்லாம் போலியானவை என்று தெரிந்தாலும் கூட, ஒருவர் அதைப் பற்றிய நம்பிக்கையுடன் மேற்கோள்கள் காட்டுகிறார் என்றால் அது அறியாமையின் விளைவு தானே! 'இரவு வேளைகளில் 'உப்பு' என்று சொல்லக்கூடாது' அதனால் 'லவணம்' என்ற சொல்லை உபயோகப்படுத்துவது, 'கற்சட்டியில் இருப்பதை எடு' என்று சொல்வது அல்லது 'இரவில் பெயர் சொல்லக்கூடாததை எடுத்துவா' என்பது, ஞாயிற்றுக்கிழமைகளில் 'நெல்லிக்காய்ப் பச்சடி செய்யக்கூடாது' என்பது; 'கர்ப்பிணிகள் சந்திர கிரஹணத்தைப் பார்க்கக் கூடாது' என்பது; இவை எல்லாம் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாதது என்பது என் அபிப்பிராயம்.

மனிதனுடைய சிந்தனைகள் சொற்கள், செயல்கள் எல்லாவற்றிலும் நல்லதும் கெட்டதும் கலந்து தான் உள்ளன. தீமைகளும் கெட்டவையும் அற்ற முற்றிலும் நல்லவையேயான சிந்தனை, செயல்கள் என்பது மனித இனம் இன்னும் அடைய வேண்டிய சாதனையாகவே இருக்கிறது! மனிதன் தன் எண்ணங்களை சுத்தமாக்கிக்கொண்டு உள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துவது ஆகிய இதெல்லாம் வளர்ந்து வருவதன் மூலம் வருங்கால சந்ததியின் சிந்தனைகளை வளப்படுத்தலாம். 'உள்ளேயும் வெளியேயும் தூய்மையான சிந்தனைகள், ஒரு சமூகப்பிரிவு, மற்ற ஒரு சமூகப்பிரிவை மதிக்கும்தன்மை உலகெங்கும் நிலவுதல்' ஆகியவை வலுப்படுமேயானால் நாட்டில் நிலவும் அர்த்தமற்ற மூடநம்பிக்கைகளும் வகுப்பு அல்லது ஜாதி உணர்வுகளும் பலவீனமடைந்து நசித்துவிடுவது திண்ணம். அந்த மாட்டு வண்டி விபத்து நடந்ததிலிருந்து என் உறவினர்கள் மிகவும் மனக்கிளர்ச்சியை அடைந்ததோடு என் திருமணம் குறித்து ஏமாற்றமும் அடைந்தனர். என் வாழ்க்கைத் துணைவியின் மீது அவர்களுக்கு அதிருப்தியும் ஏற்பட்டது. ஒரு சமயத்தில் நானே கூட அத்தகைய பிரமைக்கு ஆனானேன். ஆனால் நாட்கள் ஆக ஆக என் ஐயப்பாடுகளும், அச்சங்களும் விலகத் தொடங்கின. அவற்றைப் பற்றி பின்னர் விவரிக்கிறேன். எனக்குத் திருமணமாகி எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ச்சிகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படத் தொடங்கின.

14

இலக்கிய வாழ்க்கை – கைக்கும் வாய்க்குமான நிலைமை

சென்னைக்குத் திரும்பி வந்த பின், நான் எனது மைத்துனருடன் மயிலாப்பூரில் தங்கினேன். ஆனால் சாப்பாடு வெளியே ஒரு தனியார் உணவு விடுதியில். அந்த நாட்களில் ரங்கம்மா என்ற பக்தி சிரத்தை உடைய ஒரு பெண்மணி கபாலீஸ்வரர் கோயில் அருகே ஒரு உணவு விடுதியை நடத்தி வந்தார். அவருக்கு ஒரு பிள்ளை இருந்தான். ஆனால் அவன் தாய்க்கு எந்த உதவியும் செய்வதில்லை. அந்த தாய்தான் உணவு விடுதியை நடத்தியவர். வாடிக்கையாளர்களுக்கு நல்ல முறையில் சமைத்து சாப்பாடு போட்டு வந்தார். அவர் ரெண்டால வெங்கடசுப்பராவுக்கு தூரத்து உறவு. அந்தப்பெண்மணியின் கணவர் ஒரு பக்திமானான பிராமணர் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஸ்ரீ சுப்பராவ் தன்னுடைய சொந்த இடத்தில் தங்கி இருக்க சிறிதுகாலம் அந்த பெண்ணுக்கு உதவி செய்திருக்கிறார். வயதாகிவிட்ட போதிலும் பிறரைச் சாராமல் இருப்பதையே அப்பெண் விரும்பினார். ஆகவே, தான் தங்கி இருந்த இடத்தை விட்டு வந்து தனியே ஓர் இடம் பார்த்து அந்த உணவு விடுதியை நடத்தி வந்தார். இந்த நேரத்தில் அவரைப்பற்றி நினைவு கூர்வது இனிமையாக உள்ளது. என்னிடம் அவர் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். வழக்கமாக அந்த விடுதியில் உணவு உட்கொள்ள வருபவர்கள் அவரை தங்கள் தாயைப் போலவே கருதி மரியாதை செலுத்தினர். சிலர் 'உணவு விடுதியை நடத்துவது அவ்வளவு நல்ல தொழில் அல்ல' என்பார்கள். ஆனால் எந்தத் தொழிலோ, வியாபாரமோ, சிரத்தையோடும் நாணயமாகவும் செய்யப்பட்டால் அது புனிதமானதே என்பது என் கருத்து.

எனக்கு நேரம் கிடைக்கும் போது 'கீழ்த்திசை கை எழுத்துப் பிரதிகள்' நூலகத்திற்குச் சென்று கிடைக்கின்ற கைஎழுத்துப் பிரதிகளையும் மற்ற ஆவணங்களையும் படிப்பேன். அந்த

சந்தர்ப்பங்களில் அவற்றில் காணப்படும் அரிய தகவல்களை குறிப்பெடுத்துக்கொண்டு என் நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வேன். எனக்குக்கிடைத்த ஓய்வு நேரமெல்லாம் இப்படிப்பட்ட இலக்கியம் தொடர்பான விஷயங்களில் செலவழிந்தது. ஒரு நாள், அந்த நூலகத்தின் மேலதிகாரி (க்யூரேட்டர்) அங்கே வந்தவர், நான் குறிப்பெடுத்துக் கொண்டிருந்ததைக்கண்டு என்னைப்பற்றி நூலகரிடம் விசாரித்தார். அந்த தினம் தெலுங்கு நூல்களைத் தொகுத்து "கேட்லாக்" தயாரிக்கும் பணியைச் செய்ய வேண்டிய எழுத்தர், வேலைக்கு வரவில்லை. என்னிடம் சம்மதம் கேட்டு, அந்தப்பணியை என் வசம் ஒப்படைத்தார் மேல் அதிகாரி. அது தற்காலிகமான பணி ஆனாலும் அதற்கு முன் அதைச் செய்தவர் மீது அதிகாரிகளுக்கு திருப்தி இல்லை. அத்தோடு அவர் வேலைக்கு வராமல் நின்றும் விட்டார். அந்தப் பணி இடத்தை நிரந்தரப்படுத்தி என்னையே அதில் நியமித்தார்கள்.

அந்த நாட்களில் என்னுடைய பங்களிப்பின் காரணமாக 'பாவுலூரிமல்லனா' பற்றிய ஒரு பெரிய சர்ச்சை எழுந்தது. ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு தன்னுடைய 'இலக்கிய வரலாறு' என்னும் நூலில் 'பாவுலூரி மல்லனா' பற்றி எழுதி இருந்தது தவறு என்று எனக்குத் தெரியவந்தது. கீழ்த்திசை நூலகத்தில் பணியாற்றியபோது நான் படித்த கை எழுத்துப் பிரதிகளிலிருந்து, பாவுலூரி மல்லனாவின் ஆசிரியர் 'பந்துலு எழுதிய இலக்கிய வரலாற்றில் கூறப்பட்டிருப்பது போல நன்னய்யாவின் சம காலத்தவரான 'மல்லனா' அல்ல' என்றும் அவருடைய பேரனான வேறொரு 'மல்லனா' என்றும் தெரிய வந்தது. அதைப்பற்றி நான் ஆதாரங்களுடன் 'சசிலேகா' என்று பெயரோடு சென்னையிலிருந்து வெளிவந்த தெலுங்கு தினசரியில் எழுதினேன். அதைப் படித்த பலரும் என் கட்டுரைக்கு எதிராக பலத்த கண்டனக்குரல் எழுப்பினார்கள். 'வீரேசலிங்கம் பந்துலு எழுதியது தான் சரி' என வாதிட்டவர்களில் முக்கியமானவர் சிலுகூரி வீரபத்ர ராவ். அவர் மிகக்கடுமையாக 'நான் இது போன்ற விஷயங்களில் மூக்கை நுழைக்கத் தகுதியற்ற சின்னப் பையன்' என்று குறிப்பிட்டதோடு 'நான் கீழ்த்திசை கை எழுத்துப் பிரதிகள் நூலகத்தின் ஆவணங்களை குலைப்பதாகவும், விஷயங்களை

திரித்துக்கூறுவதாகவும்' குற்றம் சாட்டி இருந்தார். “அசல் கை எழுத்துப் பிரதிகளில் நான் சொல்வது போன்று ஏதும் இல்லை” என்றும் 'என்னை நூலகப் பணியிலிருந்து அரசாங்கம் நீக்க வேண்டும்' என்றும் அவர் எழுதினார். வேறு பலரும் அவரது கருத்தை ஆதரித்து எழுதினார்கள். அந்த நாட்களில் ஸ்ரீவீரேசலிங்கம் பந்துலுவுக்கு அவ்வளவு மதிப்பும் மரியாதையும் இருந்தது. தெலுங்கு இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய சேவை மிக உயர்வானது. ஆகவேதான் பலரும் நான் எழுதியதைப் படித்து விட்டு சினம் கொண்டார்கள். ஆனால் உண்மை என்ன என்று மேலோட்டமாகக் கூடப் பார்க்காமலேயே அவர்கள் கோபப்பட்டார்கள் என்பது நிச்சயம். பந்துலுவின் எழுத்துக்களில் கூட சில தவறுகள் நேரலாம் என அவர்களால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அச்சமயம் பேராசிரியர் ரங்காச்சார்யுலு[22], மஹா வீராச்சார்யாவின் 'கணித சார சங்க்ரஹா' எனும் நூலை பதிப்பித்து வெளியிட்டிருந்தார். அது கீழ்த்திசை கைஎழுத்துப் பிரதிகள் நூலகத்தில் இருந்தது. 'அந்த சமஸ்கிருத நூலின் தெலுங்கு ஆக்கமே 'மல்லனாவின் கணிதம்' என்று தெரிய வந்ததால் நான் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து 'நான் எழுதியது சரி' என உறுதிப்படுத்திக்கொண்டேன். பிறகு அந்த விஷயத்தை பேராசிரியர் ரங்காச்சார்யுலுவின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன் ஸ்ரீவீரபத்ரராவ் என்னைப்பற்றி தாக்கி எழுதியிருப்பதையும் குறிப்பிட்டேன். ஸ்ரீவேபா ராமேசம், நீதிமன்றத்தில் ஒரு விஷயத்தை அலசுவது போல, இதை அலசிவிட்டு 'என்வாதம் சரியானது' என்றும் 'எதிர்ப்பாளர்களின் வாதத்திற்கும் உண்மைக்கும் வெகுதூரம்' என்பதோடு அது 'விஷயத்திற்கு தொடர்பற்றது, தரக்குறைவானது' என்றும் முடிவு எடுத்தார். இந்த சர்ச்சை தொடர்பாக சிலர் என்னை வேலையை விட்டு தூக்கி விட வேண்டும் என்று முயற்சிப்பதை அறிந்த அவர் மிக மனவருத்தம் அடைந்ததோடு அது பற்றி ஸ்ரீ பய்யா நரசிம்மேஸ்வரசர்மாவிடமும் குறிப்பிட்டார். பேராசிரியர் ரங்காச்சார்யலு எனக்குப் பக்கத்துணையாக இருப்பதாக அறிவித்தார். இந்த சர்ச்சை பற்றிய விஷயம் உச்ச கட்டத்தை எட்டியது, மொழி பெயர்ப்பாளர்களின்

அலுவலகம் என் மீதான புகாரை அரசாங்கத்திற்கு எடுத்துச் செல்வதாக இருந்தது.

இந்த விஷயம் பற்றி எழுந்த விவாதத்தின் விளைவுகளை அறிந்த யாரோ ஒருவர் கை எழுத்துப் பிரதியில் இருந்ததை அப்படியே "சசிலேகாவுக்கு" எழுதிப் பிரசுரிக்க வைத்தார். அது நான் எழுதி இருந்ததற்கு ஆதரவாக இருந்தது. இதற்கிடையில் காக்கிநாடாவில் இருந்த கொச்சர்லா ஸ்ரீநிவாஸராவ்[23] என்பவர் அவருக்குத் தெரிந்த இடங்களிலிருந்து வேறு சில கை எழுத்துப்பிரதிகளைப் பெற்று அவற்றில் 'பாவுலூரு கணிதம்' பற்றி இருந்த குறிப்புகளை பத்திரிகைகளில் வெளியிட்டார். அதற்கு போலாவரம் ஜமீந்தார், துருசேடி சேஷகிரிராவ் மற்றும் பல முக்யஸ்தர்கள் சான்றொப்பம் அளித்திருந்தனர். அந்தப் பத்திரிகைச் செய்தி நான் இது வரை எழுதியதை உறுதிப் படுத்துவதாக இருந்தது. அதன் மூலம் ஒரு வழியாக அந்த சர்ச்சை முடிவுக்கு வந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் வடக்கு சர்க்கார் ஜில்லாக்கள் கட்டமைப்பில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்குப்பிறகு நடந்த ஒரு விழாவிற்குச் சென்றிருந்தேன். ஸ்ரீவீரபத்ரராவும் அதற்கு வந்திருந்தார். என்னைக்கண்டதும் என்னிடம் தான் கடுமையாக நடந்து கொண்டதற்காக வருத்தம் தெரிவித்துவிட்டு 'நாம் இனி நண்பர்கள்' என்றார். அன்று மாலையில் நடந்த கூட்டத்தில் நான் என்னுடைய பத்து கவிதைகளைப் பாடினேன். அந்த ஆண்டு சொண்ட்டி ராமமூர்த்தி படிப்பை சிறப்பாக முடித்து விட்டு இங்கிலாந்திற்குப் போவதற்காக இருந்தார். நான் அப்போது பாடிய ஒரு கவிதை கீழ்வருமாறு:

"ஆந்திரர்கள் தங்கள் உடல் வலிமையால் பெற்றுள்ள புகழ் நம்முடைய ராமமூர்த்தியிடமிருந்து (கோடி) கிடைத்தது ஆந்திரர்கள் தங்களுடைய அறிவுக்கூர்மையால் பெற்றுள்ள பெருமை இன்னொரு ராமமூர்த்தியால் (சொன்டி) கிடைத்தது".

ஸ்ரீவீரபத்ரராவ் அன்று வருத்தம் தெரிவித்தாலும் அவர் சமாதானமாகவில்லை. என் மீது அவர் காழ்ப்பு உணர்வுடனேயே

இருந்தார். சில வருஷங்களுக்குப் பிறகு கூட, நான் எழுதிய 'ஸ்ரீநாதா' மற்றும் சிலவற்றிற்கு எதிராக அவர் தன் வழக்கமான பாணியில் கடும் விமர்சனம் செய்தார். ஆனால் அவற்றில் சிறிது கூட உண்மைக்கலப்பு கிடையாது. நான் அவற்றிற்குப் பதில் எழுதவோ மறுப்புக் கூறவோ இல்லை. பின்னர் எனக்கு "ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு மிக உயரிய மதிப்புக்குரியவர்" என்றாலும் 'தான்' என்ற எண்ணம் கொண்டவர் என்று தோன்றத் தொடங்கியது.

'மஹாத்மாகாந்தியின் அரசியல் பிரவேசத்திற்குப் பிறகு மனித இனத்திற்கே ஒரு மரியாதையும் உயர்நிலையும் ஏற்பட்டது என்பதும் அவருடைய பிரகாசமான ஒளிவீச்சுக்கு முன் பல பெரிய மனிதர்களின் புகழ் மங்கிப் போயிற்று' என்பதும் என் கருத்து.

ஒரு நாள்[24] ஸ்ரீலக்ஷ்மணராவ், ஸ்ரீவீரேசலிங்கம் பந்துலுவை கீழ்த்திசை மொழிகள் நூலகத்திற்கு அழைத்து வந்து, என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பந்துலுகாரு 'கவிஞர்களின் வரலாறு' என்ற தனது நூலை திருத்தி எழுத இருப்பதாகவும், அதற்கு நான் உதவியாக இருக்க வேண்டும் என விரும்புவதாகவும் ராவ் தெரிவித்தார். 'பாவுலூரி மல்லனா' பற்றிய சர்ச்சையை என்னோடு விவாதித்து முடிவு செய்ய வேண்டும் என்பதும் அவர் விருப்பமாம். நான் என் தரப்பு வாதங்களை மறுபடியும் கூறி அதற்கான ஆதாரங்களையும் காண்பித்தேன் ஸ்ரீலக்ஷ்மணராவ் அவற்றை எல்லாம் பார்த்துவிட்டு, 'பந்துலுகாரு தான்எழுதியதற்கு திருத்தங்கள் செய்வதே முறை' என்று கருத்து வெளியிட்டார். பந்துலுகாரு தன் வசம் வேறு சில கைப்பிரதிகள் இருப்பதாகவும் அவற்றின் அடிப்படையிலேயே தான் எழுதி இருப்பதாகவும் கூறியதோடு, தான் ராஜமஹேந்திரவரம் செல்ல இருப்பதாகவும் அங்குள்ள சில பிரதிகளை ஆய்வு செய்த பிறகு ஒரு முடிவுக்கு வருவதாகவும் தெரிவித்தார். அதற்கு லக்ஷ்மணராவ் "நீங்கள் அங்கு போய்ப்பார்க்க இருக்கும் பிரதிகளில் உள்ளவை, இந்த நூலகத்தில் உள்ள பிரதிகளுக்கு மாறுபட்டதாக இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவற்றை ஆதாரத்துடன் நீங்கள்தான் உறுதிப்படுத்த வேண்டும்" என்று

சொல்லிவிட்டு என்னைப்பார்த்து “வீரேசலிங்கம் பந்துலுவின் விடாப்பிடியான வாதத்திற்கு மதிப்புக் கொடுத்து, அவர் 'கவிஞர்களின் வரலாறு' பற்றி திருத்தமாக எழுத உதவி புரிய வேண்டும் என்றார். நான் 'என்னால் செய்யக் கூடியது எதுவாக இருந்தாலும் செய்யத்தயார்' என்று தெரிவித்தேன். அதன் பிறகு இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

சில நாட்களில் ஸ்ரீபந்துலு சென்னையை விட்டு பெங்களூருவுக்குப் புறப்பட்டார். அவருடைய நூலான 'கவுல சரிதா' (கவிஞர்கள் சரிதம்) முதல் தொகுதிக்கு என்னென்ன திருத்தங்கள் தேவை என்று எனக்குத் தோன்றியதோ அதை எல்லாம் எழுதி வைத்துக் கொண்டு அவற்றை பந்துலுகாருவின் பெங்களூரு விலாசத்துக்கு அனுப்பினேன். அது பெரிய காகிதக் கட்டு. பந்துலு அதை உபயோகித்துக் கொண்டார். ஆனால் நூலாசிரியர் உரையில் பொருத்தமான இடங்களில் என்னுடைய உதவியை அவர் ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிடாதது மட்டுமல்ல, தன் திருத்திய பதிப்பின் முகவுரையில் “ஸ்ரீ சாஸ்திரியார் கூட நான் விரும்பிய நூல்களில் குறிப்பிட்ட சிலபகுதிகளை அவருடைய நூலகத்திலுள்ள பிரதிகளிலிருந்து நகல் எடுத்துக் கொடுத்தார்” என்பதாகக் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் நான் தான் 'அவருடைய திருத்திய பதிப்புக்கு தேவைப்படக்கூடியவை எவை?' என யூகித்து அவற்றை எல்லாம் சேகரித்து அனுப்பினேன். அத்துடன் அவற்றை வரிசைப்படுத்தியும் அவருடைய முதல் பதிப்பில் எந்த இடங்களில் அவற்றைச் சேர்க்கலாம் என்று குறிப்பெழுதியும் கொடுத்திருந்தேன். தன் உரையில் அதைக் குறிப்பிடாததுதான் அந்த உதவிகளை எல்லாம் ஏற்றுக் கொண்டதன் அடையாளமா? பந்துலு குறிப்பிட்டிருந்ததற்கு 'அவர்தான் தனக்கு என்னென்ன வேண்டும்' என்று சொன்னதாகவும், நான் அதை நகல் மட்டுமே எடுத்துக் கொடுத்ததாகவும் தான் அர்த்தம்! அதுமட்டுமல்ல! என் பழைய நண்பர் மானவல்லி ராம கிருஷ்ண[25] கவியையும் அவர் அந்த முகவுரையில் காரணமின்றி தாக்கி இருந்ததோடு 'பிரபந்த ரத்னாவளி' என்ற என் நூல் குறித்து எனக்கு எதிராகவும் விமர்சனம் செய்திருந்தார். அந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் இங்கே

விவரிப்பது எனக்கு சங்கடமாக இருக்கிறது. நான் அவருக்கு இதுபற்றி எழுதினேன். அவர் வருத்தப்பட்டு, பதில் அனுப்பி இருந்தார். சமீபத்தில் நான் அந்த கடிதப்போக்குவரத்துகளை கிழித்துப் போட நினைத்த போது என் நண்பர்கள் தடுத்து அக்கடிதங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதாகச் சொல்லி வாங்கிச் சென்று விட்டனர்.

இதை எல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், எனக்குள்ளே இலக்கிய வட்டத்தில் தீவிரமாக இறங்க வேண்டும் என்ற துடிப்பு இருந்தாலும் பலப்பல குறுக்கீடுகளை சந்தித்ததால் என் ஆர்வம் குன்றி விட்டது என்பதை தெரிவிக்க விரும்புவது தான். அந்த நாட்களில் எனக்கு சூடான விவாதங்கள் – சர்ச்சைகளில் பங்கேற்பதில் முனைப்பு இல்லை என்றாலும் அந்த இலக்கிய ஒளிப்பொறி சிறிதளவு என்னுள்ளே சுடர்விட்டுக் கொண்டுதான் இருந்தது. ஒரு பொற்கொல்லர் தங்கத்தை உருக்குவதற்காக அடுப்பை ஊதிக்கொண்டிருப்பார். அடுப்பின் மேல் பகுதியில் கரி செந்நிறத்துடன் எரியும். அதன் மீது தங்கம் உள்ள தட்டு இருக்கும். அவர் நெருப்பை சுற்றி உமித்தூள்களைப் போட்டிருப்பார். தேவையான போது ஊது குழலால் ஊதி நெருப்பை அதிகமாக்குவார். ஆனால் ஒரு போதும் நெருப்பை, ஜுவாலை விட்டு அதிகமாக எரியவிடமாட்டார். உமித்தூள்கள் வழியாக நெருப்பு கூடுதலாக வெளிப்படும் போது அவர் சுற்றிலும் தண்ணீரைத் தெளித்து அதைக்கட்டுப்படுத்துவார். தொடக்கத்திலிருந்தே என் நிலைமையும் அதுபோன்று தான் இருந்தது. என் விஷயத்திலும் இலக்கியப்பணி என்பது வயிற்றுக்குப் போதுமான அளவு சம்பாதிப்பதிலேயே இருந்தது. இறைவன் எனக்கு கைக்கும் வாய்க்குமான சம்பாத்தியத்தையே அனுமதித்திருந்தார். வயிற்றுக்குத் தேவையான அளவு மட்டுமே கிடைத்த சூழ்நிலையில், இலக்கியம் தொடர்பான வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவோ, சாதனைகள் புரியவோ என்னால் இயலாமல் இருந்தது.

15

டைஃபாயிட் நோய்

நான் எப்பொழுதும் சென்னை மயிலாப்பூருக்கும், எழும்பூருக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருப்பேன். எழும்பூர் மியூசியத்தில்தான் கீழ்த்திசை மொழிகள் கையெழுத்துப் பிரதிகளின் நூலகம் அப்போது இருந்தது. அங்கு சமஸ்கிருதம் – தெலுங்கு மொழிகளில் உள்ள அபூர்வமான நூல்களை நான் அதிகம் படிப்பேன். அவற்றில் இருந்து முக்கியமான விஷயங்களை குறிப்பெடுத்துக் கொண்டு அவ்வப்பொழுது பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். அவை பிரசுரமாகும். ஸ்ரீ வேபா ராமேசம், இரவும் பகலுமாக நிறையப்புத்தகங்களைப் படிப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். அது போன்று இருக்கும் அதிர்ஷ்டம் அவருக்கு இருந்தது. எனக்கு அப்படி இல்லை. பகலில் நான் படித்ததை எல்லாம் இரவில் நெடுநேரம் மனதில் அசைபோட்டுக் கொண்டிருப்பேன். விளைவு தூக்கமின்மை. விழித்திருக்கும் நேரம் எல்லாம் மீண்டும் நான் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளை படிப்பேன். ஓய்வின்மையும் பலஹீனமும் என்னைப் பாதித்தது. சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதனால் ஒருமாத விடுப்புக்கு விண்ணப்பித்தேன்.

விடுப்பு கிடைத்த மறுநாளே என் உடம்பில் உஷ்ணம் அதிகரித்தது. மருத்துவரிடம் சென்று மருந்து எடுத்துக்கொண்ட போதிலும் உடற்சூடு குறையவில்லை. டெம்பரேச்சர் அதிகரித்துக் கொண்டே போனது. நான்கைந்து நாட்கள் பார்த்துவிட்டு மருத்துவர் 'என்னை ஊருக்கு அனுப்புவது நல்லது' என்று என் மைத்துனரிடம் தெரிவித்தார். உடல்நிலை மிகவும் பலஹீனமாக இருந்ததால் என்னால் பயணம் மேற்கொள்ள முடியாமல் போயிற்று. ஆகவே நான் என் நண்பரும்

மருத்துவருமான பண்டிட் கோபாலாச்சார்யுலுவுக்கு சொல்லி அனுப்பினேன். அவர் வந்து, தான் மிகத் தொலை தூரத்தில் வசிப்பதால் அருகிலுள்ள ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்வது நல்லது என்று கருத்து தெரிவித்தார். நான் அதுவரை அலோபதி முறை மருந்துகளை உட்கொண்டதில்லை. என் தந்தை ஒரு ஆயுர்வேத மருத்துவர். எங்களுக்கு சிறிய உடல் உபாதைகள் வந்தால் அவரே மருந்து கொடுத்து விடுவார். அதுவரை என் உடலுக்கு வியாதி ஏதும் வந்ததே கிடையாது. ஆகவே என் நண்பரிடம் "எனக்கு ஆயுர்வேத மருந்துகள் சாப்பிட்டுத்தான் பழக்கம். நீங்கள் என் நண்பர். நீங்களே எனக்கு சிகிச்சை செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். அவரும் இணங்கி எனக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் ஜார்ஜ்டவுன் ஆச்சாரப்பன் தெருவிலிருந்து ஒரு கோச் வண்டியில் மயிலாப்பூர் வந்து என்னை கவனித்துக் கொண்டார்.

ஒரு நாள் வயிறு சுத்தமாவதற்காக சிறிய மாத்திரை ஒன்றை அவர் கொடுத்தார். நான் சரியாகச் சாப்பிட்டே பத்து நாட்கள் ஆகிவிட்டன. என் உடல் மிகவும் பலஹீனமாக இருப்பதை உணர்ந்தேன். அந்த மாத்திரையை சாப்பிட்டதும் நான்கைந்து முறை வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. ஐந்தாவது முறை கொல்லைப்புறம் போய்விட்டு வரும்போது நான் மயக்கமடைந்தேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். நினைவு வந்த உடன் நாடித்துடிப்பை நானே பார்த்துக் கொண்டேன். நிமிஷத்துக்கு 'இருநூறு' இருப்பதாக தெரிந்தது. மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. பக்கத்தில் இருந்த ஸ்ரீ ராமேசம் அவர்களை அழைத்து வந்தார்கள். அவரும் என் நாடியைப் பரிசோதித்தார். மிக மோசமான நிலையில் நான் இருப்பது தெரிந்து அவசரமாக ஒரு தாளில் குறிப்பு எழுதி டாக்டர் நஞ்சுண்டராவுக்கு கொடுத்தனுப்பினார். நான் திணறித் திணறி மூச்சுவிட்டவாறு இருந்தேன். யாரோ எனக்கு இரண்டு கிளாஸ் பால் கொடுத்தார்கள். அதைக்குடித்த பத்து நிமிஷங்களில் என் உடல்நிலை முன்போல ஆனது. இதற்கிடையில் நஞ்சுண்டராவ்

வந்துவிட்டார். என்னை பரிசோதித்து விட்டு “இது தீவிரமான டைஃபாயிட். இந்த மருந்துகளை வாங்கி வாருங்கள்” என்று குறிப்புகள் எழுதிக் கொடுத்தார். அவை குட்வின் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டன. அவற்றை சாப்பிட்டேன். சிறிது தெம்பு ஏற்பட்டது. இருபத்திரண்டு நாட்களுக்குப்பிறகு டெம்பரேச்சர் இயல்பு நிலைக்கு வந்தது என்றாலும் நடுநடுவில் சில நாட்களில் சிறிது பரபரப்பும் உண்டாயிற்று. ஆனால் நஞ்சுண்டராவ் தயாரித்துக் கொடுத்த டானிக்குகள் அவற்றை எதிர்கொள்ளும் தெம்பை எனக்கு அளித்தன. ஒரு நாள் அவர் ஒரு பேதி மருந்தைக் கொடுத்துவிட்டு “இனி டானிக்குகளை நிறுத்திக் கொள்ளலாம்” என்றார். அன்று முழுதும் எனக்கு பலஹீனமாகவே இருந்தது. மறுநாள் அவர் என்னைப் பார்க்க வந்தபோது “டாக்டர் நீங்கள் முதலில் கொடுத்த டானிக்கை சாப்பிட்டபோது தெம்பாக இருந்தது. அதை நிறுத்திவிட்டீர்கள். இப்போது பலஹீனமாக இருக்கிறதே” என்று கூறினேன். புன்னகையுடன் என்னைத் தட்டிக் கொடுத்துவிட்டு “அப்படியானால் அதை மறுபடியும் சாப்பிடு” என்று சொன்ன அவர் அதன்படியே டானிக்கை கொடுத்தார். பின்னர், உடல் நிலை நன்கு தேறிய பிறகு, அவர் கலக்கிக் கொடுத்த டானிக் 'பிராந்தியில் கலந்த சிக்கன் சூப்' என்று தெரிய வந்தது. அதை அறிந்ததும் என் வயிற்றில் குமட்டல் ஏற்பட்டது. ஆனால் 'அதுதானே நம் உடலுக்குத் தெம்பு கொடுத்த டானிக்' என்ற நினைப்பு எழுந்ததும் சிறிது சமாதானம் அடைந்தேன்.

என் உடல்நிலை மோசமாக இருந்தபோது என் மைத்துனர் எங்கள் வீட்டாருக்கு தகவல் அனுப்பி இருக்கிறார். என் பெற்றோர், மாமனார், என் அண்ணன், என் நண்பன் சூசர்லா குமாரஸ்வாமி சாஸ்திரி ஆகியோர் புறப்பட்டு சென்னை வந்தனர். என் பெற்றோர் ஊரில் இருந்த போது, என் மாமனார், தன் மகள் பூப்படைந்துவிட்டதாக செய்தி அனுப்பி இருந்தாராம். அதனாலும் அவர்களுக்கு பரபரப்பு! என் உடல்நிலை தேறிவந்த நிலையில் டாக்டர் நஞ்சுண்ட ராவ் என் பெற்றோர்

வந்திருப்பதைப் பார்த்து விஷயத்தை தெரிந்து கொண்டு என்னிடம் "நீ ஆறு மாதம் லீவு எடுத்துக் கொண்டு ஊருக்குப் போய்விட்டு வா. ஓய்வில் இருந்தால் உன் உடல் விரைவில் வலிவு பெறும். உனக்கு வேறு எந்த பாதிப்பும் இல்லை. பொதுவாகவே டைஃபாயிட் வந்தவர்கள், உடல் தேறிய பின்பு முன்பிருந்ததை விட அதிக பலம் பெறுவார்கள். ஊரில் நல்ல ஓய்வு எடுத்துக்கொள். மூன்று மாதங்களில் பூரண குணம் பெற்று குடும்ப வாழ்க்கைக்கு தயாராகி விடுவாய். ஆறு மாதத்திற்குப் பிறகு உன்னை சென்னையில் குடும்பஸ்தனாகப் பார்க்க விரும்புகிறேன். விஷ்யூ ஆல் தி பெஸ்ட்" என்றார்.

16

ஸ்ரீ வேங்கடேஸ்வரர் தரிசனம்

அச்சமயம் எனக்கு வாழ்க்கையில் இரண்டு நோக்கங்கள் இருந்தன. என் பெற்றோர் நெடு நாட்களுக்கு முன்பாக பிரார்த்தித்துக் கொண்டபடி திருப்பதி சென்று ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளை[26] தரிசிக்க வேண்டும் என்பது ஒன்று. சிறுவயதிலிருந்தே நான்,கோயில்களுக்குச் செல்வதிலோ அங்குள்ள தெய்வங்களை கும்பிட வேண்டும் என்பதிலோ அக்கறை இல்லாமல் இருந்தேன். கோயில்களுக்குச் சென்று தெய்வீக அனுபவம் ஏதும் நான் பெற்றதில்லை. அத்தகைய எண்ணங்களுடன் மயிலாப்பூர், திருவல்லிக்கேணியில் உள்ள கோயில்களுக்குப் போன நினைவும் எனக்கு இல்லை. ஆனாலும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் மீது சில சமயங்களில் பாடல்கள் இயற்றி இருக்கிறேன். அப்படிப்பட்ட மனப்பான்மையுடன் இருந்த எனக்கு திருப்பதி சென்று வெங்கடேசப் பெருமாளை தரிசிக்க வேண்டும் என்ற விருப்பம் எப்படி ஏற்பட்டது என சொல்லத்தெரியவில்லை. “கலியுகத்தில் வேங்கடநாயகன்” என்ற நோக்கம் ஏனோ என் மனதை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது.

பிரார்த்தனையை நிறைவேற்றும் பொருட்டு என் குடும்பத்தவர் என் இளைய சகோதரன் சங்கரனின் உபநயனத்தை திருப்பதி வெங்கடேசரின் தெய்வீக சந்நிதியில் நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தனர்.சென்னையிலிருந்து திருப்பதி போகப்போகிறோம் என்ற நினைப்பு என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. 'எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த மஹாவிஷ்ணுவை தரிசிக்கப்போகிறோம்' என்று சிந்தித்து, சிந்தித்து மனம் குளிர்ந்தேன். உடல்நிலை பலஹீனமாயிருந்து தேறிவந்த நிலையிலும் திருப்பதி பயணம் சென்று பெருமாளின் பாதங்களில் ஒரு பாமாலை சூட வேண்டும் என்று உற்சாகத்துடன் திட்டமிட்டேன். என்னுடைய கண்ணுக்கு விருந்தாக 'வேங்கடேசர் காப்பாற்றுவார்' என்ற சொல் என் மனதில் நிழலாடியது. பயணத்தின் போது ஒரு பாடல் என்னுள் உதித்தது. உபநயனம் திருச்சானூர் தாயாரின் சந்நிதியில்

நடந்தது. அது சரியான கோடை காலம். என் மூத்த தமையனாரின் கைக்குழந்தைக்கு வெயில் தாங்காமல் காய்ச்சல் வந்துவிட்டது. நான் 'அந்தக்குழந்தையின் காய்ச்சல் தீரும் வரை வெங்கடேசப் பெருமாள் மீது பாமாலைகள் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்' என்று தீர்மானித்தேன். இரண்டு மணிநேரம் ஆனவுடன் குழந்தையின் உடல் சூடு குறைந்து, அது பழைய நிலைக்கு வந்தது. அதற்குள் நான் பல பாடல்கள் எழுதிவிட்டேன். அவற்றில் ஒன்றிரண்டை கூறுகிறேன்.

"குழந்தையின் உடல் சூடான தோசைக்கல் போல உள்ளது. அது அசாதாரணமாகக் காணப்படுகிறது. என் பிரியமான அக்குழந்தைக்கு ஆறுமாதம் தான் ஆகிறது. இது என்ன தீண்டுதல்? நமஸ்காரம். உங்களிடம் பிரார்த்திக்கிறோம். குழந்தையை ஆசீர்வதித்து முன்போல ஆக்கி நலத்துடன் இருக்க அருள் புரியுங்கள் பிரபுவே!"

உடல்நிலை சரியான பின் எழுதிய இன்னொரு பாடல்.

"எங்களை காத்து ரட்சிப்பவரே,
நாங்கள் உன்னை கைகூப்பி
பிரார்த்தித்து காத்தருளுமாறு வேண்டிய போது நீ
அதற்கிணங்கி 'வேங்கடேசன் காப்பாற்றுவான்' என்ற
வாக்கை நிரூபித்து விட்டாய்".

எங்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி! மலை ஏறிச் சென்று பெருமாளைத் தரிசிக்க புறப்பட்டோம். என் தகப்பனார் வயதானவர். பலமுறை வேங்கடேசப் பெருமாளை தரிசித்திருக்கிறார். ஆகவே, அவர் எங்களுடன் வராமல் நாங்கள் தங்கியிருந்த புதிதாகக் கட்டப்பட்ட 'புஷ்ப தோட்டம்' சத்திரத்திலேயே இருந்துவிட்டார். நான் மிகுந்த ஆர்வத்துடன் கோயிலுக்குள் நுழைந்தேன். கூட்டம் நெருக்கியது. நான் எவ்வளவோ முயன்றும் பெருமாளை கண்குளிர தரிசிக்க இயலவில்லை. நாங்கள் சென்னையிலிருந்து 'திருப்பதி மஹந்த்துக்கு' ஒரு அறிமுகக் கடிதம் வாங்கி வந்திருந்தோம். அவர் கோயில் அதிகாரிகளுக்கு சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். ஆகவே அங்கு எங்களுக்கு எல்லா வசதிகளும்

கிடைத்தன. 'கூட்டமாக இருக்கிறதே' என முதலில் நாங்கள் கவலை கொண்டாலும், என்னுடன் வந்த அனைவரும் பெருமாளை மனத்திருப்தியுடன் தரிசித்தனர். நானும் 'பெருமாளை கண்ணார தரிசிக்க வேண்டும்' என்று தலையை நீட்டிப் பார்த்தேன். ஊஹூம். ஏனோ என் கண்களுக்கு அவர் தெரியவே இல்லை. மூலஸ்தானம் இருட்டாக இருந்தது. பெருமாளின் திரு உருவம் புலப்படவே இல்லை. அப்படியே சோர்ந்து போனேன். “நான் ஒரு பாவி. அயோக்கியன்” என்று எண்ணிக் கொண்ட எனக்கு அழுகையே வந்தது. என்னுள் பல எண்ணங்கள் தோன்றின. “டைஃபாயிட் ஜுரம் காரணமாக என் பார்வை மங்கிவிட்டிருக்குமோ?” “எனக்கும் பெருமாளுக்கும் இடையில் பிரகாசமாக எரிந்த விளக்குகள் என் கண்களை கூச வைத்திருக்குமோ? என் பழைய வாழ்க்கையில் நான் செய்த பாவங்கள் பெருமாளை தரிசனம் செய்யவிடாமல் என்னைத் தடுக்கின்றனவோ?” என்றெல்லாம் நினைத்தேன். 'அப்படி எல்லாம் இருக்காது' என்ற மறுப்பும் எனக்குள்ளே பிறந்தது. ஏன் எனக்கு தரிசனம் கிட்டவில்லை? இந்த கேள்விகளுக்கெல்லாம் எதிர் வாதங்களும் என்னுள் எழுந்து, அவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தன.

இதெல்லாம் நான் இந்த சுயசரிதைகளை எழுதுவதற்கு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தவை. அதாவது ஏறக்குறைய 1910 ஆம் ஆண்டில். பின்னர் 1930களில் நான் ஏழுமலையானான ஸ்ரீவேங்கடேஸ்வரரைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. 1949ல் இன்னும் அதிக தெளிவு பெற்றேன். அதைப்பற்றி பொருத்தமான இடத்தில் தெரிவிக்கிறேன்.

17

முதல் அனுபவம்

டைஃபாய்டிலிருந்து மீண்டதைச் சொன்ன பிறகு “எனக்கு வாழ்வில் இரண்டு நோக்கங்கள் நெடுநாட்களாக இருந்தன” என்று தெரிவித்திருந்தேன். ஒன்று 'திருப்பதி வேங்கடேஸ்வரரை தரிசிக்க வேண்டும்' என்பது பற்றியும் 'தொடக்கத்தில் அது முடியாமல் போனதில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம்' பற்றியும் 'பின்னர் அந்த நிகழ்ச்சி குறித்து நான் முழுமையாக அறிந்து கொண்டேன்' என்பது பற்றியும்' விவரித்திருந்தேன். இரண்டாவது நோக்கம் 'பாலியல் உடல் உறவில் கிடைக்கும் இன்பம் எப்படி இருக்கும்' என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். அது வரை அது பற்றி எனக்கு ஏதும் தெரியாது. ஆனால் என் மனதில் 'அது ஒரு பேரின்பம், திருப்பதி வேங்கடேஸ்வரரை தரிசிப்பது போன்ற மகிழ்ச்சி தரக்கூடியது' என்று மட்டும் நினைப்பு இருந்தது. 'இவை இரண்டையும் அனுபவித்து விட்டால் என் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறி விட்டதாக அர்த்தம்' என்றும் தொடக்கத்தில் எண்ணியிருந்தேன்.

திருப்பதியிலிருந்து முதலில் நான் மட்டும் திரும்பி எங்கள் ஊருக்கு வந்தேன். மற்றவர்கள் சென்னையில் தங்கிவிட்டு பிறகு வந்தார்கள். நான் அது வரை வீட்டில் தனியாகவே இருந்தேன். சாப்பாடு என் நண்பர் சூசர்லா[27] குமாரஸ்வாமி சாஸ்திரியின் வீட்டில். அவரும் அவர் மனைவி ராமம்மாவும் என்னை விருந்தாளி என எண்ணாமல் குடும்பத்தில் ஒருவனாகவே கவனித்துக்கொண்டனர். என் உடல் நிலை வேகமாக அபிவிருத்தி அடைந்தது. நல்ல பசி எடுத்தது. நன்றாகச்சாப்பிட்டேன். நான் அதிகமாக சாப்பிடுவதாகவும் அதை மற்றவர்கள் பார்த்தால் கண்பட்டு விடும் என்றும் நினைத்த ராமம்மா

எனக்கு மட்டும் தனியாக சாப்பாடு போட்டு வந்தார். பதிலாக அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணினேன். 1917ஆம் ஆண்டில், நான் பிருக்த ரஹித ராஜயோகாவில் சேர்ந்த பிறகு அவர்களையும், அதில் தீக்ஷை பெற வைத்தேன். ஆனால் குமாரஸ்வாமி சாஸ்திரி மனோதிடம் படைத்தவர் அல்ல. இந்த யோக முறையை சரியாக கடைப்பிடிக்கவில்லை. பல கெட்டபழக்கங்களும் அவருக்கு உண்டாகின. உடல்நிலை சீர்கெட்டதோடு சொத்தும் கரைந்து போக, 1928–ல் அவர் மரணம் அடைந்தார். அவருக்கு முன்னதாகவே அவரது மனைவியும் போய்ச் சேர்ந்தார்.

ஸ்ரீ குமாரஸ்வாமி காலமான பத்தாம் நாள் நான் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த போது அவரது ஆவி என்னருகே வந்து நிற்பது போல எனக்குப் பட்டது. புன்னகையுடன் என்னைப்பார்த்து 'உன் அண்மையில் இல்லாமல் நான் மிக விலகி இருந்தேன். கெட்ட சகவாசமும், தீய பழக்கங்களும் என்னை பாழாக்கி விட்டன. நான் ஸ்தூல உடலோடு இல்லை. ஆனாலும் இனி எப்போதும் உன்னுடன் தான் நான் இருப்பேன்' என்று குமாரஸ்வாமி சாஸ்திரி கூறுவதாக நான் உணர்ந்தேன். இப்படிக்குற்ற மனப்பான்மையுடன் சொல்லிவிட்டு, என் பிரார்த்தனையில் அவரும் கலந்து கொண்டதாக என் பார்வைக்குத் தெரிந்தது. பழக்க வழக்கங்கள் சரியில்லா விட்டாலும் குமாரஸ்வாமி கூர்ந்த மதி படைத்தவர். மற்றவர்களுக்கு உதவும் இரக்க சுபாவமும் அவருக்கு உண்டு. பல சமயங்களில் “என்ன ஏது?” என்று விசாரித்து அறிந்து கொள்ளாமலேயே, தன்னிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு தாராளமாக உதவுவார். அதிலேயே அவர் சொத்து பெரும்பாலும் அழிந்தது. அவரது 'மற்றவருக்கு உதவிடும்' தன்மையாலும் என் மீது அவர் வைத்திருந்த நேசத்தினாலும் அவர் மீது பரிவு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய நான் மனப்பூர்வமாக பிரார்த்தனைகள் செய்தேன்.

திருப்பதியிலிருந்து வந்த நான் அவருடைய வீட்டில் இரண்டு வாரங்களுக்கு மேலாக தங்கி இருந்தேன். பிறகு என் பெற்றோர் ஊர் திரும்பினர். மூன்று நான்கு மாதங்களில் நான் பூரணமாக உடல் நலம் பெற்று வலிவடைந்தேன். என் எண்ண ஓட்டங்களை அறிந்ததுடன் என் உடல்நிலை நல்லபடியாக இருப்பதையும் உணர்ந்த என் பெற்றோரும் என் மூத்த சகோதரியும் என் மாமனார் வீட்டாரிடம் சாந்தி முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு சொன்னார்கள். சாதக பாதகங்களை அலசிவிட்டு என் மாமனார் அதற்கு இணங்கினார். அதற்கு சில தினங்கள் முன்பாக என் இளைய சகோதரியின் சாந்தி முகூர்த்தம் எங்கள் வீட்டில் நடந்தது.

சாந்திமுகூர்த்தம் பற்றி முன்பு நான் ஆர்வமாக சிந்தித்துக் கொண்டிருந்தேன். முகூர்த்தத்திற்காக நாள் குறிக்கப்பட்டதும் குழப்பமடைய ஆரம்பித்தேன். என் முகத்தில் தெரிந்த மாறுதல்களை என் வீட்டில் கவனித்தார்கள் என்றாலும் அதன் காரணத்தைப்பற்றி யாரும் கேட்கவில்லை. உண்மையில் எனக்கே நான் ஏன் குழப்பத்துடன் இருக்கிறேன் என்பது புரியவில்லை. இந்தக் காரணமற்ற குழப்பம் எனக்கு அதிகரித்துக்கொண்டே இருந்தது. நீண்ட நேரம் சிந்தித்த பிறகு எனக்கு ஒரு காரணம் புலப்பட்டது. என் திருமணத்திற்குப் பிறகு எனக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் அதன் விளைவாக எங்கள் வீட்டில் புதிய மருமகளின் ஜாதகம் சரியில்லை என்று பேசிக்கொண்டதும் தான் அந்தக்காரணம். என் திருமணத்தின் போது என் மாமனார் 'தன் பெண்ணுக்கு ஜாதகம் கணிக்கவில்லை' என்று தெரிவித்திருந்தார். ஆகவே எங்கள் வீட்டார் ஜாதகம் பார்க்கவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் எனக்கு ஜாதக பலன்களில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. 'மனதில் எப்படி எண்ணுகிறோமோ, அதன்படியே தான் பலன்கள் இருக்கும்' என்ற முதுமொழியிலும் 'மனம் போல மாங்கல்யம்' என்பதிலும் நான் நம்பிக்கை வைத்தவன். இந்தத் திருமணம் செய்து

கொண்டதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஏனெனில் எனக்கு நன்கு தெரிந்த, நான் மிகவும் நேசித்த ஒரு பெண்ணைத்தான் நான் மணந்து கொண்டேன். அதுவரை என் மனதில் 'நாம் நன்கறிந்த பெண்ணை மணந்து கொள்கிறோம். அவள் என் மனதிற்கினிய மனைவியாக இருப்பாள்' என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. இப்பொழுது “அவள் எங்கள் வீட்டுக்கு வந்து எங்களுடனேயே வசிக்கப்போகிறாள். அவளுடன் நான் இல்வாழ்க்கை நடத்த இருக்கிறேன்” என்ற நிலை உருவானதும், என் மனதில் ஏதோ கலக்கம் ஏற்பட்டு நாளுக்கு நாள் வளர்ந்தது. அவள் மேல் எனக்கு இருந்த கண்ணோட்டத்தை நான் நன்கு உணர்ந்திருந்ததுதான் அந்தக்கலக்கத்திற்கு காரணம். “அவள்மீது நான் முழு அன்பு கொண்டிருப்பது போலவே அவளும் என் மேல் அன்பு செலுத்துவாளா? அல்லது என்னை தன் கைக்குள் போட்டுக்கொள்ள நினைப்பாளா? என் மீது மட்டற்ற அன்பு கொண்டு பாசத்துடன் என்னை வளர்த்த பெற்றோருக்கு அவள் பிடித்தமானவளாக இருப்பாளா? அவள் அவர்களை மரியாதையுடன் நடத்துவாளா? இல்லை மனமாற்சரியங்கள் ஏற்படும்படி நடந்து கொள்வாளா? என் சகோதர, சகோதரிகளுடன் எனக்குள்ள பாசப்பிணைப்புக்கு குந்தகமாக நடந்து கொள்வாளா?” இவ்வாறெல்லாம் சிந்தித்து மன நிம்மதி இழந்தேன். இந்தக்கவலை எல்லாம் குவிந்து, என் உள்ளத்தில் ஒரு சோர்வு பிறந்தது. மேலும் இது வரையிலும் நான் பெற்றோரின் கவனிப்பில் எந்த பொறுப்புமில்லாமல் சுதந்திரமாக இருந்தேன். அவர்கள் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும், வாழ்க்கையில் அவர்கள் இடத்தை நான் அடைந்து ஒரு புதிய தலைமுறையை உருவாக்கப்போவதாகவும் ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. “அத்தகைய ஒரு பொறுப்பை என்னால் சுமக்க முடியுமா? எவ்வளவு முடியுமோ அது வரை பெற்றோரின் கவனிப்பிலேயே இருப்பது எனக்குச் சாத்தியமாகுமா? என்னைப் போலவே என் வாரிசுகளும்

இருப்பார்களா? அவர்கள் தங்கள் முன்னோர்களுக்கு அனுசரணையாக இருப்பார்களா? எதிர்காலத்தில் என்ன நடக்கும்?" எனக்கு ஒன்றும் புரியவில்லை. என் வாழ்வில் நான் ஒரு கடினமான பாதையில் நடக்க இருக்கிறேன். 'அந்தப் பாதை சரியானதா தவறானதா' என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. இந்த திருப்பம் சில குடும்பங்களில் நல்லதாக அமைகிறது. சில குடும்பங்களில் அவ்வாறு அமைவதில்லை. இத்தகைய எண்ணங்கள், அதனால் எழுந்த அமைதியின்மை எல்லாம் என் முகத்தில் தெளிவாகத் தெரிந்தன. அதைக்கண்டு என் பெற்றோரும் என் சகோதரியும் கவலை அடைந்தனர்.

மகிழ்ச்சியோ துக்கமோ சிலரது முகத்தில் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது போல் பிரதிபலிக்கிறது. சிலர், மனதில் உள்ள மகிழ்ச்சியை, சொந்தக் காரணங்களுக்காக வெளியே காட்டிக்கொள்வதில்லை. மனதில் மகிழ்ச்சி பொங்கினாலும் சிலர், எப்பொழுதும் சோகமாகவே முகத்தை வைத்துக்கொள்ளும் இயல்பு உள்ளவர்களாக இருக்கின்றனர். 'மனதின் துக்கத்தை மறைத்துக்கொண்டு மகிழ்ச்சியாக இருப்பது போல முகத்தை வைத்துக்கொள்வது சரி' என்று சொல்லலாம். எனக்கு என்னவோ 'அது அபத்தம்' என்று தான் தோன்றுகிறது. அத்தகைய முகத்தோற்றம் ஏமாற்றுவித்தை! அது எப்படி சந்தோஷத்தை தர முடியும்? அத்தகைய நேரங்களில் புன்னகையோடு இருக்க முயற்சிக்கலாம். ஆனால் அந்தப் புன்னகையின் பலன் தானாக மறைந்து விடுகிறதே!

ஒரு மனிதர் தான் நேசிக்கும் ஒருவரது செயல்பாட்டை மாற்ற முயற்சிப்பது அந்த மனிதரின் அறிவு வளர்ச்சியின் அளவைப் பொறுத்திருக்கிறது. அவர் கோபத்தை காட்டலாம். இழிவாகப் பேசலாம், திட்டலாம், அடிப்பது போன்ற செயல்களிலும் ஈடுபடலாம். இத்தகைய நடவடிக்கைகளுக்கு தூண்டுதலாக இருப்பது அன்பு தான்.

அன்பைத்தவிர வேறு எதுவும் இல்லை. திடீரென்று அந்த மனிதரை கோபம் ஆட்கொள்ளுகிறது. அது முதல் கட்டம். அடிப்பது என்பது கடைசி கட்டம். இந்த நேரங்களில் ஒருவர் தன் மனதில் ஆழ்ந்து சிந்தித்தால். தன் செய்கைக்கு அன்பு தான் காரணம் என்பது புலப்படும். அவருடைய உள்மனது புன்னகையோடும் அன்போடும் என்ன சொல்லும் தெரியுமா? 'கோபப்படுவது, திட்டுவது எல்லாம் வேண்டாம், அன்பையும் பிரியத்தையும் காட்டு' என்றுதான் அது சொல்லும். சுய பரிசோதனை செய்பவர்களுக்கு எல்லாம் இது பொதுவான அனுபவம். முழுவதும் அன்பாகவே இருக்கும் உள்ளுணர்வு, உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் பரவி, தன் தாக்கத்தை உணர வைக்க முயல்கிறது. அந்நேரத்தில் உள்ளே இருக்கும் விரும்பத்தகாத எதிர்மறையான பொருள் அதைத் தடுக்கப்பார்க்கிறது. ஆகவே உள்ளுணர்வு சரியான சந்தர்ப்பத்தில் அதை வீழ்த்த முயற்சிக்கிறது. அதன் வெளிப்பாடு அநேகமாக கோபத்தின் வடிவில் இருக்கும். அது உள்ளேயிருந்து பொங்கி, உடலின் வெளிப்பக்கத்தின் அனைத்து திசைகளிலும் கோபாவேசமாகப் பரவுகிறது. அந்த மனிதரின் உடல், மனம், நேர்மறை அல்லது எதிர்மறையான அறிவின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து அது சமனடைகிறது அல்லது வெடித்து வெளிப்படுகிறது. இவ்விதமாக குவிந்திருக்கும் கோபம் அதன் எதிர்மறையான இயல்பின் காரணமாக அது இருக்கக் கூடாத உள்ளத்திலிருந்து அவ்வப்போது வெளித்தள்ளப்படுகிறது. அந்த இடத்தில் தூய்மையான அன்பு குடியேறி, தன் இயற்கையான பரிமாணத்தின் அளவிற்கேற்ப வளர்கிறது. இது, சுயதரிசனம் காண விரும்புவோர் அனைவரின் அனுபவமாகும். அப்படிப்பட்டவர்களின் உள்ளத்து அடிமட்டத்தில் தூண்டிவிடப் படுவதற்குப் போதுமான அளவு அன்பும் நேசமும் குடி கொண்டிருக்கும்.

சுயதரிசனம் காணவிரும்புவோர், தங்கள் உள்ளத்தின் அடி ஆழம் வரை சென்று தேடினால் அன்பைத் தவிர வேறு ஒன்றையும்

காணமாட்டார்கள். அன்பு என்பது சத்தியமான உண்மையின் விளைவு என்பதால் அது நிரந்தரமானதாகும். வேறெதுவும் மேலோங்கி அதை மறைக்க இயலாது.

அந்த சுயதேடலுக்குள் ஒருவர் ஆழ்ந்துவிடும் போது, அன்பைத் தவிர மற்ற யாவும் கரைந்து, மறைந்து விடுகிறது. அன்பு ஒன்று தான் எஞ்சி நிற்கும். அது அத்யாவசியமாகி, உள்ளேயும் வெளியிலும் வியாபிக்கிறது. உண்மையில் சுயதரிசனம் காண விழைவோர் 'பாற்கடலில் மந்தர மலையைக் கடைந்து அமுதம் எடுக்க முயன்றவர்களுக்கு' ஒப்பாவர். தூயமனமே மந்தரமலை! தூல உடம்பே பாற்கடல்! இந்தக் கடைதலின் விளைவாக நல்லதும் கெட்டதும் வெளிப்படுகின்றன. அவ்விதம் கடைபவர், தீயவற்றை விலக்கி, நல்லனவற்றை தேர்ந்தெடுத்து முடிவாக 'அமுதம் என்ற உயர்நிலையை' அடைகின்றனர். இந்த இயக்கத்தில் “மூலாதாரம்” கூர்மமாகச் செயல்படுகிறது.

என் மைத்துனர், அவரும் புதிதாக மணம் செய்து கொண்டவர், நான் கொண்டிருந்த சோர்வையும் கவலையையும் பற்றி விசாரித்தறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஒரு நாள் நான் வயலுக்குச் சென்று காலைக் கடன்களை முடித்துவிட்டு குளிப்பதற்காக கிணற்றடி வந்தேன். ஆனால் மனதில் பொங்கிய துக்கம் திடீரென வெளிப்பட, அழ ஆரம்பித்துவிட்டேன். என் மைத்துனர் அதன் காரணம் என்னவென்று விசாரித்தார். முதலில் நான் பேச மறுத்தேன். பின்னர், நான் விளக்கமளித்தாலும் மற்றவர்களுக்கு அது புரியாது' என்றேன். எனக்கு ஏதோ மோசமான குறைபாடு இருப்பதாக முதலில் நினைத்த அவர் திடுக்கிட்டுப் போனார். பலவிதமான கேள்விகளை அவர் கேட்கத் தொடங்கியதும் என் உடலில் ஏதோ கோளாறு இருப்பதாக அவர் எண்ணுவது எனக்குப் புரிந்தது. அதன்பின் 'எதையும் மறைப்பது சரியல்ல' என்று நான் தீர்மானித்தேன். 'என் பெற்றோரிடம் அதைப்பற்றி

சொல்வதில்லை' என அவரிடம் உறுதி மொழி வாங்கிக் கொண்டு, என் மனக்குழப்பத்தையும் சிந்தனையையும் பற்றி விளக்கமாகச் சொன்னேன். “என் பெற்றோர் மிக வயதானவர்கள். ஆகவே அவர்களைப் பிரிய நேர்ந்தால் நான் அதைத்தாங்க மாட்டேன்” என நான் சொன்னதும் அவர் பலமாகச் சிரித்துவிட்டு, “இதென்ன முட்டாள்தனம்? வாழ்க்கையில் இதெல்லாம் சர்வசாதாரணம். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை! இது உனக்கும் மட்டும் தான் நிகழ்கிறது என்று நினைக்காதே” என்றார். பின்னர் என் பெற்றோரிடம் சுருக்கமாக என் குழப்பத்தைப் பற்றி தெரிவித்து அவர்கள் கவலையைப் போக்கினார். ஆர்வமும், வெறுப்பும் ஒரே நேரத்தில் என் மனதில் அலை மோதின.

சாந்தி முகூர்த்தம் நடந்து முடிந்தது. எனக்கு அது ஏழுமலையானைத் தரிசிக்கச் சென்ற போது கிடைத்த அனுபவம் போன்றதாகவே இருந்தது. இதற்கு முன்பாக நான் வாத்ஸ்யாயன காம சூத்ரம் போன்ற சில நூல்களைப படித்து 'பாலியல்' பற்றி சிறிது தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் என் மைத்துனரின் அறிவுரைகளினால் நான் வெற்றி பெற்றேன். நாம் அன்றாட வாழ்வில் மருத்துவத்திலும் பொறிஇயலிலும், தகுதி அடைந்த ஆனால் அனுபவ அறிவு பெறாத பலரைப் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் தங்களது உதவியாளர்கள் அல்லது அதற்கும் கீழ்நிலையில் உள்ள பணியாளர்களின் துணையையும் கருத்துக்களையும் பெற்று, வெற்றி ஈட்டுபவர்களாக மாறுவதைப் பார்க்கிறோமல்லவா?

18

என் மனத்துயர்

இரண்டு மூன்று மாதங்கள் ஊரில் எங்கள் வீட்டில் இருந்து விட்டு என் இளைய சகோதரர்களுடன் சென்னைக்குத் திரும்பினேன். சில பொழுது என் மைத்துனர் இல்லத்திலும், சில பொழுது ஹோட்டலிலும் சாப்பிடுவோம். பின்னர் ஊர் திரும்பி என் மனைவியை அழைத்துக்கொண்டு வந்தேன். என் பழைய மனஉளைச்சல்கள் எல்லாம் பின்னுக்குப் போய்விட்டன. வீட்டில் குடும்ப மகிழ்ச்சியும், கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில் தீவிரமான படிப்பும் என் கவனத்தை முழுவதுமாக ஈர்த்தன. அப்பொழுது, நான் முன்பு பல கவிஞர்கள் எழுதியுள்ள தனிப்பாடல்களை சேகரித்து தொகுத்தேன். அவற்றை நூல் வடிவில் கொண்டு வர ஸ்ரீரெண்டால வெங்கட சுப்பாராவ் மிகவும் துணைபுரிந்தார். நூலை வாங்குபவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்காக 1000 ரிப்ளை கார்டுகள் வாங்கி (ஒரு கார்டு அப்போதைய விலையில் காலணா அதாவது 1/64 ரூபாய்) முழுதகவல்களையும், விலாசங்களையும் அச்சிட்டு அனுப்பினோம். முதலில் அச்சிட்ட ஆயிரம் பிரதிகளும் அதன் மூலமாக விற்றுத் தீர்ந்து விட்டன. பல பதிப்பகங்கள் என்னுடைய இந்த 'வெளியீடு விற்பனை' நடவடிக்கைகளால் ஏமாற்றம் அடைந்தன. வரிசையாக "பிரபந்த ரத்னாவளி" மற்றும் கவிஞர் பாஸரின் சில நாடகங்கள்' ஆகியவற்றை நான் மொழிபெயர்த்து வெளியிட்டேன். ஆனால் இந்த நூல்களை எல்லாம் பிற பதிப்பகங்கள் மொத்தமாக என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு சில்லரையில் அவர்களே விற்பனை செய்தார்கள். அப்பதிப்பகத்தார், முன்னதாக என்னிடம் வந்து "நீ புத்தகங்களை வெளியிடு. ஆனால் விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டு ஏன் சிரமப்படுகிறாய்? நாங்கள் உன் வெளியீடுகளை மொத்தமாக வாங்கி விற்பனை செய்கிறோம்" என்று சொல்லி என் சம்மதத்தை

பெற்றுக்கொண்டிருந்தார்கள். நடுவில் நான் நோய் வாய்ப்பட்டதும் அலுவல் வேலையாக பல ஊர்களுக்கு பயணம் செய்ய வேண்டியிருந்ததும் கூட, அப்படி மொத்தமாக நூல்களை அவர்களிடம் விற்றதற்கு ஒரு காரணம். இந்த புத்தக விற்பனையிலிருந்து கிடைத்த தொகை, ஓரளவு திருப்தியாக வாழ்க்கை நடத்த வழி செய்தது. என்னுடன் அப்போது இருந்த இரு இளையசகோதரர்களும் கெல்லட் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தனர். மூத்தவன் பின்னர் ராயபுரம் ஸ்டான்லி மருத்துவப் பள்ளி (அப்போதைய பெயர்)யிலும் மற்றவன் ஆயுர்வேதக்கல்லூரியிலும் படிப்பைத் தொடர்ந்தனர். நாங்கள் வசதியாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தோம்.

ஸ்ரீராமேசம் அவர்களுக்குத் தெரிந்தவர்களான ராமய்யா, நடேசன் போன்றவர்கள் புத்தகவியாபாரம் செய்தனர். அவர்கள் அச்சிட்டு விற்பனைக்காக புதிய புதிய புஸ்தகங்களை வரவழைப்பார்கள். வெளியிடுவதற்கு முன் ஸ்ரீராமேசம் அவற்றை அவ்வப்போது இரவல் வாங்கிப் படிப்பார். படித்த பிறகு நண்பர்களுடன் அவற்றிலுள்ள விஷயங்கள் குறித்து விவாதங்கள் செய்வார். பிரசுரம் ஆகுமுன் அவர் அவ்விதம் நண்பர்களுடன் அப்புத்தகங்கள் பற்றி விவாதிப்பது ஓரளவு அவற்றுக்கு விளம்பரமாகவும் அமைந்தது. அது அவரது புத்தக விற்பனை நண்பர்களுக்கு உதவியாகவே இருந்தது. அவர் புஸ்தகங்களை தீவிரமாகப் படிப்பது, என்னை மிகவும் கவர்ந்தது. அந்த விஷயத்தில் அவரைப் பின்பற்ற நினைத்த நான் நூலகத்திலிருந்து முடிந்தவரை புத்தகங்களைப் பெற்று படித்து விட்டு திருப்பித் தருவேன். இப்படி, படிப்பு எனும் பெருங்கடலில் மூழ்கிய எனக்கு அப்போது வயது 26.

திடீர் என ஆந்திரப் பகுதியில் காலராநோய் பரவியது. அது சென்னைக்கும் கூட வந்து விட்டது. பந்தரில் இருந்த என் மைத்துனரின் தாய், காலரா நோய்க்கு ஆளாகி மரணமடைந்தார். அவரது இறுதிச் சடங்குக்காக என் சகோதரியும் மைத்துனரும் பந்தருக்குச் சென்றனர்.

திரும்பி வரும்போது தங்களுடன் மக்காச்சோளம் என்ற தானியத்தை எடுத்து வந்தனர். அவர்கள் சென்னைக்கு வந்துவிட்ட செய்தி அறிந்து துக்கம் விசாரிக்க நான் சென்றேன். திரும்பும் போது உப்பு, மிளகுடன் வறுத்த சோளத்தை என்னிடம் கொடுத்து சாப்பிடுமாறு சொன்னார்கள். நான் ருசித்துச் சாப்பிட்டு என் இருப்பிடம் திரும்பினேன். நள்ளிரவு 2 மணிக்கு என் வயிற்றில் உபாதை ஏற்பட்டது. உடம்பிலும் ஏதோ வலி. நான் சாப்பிட்ட சோளம் ஆந்திராவிலிருந்து வந்தது. 'அதில் அங்கு பரவியிருந்த காலரா நோய்க்கிருமிகள் இருந்திருக்கும்' என்று நான் பயந்து விட்டேன். எனக்கு வயிற்று உபாதையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் போல் உணர்வு ஏற்பட்டது. நான் இருந்த சாத்தானி வீதியைச் சுற்றிலும் தென்னந்தோப்புகள் இருந்தன. அங்கு சென்று 'வயிற்று உபாதையை தீர்த்துக்கொள்ள உட்கார்ந்து விட்டு வருவோம்' என புறப்பட்டேன். அங்கு சென்று உபாதையைக்கழித்து விட்டு வீடு திரும்பி சுத்தம் செய்து கொண்டு ஈஸிசேரில் ஓய்வாக அமர்ந்தேன். ஓய்ச்சலாக இருந்த என் உடம்பில் ஒரு நடுக்கம் உண்டானது. எனக்கு எதிரே சில அடிகள் தூரத்தில் என் சகோதரியின் காலஞ்சென்ற மாமியாரின் உருவம் காட்சி அளித்தது. அறுபது வயதான அந்த மாது என்னை உற்றுப்பார்ப்பது போல் உணர்ந்தேன். என் உடலில் உதறல் எடுத்தது. அது போன்ற ஆவி உருவைப் பார்த்தே இராத நான், இரவு முழுவதையும் தூங்காமலேயே கழித்தேன்.

காலையில் படுக்கையை விட்டு எழுந்தபோது என் உடல் முழுவதும் வலித்தது. 'அலுவலகம் செல்ல வேண்டுமே' என்பதற்காக காலை உணவு சாப்பிட உட்கார்ந்தேன். இரண்டு கவளங்கள் உண்பதற்குள்ளாக என் உடல் ஜில்லிட்டிருப்பதாக உணர்ந்தேன். 'சாகப்போகிறோம்' என்று தோன்றியது. என் இரு சகோதரர்களும் பள்ளிக்கூடம் சென்று விட்டிருந்தனர். அந்த சமயத்தில் நாங்கள் தங்கி இருந்த இடத்தில் அடுத்து ஸ்ரீ சிந்தகுண்ட ராகவராவ் குடி இருந்தார். தற்சமயம் ஹைகோர்ட் நீதிபதியாக உள்ளார். அவர் என் நிலைமையைப்

பார்த்துவிட்டு டாக்டர் நாராயணஸ்வாமி நாயுடுவை அழைத்து வரச்செய்தார். அவர் வந்து என்னைப் பரிசோதித்த பிறகு சில மருந்துகள் கொடுத்து விட்டு 'பயப்படுவதற்கு ஒன்றுமில்லை' என்று கூறினார்.

முதல் உலக மகாயுத்தம் தொடங்கியிருந்தது. பல நாடுகள் போரில் ஈடுபட்டன. போர் சூழ்நிலை எனக்கு மிகுந்த மனத்துயரை உண்டாக்கியது. அதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நான் அப்போது நஞ்சுண்டராவிடம் சிகிச்சை பெற்று வந்தேன். நான்கைந்து நாட்கள் ஆனபின் திடீரென எனக்கு வியர்த்துக்கொட்டியது. மிகப்பலஹீனமாக இருப்பதை உணர்ந்தேன். அந்த நிலையிலும் என் மனதில் ஒரு சக்தி ஊற்றெடுத்தது. அந்த திடீர் ஊக்கம் டாக்டர் நஞ்சுண்டராவ் கொடுத்த மருந்துகளினால் இருக்கும் என நினைத்தேன். அன்று முழுவதும் என்னுள் உற்சாகம் கரைபுரண்டோடியது. நஞ்சுண்டராவ் சில நாட்கள் விடுமுறையில் செல்லுமாறு என்னிடம் கூறினார். ஒரு மாதம் விடுப்புக்கு விண்ணப்பித்துவிட்டு என் மனைவியையும் சகோதரர்களையும் சென்னையில் விட்டு விட்டு ஊருக்குப் புறப்பட்டேன். என் ஆசிரியர் வெங்கடசாஸ்திரியார் என்னிடம் ஒரு தங்க ஆபரணம் செய்து கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டிருந்தார். அதை வாங்கிக்கொண்டு நான் பந்தருக்கு செல்ல வேண்டி இருந்தது. மாலை 6 மணிக்கு அலுவலகப் பணி முடிந்த பிறகு நான் அதை நகைக் கடையிலிருந்து வாங்கி வர டவுனுக்குப் புறப்பட்டேன். நகைக்கடை சென்ன கேசவப்பெருமாள் கோயிலுக்கு அருகில் இருந்தது. கடை உரிமையாளர் செட்டியாரை, நகைக்கு ஆர்டர் கொடுக்கச் சென்ற போது முன்பே பார்த்திருக்கிறேன். அவரது சகோதரரும் அப்போது அங்கிருந்தார். 'அவரைக்காணேமே' என்று சாதாரணமாகக்கேட்டேன். 'இரண்டு வாரங்களுக்கு முன் போய்ச் சேர்ந்துவிட்டார்' என்றார் அவர் சோகமாக. நான் திடுக்கிட்டுப்போனேன். அவரே விஷயங்களை விவரித்தார், பக்கத்திலிருந்த கன்யகா பரமேஸ்வரி கோயிலில் திருவிழா நடந்தது. அதற்கு அச்சகோதரர் சென்றிருந்தார்.

இரவு 10 மணிக்கு திடீரென ஒரு வெடிச் சத்தம் கேட்டது. சீறிக்கொண்டு சத்தத்துடன் ஒரு ஒளிப்பிழம்பு வந்து அவர் சகோதரரைத் தாக்கியது. அந்த முதல் உலகமகாயுத்தத்தின் போது சென்னை கடற்கரையை நெருங்கிய ஜெர்மன் போர்க்கப்பல் எம்டன்[28] வீசிய குண்டின் ஒரு சிதறலான அது பட்டதும் செட்டியாரின் சகோதரர் ரத்தம் கக்கிக்கொண்டு கீழே விழுந்தார். அவர் உயிர் உடனே பிரிந்து விட்டது.

அதைக்கேட்ட நான் அதிர்ச்சி அடைந்தேன். என் உடல் ஜில்லிட்டு நடுங்கியது. என் நடுக்கத்தை மறைத்தவாறே நகையைப் பெற்றுக்கொண்டபின் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலிருந்த, ஸ்ரீபுராணம் சூரிய நாராயண சாஸ்திரியின் வீட்டுக்குப்போனேன். எனக்குத் தெரிந்தவர் அவர். அவர் வீட்டுக்குள் நுழைந்தபோது என் கால்கள் தள்ளாடின. காலைச் சாப்பாட்டுக்குப் பிறகு நான் எதையுமே உண்ணவில்லை. இடைவேளையில் காஃபி சாப்பிடும் பழக்கமும் எனக்குக் கிடையாது. பலஹீனமான குரலில் சாஸ்திரியிடம், என்னுடன் துணையாக வீட்டுக்கு வருமாறு அழைத்தேன். அவர் 'பங்' என்ற போதைப் பொருளுக்கு அடிமையானவர். அப்பழக்கம் அவர் விஜயநகரத்தில் இருந்தபோது பிடித்துக்கொண்டதாம். “இது பங் அடிக்கும் நேரம். அதை அடித்தபின்தான் என்னால் எங்கேயும் வர முடியும்” என்றார் சாஸ்திரி. வேறு வழி தெரியாமல் அவர் 'பங்' எடுத்துக்கொள்ளும் வரை அங்கேயே காத்திருந்தேன். அதை தானே தயாரித்து உட்கொண்ட பின் அவர், திருவல்லிக்கேணிக்கு என்னுடன் டிராம் வண்டியில் துணையாக வந்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஜெர்மன் போர்க்கப்பல் எம்டன், சென்னையின் கடலோரம் வந்து பாரிஸ் கார்னர் பகுதியில் குண்டு வீசிய சம்பவம் ஊரையே கலக்கி இருந்தது. ஆதனால் நான் நோய்ப்பட்டு வீட்டிலேயே அன்று அடைபட்டுக்கிடந்ததால் அது முதலில் அன்று எனக்குத் தெரியாமற் போய்விட்டது. மறு நாள் எல்லோரும் அதைப்பற்றிப் பேசியபோதுதான் நானும் தெரிந்து கொண்டேன். அக்குண்டு வீச்சால்

நகைக்கடை செட்டியாரின் தம்பி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்த பின் நான் மிகவும் வருத்தப்பட்டேன். அரசாங்கம் நல்ல நிலையிலிருந்த வாலிபர்களை எல்லாம் கட்டாயப்படுத்தி ராணுவத்தில் சேர்த்து போர்முனைக்கு பலிக்கடாக்களாகி அனுப்பி வந்தது. என்றாலும் இந்திய மண்ணில் போர் நடக்கவில்லை. 'நகைக்கடை அதிபர் செட்டியாரின் சகோதரர் எதேச்சையாக குண்டுவீச்சில் இறந்திருக்கிறார். போரில் நேரடியாக ஈடுபடுவோருக்கு என்ன நடக்கும்?'என்ற சிந்தனை என்னை மிகவும் மனச்சஞ்சலத்தில் ஆழ்த்தியது.'போரினால் விளைவது மரணம்' என்ற துயர எண்ணம் என்னை நிழல்போல்,செல்லுமிடமெல்லாம் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. அது என்னைப்பொறுத்தவரை வாழ்வும் இல்லை, சாவும் இல்லை என்ற நிலை தான்.

19

உடல்நிலை பாதிப்பு

அந்தக்காலகட்டத்தில் அலுவலகத்தில் நான் நல்ல பதவியில் இருந்தேன். நல்ல சம்பளமும் கிடைத்தது. கீழ்த்திசைச்சுவடிகள் நூலகத்தை வளர்ச்சி பெறச் செய்வதற்காக அப்போதைய சென்னை மாகாணம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அபூர்வமான கை எழுத்துச்சுவடிகளை சேகரிக்கும் பணிபுரிய அரசாங்கம் சில புதிய அலுவலர்களை நியமித்தது. எனக்கும் பதவி உயர்வு அளித்து, அதில் ஒரு அலுவலராக நியமித்தார்கள். ஆனால் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் நான் விடுப்பில் செல்லும்படியாக ஆயிற்று. அரிய சுவடிகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள் சேகரித்து வர வேண்டும் என்பதால் அந்த உயர் பதவிகள் தற்காலிமாகவே ஏற்படுத்தப்பட்டிருந்தன. சுற்றுப்பயணத் திட்டம் தயாராகி புறப்பட வேண்டிய நிலையில் உடல் நிலை பாதிக்கப்பட்ட நான் விடுப்பு கோரும்படி ஆனது. ஆகவே என்னை அப்பதவியிலிருந்து கீழே இறக்கி வேறொருவரை நியமித்தார்கள். விடுப்பு எடுத்துக்கொண்ட நான் என் சொந்த ஊருக்குப் புறப்பட்டேன். அந்த உடல்நிலை பாதிப்பு மூன்று ஆண்டுகள் நீடித்தது. நோய்வாய்ப்பட்ட நேரத்தில் டாக்டர் நஞ்சுண்டராவ் பலவிதமான மருந்துகளை எனக்குக்கொடுத்தார். ஆனாலும் என் உடல்நிலை சீராகவில்லை. மாறாக அதிகம் தான் ஆயிற்று. ஒரு நாள் நஞ்சுண்டராவ் “மருந்துகள் வேண்டாம் 'சானிடோசன் டானிக்' மட்டும் போதும்” என்று சொல்லிவிட்டார். ஊருக்குச் சென்ற பின்பு சிறிது காலம் நான் அந்த டானிக்கை மட்டும் சாப்பிட்டு வந்தேன்.

ஒரு நாள் இரவு சாப்பாட்டுக்குபின் 'சானிடோசனை' பாலுடன் கலந்து குடித்தேன். கொஞ்சநேரம் ஆன பிறகு என் உடலில் இருந்த நரம்புகள் ஒரு விதமாக முறுக்கேறுவது போல் இருந்தது. நரம்பு வாத்தியத்தை யாரோ மீட்டுவது போல என் நாடிநரம்புகள் மீட்டப்படுவதாக

உணர்ந்தேன். ஒரு ஸ்ப்ரிங் கட்டிலில் படுத்திருப்பவன் மேலும் கீழும் ஆடுவது போல, என் உடல் ஆடத் தொடங்கியது. அன்று இரவு தூக்கமே இல்லை. அதன் பின் சானிடோசனை நிறுத்தி விட்டு குளிர்ச்சியான உணவு வகைளை சிறிதளவு உண்ணத் தொடங்கினேன். உடல் நிலை சற்று தேறுவது போல் காணப்பட்டது. சில இரவுகளில் தூக்கமும் வந்தது. மூன்று நான்கு மாதங்களுக்கு நான் எடுத்திருந்த விடுப்பு காலம் முடிவுக்கு வந்தது. ஒவ்வொரு நாளும் ஆந்திர பத்ரிகாவில் நான் உலகப்போர் நிகழ்வுகளைப் பற்றியும் சேதவிவரங்கள் பற்றியும் படித்து மிகவும் சோர்வு அடைந்தேன். என் உறவினர்கள் பலர், 'நான் சிறிதும் மன உறுதி அற்றவன், தலைவலி, வயிற்றுவலி கூட இல்லை. வீணில் உட்கார்ந்து வெட்டிப் பொழுது போக்குகிறேன்' என்று விமர்சிக்கத் தொடங்கினர். என்னால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. என் பெற்றோர், மனைவி, மூத்த சகோதரி ஆகியோர் இதனால் மிகச் சங்கடப்பட்டனர். நான் சென்னைக்குத் தனியாக புறப்பட்டுப்போய் வேலையில் சேருவதென்று முடிவெடுத்தேன். ஒரு மாட்டு வண்டியிலேறி பந்தர் சென்று ஒரு நண்பன் வீட்டில் தங்கினேன். அங்கிருந்த போது என ஆசிரியர் வெங்கடசாஸ்திரியாரைப் பார்க்கப் போனேன். அவருடன், அங்கே பெயர் வாங்கியிருந்த ஒரு அலோபதி மருத்துவரிடம் சென்றேன். அவர் மருத்துவப்பட்டம் பெற்றவர் அல்ல. ஆயினும் மருத்துவப் பள்ளியில் படித்த அனுபவசாலி. அவர் நஞ்சுண்டராவ் கொடுத்திருந்த மருந்துகளின் பட்டியலைப் பார்த்துவிட்டு, “அவற்றில் ஒன்றை மட்டும் வாங்கி, முழுபாட்டில் மருந்தையும் குடி. உடல்நிலை சீர்படும்” என்றார். நான் தாமதியாமல் அந்த மருந்தை வாங்கிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டேன். அந்த மருந்தை, பந்தர் டாக்டர் சொல்லி இருந்தமாதிரி குடித்து விட்டு வேலையில் சேர்ந்தேன். ஒரே நாளில் அந்த மருந்தின் மோசமான தாக்கத்தை உணர்ந்தேன். உடல் முழுதும் திகு திகு வென்று எரிவது போல இருந்தது. தூக்கம் போய்விட்டது. நரம்புகள் தளர்ச்சி அடைந்து சுருண்டுபோனேன். “உடம்பு கெட்டது கெட்டது தானோ? அந்த

மருந்தை தொடர்ந்து குடிப்பதா வேண்டாமா?" டாக்டர் நஞ்சுண்டராவிடம் மீண்டும் போகலாமா வேண்டாமா?" என்று ஒரு முடிவுக்கு வராமல் தவித்தேன். ஆனாலும் வேறுசில பிரசித்தியான டாக்டர்களைப் போய்ப்பார்த்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளால் ஒரு பயனும் கிட்டவில்லை. உடல் நோயுடன் திருவல்லிக்கேணியில் இருந்த வேறு ஒரு டாக்டரிடம் போனேன். அவர் எனக்கு பாஸ்பரஸ் அடங்கிய பத்து மாத்திரைகளை கொடுத்து ஒரு நாளைக்கு இரு வேளையில் ஒன்றொன்று சாப்பிடும்படியும் ஐந்து நாட்களுக்குப் பிறகு வருமாறும் சொன்னார். அதன்படியே நானும் செய்தேன். விளைவு இன்னும் மோசம். எப்போது பார்த்தாலும் தாகம்! தூங்கவே முடியவில்லை. உடம்பே சிவந்த நிறமாகிவிட்டது. வயிற்றிலும், குடலிலும் ஒருவித எரிச்சல்.

20

'மருந்துகளே வேண்டாம்' என்ற முடிவு

மறுபடியும் டாக்டர் நஞ்சுண்டராவிடம் போய் உடம்பைக்காண்பித்தேன். 'இதுவரை என்னென்ன மருந்துகள் சாப்பிட்டேன்; அதனால் ஏற்பட்ட விளைவுகள்' அனைத்தையும் நான் விவரித்ததைக் கேட்ட அவர், என்னை கடுமையாகக் கோபித்துக்கொண்டார். 'நான் உயிரோடு இருக்க விரும்பினால் யாரிடமும் போய் எந்த மருந்தையும் வாங்கி உட்கொள்ளக்கூடாது. உடல்நிலை சரியாவதற்காக சில ஆண்டுகள் ஆனாலும் சரி, என் சொந்த ஊருக்குப் போய் ஒய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்றும் அறிவுறுத்தினார். அத்துடன் சில மருந்துகளையும் எழுதிக் கொடுத்தார். அவற்றினாலும் பலன் இல்லை. என் தலையிலிருந்து பொடுகுகள் பெருகி, அதிக அளவில் உதிர ஆரம்பித்தன. நஞ்சுண்டராவ் கூறியபடி ஊருக்குச் சென்று சில மாதங்கள் இருந்தேன். குளுமையான, எளிமையான உணவுகளை உட்கொண்டும் தண்ணீர் தொட்டியில் நெடுநேரம் அமிழ்ந்து குளித்தும் வந்தேன். உடம்பு எரிச்சல் குறைந்து சிறிது ஆறுதல் கிடைத்தது.

சில சமயம் 'மருந்துகளே வேண்டாம்' என்ற சொற்கள் என் மனதில் அடிக்கடி உதிக்கும். அப்போதெல்லாம் 'என்ன வந்தாலும் சரி உயிரே போனாலும் சரி, இனி மருந்துகளே கூடாது' என்ற எண்ணம் தோன்றி வளரத் தொடங்கும். உடல் வாகினைக்கருத்தில் கொள்ளாது, மருந்துகள் பற்றிய முழுமையான ஞானம் இன்றி, மருந்துகள் தயாரிப்பில் சேர்க்கப்படும் பொருள்களால் உடலுக்கு என்ன தாக்கம் ஏற்படும் என்ற யோசனையும் இல்லாது, உடற்பரிசோதனைகளைப் பற்றிய அரை குறை அறிவுடன் மருந்துகளை உட்கொள்ளக்கொடுப்பது 'குருட்டு எருது, வயல் வெளியில் தறிகெட்டு ஓடுவதற்குத்தான்' ஒப்பாகும். 'யூகத்தின் பேரில்

மருந்துகள் கொடுக்கும் முறை மருத்துவ சிகிச்சைக்கான அறிவியல்' என நியாயப்படுத்தப்படுகிறது. இத்தகைய சிகிச்சை முறைகளுக்கு என்னை உட்படுத்திக்கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்தேன். இப்படி நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில் ஏன் வருஷக்கணக்கில் நான் தூக்கமின்மை, உடல் நோவு ஆகியவற்றால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாலும் என் மனம் உறுதியாகவும், அறிவு கூர்மையாகவும், நினைவாற்றல் குறையாமலும்தான் இருந்தது. ஆனால் ஒரு குறைபாடு என்னவென்றால் என்னால் சேர்ந்தாற்போல ஒரு அரைமணி நேரம் உட்கார்ந்து படிக்கவோ வேறு எந்தவிதமான மனதுக்கு வேலை கொடுக்கும் செயல்புரியவோ முடியாமல் இருந்தது. பத்து நாட்களுக்கு ஒரு முறை விளக்கெண்ணெயும், சில மூலிகை கஷாயங்களும் உட்கொள்வேன். நான்கைந்து நாட்கள் உடல் உபாதையின்றி இருப்பேன். பிறகு மறுபடியும் வயிற்றில் எரிச்சல், தூக்கமின்மை போன்ற உடல் நோவுகளால் அவஸ்தைப்படுவேன். எளிமையான, குளுமையான உணவும், தண்ணீர்த்தொட்டி குளியலும் சிறிது நிவாரணம் கொடுத்தது. தொடர்ந்த நீர்த் தொட்டி குளியலால், விளக்கெண்ணெய் உட்கொள்ளும் தேவை நின்றது. 'ஆந்திரபத்ரிகா' தினசரியை நான் தினமும் படித்து போர்ச் செய்திகளை தெரிந்து கொள்வேன். (இன்றளவும் அதைப் படிக்கும் பழக்கம் என்னிடம் உள்ளது). பத்திரிகை படிப்பதை நிறுத்தவும் முடியவில்லை; போர் காரணமாக ஏற்படும் துயரச் சம்பவங்களால் மனம் வருந்தாமலும் இருக்க முடியவில்லை. அதை நினைத்து இரவு முழுதும் விழித்துக்கொண்டே இருப்பேன். பகலிலும் தூக்கம் வராது. வீட்டில் உள்ள சிலராவது என் நிலைமை பற்றி கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். ஆனால் இதை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள். சில சமயம் என்னை ஒரு மெல்லிய தூக்கம் ஆட்கொள்ளும். அதைப் பார்த்து, வீட்டார் 'எப்படியாவது உறங்குகிறானே!' என்று திருப்தி அடைவார்கள். ஆனால் அத்தூக்கம் மிக மெல்லியது. ஒரு ஊசி கீழே விழுந்தால் கூட எனக்கு விழிப்பு வந்துவிடும்.

அவ்விதமான நேரங்களில் பல எண்ணங்கள் என் மனதில் தோன்றும். ஒரு தேவதை தோன்றி "நீ பெரிய பாவம் செய்திருக்கிறாய். அதனால்தான் துன்பப்படுகிறாய். அதற்குப் பரிகாரமாக குளோரபார்ம் கொடுக்காமல் உன் வலது கையை கத்தியால் ஒரே வெட்டில் துண்டித்துவிடுகிறேன். உனக்கு அப்போது தாங்க முடியாத வலி ஏற்படும். ஆனால் அதன் பின் வலி இருக்காது. ஒரு கையை இழந்தாலும் நீ எவ்வித துன்பமும் இன்றி, பின்னர் வாழ்வாய். உன் பதில் என்ன?" என்ன கேட்டிருந்தால் நான் 'சரி' என்று சொல்லி இருப்பேன். அவ்வளவு தூரம் எனக்கு சலிப்பு ஏற்பட்டு விட்டது. இந்தவித எண்ண ஓட்டத்தை சில நேரம் மற்றவர்களிடம் வெளிப்படுத்துவேன்.

"நித்யகண்டம்; ஆயிரம் வயது வாழ்க்கை (பூர்ணாயுஸ்)" என்ற பழமொழியை நானே சொல்லிக்கொள்வேன். தினம் தினம் வீட்டுக்கதவருகே "கண்டம்" காத்திருக்கும் போது யாருக்கு வேண்டும் ஆயிரம் வயது! "சர்வம் துக்கம்! சகலமும் மாயை. சகலமும் உன் பிரதிபலிப்புதான்" என்ற பௌத்த சமயத்தவரின் போதனையை அடிக்கடி நான் சொல்லிக்கொள்வேன்.

பவபூதியின் உத்தரராம சரிதத்தை நான் விரும்பிப் படித்திருக்கிறேன். அதில் உள்ள 'ஜகஜ்ஜீர்நாரண்யம்'[29] என்ற வார்த்தை அடிக்கடி என் மனதில் எதிரொலிக்கும். அது எவ்வளவோ விளக்கங்களை எனக்குக் கூறும். ஒரு காடு. அதில் நறுமணம் வீசும் பூச்செடிகள், அழகிய நீர்ப்பரப்பு, நிழலும் கனிகளும் தரும் மரங்கள், இனிய குரலில் கூவும் குயில்களும் மற்ற பறவைகளும் உள்ளன. எனினும் அதில் முட்செடிகளும் கள்ளிகளும், புலி போன்ற கொடிய மிருகங்களும் அடர்ந்த புதர்களில் நெளியும் பாம்புகளும் கூட இருக்கின்றன. ஆனாலும் திடசித்தமுள்ள ஒருவன் தக்க பாதுகாப்புகளுடன் அக்காட்டில் நுழைந்து தனக்கு வேண்டியவற்றை சேகரித்துக்கொள்வான். ஆனால் 'ஜீர்னாரண்யம்' என்பது ஓர் இறந்தகாடு. அதில் மணம் தரும் மலர்கள் உள்ள செடிகளும்,

கனிகளும், நிழல்களும் தரும் மரங்கள் இருக்காது. குளிர்ந்த நீர்ப்பரப்பு இராது. அது வறட்சியான, கள்ளிச் செடிகளும், துஷ்டமிருகங்களும் மட்டுமே இருக்கும் காடு. அதில் போய் ஒருவன் மாட்டிக்கொண்டால் அவனால் அங்கு இறுதியைத்தான் சந்திக்க முடியும். வறண்ட காட்டில் அலைய நேர்ந்த ஒருவன் காணும் இந்த உலகைத்தான் நானும் காண்கின்ற நிலையில் இருந்தேன்.

21

ஒளியும் நிழலும்

असुर्या नाम ते लोकाः तमसा आवृत्ताः

ताम्स्ते प्रीत्या अभिगच्छन्ति एके च

आत्महनौ जनाः -ईशा.

பவபூதி தன் கவிதையில் அடிக்கடி சொல்லும் சில நம்பிக்கையூட்டும் வரிகள் என் நினைவுக்கு அவ்வப்போது வரும். அதனாலேயே என்னுள்ளே எழுந்த தற்கொலை எண்ணம் குறையும். சிறுவயதிலிருந்தே என்னுள் இருந்த மின்னும் நட்சத்திரமான சுய சிந்தனை நான் குப்புறப்படுத்துக் கொண்டிருக்கும் போது கூட ஒளிவீசும். அந்த ஒளியே எனக்கு ஊக்கம் தந்து என்னை வாழ வைத்தது.

நான் மருந்துகளை நிறுத்தி விட்டதால் என் சுற்றத்தார் மந்திரிப்பது போன்றவற்றில் இறங்கினர். ஆனால் அவர்கள் யாராவது மந்திரவாதிகளை கூட்டிக்கொண்டு வருவதாகப் பேச்சு எடுத்தால் நான் அதற்கு மறுப்பு தெரிவிப்பேன். அவர்களைப் பற்றியும் அவர்களது செயல்களைப் பற்றியும் எனக்கு நன்கு தெரியும். ஆகவேதான் அதற்கெல்லாம் உடன் படவில்லை. ஒரு முறை வேத சாஸ்திரங்களில் சிறிது பரிச்சயமுடைய ஒருவர் வந்து என் தேக நலனைப் பற்றி விசாரித்தார். அவர், 'நன்கு கற்றறிந்த பண்டிதர்' என்று எண்ணிய நான், என் உடல் உபாதைகளை எல்லாம் விளக்கமாகக்கூறினேன். அவர் உடனே "எனக்கு ஐம்பது ரூபாய்கள் கொடுங்கள். உங்களைப் பிடித்திருக்கும் மோகினிப் பேயை விரட்டி விடுகிறேன்" என்றார். நான் அவர் எதிரிலேயே அந்த யோசனையை நிராகரித்தேன். எங்கள் ஊருக்குப் பக்கத்தில் இருந்த ஒரு கிராமத்தில் ஒரு பக்திமானான பிராமணர் இருந்தார். அவர் ஒரு நாளைக்கு ஆயிரம் காயத்ரி ஜபம் செய்பவர். அவரை வைத்து நாற்பது நாட்கள் காயத்ரிமந்திர[30] ஹோமம் செய்ய எங்கள் வீட்டார் தீர்மானித்தனர். நான் சம்மதிக்காவிட்டாலும்

அவரை வரவழைத்து ஹோமம் தொடங்கினர். நாற்பது நாட்கள் ஜப ஹோமம் நடந்தது. 'அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை' என்றேன் நான். என் வீட்டார் 'என் ஜாதகத்தில் கிரஹநிலை சரியில்லை அல்லது என்னைப் பிடித்திருக்கும் கெட்ட ஆவிதான் என் உடல்நிலை சீர்கேட்டுக்குக் காரணம்' என்று என்னிடம் வாதிட்டதோடு என் நம்பிக்கை இன்மையையும் குறை கூறினர். நான் "ஆமாம். எனக்கு நம்பிக்கை இல்லைதான். நம்பிக்கை வரும்படியாக நீங்கள் ஏதாவது செய்யுங்கள்" என்று பதிலளித்தேன். நாற்பதாவது நாள் காயத்ரி ஜப ஹோம முடிவில் தடபுடலாக 'பிராமண போஜனத்திற்கு' ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் மூலம் எனக்கு உடல்நிலை தேறுமாம். "அதெல்லாம் பயன் தராது. தண்டச் செலவுதான்" என்றேன் நான். காயத்ரி ஜப ஹோமமும் பலன் தரவில்லை. நான், தண்ணீர் தொட்டி குளியல், எளிய பத்திய உணவு இவற்றிலேயே கவனம் செலுத்தினேன். அவற்றால் சிறிது நிவாரணம் கிடைப்பது போலத் தோன்றியது.

சென்னையில் நான் பணி புரிந்த அலுவலகத்தில் என் இடத்தில் நியமிக்கப்பட்ட ஒருவர் திடீரென மலேரியா காய்ச்சலால் தாக்குண்டு, சிகிச்சை பலனில்லாமல் உயிரிழந்து விட்டாராம். என் மேலதிகாரி ஸ்ரீ குப்புசாமி சாஸ்திரி எனக்கு நேரடியாகக் கடிதம் எழுதி, பணியில் உடனே வந்து சேருமாறும், எனக்கு வசதியாக சுற்றுப்பயணம் செய்யும் பிரிவில் வேலை கொடுப்பதாகவும் தெரிவித்திருந்தார் விரைவில் வருவதாக நான் பதில் அனுப்பினேன்.

அந்த சமயம் குண்டூரில் ஆந்திர சாஹித்ய பரிஷத்தின் ஆண்டுவிழா நடந்தது. தலைமை வகித்தவர் என் மரியாதைக்குரிய வேதம் வெங்கட்ராய சாஸ்திரி. என் நண்பர் ஸ்ரீராமகிருஷ்ண கவி, 'தான் சென்னை செல்ல இருப்பதாகவும் அங்கு என்னை சந்திப்பதாகவும்', எழுதி இருந்தார். நான் குண்டூருக்கு வருவதாகவும் அங்கு பார்க்கலாம் எனவும் பதில் எழுதிவிட்டு புறப்பட்டேன். விழா நிகழ்ச்சியில் பார்வையாளராகக் கலந்து கொண்டாலும் நான் அதிகம் அவற்றில்

கவனம் செலுத்த இயலவில்லை. காரணம் குண்டூரில் நிலவிய கோடை வெப்பம். என் நண்பர் கனுபர்தி மார்கண்டேய சர்மா இல்லத்தில் தங்கி இருந்த நான், அங்கிருந்த தண்ணீர் தொட்டியில் அமிழ்ந்து குளித்ததில் சிறிது நிவாரணம் பெற்றேன்.

ஊருக்குத் திரும்பி வந்ததும் சென்னை புறப்பட ஆயத்தமானேன். உற்றாரும் உறவினரும், சென்னை செல்லுமுன் மங்களகிரி சென்று அங்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியை தரிசிக்குமாறு வற்புறுத்தினர். நாமசங்கீர்த்தனம் இசைப்பதில் வல்லவரான ஒரு பிராமணரும் என்னுடன் வந்தார். நாங்கள் இருவரும் மங்களகிரியில், ஒரு பக்தி சிரத்தை மிகுந்த பாலாம்பாள் என்பவரது வீட்டில் தங்கினோம்.

நரசிம்ம ஸ்வாமிக்கு வழக்கமான பானக அபிஷேகம் நடந்தது. அப்போது அவருக்கு வெள்ளிக்கவசம் போட்டிருந்தார்கள். எனக்கு அது தொடர்பாக ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதை நான் வெளியிட்டபோது பக்கத்திலிருந்த ஒருவர் 'தெய்வம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கேள்விகள் எழுப்பக்கூடாது' என அறிவுறுத்தினார். மூலவருக்கு ஏதாவது சமர்ப்பிக்க நினைத்தாலும், பின்னர் 'அதைவிட நாங்கள் தங்கி இருந்த பாலாம்பாள் அம்மையாருக்கு கொடுப்பது நல்லது' என்று எனக்குத் தோன்றவே மனதை மாற்றிக் கொண்டேன். ஆனால் பாலாம்பாள் அம்மையாரிடம் அதை தெரிவித்த போது அவர் எதையும் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். “நீங்கள் என் வீட்டில் விருந்தாளிகளாக தங்கி இருக்கிறீர்கள். உங்களிடமிருந்து எதையும் வாங்கிக் கொண்டால், நான் உணவு விடுதி நடத்துவதுபோல ஆகிவிடும். அப்படியும் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் ஊருக்குப் போய் அனுப்புங்கள்” என்றார் உறுதியாக.

நான் சென்னைக்கு வந்து கடற்கரை ஓரமிருந்த பக்கிங்ஹாம் விடுதியில் சில நண்பர்களுடன் சேர்ந்து தங்கினேன். அதன் உரிமையாளர் ஜனார்தன் என்னுடன் நல்ல நட்பு பூண்டார். விடுதியிலேயே

உணவும் உட்கொண்டேன். வேலையில் சேர்ந்த பத்து நாட்களுக்குள் ஐந்து நாட்கள் தற்செயல் விடுப்பு எடுத்துக் கொள்ளும்படி ஆயிற்று. இரவு நேரங்களில் தூக்கமே வரவில்லை. முன்புபோலவே வயிற்றில் எரிச்சலும், உடல் முழுதும் சூடு ஆவதும் வந்துவிட்டன. மிகவும் கஷ்டப்பட்டேன். என் பால்ய சிநேகிதர் ராயப்ரோலு சுப்பராவும் என்னுடன் தங்கி இருந்தார். அவர் உதவியுடன் டாக்டர் லக்ஷ்மிபதியைப் பார்த்தேன். முற்றிலும் பரிசோதனைகள் செய்த பின்பே மருந்துகள் கொடுக்கும் பழக்கம் உடையவர் அவர். உணவு உட்கொள்ளுவதில் கட்டுப்பாடுகள் விதிப்பதில் நம்பிக்கை கொண்டவர். உடனடியாக தேவையற்ற மருந்துகளைக் கொடுப்பது அவருக்கு பிடிக்காது. அவரும் எனக்கு நண்பர் ஆகிவிட்டார். என் நோய் பற்றிய அனைத்து தகவல்களையும் கேட்டறிந்த பின், என் நரம்புகளின் இறுக்கத்தைக் குறைக்க சில மருந்துகள் கொடுத்தார். அதை சாப்பிட்ட ஒரு நாள் நன்றாக இருப்பேன். மறுநாள் படுக்கையில் விழுந்து விடுவேன். மூட்டுகள் எல்லாம் கழன்று விடுவது போல் உணர்வு பிறக்கும். அந்த மருந்தை நிறுத்திவிட்டேன்.

வேலையில் தொடர்ந்து நீடிப்பது முடியாத காரியம் என்று புலப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன், நான் கொடுத்த விடுப்பு விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட மேல் அதிகாரி, 'இனிமேல் விடுப்பு கோரினால் வீட்டுக்கு அனுப்பி விடுவோம்' என்று எச்சரித்தார். அதுவரை என் மீது பரிவு காட்டி வந்த அவர், இப்போது பொறுமை இழந்துவிட்டார். மறுநாள் எப்படியோ குளியலை முடித்துவிட்டு உணவு உட்கொள்ளப் புறப்பட்டேன். 'இனி இதற்குமேல் ஏதும் செய்வதற்கில்லை' என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். 'இந்த நிலையில் வீட்டுக்குத் திரும்புவது மரணத்தை சந்திப்பதாகத் தான் இருக்கும்' என எண்ணியவாறு கையில் உள்ள ரூபாய்களைக் கணக்கிட்டேன். கொஞ்சம் பணம் இருந்தது. 'அதை வைத்து ஹரித்வார் வரை செல்வோம். வழியில் கிடைத்ததை உண்பது' என்று தீர்மானித்தேன். 'மஹாபிரஸ்தானம்[31] என்ற புனித யாத்திரையை மேற்கொண்டு கங்கையில் விழுந்து கலந்து விடுவது'

என்பது என் திட்டம். 'தற்கொலை செய்து கொண்டால் நரகம் தான் கிடைக்கும்' என்ற எண்ணம் என்னை தடுத்தாலும் பாரத இதிஹாசத்தில் பாண்டவர்கள் 'மஹாபிரஸ்தானம்' செய்தார்களே, என ஆறுதல் சொல்லிக்கொண்டு, ஹரித்வார் செல்லும் எண்ணத்தை உறுதிப்படுத்திக்கொண்டேன்.

'மேல் அதிகாரி என்னை பதவி நீக்கம் செய்யும் வரை ஏன் காத்திருக்க வேண்டும்?' என்று தோன்றியது. ஆகவே 'நாமே ராஜினாமா செய்து விடுவோம்' என்று முடிவெடுத்தேன். அதன்படி ராஜினாமா கடிதம் எழுதி எடுத்துக்கொண்டு காலை 9.30 மணிக்கு நண்பன் ஜனார்தனைப் பார்க்கப் புறப்பட்டேன். என் உடல் நோயைப் பற்றி என்னைவிட அதிகக்கவலைப்படுவான் அவன். ஜனார்தன் எனக்காக உணவு விடுதியில் காத்திருந்தான். எனக்குப் பிடிக்கும் என்று மிளகாய், மிளகு அதிகம் இல்லாத பொறியல், கூட்டு, ஊறுகாய் ஆகியவைகளை தயார் செய்யச் சொல்லி இருக்கிறான். அந்த உணவு வகைகள் மிக ருசியாக இருந்தன. நான் சுவைத்துச் சாப்பிட்டேன். மனதுக்கு மிகவும் தெம்பாக இருந்தது. உடலிலும் நோவு, இருப்பதே தெரியவில்லை. உற்சாகம் ஏற்பட்டது. கூடவே தடுமாற்றமும் பிறந்தது. 'அலுவலகத்திற்குப் போகலாமா?' என்று யோசித்தேன் “எனக்கு உடல்நிலை சரியாகி விடுமோ? இன்று உண்டாகி இருக்கும் தெம்புக்கு என்ன காரணம்? தெரியவில்லையே! ம்ஹூம் என்னால் வேலை செய்ய முடியாது. ஹரித்வார் போக முடிவெடுத்தது தான் சரி! அங்கே போன பிறகு கங்கையில் மூழ்கிவிடுவது பற்றி யோசிக்கலாம். புறப்படுவதை நிறுத்தக்கூடாது”. இப்படிப்பட்ட மன ஊசலாட்டத்திற் கிடையே அக்பர் சாஹிப் தெருவை அடைந்தேன்.

22

ஒளி வீசிய பாதை

என் பழைய நண்பர் அப்பூரி ஜகந்நாதராவ் ஒரு நாள் வழியில் என்னை சந்தித்தார். என்னைக் கண்டதும் நின்று என் கைகளைப் பற்றி கொண்டு "நீ பிரபாகர சாஸ்திரி தானே! உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டார். நான் மூன்று வருஷங்களாக என்னை வாட்டும் நோய் பற்றி விவரித்தேன். என் நோய் பற்றியே விரிவாகப் பேசிக்கொண்டு அவர் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே பார்த்த போது நரசிம்மம்,எம்.ஏ. அவர்களை சந்திக்க நேர்ந்தது. அவர் சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக இருந்தார். எனக்குப் பழக்கமான ஸ்ரீ குரஜாட அப்பாராவ் மூலமாக அவரை எனக்குத் தெரியும். அவர்கள் இருவரும் உறவினர்கள். அத்துடன் நான் பணிபுரிந்த நூலகத்திற்கும் அவர் பல முறை வந்திருக்கிறார். என்னிடம் 'யோகா தத்துவம்' தொடர்பாக அங்குள்ள நூல்கள் பற்றி விசாரித்திருக்கிறார். என் நண்பர் ஜகந்நாதராவுக்கு அவர் மைத்துனர் உறவும் கூட. என் உடல் நோய் பற்றி அறிந்து கொண்ட அவர் "நீங்கள் ஏன் யோகா பயிற்சி வகுப்பில் சேரக்கூடாது? என் உறவினர் தான் அதை நடத்துகிறார். அதில் சேர்ந்தால் உங்கள் உடல் நோய், மன நோய் எல்லாம் மாயமாக மறைந்துவிடும்" என்று சொல்லிவிட்டு "உங்கள் நூலகத்தில் 'துருவ நாடி' புத்தகம் இருக்கிறதா?" என விசாரித்தார். நான் அதற்குப் பதில் சொல்லிவிட்டு, யோகா பயிற்சி வகுப்பு குறித்து மேலும் விவரங்கள் கேட்டேன். "நீங்கள் கும்பகோணம் செல்லுங்கள். முழு விபரமும் தெரியும். நான் அந்தப்பயிற்சி வகுப்பு நடத்துபவருக்கு ஒரு அறிமுகக் கடிதம் தருகிறேன்" என்றார் அவர்.

எனக்கு, நான் ஹரித்வார் (ஹரியை அடையும் வாயில்) செல்வதற்குப் பதிலாக ஆரோக்கிய த்வார் (உடல் நலம் பெறுவதற்கான

வாயில்) செல்லப் போவதாக ஓர் உணர்வு ஏற்பட்டது. எனது வெளிப்பார்வையெல்லாம் உட்பக்கம் திரும்புவதாகத் தோன்றிற்று. என் உடலின் இடது பக்கம் இருந்த கோளாறுகளெல்லாம் மெல்ல மெல்ல மறைவது போலவும், வலது பக்கம் இருந்து விவரிக்க இயலாத ஒரு புதிய உத்வேகம் பிறந்து, உடல் முழுதும் வியாபிப்பது போலவும் உணர்வு ஏற்பட்டது.

இவற்றுக்கு நடுவில், ஒரு ஒளிவீசும் நேரான பாதை தெரிவது போலவும் இருந்தது. அதற்குள்ளாக அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய நேரம் கடந்து விட்டதை அறிந்தேன். அப்போது ஸ்ரீ நரசிம்மத்தைத் தேடி ஒருவர் அந்த வீட்டிற்கு வந்தார். அவர் என் நூலக அதிகாரிக்கும் தெரிந்தவர். அவரிடம் நரசிம்மம் நான் கும்பகோணம் செல்ல வேண்டி இருப்பதாகவும் என் மேலதிகாரிகளுக்கு விடுப்பு வழங்க சிபாரிசு செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். அவர் அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு என்னிடமிருந்து விடுப்பு விண்ணப்பத்தையும் வாங்கிக் கொண்டார்.

ஸ்ரீ நரசிம்மம் கொடுத்த அறிமுகக் கடிதத்துடன் கும்பகோணம் செல்வதற்காக நான் மாலை 7 மணி அளவில் எழும்பூர் ரயில் நிலையம் சென்றேன். எதேச்சையாக அங்கு வந்திருந்த எங்கள் நூலக தமிழ் பண்டிட் என்னைப் பார்த்துவிட்டு “ஏன் அலுவலகத்திற்கு இன்று வரவில்லை? உங்களைப் பார்த்தால் உடல்நிலை சரியில்லாதது போல தெரிகிறதே. நீங்கள் எங்கோ ஓடிப்போக முனைவதாகத் தெரிகிறது. உங்கள் இப்போதை மனநிலை நீங்கள் பிரயாணம் செய்வதற்கு உகந்ததல்ல. ஏன் வீணாக அலைகிறீர்கள். வாருங்கள் வீட்டுக்குப் போவோம். நானே உங்களுக்குத் துணையாக வந்து வீட்டில் விட்டுவிடுகிறேன்” என்றார் பரிவுடன். அவருடைய அன்பான அழைப்பால் நான் மனம் நெகிழ்ந்து போனேன். “என் உடலுக்கு ஒன்றுமில்லை. மனம் மிகவும் திடமாக இருக்கிறது. ஒரு மிக

அவசியமான வேலைக்காக கும்பகோணம் வரை போக வேண்டி இருக்கிறது. இரண்டு நாள் விடுப்பு கேட்டிருக்கிறேன். நூலக அதிகாரியிடம் சொல்லிவிடுங்கள்" என்று அவருக்கு பதிலளித்தேன். டிக்கெட் கவுண்டருக்கு அவரே சென்று, டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு, ரயில் புறப்படும் வரை இருந்து என்னை வழி அனுப்பி விட்டுப் போனார்.

23

தெய்வீகப் பார்வை

ரயில் புறப்பட்டது. என் சிந்தனை ஓட்டம், ரயிலின் வேகத்தோடு போட்டி போட்டுக் கொண்டிருந்தது. மறுநாள் காலை 8 மணிக்கு கும்பகோணத்தில் இறங்கி காலைக்கடன்களை முடித்த பிறகு சில நல்ல மாம்பழங்களை வாங்கிக் கொண்டேன். ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு ஸ்ரீ நரசிம்மம் கொடுத்த விலாசத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அந்த வண்டிக்காரனுக்கு அந்த விலாசத்தில் இருந்த வீடு பற்றி நன்கு தெரிந்திருந்தது. வழி நெடுக அதில் இருந்தவரைப் பற்றி புகழ்ச்சியாகப் பேசியவாறு வந்தான். நான் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டேன்.

அந்த வீட்டு வாசலில் வண்டி நின்றதும், காவி உடைதரித்த ஒரு சந்நியாசி என்னைப் பார்த்து அன்புடன் “வாருங்கள். எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன உதவி வேண்டும்?” என்ற பாரம்பர்யமான உபசரிப்புகளுடன் வரவேற்றார். நான் கீழிறங்கி “யோகப் பயிற்சிக்காக வந்திருப்பது” பற்றிச் சொன்னேன். என் தெலுங்கு கலந்த பேச்சைக் கேட்டு மலர்ந்த முகத்துடன் என்னை அப்படியே அணைத்துக் கொண்டார். அவர் காட்டிய அன்பு எப்போதும் என் நினைவில் நிற்கும். நான் வைத்திருந்த பழக்கூடையை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் முதலில் நுழைந்த அவர், என் வருகை பற்றி அறிவித்தார்.

உள்ளே வீற்றிருந்த குருநாதரைப் பார்த்ததுமே நான் பரவசமடைந்தேன். அவர் பருமனாகவும் இல்லை. ஒல்லியாகவும் இல்லை. உயரமாகவும் இல்லை, குள்ளமாகவும் இல்லை. உதயசூரியன் போன்ற ஒரு பிரகாசத்துடன் அவர் இருப்பதாக நான் உணர்ந்தேன். கைகூப்பி, பணிந்து வணங்கிவிட்டு நான் வைத்திருந்த அறிமுகக் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அதைப்பார்வையிட்ட பின் “முதலில் குளித்துவிட்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொள்” என்றார்.

என்னை முதலில் வரவேற்ற ஸ்வாமிஜி, அதன் பிறகு எப்போதும்

என் மீது அன்பும் பரிவும் கொண்டவராக இருந்தார். அவர் பெயர் சச்சிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமி. சில ஆண்டுகளுக்கு முன்புதான் பந்தரில் சந்யாஸம் ஏற்றிருந்தார். ஐந்த்யாலா கௌரிநாதசாஸ்திரி என்பவர்தான் அவரது உத்யோகத்தில் இருந்து பணி ஓய்விற்கு ஏற்பாடு செய்து அவருக்கு சந்நியாஸ ஆஸ்ரமத்திற்கான[32] ஏற்பாடுகளைச் செய்தவர். அது முதல் கிருஷ்ணா ஜில்லாவிலிருந்து வருபவர்கள் மீது அவருக்கு ஒரு விசேஷ அபிமானம் ஏற்பட்டிருந்தது. காஞ்சியிலிருந்த ஒரு தெலுங்கு பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். சந்யாஸம் ஏற்ற பிறகு அவர் தகுந்த குருநாதரைத் தேடி பல பிரசித்தி பெற்ற சந்யாஸிகளிடம் சென்றார். ஆனால் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை. கும்பகோணத்திலிருந்த குருநாதர் ஸி.வி.வி யைப்பற்றி கேள்விப்பட்டு அவரை நாடி வந்தவர், முழு மனநிறைவு பெற்று அங்கேயே தங்கிவிட்டார். அது முதல் ஸ்ரீகிருஷ்ணருக்கு சாத்யகி எப்படியோ அப்படி குருநாதருக்கு ஆகிவிட்டார்.

நான் தொடர்ச்சியாக தண்ணீர்த்தொட்டி குளியல் செய்யாவிடினும் மிளகாய் போன்ற உறைப்புகளை விலக்கி, பத்திய சாப்பாடு சாப்பிட்டு வந்தேன். அதைப்பற்றி குருநாதரிடம் சொன்னேன். "உன்னுடைய தேக ஆரோக்கியத்திற்கு நான் பொறுப்பு. பயப்படாமல் எல்லோரையும் போலச் சாப்பிடலாம். அதனால் ஒரு பாதகமும் ஏற்படாது. சந்தோஷமாக இரு" என்று அவர் பதிலளித்தார். அன்று நான் மசாலா போட்டு சமைத்த காய்கறிகள் கூட்டு, பொறியல், கடுகு, மிளகு சேர்த்த ரஸம் ஆகியவற்றுடன் கூடிய சமையலைச் சாப்பிட்டேன்.

நான் வேறு எங்காவது அப்படிச் சமைத்த உணவை சாப்பிட்டு இருந்தால் வயிறு எரிச்சல், தூக்கமின்மை ஆகியவற்றால் அவதிப்பட்டிருப்பேன். ஆனால் ஸ்வாமிஜி, நான் திருப்தி அடையும்படி பார்த்துக் கொண்டதோடு, என்னை நன்கு உபசரிக்கவும் செய்தார். என்னைப்பற்றி அனைத்து விவரங்களையும் அவரிடம் சொல்லிவிட்டு, அங்கு என்னால் மேலும் ஒரு நாள் மட்டுமே தங்க முடியும் என்பதையும் தெரிவித்தேன்.

தீக்ஷை

அன்று மாலையே 6 மணிக்கு குருநாதர் எனக்கு தீக்ஷை[33] அளித்தார். ஸ்வாமிஜியின் அறிவுரையின்படி தீக்ஷை பெறுவதற்காக,சிஷ்யனுக்கு வேண்டிய அனைத்து வஸ்துக்களையும் வாங்கிக் கொண்டேன். ஸ்வாமிஜி எனக்கு தீக்ஷை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கி இருந்தார். நான் சாஷ்டாங்கமாக குருநாதரை நமஸ்கரித்து எனக்கு அருள்புரியுமாறு பிரார்த்தித்தேன். அவரும் மனமுவந்து எனக்கு தீக்ஷை அளித்தார். என் பக்கத்திலிருந்த ஸ்வாமிஜி “அடுத்த ஹாலுக்குப் போய் 'பிரேதாசனம்'[34] என்று சொல்லும் யோகாமுறையின்படி கட்டையைப்போல படுத்திரு. ஒரே ஒரு முறை குருநாதர் சொன்ன 'உபதிஷ்டத்தை'[35] சொல். கண்களை மூடிக்கொண்டு உன் தேகத்துக்குள் நடப்பனவற்றைக்கவனி. உன் மனது அங்குமிங்கும் அலைபாய்ந்தால், அப்படியே விட்டுவிடு. அதைக் கட்டாயப்படுத்தி உன் வசம் திருப்ப முயற்சிக்காதே. அது தானாகவே உன்னை நோக்கிவரும். நடப்பதையெல்லாம் பேசாமல் பார்த்துக் கொண்டேயிரு. நீ செய்ய வேண்டியதெல்லாம் அதுதான். சில கணநேரம் கூட கண்களை திறக்காதே. நீ முயற்சித்தாலும் அது முடியாது. மீண்டும் அவை மூடிக்கொள்ளும். உன் தேகத்தினுள்ளே நிகழும் செயல்களெல்லாம் முடிவுபெற்றபின் கண்களை திறக்க வேண்டும் என்று தோன்றும். அதன்பிறகு கண்களை மூடிக் கொண்டு படுத்திருப்பது சிரமமாக இருக்கும். ஆனால் கண்களைத் திறக்கவும், எழுந்திருப்பதும் கூட கஷ்டமாக இருக்கும்” என்று கூறினார். நான் அந்த வழிகாட்டுதலை அப்படியே பின்பற்றினேன். எனக்கு கூறப்பட்ட 'பீஜாக்ஷரத்தை'[36] அர்த்தத்தோடு ஒருமுறை உச்சரித்தேன். பிறகு கொடுக்கப்பட்ட அறிவுரையின்படி கீழேபடுத்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டேன்.

24

தெய்வீக அனுபவம்

உடனடியாக ஒரு புத்துணர்வு என்னுள் தோன்றி என் உடல் முழுதையும் அசைத்தது. ஆர்வத்துடன் அதை நான் கவனிக்கத் தொடங்கினேன். எனக்குள் நிகழ்ந்த அந்த அபூர்வ அனுபவத்தை 'பிரக்ஞை என்பதா? சக்தி என்பதா?' என எனக்குத் தெரியவில்லை. அது எனக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தது. 'அது எங்கிருந்து தொடங்கியது. எப்படி செயல்படுகிறது' என்று கண்டறிய விரும்பினேன். அதன் மூலத்தை என்னால் அறிய முடியவில்லை. ஆனால் அது என்னுள் நிறைந்திருப்பதையும் என் நாடி நரம்புகளில் ஊடுருவதையும் உணர்ந்தேன். என் தேகத்தினுள் ஒரு புதிய இயந்திரம் முழு வேகத்துடன் இயங்கத் தொடங்கி இருப்பதாக உணரத்தொடங்கினேன். இதெல்லாம் எனக்கு மகிழ்ச்சியையே அளித்தது. ஆர்வத்துடன் அனுபவம் தொடருவதை கவனிக்கத் தொடங்கினேன். சில நிமிஷங்களில் இடது கை,என் முயற்சி இல்லாது தானாகவே உயர்வதையும் வலதுகை அதேபோல உயருவதற்காக அசைவதையும் உணர்ந்தேன். அந்த நிகழ்வின்போது என் வலது தோள்பட்டையில் ஒரு கடுமையான வலி உருவாகி, அதிகரிக்கத் தொடங்கியது. சிறிது நேரம் நான் ஒரு சிறு போராட்டம் நடத்தி அதைத்தவிர்க்க முயன்றேன். இதற்கிடையில் சுமார் கால்மணி நேரம் கடந்திருக்கும். ஸ்வாமிஜி 'என் போராட்டத்தின் காரணம் என்ன?' என்று கேட்டார். நான் கண்களைத் திறக்காமலேயே, “என் வலது தோள்பட்டை அதிகமாக வலிக்கிறது” என்றேன். சில நிமிடங்களுக்குப் பின் அந்த வலி சரியாகி என்னால் கண்களைத் திறக்க முடிந்தது. உடலில் ஏற்பட்ட அதிர்வுகளும் நின்றுவிட்டன. என் அருகிலேயே இருந்த ஸ்வாமிஜி 'இரு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்திருக்குமாறு' சொன்னார். எழுந்த பிறகு, அவரிடம்

'மாட்டு வண்டியிலிருந்து நான் விழுந்ததையும் தோள் மூட்டில் வலி ஏற்பட்டதையும் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதையும்' விவரித்தேன். அதைக்கேட்டதும் அவர் 'என் வலது தோளில் உண்டான இயக்கம் அதில் ஏற்பட்ட கோளாறை நிவர்த்தி செய்வதற்காகத்தான்' என விளக்கம் அளித்தார். 'என் வலது கரம் சரியான நிலையில் இருந்திருந்தால் இரண்டு கரங்களுமே ஒரே சமயத்தில் உயர்ந்திருக்கும்' என்றார் அவர். 'பிரார்த்தனையின் முடிவில் இருகரங்களுமே நமஸ்காரம் செய்வது போல தானாகவே உயரும் என்பதுதான், இந்த யோகாவின் தனித்துவமான அதிசய அம்சம்' என்று நான் அவரிடமிருந்து அறிந்தேன். 'அவ்விதம் உயர்வது இந்த யோகாவினால் உருவாகும் சக்தியை, உடல் ஏற்றுக் கொள்வதற்கு அடையாளம்' எனவும் அவர் விளக்கினார். என் அனுபவத்தைப் பற்றி குருநாதரிடம் சொல்லுமாறு அவர் அறிவுறுத்தினார். அதன்படியே நான் செய்துவிட்டு, 'எனக்கு அறிவுரை வழங்குமாறு' கேட்டுக் கொண்டேன். அவர் புன்னகையோடு 'மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பாய்' என்று சொன்னார்.

ஒரு மணிநேரம் ஆனபின் என்னுடைய வலது தோளில் வீக்கம் ஏற்பட்டு வலி எடுத்தது. தோள் மூட்டில் சம்மட்டியால் அடிப்பது போல 'தக் தக்' என்ற ஒலியை நான் உணர்ந்தேன். வலியும் வீக்கமும் இருந்தபோதும் என் மனத்தில் ஒரு மகிழ்ச்சியே நிலவியது. கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த 'தோள்மூட்டு நோவு' காரணமாக நான் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு முதலில் குளோரபார்ம் கொடுத்த அந்த பேராசைக்கார டாக்டர், என் தோள்மூட்டை 'தான் விரும்பியபடி திருப்பியும் இழுத்தும்' பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கொடுத்த சிகிச்சை எல்லாம் பணத்துக்காகத்தான். எனக்கு அவரால் நிவாரணம் கிடைக்கவே இல்லை. என் தோளில் இருந்த தசை நார்கள் எல்லாம் உருக்குலைந்து போய்விட்டன. அந்த மாதிரி நிலையில் இருந்த என் தோள்மூட்டு சரியாகிவிடும் என்ற உணர்வே, வலியால் ஏற்படும்

வேதனையை தாங்கிக் கொள்ளும் மன உறுதியை இப்போது அளித்தது. அங்கு பிரார்த்தனைக்காக வந்தவர்கள் எல்லாம் என் கை அசைவுகளைப்பார்த்துவிட்டு, "உன் உடலுக்குள் இருக்கும் உபாதை குறைவதற்குத் தான் இதெல்லாம்" என்றார்கள். பல ஆண்டுகளாக சரிவரத்தூக்கம் வராமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த நான், அன்றிரவு எந்த இடையூறும் இல்லாமல் நன்கு உறங்கினேன்.

மறுநாள் காலையில் எழுந்து கடமைகளை முடித்துவிட்டு 'யோகா பயிற்சிக்கு' தயாரானேன். முதல்நாள் மாலையில் யோகா பயிற்சிக்காக பலர் அங்கே வந்திருந்தனர். இன்று காலையிலும் அவர்களைப் பார்த்தேன். முதல் நாள் மாலையில் நடந்த அத்தனை பயிற்சிகளும் இப்போது நடந்தன. பயிற்சி செய்தவர்களில் குருநாதரின் இரண்டு முக்கிய சீடர்கள் இருந்தனர். ஒருவர் ஸ்ரீராதாகிருஷ்ண பிள்ளை. மற்றவர் ஸ்ரீமஹாதேவ அய்யர். அவர்களிடம் என்னைப் பரிசோதிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அது எவ்வளவு அதிசயமான அனுபவம் தெரியுமா? அவர்கள் முன்பாக நான் உட்கார வைக்கப்பட்டேன். ராதாகிருஷ்ண பிள்ளை, குருநாதருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு கண்களை மூடிக்கொண்டார். சில நிமிஷங்கள் ஆனபின், எதையோ புஸ்தகத்திலிருந்து படிப்பது போல ஆங்கிலத்தில் சொல்லத்தொடங்கினார். மஹாதேவ ஐயர் அவர் சொல்வதை எல்லாம் ஒரு நோட் புத்தகத்தில் விரைவாக எழுதினார். இருவரும் கல்லூரியில் பட்டப்படிப்பை இன்னும் முடிக்காதவர்கள். பிள்ளை விரைவாகப் பேசினார். அய்யர் அதை மிக விரைவாக எழுதி முடித்தார். இது காலை 9.17 மணிக்கு தொடங்கியது. கண்களை மூடிக்கொண்டதிலிருந்து, தான் பார்த்ததையும் கேட்டதையும் விவரித்துக்கொண்டிருந்தார் பிள்ளை. என் உடல் கூறு, என்னைப் பற்றிய நல்லது கெட்டது, என் உடல் நோய்க்குக்காரணம், அதற்கான பரிகாரம், என் முந்தைய பிறவிகளைப் பற்றிய விபரங்கள் ஆகிய அனைத்தையும்

அவர் சொன்னார். அவர் சொன்னதெல்லாம் எழுதி முடிக்கப்பட்ட பிறகு, அந்தத் தாள்களை குருநாதரிடம் போய்ப்படித்துக்காட்டினார்கள். அவர் அனுமதியோடு அதை கோப்பு ஆக்கினார்கள். இத்தகைய பரிசோதனை[37] யோகா பயிற்சிக்காக அல்லது மீடியமாக விரும்பி குருநாதரிடம் வருபவர்கள் அனைவரிடமும் நடத்தப்படுமாம். நான் என்னனைப்பற்றிய தகவல்கள் இருந்த குறிப்புகளின் நகல் ஒன்றைக்கேட்டேன். குருநாதரின் அனுமதியுடன் அது எனக்கு வழங்கப்பட்டது. அதை இன்றளவும் நான் வைத்திருக்கிறேன் (ஸ்ரீபிரபாகர சாஸ்திரி யோகா மார்க்கத்தில் 22–6–1916 அன்று சேர்ந்தார். மீடியம் எண் 330).

25

தெய்வீகச் செய்தி

அன்று இரவே நான் ரயிலில் சென்னை திரும்ப வேண்டும். குருநாதரைப் பார்க்க வேண்டும் என்று ஸ்ரீ மஹாதேவய்யரிடம் தெரிவித்தேன். அச்சமயம் குருநாதர் தன் மனைவியாகிய மீடியம் மூலம் அடிப்படையான, அபூர்வமான யோகா பற்றிய விஷயங்களை சேகரித்துக்கொண்டிருந்தார். சாப்பாட்டுக்குப்பிறகு, நான் குருநாதரைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன் பிறகு “ஐயா. நான் கடந்த மூன்று வருஷங்களாக நரக வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்தேன். தூக்கமும் ஓய்வும் இன்றி அவதிப்பட்டேன். பசியும் ஜீரணசக்தியும் இல்லாது தவித்தேன். இங்கு வருவதைப் பற்றிய சிந்தனை எழுந்த உடனேயே என்னை அறியாமல் நான் உணவை ருசித்துச் சாப்பிட்டேன். தொடர்ந்து ஸ்ரீ நரசிம்மம் அவர்கள் மூலமாக உங்களுடைய யோகா முறை பற்றி தெரிந்து கொண்ட அடுத்த விநாடியே தெய்வீக மகிழ்ச்சி நிறைந்த ஒரு பாதையில் நான் அடி எடுத்து வைக்கப்போவதாகத் தோன்றியது. இங்கு மன நிம்மதியுடனேயே என்னால் வர முடிந்தது. ரயிலிலும் நன்றாகத் தூங்கினேன். இங்கு வந்த பிறகு நேற்றிரவு நல்ல தூக்கம். இதற்கு முன் எண்ணெய், கடுகு, மசாலா, சாம்பார், ரஸம், மோர் இவற்றை உண்டால் எனக்கு வயிற்றில் எரிச்சல் உண்டாகும். ஆனால் நேற்று அவற்றோடு சேர்ந்த உணவை இங்கு சாப்பிட்ட பிறகு எனக்கு ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை. மற்றவர்களோடு சேர்ந்து பயமில்லாமல் இயல்பாக இருக்குமாறும் மற்றவர்களோடு சேர்ந்து சாதாரணமாகவே சாப்பிடுமாறும் சொன்னார்கள். நான் அவ்விதமே செய்தேன். இதுவரை கடுமையான மருந்துகளை உட்கொண்டு வந்தேன். எனக்கு எப்போதும் படபடப்பாகவே இருக்கும். இன்று அது போல இல்லை. எந்த அறச்செயல்களை செய்வதற்கும் தேகதிடம் இருக்க வேண்டும். ஒருவர் உயிரோடு இருந்தால் இலைகளைக்கூட உண்டு வாழ முடியும் என்பார்கள். நான் இங்கேயே இருந்து உங்களுக்கு சேவை புரிய

விரும்புகிறேன். எப்படியாகிலும் பிழைத்துக் கொள்வேன். அனுமதியுங்கள்" என்று அவரிடம் கூறினேன்.

"இப்பொழுது என்ன சம்பளம் வாங்குகிறாய்?" என்று அவர் கேட்டார். நான் "மாதம் ஐம்பது ரூபாய்கள்" என்று பதிலளித்தேன். "அதை வைத்துக்கொண்டு நீயும் உன்குடும்பமும் சௌகர்யமாக இருக்கலாமே! அதை விட்டுவிட்டு இங்கே வந்து இருக்க ஏன் விரும்புகிறாய்?

"வண்டி ஓடும் நிலையில் இருக்கும் போதே பழுதுகளை சரி செய்துவிட வேண்டும். அதைப் பிரித்துப்போட்டு பழுதுபார்க்க வேண்டி வந்தால் வண்டிக்காரரின் பிழைப்பு என்ன ஆவது? தொடர்ச்சியான வாழ்க்கை நிலையில் தடங்கல் வரக்கூடாது. அதுதான் என் யோகாவின் லட்சியம். இந்தப்பாதை பின் வாங்குவதற்காக போடப்பட்டது அல்ல. இது ராஜயோகத்திற்கான மார்க்கம். இதில் சம்சார வாழ்க்கை அவசியம். சந்யாசம் இதன் குறிக்கோள் இல்லை. ஒருவர் வாழ்வில் உள்ள எல்லா சந்தோஷங்களையும் அனுபவிக்க வேண்டும். நல்ல போஷாக்கான உணவை வேளா வேளைக்கு உண்ண வேண்டும்."

ஆகவே நீ உன்னுடைய உத்யோகத்தில் நீடித்திரு. அது உனக்கு மட்டும் உதவி செய்வதற்கல்ல. நீ வாழும் உலகே அதனால் பலன் அடைகிறது. ஆரோக்கியமாக இருந்து உன் உத்யோகக்கடமைகளைச் செய். என்னைப்பார்த்துக் கொண்டிருப்பதற்காக மட்டுமே நீ இங்கு தங்கி இருக்க விரும்புகிறாயா? உன்னில் நான் எப்போதுமே இருப்பேன். உனக்குத் தேவையான உதவிகளை உன்னுள் இருந்து கொண்டே நான் செய்வேன். நீ எங்கே இருந்தாலும், உன் உடல் நிலை சரியானது போல இப்போது உணர்வது மாதிரி எப்போதும் உணர்வாய். காலையில் நீ பெற்ற யோகப்பயிற்சி மாலைவரை உனக்குள் இருந்து பயன் தரும். எப்போது தேவைப்படுகிறதோ அப்போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

உனக்குள் இருந்து உடல் உபாதையை தீர்க்கும் சக்தி ஒரே இடத்தில் நிலை கொண்டிருப்பதல்ல. அது வேகமாக இயங்கும்

உள்ளுணர்வு. அதன் இயக்கம் மின்சாரம் போன்றதல்ல. ஒரு அளவுக்கு மீறும்போது, மின்சாரம் வெடித்துச்சிதறி பெருஞ்சேதம் விளைவிக்கும். உன்னுள் உண்டாக்கப்பட்டுள்ள சக்தி, அது போல நீ விரும்பினாலும் கூட அளவை மீறாது. அது எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் இயங்கும். நீ நினைத்தாலும், தேவைப்படும் நேரத்தை விட அதிக நேரம் உன் கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது. அதைப்போலவே தேவைப்படும் அளவுதான் உன் உடலில் இந்த யோகாவின் சக்தி செயல்படும். உன் கண்களை திறக்க விரும்பினாலும், முன்னதாகவே திறக்க இயலாது. உடனடியாக பார்க்க வேண்டிய ஏதாகிலும் குறுக்கிட்டாலும், உன்னுடன் யாராவது திடீரெனப் பேசினாலும் நீ பயந்துவிடாதே. "இடைஞ்சல்களைப்போக்கு" என உன் ஆத்மாவிடம் முறையிடு. அதைச் செய்துவிட்டு யோகப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபடு. பயிற்சியில் ஈடுபட வேண்டிய நேரத்தில், நீ ரயில், பஸ் பயணத்தில் இருந்தாலோ அல்லது நடந்து கொண்டிருந்தாலோ பயிற்சி பற்றி ஒரு கணம் சிந்தனை செய். அது போதும். அதன்பிறகு நேரம் கிடைத்தால் பயிற்சியில் ஈடுபடலாம். சத்யம், தர்மம், விவேகம், ஆகிய பாதையில் நீ பயணித்து ஆத்மா பற்றி கவனம் செலுத்தச் செலுத்த, உனக்குத் தெளிவு பிறக்கும். ஞானம் கிட்டும். அந்த ஞானத்தின் தொடக்கப் புள்ளியை மெதுவாக நீ காணத் தொடங்குவாய். இப்போது, உன் கவனம் முழுவதும் செல்வம், உடல்நலம் ஆகியவற்றைப் பெறுவதிலேயே இருக்கும். அவை இல்லாமல் எதையும் சாதிக்க இயலாது என்பதும் உண்மை. முதலில் உனக்கு உடல் ஆரோக்கியம் வரவேண்டும். இந்த யோகாபயிற்சியின் பலன், உனக்குப் பின்னால்தான் கிட்டும். இப்பொழுது நீ முழு நம்பிக்கையுடன் யோகாபயிற்சியில் ஈடுபட்டால் அதன் பலன் உடனே கிடைக்கும் என்று நான் சொல்லவில்லை. ஏனெனில் அந்த நம்பிக்கையை உன்னிடம் ஏற்படுத்துவது என் வேலை. சத்தியத்தின் இயல்பு குறித்து நீ உன் மனதைச் செலுத்தினாலே போதும். வெறும் வயிற்றுடன் இந்த யோகாபயிற்சியில் ஈடுபடாதே. அதை ஆரம்பிக்கும் முன் ஏதாவது உணவு உட்கொள். சென்னையில் எனது பல நண்பர்கள் இந்தப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அவர்களை

அடிக்கடி சந்தித்துப்பேசு. எப்பொழுது முடியுமோ அப்போது இங்கு வா. ஒவ்வொரு வருடமும் இரண்டு சந்திப்புகள் இங்கு நிகழும். ஒன்று டிசம்பர் கடைசி வாரம், இன்னொன்று மே கடைசிவாரம். நீ தவறாமல் வந்து அதில் கலந்து கொள்" என்று அவர் எனக்கு அறிவுரை வழங்கினார்.அவரது ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். என் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகியது. அதைப்பற்றி தெலுங்கில் ஒரு சிறிய கவிதை[38] உருவாயிற்று.

दु र्व्याधि खिन्नेशरणम् प्रपन्नेमयि प्रसादादयमं मा स्म भैषीः

त्राता अहं अस्मि इति ददौ अभीतिम् यस्तं गुरुं मस्तकतो नमामि

அவர் என்னுடன் ஐந்து, ஆறு நிமிஷங்கள் பேசி இருப்பார். அவர் தன் சீடர்களுக்கு 'ஸஹஸ்ராரம்', Pituitary போன்றவற்றின் முக்கிய தத்துவங்களையும், அவற்றின் தெய்வீகக்கொள்கைகளையும் விளக்குவராம். அவரது அனுமதியுடன் அவரது முக்கிய சீடர்கள் அவை பற்றி விளக்கம் அளிப்பார்களாம். குருநாதர் தன் மனைவியாரின் மூலமாக (அவரும் ஒரு மீடியம்) முக்கிய தகவல்களைப் பெறுவார். இந்த செயல்பாடுகளில் அவர் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் அவரிடம் நான் மேலும் விரிவாகப்பேசிக் கொண்டிருக்க முடியவில்லை.

26

கைகூடுதல்

மறுபடியும் காலையில் அவரது பல சீடர்கள் யோகா பயிற்சிக்காக வந்தனர். அந்தப் பயிற்சிகள், அவரது வீட்டு எதிரில் 'பகவத் கட்டம்' என்று சொல்லப்பட்ட காவேரிக்கரையின் எதிரில் உள்ள ஒரு ஹாலில் நடந்தது. என் கையிலிருந்த வீக்கமும், வலியும் மாலைப்பயிற்சியின் போது வெகுவாகக் குறைந்தது. என் மன ஆழத்தினுள் ஒரு சிறிய ஒளிப்பொறி தோன்றியிருப்பதை நான் உணர்ந்தேன். ஒரு கனவு போல நான் அதை நெருங்கிச் செல்வதாகவும் தெரிந்தது. ஒரு சக்திமிக்க பேட்டரி செல்லுடன் இணைக்கப்பட்டது போல் என் உடம்பில் அதிர்வுகள் ஏற்படுவதை உணர்ந்தேன். என்னை அறியாமலேயே என் கைகள் நமஸ்காரம் செய்வது மாதிரி உயர்ந்தன. சுத்தியால் அடிப்பது போன்ற 'தக் தக் தக்' ஒலி, என் தோள் மூட்டில் நீடித்தது. ஆனால் வலி குறைவாகவே இருந்தது.

“ஏன் இப்படியெல்லாம் என் உடம்புக்குள் நிகழ்கின்றன? இது எதன் விளைவு? இதன் மூலகாரணம் எதுவாக இருக்கும்?” இவ்வாறெல்லாம் என்னுள் கேள்விகள் எழுந்தன. இதுவரை நான் எவ்வளவோ பக்திப்பாடல்களைப்பாடி இருக்கிறேன். மந்திரங்களை சொல்லி இருக்கிறேன். பல தெய்வங்களை வணங்கி பிரார்த்தனைகள் செய்து இருக்கிறேன். பல ஸ்தலங்களுக்குச் சென்று பல கடவுள் வடிவங்களை தரிசித்திருக்கிறேன். பல மஹான்களைப் பின்பற்றிச் சென்றிருக்கிறேன். ஆனால் இப்பொழுது ஏற்பட்டது போல தனித்துவமான, அபூர்வமான அனுபவம் எனக்கு ஏற்பட்டதே இல்லை. என்ன அதிசயம்? ஒரே ஒரு உச்சரிப்பு; பிரார்த்தனையின் போது ஒரே ஒரு சிந்தனை! ஆனால் எப்பேர்ப்பட்ட அனுபவம்! காலங்காலமாக 'பரத்துவத்தை'ப்பற்றி 'உண்டு' என்றும் 'இல்லை' என்றும் நடந்துவரும் விவாதம் 'உண்டு' என்பதன் சார்பாக முடிவாகி இருக்கிறது. 'பரம்பொருள்'

மனித உணர்வுக்கும் அனுபவத்திற்கும் எட்டக்கூடியதே என்பது நிரூபணம் ஆகி இருப்பதாகத் தெரிந்தது. அதை அறியும் வழியைக் கண்டுவிட்ட என்னால் அதன் உண்மையான இயல்பையும் அதன் மூலத்தையும் அறிய முடியாதா? அதன் அடி ஆழத்திற்கு செல்ல முடியாதா?

நான் சொல்வதை எல்லாம் என்னுள்ளேயிருந்து ஒருவர் கவனமாகக் கேட்டுக் கொண்டு பதிலும் தருவது போல உணரத் தொடங்கினேன். அவர் பரிவுடன் எனக்கு வழிகாட்டுவது போலவும் தோன்றியது. எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! இதெல்லாம் உண்மையானதாக இல்லாவிட்டால் ஏன் என் தோளில் அந்த வீக்கம்? நான் அறியாமலேயே நமஸ்காரம் செய்வது போல என்னால் இரு கைகளையும் எப்படி கூப்ப முடிந்தது? அது எவ்விதம் சாத்தியமாயிற்று? கைகளை 'கூப்புதல்' என்ற சொல்லை யார் கண்டுபிடித்தார்கள்? என் வீட்டாருக்கு என் உடல் நோய் சொஸ்தமாகி, நான் இயல்பு நிலைக்கு வந்துவிட்டேன் என்பது தெரிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்! இந்த 'வழிமுறைக்கு' என் வீட்டில் உள்ளவர்களை, திருப்பி 'தீக்ஷை' அளிக்க முடியுமா? இத்தகைய எண்ணங்கள் அன்று மாலை யோகா பயிற்சி செய்தபோது என் மனதில் பளிச்சிட்டன. அன்று நான் மறுபிறவி அடைந்தது போல உணர்ந்தேன். பிரார்த்தனைக்குப் பிறகு என் மனதில் தோன்றிய ஆர்வம் கலந்த எண்ணங்களை அங்கே கூடியிருந்த மற்றவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் பதிலுக்கு தாங்கள் பெற்ற அனுபவங்களை எனக்கு கூறினார்கள். அவை எல்லாமே வியப்பளிப்பதாக இருந்தன.

27

ஸ்ரீ குருநாதர்

எனக்கு, குருநாதரின் வாழ்க்கையைப் பற்றி அறியவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அங்கிருந்தவர்களிடம் அதுபற்றி விசாரித்தேன். அவர் ஆந்திராவில் உயர்ந்ததொரு குடும்பத்தின் வழி வந்தவர். கிருஷ்ணதேவராயரின் ஆட்சி அதிகாரம் தென்இந்தியா முழுதும் பரவியிருந்தபோது, ராயரின் பிரதிநிதிகளுடன் வந்த அவர்கள் கும்பகோணத்தில் குடியேறினார்கள். அவர்கள் உருவாக்கிய அக்ரஹாரம்[39] 'பக்தபுரி' என்ற பெயருடன் இன்றும் அங்கே இருக்கிறது. செல்வந்தர்கள் குடும்பத்தில் உதித்தவர் குருநாதர். அக்குடும்பத்தின் பெயர் கஞ்சுபாடி. குருநாதரின் பெயர் கஞ்சுபாடி வெங்கடராவ் வெங்காசாமிராவ்காரு. 'அவருக்கு சமஸ்கிருதம் தெரியுமா?' என ஒருவரிடம் கேட்டேன். எனக்கு அந்த நாட்களில் 'ஒருவருக்கு சமஸ்கிருதம் தெரியாவிட்டால் அவரால் நமது பாரம்பரிய அறிவியல் தத்துவங்களான சாங்க்யயோகா, வேதாந்தம் போன்றவற்றைப் படித்திருக்க முடியாது' என்ற எண்ணம் இருந்தது. ஏனெனில் அவையெல்லாம் சமஸ்கிருதத்தில் இருந்த நூல்கள். அவருக்கு சமஸ்கிருதம் தெரியாது என்றாலும் அவை பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் அவர் படித்திருக்கிறார் என்றும் அவற்றில் பொதிந்துள்ள பொருள் எல்லாம் அவருக்கு 'அத்துப்படி' என்றும் சமஸ்கிருத பண்டிதர்களைவிட அவருக்கு அத்தத்துவங்களில் ஞானம் அதிகம் என்றும் அறிந்து கொண்டேன். அத்துடன் அவர் ஆன்மீக விஷயங்களில் அதிகம் நாட்டம் கொண்டவர் என்பதும் தெரிந்தது. போகப்போக நான் அவரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்வேன் என்றும், மற்ற தத்துவ அறிஞர்களோடு அவரை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற அவசியமே இல்லை என்றும் அங்கிருந்த அனுபவஸ்தர்கள் கூறினார்கள்.

புனிதமான தத்துவங்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் இருக்கும்போது எப்படி ஆங்கிலத்தின் மூலம் அவற்றின் பொருளை அறிந்து கொள்ள முடியும்? ஆனால் பார்த்துப் பழகியதிலிருந்தும், அனுபவத்திலிருந்தும் குருநாதர் ஒரு 'மஹான்' என்று நிச்சயமாகத் தெரிந்தது. ஆனால் அவரது முகத்தில் மீசை இருக்கிறதே! அது 'தத்துவ ஞானிகளுக்கு உரியது அல்ல' அல்லவா? அப்படித்தான் அன்று சிலரது கருத்து இருந்தது. அவற்றிற்கான பதில் பிறகு எனக்குக் கிடைத்தது.

'சுயதரிசனம் பெறாத ஒருவனுக்கு புனித நூல்கள் எப்படி உதவ முடியும்?[40]' பார்வை அற்றவனுக்கு நிலைக்கண்ணாடியால் என்ன பயன்? மேற்கண்ட முதுமொழியின்படி 'சுயதரிசனம் பெற்ற ஒருவனே அறிவியல் பற்றிய ஆராய்ச்சியாளனாக இருக்க முடியும்[40].

शास्त्राणाम् विषयस्तावत् यावत् मन्दरसा जनाः ।

प्रवृत्तो रसशास्त्रेषु नच शास्त्रेन च क्रमः ।।
तमेव धीरो विज्ञाय प्रज्ञां कुर्वीत ब्राह्मणः ।

नानुद्ध्यानात् बहून् शब्दान् वाचो विग्लापनम् किम् ।।
विहाय शास्त्रजालानि। यत् सत्यम् तत् उपास्यतमाम्।। [४१]

அத்தகையோர், பண்டைய நூல்களைப் படிப்பது, அவர்களது உள்ளார்ந்த சக்தியை உணர்வதற்கு உதவுமே தவிர, அதை உருவாக்குவதற்கு உதவாது[42]. அச்சக்தி பிறவியிலேயே வருவது. புனித நூல்களைப் படிப்பது அதை மேலும் வளர்க்கப் பயன்படும். கற்கப்படும் எல்லா தத்துவ அறிவும், ஞானிகளிடம் இயல்பாகவே உள்ள அறிவைத்தான் நிகர்த்திருக்கும். அதைவிட அதிகமாக இருக்க முடியாது![43]

இப்படி எல்லாம் படித்திருந்த என் மனதில் இந்த விளக்கங்கள் உடனடியாகப் பளிச்சிட்டன. 'மொழியில் என்ன இருக்கிறது?' என நினைத்தேன். சொல்லப்படும் விஷயம் தான் முக்கியமானது. அதை எந்த மொழியிலுமே தெரிவித்து விடலாம். உண்மையில்

சொல்லப்போனால் இந்த யோகமுறையை உலகளாவியதாக்க, அதை ஜாதி, கலாச்சாரம், மதம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து விரிவாக்க, உலகில் பலருக்கும் தெரிந்த ஆங்கிலம் தான் உகந்தது. ஒரு காலத்தில் ரிஷிகளும் ஞானிகளும் தங்கள் உபதேசங்களை சமஸ்கிருதத்தில் சொன்னதால் அது பெருமையும், முக்கியத்துவமும் பெற்றது உண்மைதான். தத்துவங்களும், வேதங்களும், உபநிஷத்துகளும் அம்மொழியில்தான் முதலில் சொல்லப்பட்டன. அவைகளைத் தந்த மஹான்களைப் போன்றவர்கள் இன்று இருந்து அதே போன்ற உபதேசங்களை இப்பொழுது பழக்கத்தில் இருக்கும் எந்த மொழியில் சொல்லியிருந்தாலும் அந்த மொழி முக்கியத்துவம் பெற்றிருக்கும் சம்ஸ்கிருதத்தைப்போல். செய்ய முடிந்தால் சமஸ்கிருதம் அன்று பெற்றிருந்த முக்கியத்துவத்தை மீண்டும் பெறலாம். அது இல்லாத நிலையில் முன்னர் சமஸ்கிருதம் வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் இப்போது ஆங்கிலத்தை வைப்பதற்கு எந்த தயக்கமும் இருக்கலாகாது. இப்பொழுது பல அறிஞர்களும், தெய்வீக அருள்பெற்றவர்களும் அரிய தத்துவ ஞான விளக்கங்களை ஆங்கிலத்தில் அழகாகச் சொல்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லாததால் ஆங்கில மொழியை சுலபத்தில் ஒதுக்கிவிட முடியாது. அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே குருநாதரின் 'யோகா' பற்றிய செய்திகள்ஆங்கிலத்தில் இருப்பது பற்றி யோசிக்க வேண்டியதே இல்லை' என நான் உணர்ந்தேன்.

அது போலவே அவர் முகத்தில் மீசை இருப்பதும் திலகம் இல்லாதிருப்பதும் அவருடைய புனிதத் தோற்றத்தின் மதிப்பை குறைக்காது. மேலும் அவர் சைவ–வைணவ பேதங்கள் பார்க்காததும் கூட அவர் சமயச்சின்னங்களை நெற்றியில் தரிக்காததற்கு ஒரு காரணம், அவர் ஸ்தாபித்திருப்பது 'மஹாராஜயோகா' என்பதால் அவர் மழித்த தலையுடனும், காவி உடைகளுடனும் இருக்க வேண்டியதுமில்லை. 'மீசை இருப்பதும் இல்லாதிருப்பதும், மரியாதை கொடுப்பதற்கோ, கொடுக்காம லிருப்பதற்கோ காரணம் ஆகாது' என்பதையும் நான் உணர்ந்தேன்.

எப்படியோ இந்த பதில்கள் என் மனதில் உதித்து, அதில் இருந்த பொருத்தமற்ற சந்தேக எண்ணங்களைப் போக்கின.

சில காலத்திற்குப் பிறகு நான் கும்பகோணம் சென்று குருநாதரைப் பார்த்தபோது, நான் கேட்காமல் அவராகவே இந்த விஷயங்களைப் பற்றிப் பேசினார். “என் சிஷ்யர்கள் ஒரு போதும் அவர்கள் உடையிலோ, நடத்தையிலோ வித்யாசமானவர்களாக மற்றவர்கள் கண்களுக்கு தெரியக்கூடாது. அவர்கள் எல்லோரையும் போல் சாதாரணமானவர்களாகவே காணப்பட வேண்டும். இந்த யோக முறையில் எவருக்கும் தனிப்பட்ட முறையில் மீட்சிஇல்லை. அது உலகளாவிய அன்பு, இணக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. அன்பு என்பது முதலில் தன்னைப்பற்றியதாக தொடங்க வேண்டும். பிறகு தன் சுற்றம், உற்றார், நட்பு வட்டம் என்பதாக விரிவடைய வேண்டும். என் சிஷ்யர்கள் தங்கள் அன்பு வட்டத்தை இதே போன்றே விரிவாக்க வேண்டும். அதனால் உலகளாவிய ரட்சிப்பு, மீட்சி இவற்றை அடையலாம். அந்த அளவுக்கு ஒருவருடைய அன்பு பரவாவிட்டால், விமோசனம் கிட்டாது. இந்த உலகளாவிய விரிந்த தத்துவத்தை புரிந்து கொள்ள ஒருவருக்கு உலகம் தழுவிய, சகலமும் உள்ளடக்கிய சிந்தனை அவசியம். ஒருவர் தன்னுடைய குறுகிய 'இனம், பிரிவு, வகுப்பு, ஜாதி, தேசம்' ஆகியவற்றுக்கு வெளியே பார்க்கும் தன்மையற்றிருந்தாலோ, மனித சமுதாயம் என்ற அடிப்படையில் இணக்கம் கொள்ளாமலிருந்தாலோ அவர் இந்த உலகில் குறிக்கோளற்று, முடிவற்று அவதிப்பட்டுக்கொண்டுதான் இருப்பார். இந்த யோகா முறையினால் பயன் பெறுவது 'வெளி உலகில் காணும் வேறுபாடுகள், தனக்குள்ளே இருக்கும் ஐக்கியத்தன்மை' ஆகியவற்றை ஒரே நேரத்தில் உணர்வதையே பொறுத்திருக்கிறது. நாம் பிழைகளற்ற நிலையை அடைவது என்பது எதிர்காலத்தில் தான் இருக்கிறது. அது கடந்த காலத்தைச் சார்ந்ததல்ல. கடந்தகாலம் என்ற மேடையில் உறுதியாக நின்று, அந்த அனுபவங்கள் மூலம் பாடம் கற்று, எதிர்காலத்தில் குறைகள் அற்ற நிலையை அடைய வேண்டும்”.

இது அவர் உரை. குருநாதர் ஒரு தெய்வீக அருட்கொடை கைவரப் பெற்றிருந்தார். யாராவது ஒரு மனக்குழப்பத்துடன் அல்லது ஒரு விஷயம் குறித்து முடிவெடுக்க முடியாதவராக இருந்து, அவரை அணுகினாலே போதும். ஏதும் கேட்காமலே, அதற்கான விடைகளையும், விளக்கங்களையும் சாதாரணமாகப் பேசிக்கொண்டே கூறிவிடுவார். சில நேரங்களில் அப்படிப்பட்ட குழப்ப மனநிலையுடன் குருநாதரைப் பார்க்க விரும்பி வந்தாலே போதும். குருநாதருடன் அவர் பேசுமுன்பாகவே அதற்கான விடை வந்தவர் மனதில் பளிச்சிட்டு விடும். ஏதும் கேள்வி கேட்க நினைத்தால் கூட அக்கேள்வி அவர் மனதில் உருவாகும் போதே விடையும் தெரிந்துவிடும். அது மிகவும் அதிசயம் ஆகும். ஒரு சுவாரஸ்யமான உதாரணம். பொதுப்பணித்துறையில் வேலை செய்த ஒரு பொறியாளரிடம் 'அவர் டெல்லிக்கு பதவி உயர்வில் சென்று பணிபுரிய சம்மதிக்கிறாரா?' என்று மேலதிகாரிகள் கேட்டிருக்கின்றனர். குறிப்பிட்ட தேதிக்குள் பதில் அனுப்ப வேண்டும் என்று கெடு. 'என்ன பதில் சொல்வது' என்று குழப்பத்தில் இருந்த அவர் குருநாதரிடம் அறிவுரை கேட்க விரும்பி சென்னையிலிருந்து கும்பகோணம் வந்திருக்கிறார். அன்று மாலை தபால்கட்டில் சேரும்படி பதில் அனுப்பினால்தான் சரியான நேரத்தில் போய்ச்சேரும். குருநாதரைச் சந்தித்து விஷயத்தை சொல்லி இருக்கிறார். குருநாதர் “சரி. தபால் கட்டில் சேர்ப்பதற்கு தோதாக யோசித்து பதில் சொல்கிறேன்” என்று சொன்னார். ஆனால் கட்டு எடுப்பதற்குள் அவரை அழைத்து அபிப்பிராயம் சொல்லவில்லை.

நேரம் செல்லச்செல்ல, அந்தப் பொறியாளருக்கு இருக்கை கொள்ளவில்லை. சாதக பாதகங்களை அவரே யோசித்துப் பார்த்திருக்கிறார். அதன் விளைவாக 'அதை ஒப்புக்கொள்ள வேண்டாம்' என்று முடிவெடுத்து அவசரமாக மேலதிகாரிகளுக்குப் பதில் எழுதி, தபாலில் உரிய நேரத்திற்குள் சேர்த்து விட வேண்டும் என்று யோகா ஹாலைவிட்டு வெளியே கிளம்பினார். அவர் படிகளில் இறங்கிய பொழுது குருநாதர் தன்வீட்டு ஹாலில் நிற்பதைக்கண்டார். குருநாதர் அவரை அழைக்க, அவரிடம் போனார். “உன் கையில் என்ன கடிதம்?” என்று

குருநாதர் கேட்டார். அவர் “நான் மேலதிகாரிக்கு எழுதிய பதில் கடிதம். தபால் கட்டு எடுக்கும் நேரத்திற்குள் எழுத, தோதாக நீங்கள் என்னைக்கூப்பிடாததால் நானே டெல்லி வேலைக்குப் போக வேண்டாம் என்று முடிவெடுத்து அப்படியே பதில் எழுதிவிட்டேன். நீங்கள் வேறு விதமாகச் சொன்னால் அதை அப்படியே பின்பற்றுகிறேன்” என்று அவர் பதிலளித்தார். “நல்லது. அப்படியே செய். போய் கடிதத்தை போஸ்ட் செய்து விடு” என்றார் குருநாதர். பின் ஒரு சமயம் குருநாதர் இப்படி சொல்லி இருக்கிறார். “ஏதாவது பிரச்னை எழுந்தால், உடனே என்னை வந்து பார்க்காதே. அல்லது எனக்கு எழுதாதே. முதலில் நீயே 'அதற்கு ஒரு முடிவு எடுக்க முடியுமா' என்று அறிய முயற்சி செய். நன்கு யோசித்த பிறகும் முடிவு தெரியாவிட்டால் என்னை அணுகு. ஒருவர் நிச்சயமாக எந்த பிரச்சனை குறித்தும் சிரத்தையாகச் சிந்தித்தால் அதற்கான விடையைக்காண முடியும். மேலெழுந்தவாரியாக எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு 'புனித நூல்களைப் பார்ப்பதோ அல்லது தனக்குத் தெரிந்த பெரியவர்களிடம் அறிவுரைகேட்பதோ' அல்ல. அது சுயதரிசனம் அல்லது உள்நோக்கி பார்வையைச் செலுத்துவதில்தான் உள்ளது. இந்த யோகமுறை முக்கியமாக அந்த சுயதரிசனத்தைக் காண்பதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பது தான்.

'அநந்த சாஸ்திரம் பஹு வேதிதவ்யம்'[44]. கற்றறிந்தவர்களால் எழுதப்பட்ட நூல்கள் அநேகம். அவை ஒன்றுக்கொன்று மாறுபடுபவை. அவற்றை எழுதியவர்கள் வெவ்வேறு கண்ணோட்டம் கொண்டவர்கள். ஆகவே பிரச்னைக்குத் தீர்வு என்பது தன்னுள்ளிருந்து தான் வர வேண்டும். 'கட்டகுடி பிரபாத ந்யாயா[45]' எனும் நூல் சொல்வது போல, எல்லோரும் ஒரு நாள் அந்த சுயதரிசனத்தை கண்டே ஆக வேண்டும். ஆகவே, ஒருவர் புறத்தில் கற்றறிவு பெற்றிருப்பதோடு, தன் உள்ளிருந்து வழிகாட்டும் குரலையும் கேட்டு நடக்க வேண்டும்' என்றார் அவர்.

அன்று மாலைக்குள் என் தோளிலிருந்த வீக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது. வழக்கமான யோகாபயிற்சிக்குப் பின் 'பீஜாக்ஷர' மந்திரத்தை 'ராம நாமம்' போல உச்சரித்தேன். உடனடியாக என்

தேகத்தில் சூடு பரவியது. நெருப்பு எரிவது போல உணர்ந்தேன். குருநாதரிடம் அதை தெரிவித்தேன். அவர் “குறிப்பிட்ட சமயங்களைத் தவிர அந்த மந்திரங்களை தேவையில்லாமல் பல முறை ஜபிக்கக் கூடாது. அவசியம் ஏற்பட்டால் ஒரு முறை உச்சரித்தால் போதுமானது. பரம்பொருள் செவிடு அல்ல. ஒரு தரம் ஜபித்தாலே அவர் கேட்டுக்கொள்வார். பரம்பொருள் உன் பிரார்த்தனையை ஒரு முறை கேட்டாலே அருள் புரிவார். நாம ஜபத்தை திரும்பத்திரும்ப உச்சரிப்பது டெலிபோனில் ஒரே எண்ணை திரும்பத் திரும்ப டயல் செய்வதற்கு ஒப்பாகும். 'பதில் என்ன வருகிறது' என்று கூட தெரிந்து கொள்ளாமல் அப்படி செய்யலாமா?”.

இது குருநாதர் அன்று கூறிய விளக்கம். இந்த யோகா முறை பற்றிய செய்தியின் சாரத்தை, பின்னர் நானும் மற்ற யோகா நண்பர்களும் பல முறை அனுபவித்து உணர்ந்து கொண்டோம்.

1925ஆம் ஆண்டில் என் நண்பர் ஒருவர் குருநாதரின் தெய்வீகச் சின்னத்தின் பெயரை 'ராமநாமஜபம்' செய்வதுபோல பலமுறை உச்சரித்தார். அப்படி ஜபம் செய்து வந்த சில நாட்களிலேயே அவரது உடல் தகிக்கத் தொடங்கியது. அவரது நரம்புகளில் தளர்ச்சி ஏற்பட்டது. அவர் தூக்கத்தை இழந்து தவித்தார். அவரைச் சேர்ந்தவர்கள் பலசிகிச்சைகள் செய்தும் பலனில்லாமல் முடிவாக அவரது யோகப் பயிற்சியையே நிறுத்தச் சொன்னார்கள். அதனாலும் நிவாரணம் கிட்டவில்லை. பின்னர், அவர் தனது தவறை உணர்ந்து, பிரார்த்தனையின்போது மானசீகமாக குருநாதரிடம் மன்னிப்பு கோரிய பின்பே, அவரால் இயல்பு நிலைக்கு திரும்ப முடிந்தது. இன்றளவும் அந்த நண்பர் யோகா பயிற்சிகளைச் செய்து திடமாகவும் உடல் நலத்தோடும் இருக்கிறார். இதுபோன்று பலர் யோகாவின் போது முறையற்ற நாம ஜபம் செய்ததால் அல்லல் பட்டு, பின்னர் தவறுக்கு வருத்தம் தெரிவித்து குணம் பெற்றிருக்கின்றனர்.

28

புதுவாழ்க்கை

குருநாதர் சொன்னவாறு அன்றிரவே நான் சென்னைக்குப் புறப்பட்டேன். வழியில் ரயில், மாயவரம் ஜங்ஷனில் நின்றது. சிலர் வண்டியிலிருந்து கீழே இறங்கினர். ரயில் கிளம்ப நேரமிருந்ததால் நானும் இறங்கி பிளாட்பாரத்தில் நடைபோட்டேன். வண்டி புறப்படத் தயாரானதும் நான் விரைந்து என் பெட்டியில் ஏறிக்கொண்டு கதவருகே நின்று வெளியில் பார்த்தேன். வண்டி ஒரு குலுக்கலுடன் வேகம் எடுத்தது. ஒரு கணம் என்னை யாரோ பிடித்து வெளியே தள்ளுவது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. உடலிலும், மனதிலும் ஒரு சோர்வு உண்டாகி முன்பு போல நடுக்கம் பிறந்தது. நான் மீண்டும் ஹரித்வார் செல்வது பற்றி நினைக்கத் தொடங்கினேன். 'ஓடும் ரயிலிருந்து குதித்து விடலாமா' என்ற முட்டாள் தனமான நினைப்பு கூட மனதில் எழுந்தது.

மறுபுறம் என்னை யாரோ ரயில் பெட்டிக்கு உட்புறம் தள்ளிக்கொண்டிருப்பது போன்ற உணர்வு பிறந்தது. மனதின் உட்பக்கம் இருந்த நல்லது–தீயது இரண்டுக்கும் இடையே போராட்டம் நடப்பது போலத் தெரிந்தது. ஆனால் பழைய மாதிரி இல்லாமல் இப்போது என்னுள் ஒரு ஒளிப்பிழம்பு உதித்ததை கவனித்தேன். அது நம்பிக்கையின் ஒளிக்கீற்று. நான் இவ்விதம் முரண்பட்ட எண்ணங்களோடு கதவருகே ஊசலாடிக் கொண்டிருந்தபோது, ஏதோ தெய்வத்தின் கட்டளை போல உள்ளே இருந்த ஒருவர் “ஐயா, கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அங்கே நிற்காதீர்கள். உள்ளே வந்து உட்காருங்கள். இடம் இருக்கிறது” என என்னை அழைத்தார். உடனே நான் கீழ்ப்படிந்தேன். உட்கார்ந்திருப்பவர்களின் இடையே இருந்த சிறிய இடத்தில் நான் நெருக்கி அடித்து அமர முயன்றேன். என்னை அழைத்தவர் எழுந்து நின்று கொண்டு “இங்கே உட்காருங்கள், நான் சில நிமிஷங்களில் அடுத்த ஸ்டேஷனில் இறங்கப்போகிறேன்” என்று சொல்லிவிட்டு எனக்கு

இடம் அளித்தார். நான் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்ட பிறகு, அவர் கதவருகே போய் நின்றார். 'என்னை உள்ளே அழைத்து இடம் தந்த அந்தப் பெரிய மனிதர் வேறுயாருமல்ல!'என் குருநாதர் தான்' என்ற உணர்வு என் மனதில் எழுந்தது. தன் தெய்வீகத்தன்மையால் என்னை காத்து அருளியிருக்கிறார் அவர்!

சென்னையை அடையும் வரை நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. ஆனால் எண்ணங்களோ இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தன. அரைத் தூக்கத்தில் என்னென்னவோ எண்ணங்கள்! சென்னை சேர்ந்ததும் நண்பர்களிடம் நடந்ததை எல்லாம் விவரித்தேன். அது கோடை விடுமுறை காலமாதலால் என் சகோதரர்கள், என் சகோதரி, மைத்துனர் யாவரும் எங்கள் ஊருக்குப் புறப்பட்டு விட்டனர். நான் மீண்டும் ஜனார்தன் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு, அலுவலகம் சென்று வரலானேன். அங்கு எல்லோருக்குமே என் உடல்நிலை பற்றி தெரியுமாதலால், பிரச்னைகள் இன்றி வேலையைப் பார்த்தேன். எல்லாம் சுமூகமாகவே போய்க் கொண்டிருந்தன. ஆனால் என் அலுவலக நண்பன் ஒருவன், என்னைப்பற்றி நன்கு தெரிந்து என்மீது அனுதாபம் காட்டி வந்தவன் திடுமென காலரா நோய் வந்து இறந்துவிட்டான். அது என்னை மிகவும் பாதித்து விட்டது. அலுப்புடன் வேலையிலிருந்து வீட்டுக்கு வந்ததும், யோகா பயிற்சி செய்வேன். அதனால் தெம்பு ஏற்பட்டு இரவு முழுதும் உற்சாகமாக இருப்பேன். காலையில் அது போல யோகா பயிற்சிகள் செய்து விட்டுத்தான் அலுவலகம் சென்று என் வழக்கமான பணிகளை பார்ப்பேன். நாளுக்கு நாள் என் உடல் நலம் கூடிக்கொண்டே வந்தது. ஒவ்வொரு நாளும் ஸ்ரீ நரசிம்மம் அவர்களைப் போய்ப் பார்த்து அவருடன் யோகப் பயிற்சிகள் செய்வேன்.

அந்த நாட்களில் தஞ்சாவூரைச் சேர்ந்த ஸ்ரீ சேஷய்யங்கார் என்பவர் எங்கள் பக்கம் வசித்து வந்தார். அவர் சமஸ்கிருத நூலான 'துருவநாடி' என்பதைப் பார்த்து பலருக்கும் ஜோதிடம் சொல்லிக்கொண்டிருந்தார். தொடக்கத்தில் மிகவும் பலஹீனமாக இருந்த

அவர், கும்பகோணம் சென்று சில நாட்கள் தங்கி குருநாதர் ஸி.வி.வி.யின் சிஷ்யராகி உடல்நலம் பெற்று திரும்பியவர். ஆகவே அவரும் யோகாகுழுவைச் சேர்ந்தவர் ஆனார். குருநாதரின் ஜாதகத்தையும் மற்றும் எங்கள் குழுவைச் சேர்ந்த சிலரின் ஜாதகங்களையும் பார்த்துப் பலன் சொன்னார். நாடி ஜோதிடத்தை வைத்து அவர் சொன்ன பலன்கள் என்னை வியக்க வைத்தன. சென்னை திரும்பி பத்து நாட்கள் ஆகின. உடல்நிலையில் சிறிது முன்னேற்றம் தெரிந்தது. எங்கள் மேலதிகாரி குப்புஸ்வாமி சாஸ்திரி கிருஷ்ணா ஜில்லாவுக்குச் சென்று பனை ஓலைச்சுவடிகளை சேகரித்துக்கொண்டு வருமாறு சொன்னார். உடனே நானும் மானவல்லி ராமகிருஷ்ணகவியும் அதற்காகப் புறப்பட்டோம். கிருஷ்ணாநதியில் பொங்கிவந்த புதுவெள்ள நீரைத்தான் நாங்கள் உபயோகிக்க வேண்டி இருந்தது. அந்த புதுத் தண்ணீர் எங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. பந்தரிலிருந்து சல்லபள்ளிக்கு நாங்கள் சாலை ஓரமிருந்த கால்வாய் வழியாக படகில் பயணம் செய்தோம். கவிஞருக்கு வறுத்த முந்திரிப்பருப்பின் சுவை மீது அதிகப் பிரியம். பந்தரில் அவற்றை நிறைய வாங்கிக்கொண்டார். படகில் செல்லும் போது நான் கொஞ்சமாகவும் அவர் அதிகமாகவும் அதை சாப்பிட்டுக்கொண்டே பேசிப் பொழுதைக் கழித்தோம். அதன் விளைவாக கவிஞர் அன்றிரவு வயிற்று வலியால் அவதிப்பட்டார். ஜுரம், வயிற்றுப்போக்கு, வாந்தி ஆகியவையும் தொடர்ந்தன. அது காலராவாக இருக்குமோ என பயந்தோம். நாங்கள் ஒரு சத்திரத்தில் தங்கி இருந்தோம். அன்றிரவு முழுதும் என்னுடைய உறவினர் ஒருவர் வந்திருந்து எங்களை கவனித்துக் கொண்டார். அதிகாலையில் அவர் டர்பன்டைன், பிராந்தி மற்றும் சில பொருட்களை எங்கள் தேகத்தில் தேய்ப்பதற்காக வாங்கி வர கடை வீதிக்குச் சென்றார். ஆனால் எந்தக்கடைக்காரரும் அவருக்கு அவற்றை விற்க முன்வரவில்லை. முன்னதாக ஸ்ரீ ராமகிருஷ்ணகவி எம்.ஏ.வும் நானும் அந்த ஊருக்கு ஓலைச்சுவடிகள் சேகரிப்பதற்காக சென்னையில் இருந்து வந்திருப்பதாகவும் நாங்கள் அவர்களது ஊர் ராஜாசாஹிப்பை சந்திக்கப் போவதாகவும் செய்தி பரவி இருந்தது.

அந்த சிறிய ஊருக்கு எந்த அதிகாரியோ, கனவானோ வந்தாலும் அவர்கள் ராஜாசாஹிப்பின் விருந்தினர்கள் ஆவார்கள். அவருக்குத் தெரியாமல் அந்த விருந்தாளிகளுக்கு எந்த வியாபாரியும் எந்த பொருளையும் விற்கக்கூடாது.

“என் கால்கள் வலிமை இழந்துவிட்டன. சாவின் விளிம்புக்கே சென்று விட்டது போல எனக்குத்தெரிகிறது. இது காலராதான். என் கால்களில் தடவுவதற்கு டர்பன்டைனும், குடிப்பதற்கு சிறிது பிராந்தியும் வேண்டும். என்ன செய்வேன்?” என்று கவிஞர் உரத்து முணுமுணுத்துக்கொண்டிருந்தார். ராஜாசாஹிப்புக்கு எங்கள் வரவை தெரிவிக்க பிற்பகலில்தான் ஆளை அனுப்ப வேண்டும். அதுவும் அவர் மதிய உணவுக்குப்பின் சிறிது உறங்கி எழுந்த பின் தான் 'பேட்டி' கிடைக்கும்! எப்படியோ அவருக்கு செய்தி தாமதமாகவேனும் போய்ச் சேர்ந்தது. வேண்டிய பொருள்களை அனுப்பி வைக்க அவர் ஏற்பாடு செய்தார். ஆனாலும் அதற்குள் கவிஞரின் உடல்நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டதால் அவற்றை உபயோகிக்க வேண்டிய தேவை எழவில்லை. என் உறவினரின் உதவியோடு கவிஞர் சிறிது நலம் பெற்று விட்டார் என்பது தெரிந்தது. ஆறுமைல் தொலைவிலுள்ள எங்கள் ஊருக்கு தகவல் போய்ச் சேர்ந்து என் தகப்பனார், என் சித்தப்பாவை வண்டியுடன் அனுப்பி எங்களை அழைத்து வரச் செய்தார். நாங்கள் அங்கு புறப்பட்டோம்.

சல்லபள்ளியில் எங்களுக்கு சிகிச்சை தொடர்ந்து. முந்திரிப்பருப்புகளை வெறும் வயிற்றில் சாப்பிட்டு தண்ணீரும் குடித்ததால் எனக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. நான் வீட்டுக்குச் சென்றபோது எனக்கு 100 டிகிரி ஜூரம். ஆனால் நான் மருந்து ஏதும் உட்கொள்ளவில்லை. என் வீட்டு ஆட்களிடம் கும்பகோணத்திற்கு ஒரு தந்தி கொடுக்கச் சொன்னேன். 'இந்த தந்தி என் குருநாதருக்கு இரவிலோ அல்லது மறுநாள் காலையிலோ தான் போய்ச் சேரும். இவனுக்கு ஜூரம் அதிகமாக இருக்கிறது. நாம் ஏதாவது மருந்து கொடுத்தால் தான் நல்லது” என்று என் பெற்றோரும் மூத்த சகோதரரும்

பேசிக்கொண்டார்கள். என் காதிலும் அது விழுந்தது. “சரி மருந்து கொடுங்கள்” என்றேன் நான். மாலை 6 மணிக்கு எனக்கு ஒரு கஷாயத்தை கொடுத்தார்கள் அப்பொழுது எனக்கு மேலே இருந்து கீழ்நோக்கி விழுவது போன்ற உணர்வு பிறந்தது. உடலில் வியர்த்துக்கொட்டியது. சில நொடிகளில் என் உடல் சூடு குறைந்து இயல்பு நிலைக்கு வந்தது. 'கஷாயம் வேலை செய்து விட்டது' என என் வீட்டார் மகிழ்ச்சி அடைந்தனர். நான் 'குருநாதர் தந்தியைப் படித்திருப்பார்; என் உடல்நிலை குணமாகும்படி அவர் நடவடிக்கை எடுத்திருப்பார்” என நினைத்தேன். மறுநாளும் இயல்பாகவே இருந்தேன். ஆனால் அதற்கடுத்த நாள் உடலில் மறுபடியும் சூடு அதிகமாயிற்று. அன்றுதான் கும்பகோணத்திலிருந்து பதிலும் வந்தது. 'உடல்நிலை கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும். மருந்துகளையும் எடுத்துக்கொள்ளலாம்' என பதில் தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் நம்பிக்கையுடன் வீட்டார் கொடுத்த கஷாயம், மாத்திரைகளை சாப்பிட்டேன். விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்றால், என் கணக்கில் அது குறைவாகவே இருந்தது. விடுப்புக்கு விண்ணப்பித்திருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணகவியும் சென்னைக்கு புறப்பட்டு விட்டார். அவருக்கும் நடுநடுவில் காய்ச்சல் வந்து கொண்டு தான் இருந்தது.

எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை நீண்ட காலம் விடுப்பில் இருந்து விட்டு பணியில் சேர்ந்திருக்கிறேன். மறுபடியும் விடுப்பு கேட்டு விண்ணப்பிக்க எனக்கு தயக்கமாக இருந்தது. வீட்டில் இருக்கவும் பிடிக்கவில்லை. சுற்றுப்பயணம் செய்ய முடியாமல் பலஹீனமாகவும் இருந்தது. அப்படி ஒரு நிலையில் நான் தத்தளித்துக்கொண்டிருந்தபோது என் அலுவலகத்திலிருந்து 'உடனே என்னை புறப்பட்டு வந்து தஞ்சாவூர் நூலகத்தில் உள்ள ஏட்டுச்சுவடிகளை ஆராய்ச்சி செய்யுமாறு' கூறி தகவல் வந்தது'. எனக்கு அது மகிழச்சியையே அளித்தது, ஏனெனில் அந்த மாதிரி வேலை எனக்கு மிக வசதியாக இருக்கும்.

உடனே சென்னைக்கு புறப்பட்டு விட்டேன். அலுவலக அதிகாரியுடன் பேசிவிட்டு தாமதியாமல் கும்பகோணம் புறப்பட்டேன். அதற்குள் என் சகோதரியின் குடும்பத்தவர் சென்னைக்கு திரும்பி விட்டனர். அவர்கள் வீட்டில் இருந்து பள்ளிப்படிப்பு படித்துக்கொண்டிருந்த என் இளைய சகோதரன் சந்திரசேகரனுக்கு டைபாயிட் வந்து விட்டது.

நான் குருநாதருக்கு அதைப்பற்றி ஒரு கடிதம் எழுதினேன். அவர் பதிலுக்கு சென்னையிலிருந்த என் நண்பரும் அவரது சிஷ்யருமான ஒருவருக்கு பையனை கவனித்துக்கொள்ளுமாறு கடிதம் எழுதினார். அவர், பையனுக்கு குணமானபின் குருநாதரிடம் அழைத்துச் சென்று தீக்ஷை பெற வைக்குமாறு என்னிடம் சொன்னார். அந்த யோசனை அவர் பிரார்த்தனையில் இருந்த போது உதித்ததாம். 'தீக்ஷை பெற்ற பின் அவன் உடல் ஆரோக்கியத்துடன் நலமாக இருப்பான்' என்றார் அவர். என் சகோதரன் ஒன்றரை மாதம் வரை நோயினால் அவதிப்பட்டான்.

கும்பகோணத்தில் நான் குருநாதரை சந்தித்து நடந்த எல்லாவற்றையும் விவரித்தேன். அவர் ஒவ்வொரு வாரக்கடைசியிலும் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வருமாறு என்னை அழைத்தார். அப்பொழுது ரயில் சார்ஜ் தஞ்சாவூர்– கும்பகோணத்துக்கு அரை ரூபாய்க்கும் சிறிது குறைவாக இருந்தது. எனக்கு தஞ்சாவூரில், தியாகராஜ அய்யர் என்பவருடன் நட்பு ஏற்பட்டது. அவரும் குருநாதரின் சிஷ்யர் தான். நாங்கள் இருவரும் சேர்ந்து யோகப்பயிற்சி செய்வோம். அதன் பின் என் சகோதரன் டைஃபாயிடிலிருந்து நிவாரணம் அடைந்து, தன் மைத்துனியுடன் கும்பகோணம் வந்தான். என் வேண்டுகோளை ஏற்று குருநாதர் அவனுக்கும் தீக்ஷை அளித்தார்.

எனக்கு சல்லபள்ளியில் ஏற்பட்ட மலேரியா நோயின்தாக்கம் முற்றிலுமாக நீங்கவில்லை. அதனால் நான் மிகவும் பலஹீனமடைந்திருந்தேன். கும்பகோணம் வரும் போதெல்லாம் காய்ச்சலால் அவதியுறுவேன்.

மோரில் கலக்கிய அரிசிக்கஞ்சி தான் என் ஆகாரம். இரவில் திடீரென எனக்குப் பசி எடுக்கும். என்னைப்பற்றி நன்கு அறிந்திருந்த சச்சிதானந்த ஸ்வாமிகள் எனக்கென அரிசிக்கஞ்சி, தயிர், ஊறுகாய் ஆகியவற்றை தயாராக வைத்திருப்பார். எனக்கு இரவில் பசி எடுக்கும்போது அவரை எழுப்பி அதைச் சாப்பிட்டுவிட்டு தண்ணீரைக்குடித்துப் பிறகு படுப்பேன். தஞ்சாவூரை அடைந்தவுடன் காய்ச்சல் குறைந்து விடும். வேலை நாட்களில் என் அலுவலகப் பணிகளை சிரமமின்றியே செய்வேன். ராமகிருஷ்ண கவியும் இன்னும் சிலரும் என்னுடன் தஞ்சாவூருக்கு சுவடிப்பணிக்காக வந்திருந்தனர். ஒரு முறை அவர்கள் சென்னைக்குப் போய் இருந்தபோது குப்புஸ்வாமி சாஸ்திரியிடம், 'நான் ஒவ்வொரு வார இறுதியிலும் கும்பகோணம் சென்று ஏதோ யோகாபயிற்சியில் ஈடுபடுவதாகவும், திங்கள் அன்று தஞ்சாவூர் திரும்பும்போது காய்ச்சலுடன் வருவதாகவும்' தெரிவித்திருந்தனர். அதைக்கேட்டதும் அவர் மிகக் கோபம் அடைந்தார்.

1916ஆம் வருஷம் கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, முழுவதுமாக குருநாதரின் தெய்வீக அருட்பார்வையில் இருக்க விரும்பி கும்பகோணம் போய் இருந்தேன். 30ஆம் தேதி வரை எனக்கு கடும் காய்ச்சல். 30ஆம் தேதி வயிற்றுப்போக்கும் சேர்ந்து கொண்டது. நாற்பது, ஐம்பது தடவை 'பேதி' ஆயிற்று. என் நண்பர் மாதவய்யா எனக்கு ஜவ்வரிசிக்கஞ்சி போட்டுக் கொடுத்தார். நான் அதைக்குடித்தேன். ஆனாலும் மிகப் பலஹீனமாகவே இருந்தேன். என் கைகளைத் தூக்கக்கூட சிரமப்பட்டேன். அன்று காலையில் நான் வேலைக்குப் புறப்பட வேண்டும். குருநாதர் என் பலஹீன நிலையைக் கவனித்திருக்கிறார். அவருடைய முதன்மைச் சீடர் ராமச்சந்திரய்யாவை அழைத்து “பிரபாகரனுக்கு தேக திடம் ஏற்பட சிகிச்சை செய்” என்றார். நான் தங்கி இருந்த இடத்திற்கு அவர் வந்து, படுத்துக்கொண்டிருந்த எனக்கு சிகிச்சை அளித்தார். ஐந்து நிமிஷங்களில் எனக்கு தெம்பு ஏற்பட்டது. எழுந்து உட்கார்ந்தேன். பிறகு எழுந்தேன். அதன் பின் நடந்தேன். ஓடலாம் என்று கூடத்தோன்றியது. முழு பலமும் கிடைத்தது

போல உணர்ந்தேன். குருநாதரைப் பார்க்கச் சென்று சிறிது தயக்கத்துடன் அவர் பாதங்களில் நமஸ்கரித்தேன். குருநாதர் "ரயிலுக்கு நேரமாகி விட்டது. புறப்படு" என்றார். தொடர்ந்து "நீ உடல் நலத்துடன் இருப்பாய். இனி ஒவ்வொரு வாரக் கடைசியிலும் இங்கு வர வேண்டியதில்லை. இரண்டு நாட்களுக்கு மேல் விடுமுறை இருந்தால் மட்டும் வா. பகலில் நன்றாகச் சாப்பிடு. காலையிலும் இரவிலும் சிற்றுண்டி எடுத்துக் கொள். உன் ஜீரண சக்தி நன்றாக ஆகும். 'லீவர்' இயல்பாகி விட்டது. இரவு வேளையில் மோர் வேண்டாம். பால் சாப்பிடு" என்று அறிவுரைகள் வழங்கினார். அதைக்கேட்டுக் கொண்ட பிறகு நான் தஞ்சாவூர் திரும்பினேன்.

அப்பொழுதிலிருந்து எனக்கு நோயோ, காய்ச்சலோ வரவே இல்லை. ஜீரண சக்தியும் நல்லபடியாக ஆனது. அதிலிருந்து, நல்ல பசி எடுத்து நன்றாக உண்ணத் தொடங்கினேன். விரைவில் என் உடல் நலம் அடைந்தது. நோய், நொடி பற்றிய கவலைகள் இல்லாமல் யோகப் பயிற்சியில் ஈடுபட்டேன். ஒரு நாள் காலையில் ரொட்டியும் பாலும் சாப்பிட்டுவிட்டு அலுவலகம் சென்றேன். (என் முப்பத்தைந்தாவது வயதிலிருந்துதான் காபி நன்கு குடித்து வருகிறேன்.') அலுவலகம் செல்லும்முன் வழக்கமான யோகா பயிற்சியையும் முடித்திருந்தேன். (அப்பொழுது தஞ்சாவூர் நூலகத்தில் வேலை நேரம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை). நாங்கள் மிக அதிகாலையில் குறிப்பிட்ட நேரத்தில் சில தனிப்பாடங்கள் எடுத்துக் கொள்ள வேண்டி இருந்தது.

காலை பத்து மணிக்கு குறிப்பிட்ட பயிற்சிகளின்படி பாடங்களை எடுத்துக் கொண்ட பிறகு, நான் என் மேஜையில் உட்கார்ந்து பனை ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து கொண்டிருந்தேன். திடீரென்று என் மூலாதாரத்தின் மையத்திலிருந்து ஒரு சக்தி வாய்ந்த உணர்வு வெளிப்பட்டு மிக வேகமாக மேல் நோக்கி வந்தது. உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு பேரானந்த அலை பரவி என் உடலெங்கும் நிறைந்தது. அந்த ஆனந்த பரவசநிலையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. என் தலை பரவசத்தால் ஆட ஆரம்பித்தது. என் உள்ளே ஒரு

ஒளி பரவியது போல உணர்ந்தேன். சில நிமிஷங்கள் வேலையை நிறுத்திவிட்டு அந்த ஆனந்த பரவச நிலையை நன்கு உணர்ந்து அனுபவித்தேன். அந்த நிலை பத்து நிமிஷங்கள் நீடித்தது. பிறகு மெதுவாக என் உடல் இயல்புநிலைக்கு திரும்பியது. நான் ஒரு புத்துணர்வையும் புது தெம்பையும் உணர்ந்தேன். சில தினங்களில் அந்த ஓலைச் சுவடி வேலைகளில் என் பொறுப்புக்கு ஒதுக்கப்பட்ட பங்கினை வெற்றிகரமாக முடித்தேன்.

29

என் மனைவி தீக்ஷை பெற்றது

ஊரிலிருந்த என் குடும்பத்தை சென்னைக்கு கொண்டு வர வேண்டிய நேரம் வந்தது. சாமான்கள், பாத்திர பண்டங்களை 'பார்சல்' கட்டி ரயில் மூலம் அனுப்பி விட்டு நானும், மனைவியை அழைத்துக்கொண்டு புறப்பட்டேன். அங்கிருந்து கும்பகோணம் சென்று குருநாதரை சந்தித்து என் உடல்நிலை பற்றிய எல்லா தகவல்களையும் சொன்னேன்.

அன்று மாலை வழக்கமான யோகா பயிற்சிகள் முடிந்த பிறகு குருநாதர் என்னைக்கூப்பிட்டு "இன்று இரவு நீ, உன் மனைவியோடு யோகா அறையில் நான் வழக்கமாக படுத்துக்கொள்ளும் மேஜையில் படுத்துக்கொள். சௌகர்யமாக அங்கே இரு. நான் வேறு அறையில் படுத்துக்கொள்கிறேன்" என்றார். எனக்கு மிக வெட்கமாக இருந்தது. கூச்சத்தோடு 'சரி' என்று தலையசைத்தேன். ஆனால் பிறகு எனக்கு பயம் எடுத்தது. அது குருநாதர் படுக்கும் அறை. அவர் உறங்கும் மேஜை! அதில் நானும் என் மனைவியும் படுப்பதாவது! நடக்கவே நடக்காது! அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. குருநாதரின் உத்தரவை யாரிடமும் சொல்லவில்லை. இரவு உணவை குருநாதருடன் எடுத்துக்கொண்டேன். என் மனைவி, உள்ளே மற்ற பெண்களுடன் படுத்துக்கொண்டாள். நான் வெளியே சில நண்பர்களுடன் உறங்கினேன். இரவு முழுதும் குருநாதர் இட்ட கட்டளையை எண்ணிக்கொண்டிருந்தேன். அதிகாலையில் கதவுகள் திறந்ததும் வீட்டுக்குள் நுழைந்தேன்.

வீட்டினுள் திறந்த முற்றத்தில் குருநாதர் தங்கப்பூண்கள் பதித்த 'கேம்ப்' கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார். வானில் நட்சத்திரங்கள் மறையாமல் மின்னிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு குளிர் காற்று

வீசியது. அவர் படுக்கையில் மல்லிகைப் பூக்கள் சிதறிக்கிடந்தன. அவரது தலை, பட்டுஉறையிட்ட தலையணையில் சாய்ந்திருந்தது. உடம்பை ஒரு பட்டுப்போர்வை போர்த்தியிருந்தது. சுற்றிலும் கொசுவலை. அவர் விழித்தெழும் வரை காத்திருந்தேன். பிறகு படுக்கையில் எழுந்து உட்கார்ந்த குருநாதரின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தேன். "நீ ராத்திரி எங்கே படுத்திருந்தாய்?"என அவர் வினவினார். நான் வெளியேயும் என் மனைவி உள்ளேயும் படுத்திருந்ததை தெரிவித்தேன். அவர் நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு "ஆகவே, நீ என் உத்தரவின்படி நடக்கவில்லை?" என்றார். நான் பதில் சொல்லத் தெரியாமல் தலை கவிழ்ந்தேன். "சரி சரி இப்பொழுது என்ன விஷயம்?" என கேட்டார் அவர்.

"உங்கள் தயவால் நான் தேக ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். இந்த யோகா முறை நீங்கள் எனக்குக் கொடுத்த ஆசீர்வாதம். என் பெற்றோர் மிக வயதானவர்கள். அவர்களுக்கு எப்போது என்ன நேருமோ தெரியாது. அவர்களை உங்கள் சிஷ்யர்களாக ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன். ஆனால் அவர்கள் உங்கள் சமூகத்துக்கு நேரில் வர இயலாது" என்றேன் நான்.

"அவர்களுக்கு என்ன வயது?" என குருநாதர் கேட்டார். "என் தகப்பனார் எழுபது வயதுகளைக் கடந்தவர்"–நான்.

"நீ வயதான பெற்றோரைப் பற்றி கவலைப்படுகிறாய். உன் இளம் மனைவியைப் பற்றி ஏன் நினைக்காமல் இருக்கிறாய்? அவள் உன் மனதுக்கினியவளாக நீண்ட காலம் வாழ வேண்டும் அல்லவா?"–குருநாதர்.

"அவள் மிகவும் சின்னப் பெண். நானும் அவளும் உங்களை தரிசிக்க எப்போதும் வர முடியும். உங்கள் அனுமதியோடு எப்பொழுதும் அவள் உங்களது சிஷ்யை ஆகக்கூடும். ஆனால் என் வயதான பெற்றோர்கள் இந்த வாழ்விலேயே உங்கள் சிஷ்யர்களாக வேண்டும் என்று விரும்புகிறேன்" – நான்.

“அதெல்லாம் சரி. உன் மனைவி இன்று காலை எட்டு மணிக்கு தீக்ஷை பெறப்போகிறாள். அதற்குத் தயாராக இரு. நீ அதற்கென எதையும் கொண்டு வர வேண்டாம். ராதாகிருஷ்ணனிடமும், மஹாதேவ அய்யரிடமும் இது பற்றிச் சொல்லி படிவங்களை பூர்த்தி செய்யச்சொல். அது போதும்” என்று சொல்லிவிட்டு குருநாதர் எழுந்து உள்பக்கம் சென்றுவிட்டார்.

நான் பிரமித்துப் போனேன். குருநாதர் நான் கேட்டதற்கு 'சரி' சொல்லவில்லை. ஆனால் நான் கேட்காத ஒன்றுக்கு அனுமதி அளித்திருக்கிறார். அதைப்பற்றி நினைத்தவாறே வெளியில் வந்து, காலைக்கடன்களை முடித்தேன். அதற்குள் குறிப்பிட்ட இருவரும் ஹாலுக்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் குருநாதர் கூறியவற்றை சொன்னேன். அவர்கள் புன்னகையுடன், 'சரி' என்றார்கள். காலை எட்டு மணிக்குள் எல்லாம் தயாராக இருந்தன. அன்று குருநாதரின் 'பிரக்ஞை அறியும் திறன்' உச்சகட்டத்தில் இருந்தது. அவர் தன்னுடைய வயதான, நோய்வாய்ப்பட்டிருந்த அத்தைக்காக மனம் ஒன்றிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த நாள் அது.

எப்படி இருந்தாலும், என் மனைவி காலை 8 மணிக்கு 'தீக்ஷை' பெற்றாள். குருநாதரின் இல்லத்தரசி எங்கள் அன்னை—எங்களுக்கு யோகப்பயிற்சி தொடங்குமுன் இட்லி, காஃபி கொடுத்தார். ஆனால் என் மனைவி 'யோகா பயிற்சி தொடங்குமுன் காலை உணவை முடித்துவிட வேண்டும்' என்பது தெரியாமல் முன்பே பயிற்சியில் ஈடுபட்டுவிட்டாள். சில நிமிஷங்களுக்குள் அவளது கை கால்கள் மரத்துப் போய் உடல் விரைத்துவிட்டது. சச்சிதானந்த ஸ்வாமிகள் அதைக்கவனித்து விட்டு மெதுவாக அவளை அழைத்து சுய நினைவுக்கு கொண்டு வந்தார். ஆனால் அவளால் கண்களைத் திறக்க முடியவில்லை. ஸ்வாமிகள், அன்னையை அழைத்தார். அப்பொழுதுதான் அவளுக்காகப் பரிமாறப்பட்ட காலை உணவு தொடப்படாமல் இருந்ததை கவனித்தோம். அன்னை, அவளை கண்களை திறக்கச் செய்து அழைத்து வந்தார். அவள் மூன்று இட்லிகள், தண்ணீர், காஃபி சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம்

ஆனபின் யோகா பயிற்சியை மீண்டும் தொடங்கினாள். கால்மணி நேரம் எங்கள் பயிற்சிகள் நடந்தன. ஆனால் எல்லாம் கடினமாகத் தெரிந்தன. என் நண்பர்கள் 'அதற்குக் காரணம் குருநாதர் மனதை ஒருமுகப் படுத்தி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்ததுதான்' என்றார்கள். நானும் என் மனைவியும் அன்று ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தோம்.

அன்று மாலையே நாங்கள் சென்னைக்குப் புறப்பட வேண்டும். நான் மறுபடியும் குருநாதரை சந்தித்து "என் பெற்றோருக்கும் தீக்ஷை கொடுக்க வேண்டும்" என்ற என் கோரிக்கையை வெளியிட்டேன். என் அறியாமையைக் கண்டு அவர் சிறிது ஆயாசம் அடைந்தது தெரிந்தது. அவர் சொன்ன பதில் "அவர்களுடைய பௌதிக உடல்களை பாதுகாப்பது என்பது இனி நடைபெறாத ஒன்று. நீ என்னை வற்புறுத்துவதால் ஒன்று சொல்கிறேன். இந்த யோகா முறையில் நீ பூரணத்துவம் பெற்ற பிறகு, உன்னுடைய குடும்பம் "முந்தைய பத்து தலைமுறைகளும் பிந்தைய பத்து தலைமுறைகளும்" அதனால் பயனடையும். நான் அறிவுறுத்தியபடி இந்த யோகா முறையை நடுவில் நிறுத்தாமல் இன்னும் பத்து வருஷங்கள் கடைப்பிடித்து வா. உன் விருப்பங்களை நீயே அப்போது பூர்த்தி செய்து கொள்ள இயலும். உன் பெற்றோர் இருக்குமிடத்திலேயே இருக்கட்டும். அங்கிருந்தே இந்த யோகா முறையை பயிலலாம்" என்று சொன்ன அவர், 'என் பெற்றோர் செய்ய வேண்டியது என்ன?' என்று விளக்கமும் அளித்தார். எனக்கு ஒரே மகிழ்ச்சி.

'குருநாதரிடம், நான் என் பெற்றோர் பற்றி விண்ணப்பித்ததற்கு அவர் சொன்ன பதில், நான் கேட்டதை கொடுக்காமல், கேட்காததை கொடுத்தது; என் பெற்றோர் பற்றி நான் கேட்டுக் கொண்டபோது அவர் என்னைப் பார்த்தவிதம்; அதற்கு அவர் சொன்ன பதில்' இவற்றில் எல்லாம் இருந்த முக்யத்வம் எனக்கு பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் புலனாயிற்று[46]. பதின்மூன்று வருஷங்களுக்குப் பின் அந்த மர்மம், ஒரு ஆச்சர்யமான அனுபவம் மூலமாக எனக்கு வெளிப்பட்டது. அதைப்பற்றி உரிய இடத்தில் பின்னர் சொல்கிறேன்.

கும்பகோணத்தில் இருந்தவாறே, என் பெற்றோருக்கு குருநாதர் அறிவுறுத்தியதை எல்லாம் எழுதினேன். நான் குருநாதர் முன்னிலையில் என்ன ஆனந்த அனுபவங்களை அடைந்தேனோ அதை தொலைதூர ஊரிலிருந்த என் பெற்றோரும் அடைந்தனர். என் பெற்றோர் அடைந்த பரவச அனுபவத்தைப்பற்றி, பிற்பாடு என் சென்னை விலாசத்துக்கு விரிவாக எழுதினார்கள். அன்று, இரவு மெயிலில் நானும் என் மனைவியும் சென்னைக்கு புறப்பட்டோம்.

30

நாடி ஜோதிட நூல்கள்

தஞ்சாவூர் நூலகத்தில் மதிப்பீடுகள், ஆய்வுகள் செய்த பிறகு நாங்கள் அதன் தொடர்ச்சியாக சென்னையில் மூன்று நான்கு மாதங்கள் மேற்பார்வைப்பணிகள் புரிய வேண்டியிருந்தது. அதற்காக சென்னையிலேயே தங்கி இருந்தோம். அச்சமயம் சென்னை ராஜதானியின் கவர்னராக "லார்ட் பெண்ட்லேண்ட்" இருந்தார். இங்கிலாந்திலோ, ஜெர்மனியிலோ இருந்த சிலர், 'அவர்கள் சார்பாக தஞ்சை சுவடிகள் நூலகத்தை அவர் வாங்க வேண்டும்' என்று தூண்டியதாகச் சொல்லப்பட்டது. ஆகவேதான் தஞ்சை நூலகத்தை மதிப்பீடு செய்யும் பணிக்காக நாங்கள் தஞ்சாவூருக்கு அனுப்பப்பட்டோம்.

'கவர்னர் ரகசியமாக அந்த வேலையைச் செய்கிறார்' என்பது அம்பலமாகி– விட்டது. உடனே பொது மக்கள் இடையே பெரும் கிளர்ச்சி உருவாயிற்று. அதன் விளைவாக கவர்னர் அந்த முயற்சியை கைவிட்டார். ஆனால் நாங்கள் இடைக்காலத்தில் சேகரித்த விஷயங்கள் 'அந்த நூலகத்தில் உள்ள சுவடிகள் பற்றி தெரிந்து கொள்ளவும், அது சம்பந்தமான 'கேட்லாக்' எனப்பட்ட 'நூல்களின் பெயர்ப்பட்டியல்' தயாரிக்கவும்' மற்றவர்களுக்குப் பயன்பட்டது. தஞ்சை நூலகத்தில் உள்ள சுவடிகளை 'மதிப்பீடு செய்யும் பணியே' எங்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததால் நாங்கள் அவை பற்றிய வேலைகளை முழுமையாகச் செய்து முடித்திருந்தோம். நூல்களின் உட்பொருள்களைப் பற்றி நாங்கள் ஏதும் குறிப்புகள் எடுத்துக் கொள்ளவில்லை. கவர்னரின் முயற்சி தோல்வியடைந்தபின் நாங்கள் தயாரித்த மதிப்பீடு அறிக்கையை, தஞ்சை நூலக அதிகாரிகளிடம் கொடுத்து விட்டோம். அதன்பின் சென்னைக்கு வந்த நான், யோகப்பயிற்சிகளை முறையாகச் செய்து உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் கண்டேன். நண்பர்களோடும் சேர்ந்து யோகப் பயிற்சிகளை முறையாகச் செய்தேன்.

தஞ்சையில் நாங்கள் இருந்த போது 'துருவ நாடி' பற்றிய சுவடிகளை நன்கு ஆய்வு செய்திருந்தேன். அந்த ஆய்வின் போது குருநாதர் மற்றும் சில நண்பர்களின் ஜாதகங்கள் அங்கு கிடைத்தன. துருவ நாடிக்குறிப்புகளை வைத்து அவற்றையும் என் ஜாதகத்தையும் பரிசீலித்தேன். சத்யாச்சார்யர் என்பவர் துருவநாடியின் ஆசிரியர் என்று கூறப்பட்டது. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த அவர், 'பஞ்ச சித்தாந்திகா' போன்ற பலபுகழ் பெற்ற நூல்களையும் எழுதியிருக்கிறார். அவற்றைப் பரிசீலித்ததில் இரண்டு நூல்களுக்கும் எழுத்து நடையில் அதிக வேறுபாடு தெரிந்ததால் 'இவர் ஒருவரே அந்த இருநூல்களையும் எழுதி இருப்பாரா?' என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. நாடி நூல்கள்[47] பல, சமஸ்கிருதத்தில் இருந்தாலும் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் சில இருந்தன. எனினும் அவை பெரும்பாலும் தமிழ்நாட்டில்தான் கிடைக்கின்றன. ஆந்திரப்பகுதியிலும் ஒரு நாடிநூல் தெலுங்கு மொழியில் கிடைத்தது. அதை எழுதியவர் 'வீமுலவாடா பீமகவி' என அறியப்படுகிறது. அது 'ஸீஸமாலிகா[48]' என்ற பாணியில் எழுதப்பட்டது. அது பீமகவியின் வழக்கமான கவிதைப் பாணியிலிருந்து மாறுபட்டது. நான் முயற்சிகள் செய்து அதன் ஒரு பிரதியை சேகரித்து 'சென்னை கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில் வைத்தேன்'. ஆனால் இப்போது அதற்கு முக்யத்துவம் இல்லாமல் போய்விட்டது. 'துருவ நாடி, போன்று சத்ய ஸம்ஹிதா, சுக்ர நாடி, சந்திரகலா நாடி' போன்ற வேறு நூல்களும் இருப்பதை நான் அறிந்தேன். அவை சமஸ்கிருதத்திலும் தமிழிலும் உள்ளவை. பெரிய ஞானிகளால் முற்காலத்தில் அவை எழுதப்பட்டவை. துருவ நாடியையும் சத்யஸம்ஹிதையையும் இயற்றியவர் சத்யாச்சார்யர் என்று சொல்லப்பட்டாலும், எனக்கென்னவோ சத்யாச்சார்யரின் பிந்தைய பிறப்புகளில்தான் பூர்வஜென்ம ஞானத்தால் அவை எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

அதைப்பற்றி இங்கே மேலும் சொல்ல வேண்டும். கற்றறிந்த அறிஞர்கள், பண்டைய காலத்தில் வாழ்ந்த மஹான்களைப்பற்றி பலவற்றைக்கூறி இருக்கிறார்கள். 'அப்பய்ய தீக்ஷிதர் போன்றோர் சிவபெருமானின் அம்சம், வேதாந்த தேசிகர் போன்றவர்கள் அவதார

புருஷர்கள்' என்றெல்லாம் சொல்வதுண்டு. அந்த மஹான்களிடம் 'ஓர் அளவுக்கு, தெய்வாம்சம் இருந்தது' எனச்சொல்வது சரியாக இருக்கும். தெய்வங்கள் எப்போதாவது சில அற்புதங்களை நிகழ்த்துவதற்கென்று மானிட உருவில் பூமிக்கு இறங்கி வருவதுண்டு. ஆனால் அவர்களால் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் சில காரியங்களை பூர்த்தி செய்ய முடியாமலும் போகலாம். அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களாதலால் அவர்களது குறிக்கோள் பூர்த்தியாகும் வரை அவதாரம் எடுத்துக் கொண்டே இருப்பார்கள். கௌதமபுத்தர், மஹாவீரர், ஆதிசங்கரர் போன்ற அவதார புருஷர்களின் நோக்கம் அவரவர்களின் வாழ்நாளுக்குள்ளேயே, நிறைவேறிவிடவில்லையே!

பண்டைக்கால வேதசாஸ்திரம் கற்ற மஹான்கள் அற்புதமான ஜோதிட அறிவியல் நூல்களை அளித்தவர்கள். 'மானிட வாழ்வு பற்றி கணித்துக் கூறுவதற்காக அவர்கள் ஒவ்வொரு அறுபதாண்டுக்கும் ஒரு முறை மறுபிறவி எடுத்து வருவார்கள்' என்பது என் உறுதியான நம்பிக்கை. அவர்கள் மறுபிறவியில் இயற்றிய நூல்களே நாடி ஜோதிட நூல்கள். 'ஆனால் அவர்களுடைய கணிப்பு அறுபது அல்லது நூற்றிஇருபது ஆண்டுகள் காலகட்டத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது; அதற்கு மேற்பட்ட காலகட்டத்திற்கு அவை பொருந்தாது' என்பதும் என் நம்பிக்கை. அந்த மஹனீயர்கள் தெய்வீக ஞானத்துடன், எதிர்காலத்தை கணித்து எழுதுவதில் ஈடுபட்டதால் அவர்கள் மொழிபற்றிய நுட்பங்களைப்பற்றி கவலைப்படவில்லை. அந்த நூல்களில் உள்ள மொழி உயர்நடையில் இல்லாததுமட்டுமல்ல, குற்றங்குறைகள் உள்ளதாகவும் இருந்தன. ஆனால் சில இடங்களில் கவிதை நடை நன்கு இருந்தாலும் முழுதுமே அப்படி இல்லை. ஜோதிட விளக்கங்கள், பண்டித நடையில் இருந்தாலும் புதிதாகப் புனையப்பட்ட வார்த்தைகளும் அந்நூல்களில் காணப்பட்டன. நவீன காலத்திய 'ரேடியோ, ரேடியம், எக்ஸ்ரே, காஸ்மிக்கதிர்கள், அணுகுண்டு' போன்ற சொற்களும் அவற்றில் இடம் பெற்றிருந்தன.

இந்த நாடி ஜோதிட நூல்களை எழுதியவர்கள் எதிர்காலத்தைப் பற்றி கணித்திருந்தாலும், அவற்றைப் படிக்கக் கேட்பவர்களுக்கு அவை கடந்த காலத்தைப் பற்றிய தகவல்களாகவே தெரியும். நாடி ஜோதிடம் கேட்டவர்களின் எதிர்காலம் பற்றியும் அதில் கூறப்பட்டிருக்கும். ஆனால் அவை சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. துருவ நாடியைப் பொறுத்தமட்டில் இது சிறிது வித்தியாசப்படும். 'எதிர்காலம் பற்றிய கணிப்பு சரியாக வரவில்லையே' என்று மறுபடியும் கேட்கப் போனால், ஜோதிடம் சொல்பவர்கள் புதிதாக ஒரு பக்கத்தை எடுத்துப் பலன் கூறுவார்கள். அது முந்தைய கணிப்பை விட சிறிது சரியாக இருக்கும். ஆனால் அது 'முற்றிலும் சரியாக இல்லை' என்பது போகப் போகத்தெரியும். ஆனால் நாடி ஜோதிட முறை இருக்கும்வரை, ஜாதகம் பற்றிய இந்த கலந்தாய்வுகள் தொடர்ந்து கொண்டுதானிருக்கும். என்னைப் பொறுத்த வரையில் எந்த நாடி ஜோதிடமும் எதிர்காலத்தை துல்லியமாகக் கணித்துக்கூறவில்லை. நான் கேட்ட வரையில் எதிர்காலம் பற்றி கூறப்பட்ட எல்லாம் தவறாகத்தான் இருந்திருக்கின்றன.

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டபிறகு, நாடி ஜோதிடம் என்பது அந்தந்தக் காலத்துக்கென தற்காலிகமாக எழுதப்பட்டது என்று தான் எண்ணத்தோன்றுகிறது. 'ஒரு ஜாதகருக்கு துருவ நாடியில் கணிப்பு கூறும்போது' தவறுகள் சுட்டிக்காட்டப் பட்டால், புதிதாக ஒரு பக்கத்தை எடுத்துப் படித்து பலன் சொல்லுவது அதனால் தான் என நினைக்கிறேன். சிலர் 'நாடி ஜோதிடம் படித்துப் பலன் சொல்பவர்தான் அந்தப் புதிய பக்கங்களை தயாரித்திருக்க வேண்டும்' என்கிறார்கள். இன்னும் சிலர், 'இப்படித்தவறுகள் ஏற்படுவது, படித்துச் சொல்பவர் ஏடுகளில் உள்ளதைக்குளறுபடி செய்து சொல்வதால்தான்' என்று நினைக்கிறார்கள். 'நாடிஜோதிட ஏடுகளைப்படித்துப் பலன் சொல்பவர்கள், பணத்துக்காகவே அப்படிச் செய்கிறார்கள்' என்ற எண்ணமும் பலருக்கு இருக்கிறது. ஆனால் இப்படிப்பலன் சொல்பவர்கள், 'ஏடுகளில் உள்ளதைத் திருத்தவோ, புதிதாக எழுதவோ திறன் அற்றவர்கள்' என்பது என் கருத்து. அவர்கள் ஏடுகளில் கண்டதைத்தான் படித்துச்

சொல்கிறார்கள் அல்லது 'அதில் இருப்பதையே சொல்கிறோம்' என்று நினைப்பவர்களாக இருக்க வேண்டும்.

சேஷாச்சார்யா என்பவர் துருவ நாடி பார்த்துப்பலன் சொல்பவர். அவரிடம் எங்களில் பலர் நாடி ஜோதிடப்படி ஜாதகப்பலன் எழுதிக் கொடுக்குமாறு கேட்டோம். அவர் எழுதிக்கொடுத்ததெல்லாம் ஆச்சர்யப்படும்படியாக இருந்தன. அவர் ஜாதகப் பலன் எழுதும்போது நாங்கள் பக்கத்திலேயே இருந்தோம். குருநாதரின் ஜாதகப்பலனை சேஷாச்சார்யா எழுதும் போது நானும் சில நண்பர்களும் அருகிலேயே இருந்தோம். சேஷாச்சார்யாவும் குருநாதரின் சிஷ்யர்தான். அவர் எழுதிய ஜாதகப்பலன்படி குருநாதரின் 'வாழ்க்கையில் நிகழ்ந்தவை' எல்லாம் சரியாகவே இருந்தன.'

அதில் இருந்த சில அம்சங்கள் வியப்பளிப்பவையாகவும், சுவாரஸ்யமாகவும் இருந்தன.''பிரம்மஸ்வரூபோ பகவான்[49], தரிசனம் ச, க்வசித் க்வசித், ஆதர்சனம் க்வசித்சேதி ததஸ்சஞ்சல புத்திமான்'' என்ற வரிகள் அதில் இருந்தன. அவர், குருநாதர் வாழ்க்கையில் 40ஆவது வயதில் நடந்ததை எழுதி இருந்தார். அவை சரியாக உள்ளனவா என்று பார்க்க குருநாதரே வாங்கிப் பார்த்தார். 40–ஆவது வயது நிகழ்ச்சியைப் படித்துவிட்டு குருநாதர் “ஆம். அவர் சரியாகவே எழுதியிருக்கிறார். நீயே மேலே படி” என்றார்.

படித்து முடித்ததும் நான் குருநாதரிடம், “அதில் கூறப்பட்டிருக்கும் 'பிரம்மஸ்வரூபோ பகவான் தர்சனம்' என்பதற்கு அர்த்தம் என்ன? அந்த தரிசனத்தின் போது என்ன நடந்தது? அல்லது என்ன அனுபவம் ஏற்பட்டது?” என்று கேட்க விரும்பினேன். ஆனால் உள்ளத்தில் இருந்த அந்தக்கேள்வி உதட்டளவுக்கு வெளியே வரவில்லை. 'ஜீர்ணமங்கி சுபாஷிதம்[50]' என்ற சொல்வழக்கு போல நாக்கின் நுனிவரையிலேயே தங்கிவிட்டது. 1926ஆம் ஆண்டு, நான் இந்த யோகா முறையில் தீக்ஷை பெற்ற பத்து வருஷங்களுக்குப் பிறகு எனக்கு அதிசயமான ஒரு பரவச அனுபவம் ஏற்பட்டது. அச்சமயம் அதை நான் இனியதாகக் கருதினேன்.

ஆனால் 1936ல் அதாவது மேலும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதன் முழுத்தன்மையும் எனக்குப் புலனாயிற்று. அதைப் பற்றி உரிய இடத்தில் எழுதுகிறேன்[51].

சில நேரங்களில் இந்த நாடி நூல்கள் 'பலன் பார்ப்பவர்களின் வாழ்வில் உள்ள ரகசியங்களை' வெளிப்படுத்தி விடுகின்றன. அது ஒரு நூதனமான விஷயம் தான். இந்த விஷயம் நாடி ஜோதிட நூல் எழுதிய ஆசிரியருக்கும் சம்பந்தப்பட்ட பலனாளிகளுக்கும் தான் தெரியும். சுவடியைப் பார்த்துப் பலன் சொல்பவருக்கே கூட அது தெரியாமல் இருக்கும்.

துருவ நாடியின் கணிப்பில் என் ஜாதகத்தில் 'ஜல கண்டம்' அதாவது 'தண்ணீரால் விபத்து' என்று கூறப்பட்டுள்ளது. அது நடந்தேறிய ஒரு உண்மை. சிறு வயதில் எங்கள் ஊரில், வீட்டின் கொல்லைப்புறத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். மூங்கில் கழிகளை, வீட்டுக் கிணற்றுக்குள் அடி ஆழம் வரை அதாவது தரையைத் தொடும்வரை விட்டுப் பார்த்து பிறகு எடுத்து- விடுவதுதான் அந்த விளையாட்டு. நான் கிணற்றினுள்ளே விட்ட கம்பு, சேற்றில் சிக்கிக் கொண்டது. அதன் உச்சியைப் பிடித்துக் கொண்டு நின்ற நான், கிணற்றை எட்டிப்பார்த்தேன். என் பின்னால் நின்ற ஒரு சிறுவன் திடீரென்று என் இடுப்பைப் பிடித்துத் தூக்கினான். நான் நிலை தடுமாறி கிணற்றுக்குள் விழுந்துவிட்டேன். கூட நின்றவர்கள் பயந்து ஓடிவிட்டனர். என் தகப்பனார் ஊரில் இல்லை. அம்மா வீட்டினுள் வேலையில் ஈடுபட்டிருந்தார். பக்கத்து வீட்டுக்காரர் 'தொபுக்கடீர்' என்று ஏதோ தண்ணீரில் விழும் சத்தம் கேட்டதால் எழுந்து வந்தார். சிறுவர்கள் ஓட்டம் பிடித்ததைப் பார்த்துவிட்டு, ஒருவனைப் பிடித்து விசாரித்தார். அவன், நான் கிணற்றில் விழுந்து விட்டதைச் சொன்னான். அவர் விரைந்து வந்து கிணற்றை எட்டிப் பார்த்தார். அதற்குள் நான்கைந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. நான் ஒரு மடக்கு தண்ணீரை விழுங்கிவிட்டு, மூங்கில் கம்பைப்பிடித்தவாறு கிணற்றுநீரில் மிதந்து கொண்டிருந்தேன்.

பக்கத்து வீட்டுக்காரர் பக்குவமாக கிணற்றினுள் இறங்கி என்னைத் தூக்கி வெளியே கொண்டுவந்துவிட்டு என் தாயாரை அழைத்து விஷயத்தை சொன்னார். அந்த சம்பவம்தான் நாடிச்சுவடியில் கூறப்பட்டிருந்தது. அதைப்போன்றே, என் பத்தொன்பது வயதில், அவனிகட்டாவிலிருந்து மாட்டு வண்டியில் வரும்போது கீழே விழுந்து, சாவின் பிடியிலிருந்து நான் தப்பிய நிகழ்ச்சியும் நாடி நூலில் 'வண்டியிலிருந்து கீழே விழுந்துவிபத்து நேரிடும்' என்பதாகச் சொல்லப்பட்டிருந்தது. நாடி நூல்கள் வழியாக ஜோதிடம் பார்த்த பலரது வாழ்க்கையில் இது போன்ற பல சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் நடந்தது பற்றி கூறப்பட்டிருந்தை நான் அறிவேன்.

எனக்குத் தெரிந்த இன்னொரு நிகழ்ச்சி. அது சென்னையில் நடந்தது. ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பையனுக்குக் கடுமையான வயிற்றுவலி. எவ்வளவோ சிகிச்சை செய்தும் குணம் ஏற்படவில்லை. முடிவாக 'ஆபரேஷன்' செய்துதான் பார்க்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். அந்தப்பையனுடைய பெற்றோர் அவனுடைய ஜாதகத்தை 'நாடி ஜோதிடம்' மூலம் பரிசீலிக்க விரும்பினர். மிகச்செலவு செய்து, ஒரு நாடி ஜோதிடச் சுவடி வைத்திருப்பவரைக் கண்டுபிடித்து அவரை வீட்டிற்கே அழைத்து வந்தனர். அந்த நாடி வாசகங்கள் அப்பையனுடைய ஜாதகத்தை துல்லியமாக அலசியிருந்தன. அவன் வயிற்று வலியால் துன்பப்படுவதைக்கூட சுவடி ஜோதிடம் மிகச் சரியாகக் கணித்துக்கூறியது. சுவடியைப்பார்த்துப் பலன் கூறியவர் 'சஸ்த்ர வைத்யேந ஜீவதி' என்ற நாடி ஜோதிட வரிகளுக்குப் பொருள் கூறிக் கொண்டிருந்த போது, அக்குடும்பத்தாருக்குத் தெரிந்த பிரபல சஸ்திர வைத்திய நிபுணர் டாக்டர் ரங்காச்சார்யலு, அவ்வீட்டுக்கு, 'மறுநாள் நடக்க இருந்த ஆபரேஷன் பற்றி' விவரிக்க வந்தார். அதைப்பார்த்து சுவடி வாசிப்பவர், தான் படித்த வரிகளுக்கான பொருளை மட்டும் சொல்லிவிட்டு எழுந்துவிட்டார். 'சஸ்திர சிகிச்சையினால் உயிர் பிழைக்கும்' என்பது தான் அந்தப்பொருள். செல்வாக்கு மிக்க பிரபல டாக்டர் வந்துவிட்டதால் 'அவர் முன் நாடி ஜோதிடம் பார்க்க வேண்டாம்'

என்று எண்ணி சுவடி வாசிப்பவரை மேலும் வற்புறுத்தாமல் மறுநாள் வருமாறு சொல்லிவிட்டு அவ்வீட்டார் அனுப்பிவிட்டனர். அவர் சொன்ன பொருளிலிருந்து 'ஆபரேஷனால் பையன் பிழைத்து விடுவான்' என்று எண்ணிய பெற்றோர், அதற்கு சம்மதமும் தெரிவித்தனர். நாடி ஜோதிடம் படித்தவர், தான் படித்த வரை சுவடியில் ஒரு அடையாளக் குறியிட்டுவிட்டு மறுநாள் வருவதாகச் சொல்லிச் சென்றார். அந்தச் சுவடியை அவ்வீட்டார் மிகப் பத்திரமாக ஒரு பீரோவில் வைத்துப் பூட்டினர். அந்தச் சுவடியை வாசித்த சேஷாச்சார்யா எங்களுக்கும் தெரிந்தவர். நேராக எங்களிடம் வந்து நடந்தனவற்றை எல்லாம் கூறினார். எல்லோரும் அப்பையன் 'ஆபரேஷன் நடந்த பிறகு பிழைத்து விடுவான்' என்று நம்பினோம்.

ஆனால் சேஷாச்சார்யா மறுநாள் அந்த வீட்டுக்குச் சென்றபோது 'ஆபரேஷன் நடந்து முடிந்து, அந்தப் பையன் உடனேயே மரணம் அடைந்துவிட்டான்' என அறிந்து வருத்தம் அடைந்தார். நாடி ஜோதிடச் சுவடிகளைக் கேட்டு வாங்கி மறுபடியும் படித்தார். அவர் படித்த ஏட்டுடன் அந்தப் பையனின் ஜாதகப்பலன் முடிந்து விட்டிருந்தது. அதற்குமேல் வேறு ஒருவர் பற்றிய குறிப்புதான் அதில் இருந்தது. சேஷாச்சார்யா, தான் முதல் நாள் படித்ததை மறுபடியும் கவனமாக ஆராய்ந்தார். அதிலிருந்து சஸ்த்ர வைத்யே =ஆபரேஷன் நடந்த பிறகு, ந ஜீவதி=பிழைக்க மாட்டான் –என்ற பொருள் கிடைத்தது. அது காரணமாகத்தான் அந்தச் சுவடியில் அப்பையனுடைய ஜாதகக்குறிப்புகள் அத்துடன் முடிந்து போய்விட்டன. எல்லோருமே மிக வருத்தத்தில் ஆழ்ந்தனர். துருவ நாடியைப் பற்றி இதுபோல எவ்வளவோ ஆச்சர்யப்படும்படியான சம்பவங்கள் உள்ளன.

குருநாதர் ஸி.வி.வி.யால் தீக்ஷை அளிக்கப்பட்ட பலர், டஜன் கணக்கில் எனக்குத் தெரிந்து இருக்கின்றனர். அவர்களுடைய ஜாதக பலன்கள் துருவ நாடியில் பார்க்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் படித்துச் சொல்லப்பட்டதை நான் நேரிலேயே இருந்து கேட்டிருக்கிறேன்.

அவை படிக்கப்பட்டதை கேட்ட பொழுது அவற்றிற்கும் குருநாதருடைய ஜாதகத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் இருந்ததை கவனித்தேன். சில ஜாதகங்கள் முதலில் ஒற்றுமையோடு இல்லாவிடினும் பிற்பாடு பல ஒற்றுமைகள் தென்பட்டன. நான் நேரிலேயே அவைகளை கவனித்திருக்கிறேன். குருநாதர் உயிரோடு இருந்த போது ஒருவர், இந்த மாதிரி ஒரு சுவடியை வேபா. ராமேசம் அவர்களிடம் இரவல் கொடுத்தார். அதற்காக சில நூறு ரூபாய்கள் பெற்றுக் கொண்டார் அவர். ராமேசம் அந்தச் சுவடியில் இருந்தவற்றை வரிசைப்படுத்தி முறையாகத் தொகுத்தார். சுவடிகள் அவர் வசம் இருந்த கால கட்டத்தில் அச்சுவடியை வைத்து ஜாதக பலன்கள் சொல்லப்படவில்லை. ஆனால் அதற்கு முன் சுவடிக்காரர் அச்சுவடியை வைத்துக் கணித்துப் பலன் சொன்ன ஜாதக விபரங்கள், ராமேசம் தொகுத்துத்தந்த குறிப்புகளில் இடம் பெறவில்லை. சிலர் 'ராமேசம் அவர்களிடம் சுவடியைக் கொடுத்தவர், அந்தப்பகுதிகளை மறைத்து விட்டிருக்கலாம்' அல்லது 'இல்லாததைக் கற்பனையாக சிருஷ்டி செய்து சுவடி வாசிப்பவர் சொல்லி இருக்கலாம்' என்று நினைத்தனர். ஆனால் சுவடியைக் கொடுத்தவர், அவ்வளவு 'கற்பனை சக்தி' படைத்தவர் அல்ல என்றும், பலன் சொல்லப்பட்ட பகுதிகளை சுவடியிலிருந்து மறைத்துவிடக்கூடிய அளவு திறமையானவர் அல்ல என்றும் நான் நிச்சயமான நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

புஜண்ட நாடி

குருநாதரின் வாழ்நாட்களின் போது, துருவ நாடி முறையாகப் படிக்கப்பட்டு பலன்கள் பார்க்கப்பட்டன. அப்போது புஜண்டர் நாடி என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அது கும்பகோணத்தில் கிடைத்தது. அதை வைத்திருந்தவர் ஒரு பட்டு நூல்காரார். நெசவாளி. அவர் கணிசமான பணம் பெற்றுக்கொண்டு குருநாதரின் ஜாதகப் பலன்களை அந்த நாடியிலிருந்து கணித்துச் சொன்னார். அதுவரை தனக்கு ஜாதக பலன்களை சொல்லுவதற்கான அடிப்படைத் தெளிவு இல்லாதிருந்ததாகவும் குருநாதரின் ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லத் தொடங்கியதிலிருந்து, அதற்கான தெளிவைப் பெற்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். குருநாதரின் ஜாதகத்தைப் படிக்கப்படிக்க, அவர் மீது அந்த நெசவாளிக்கு பக்தி பிறந்து, பின்னர் அவருடைய சிஷ்யராகவே ஆகிவிட்டார். ஒவ்வொரு நாளும் குருநாதர் மற்றும் அவரது பல சிஷ்யர்களின் ஜாதகங்களைப் படித்துப் படித்து தெளிவு பெற்று, மற்றவர்களுக்குப் பலன் சொல்லத் தொடங்கி, அதை ஒரு தொழிலாகவே வைத்துக் கொண்டார். குருநாதர், அவரது குடும்பத்தவர், சிஷ்யர்கள் அவர்களது குடும்பத்தவர் ஆகியோரின் ஜாதகங்களையும் படிப்பதை அவர் வழக்கமாக்கிக் கொண்டார்.

குருநாதர் தன் பூத உடலை விடுத்துச் செல்லுவதற்கு சில நாட்கள் முன்பு, அவரிடம் இவ்வாறு கேட்டார். “நீ அந்த நாடிச் சுவடியிலிருந்து பார்த்துப் படித்து ஜாதக பலன் கணிக்கிறாயா? இல்லை, கற்பனை செய்து சொல்கிறாயா?”.

காரணம், அன்றைக்கு அந்த நெசவாளி பலன் சொல்லும் போது ஒரு வார்த்தையை தவறுதலாக தெரிந்தே மாற்றிச் சொல்லி இருக்கிறார். நாடிச்சுவடியைப் படிக்கையில், 'அம்பட்டன்' என்று இருந்ததை, குருநாதரின் மற்றொரு சிஷ்யரான கோபிநாதராவின் யோசனையில் பேரில், 'பண்டிதன்' என மாற்றி உச்சரித்துள்ளார். தமிழ் நாட்டில் நாவிதர், அம்பட்டர் ஆகிய சமுதாயத்தவரை 'பண்டிதன்' என்று சொல்வது

வழக்கம். குருநாதர் இப்படிக் கேட்ட உடன் அந்த நெசவாளி 'குற்ற உணர்வால் குறுகிப்போய்' மன்னிப்பு கோரியிருக்கிறார். குருநாதர் “நாடிக்குறிப்புகளில் இப்படி எந்தவிதமான வார்த்தை மாற்றங்களையும் செய்யாதே” என உத்தரவிட்டார். அத்துடன், மறுநாள் கூட்டத்தில் நடந்தனவற்றை சொல்லி, எல்லோரிடமும் 'அவர்களிடமுள்ள புஜண்டர் நாடிப்படியான ஜாதகக் குறிப்புகளை கொண்டு வருமாறு' கூறினார். அவர்கள் அவ்விதமே கொண்டு வந்தார்கள். நெசவாளியையும் அவரிடமுள்ள நாடிச்சுவடியையும் கொண்டு வருமாறு கேட்டு வாங்கி பரிசீலனை செய்தார். ஜாதகக்குறிப்புகள் அனைத்தையும் அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, அனைத்தையும் பெட்டியில் வைத்துப் பூட்டியதோடு ஒருவருமே இனி நாடி ஜோதிடம் பார்க்க வேண்டாமென்று கட்டளையிட்டார்.

“அசல் சுவடியை எழுதியவர் தவறுகள் செய்திருக்கலாம். நகல் எடுத்தவர் கூட சில இடங்களில் தவறி இருக்கலாம். போதுமான 'புரிந்து கொள்ளல்' இன்றி, மாற்றிப்பலன்கள் எழுதி இருக்கலாம். ஆகவே அத்தகைய ஒரு சந்தேகத்திற்கிடமான சுவடியின் மீது நம்பிக்கை வைத்து அவற்றின்படி பலன்கள் கணிக்கக் கூடாது. இந்த நாடிச்சுவடிகளைப் படித்த பிறகு நீங்கள் என் சிஷ்யர்கள் ஆகவில்லை. என்னிடம் சிஷ்யர்கள் ஆன பிறகுதான் இந்த நாடிச்சுவடிகளின்படி பலன்களைத் தெரிந்து கொண்டீர்கள். எந்த நோக்கத்திற்காக என் சீடர்கள் ஆனீர்களோ, அது உங்களை மேலும் என் பக்கமாகக் கொண்டு வரட்டும். என் வார்த்தைகள் சுயமாகச் சொல்லப்படுபவை. அவற்றைப்பற்றி, மற்றவர்கள் அங்கீகாரம் செய்து தீர்ப்பளிக்க வேண்டியதில்லை. நாடிச்சுவடி சொல்வதை வைத்து என் மீதோ என் செயல்கள் மீதோ நம்பிக்கை வைக்க வேண்டாம்” என்று குருநாதர் கூறினார்.

சில சிஷ்யர்கள் “ஐயா! நாடிச்சுவடி சொல்வது உங்கள் போதனையை அனுசரித்து இருக்கிறதென்றுதான் நாங்கள் அவற்றைப் பார்த்தோம். அவ்வாறு இல்லாவிட்டால் அதை எப்போதோ புறக்கணித்திருப்போம்” என்றார்கள்.

குருநாதர் தொடர்ந்து “சரி. தொடக்கத்தில் அது நான் சொல்வதற்கு உடன்பாடாக இருந்திருக்கலாம். பின்னர் ஒரு கட்டத்தில் அது தவறிழைத்து பிசகி இருக்கலாம். முன்னர் நீங்கள் அதில் நம்பிக்கை வைத்திருந்தீர்கள் என்பதற்காக தொடர்ந்து அந்த நம்பிக்கையுடன் இருக்க வேண்டியதில்லை. மற்றவர்களால் என் யோகா முறை பற்றி முழுதும் புரிந்து கொண்டிருக்க முடியாது. எனக்கே கூட, பகுதி பகுதியாகத்தான் அது வெளிப்பட்டது. ஒரே நேரத்தில் முழுமையாகக்கிட்டவில்லை. எப்படி ஒரு ஆலம்பழ விதை, பூமியில் விழுந்து முளை விட்டு, செடியாகி, மரமாகி, கிளைகள், விழுதுகளுடன் படர்ந்து வளருகிறதோ அது போன்றது தான் இந்த யோகா முறையும். இந்தப் பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் உலகில், இந்த விரிவடையும் யோகமுறை பற்றி முன்கூட்டியே எதையும் துல்லியமாகக் கணித்துச் சொல்ல முடியாது.” என்று கூறினார். மேலும் தொடர்ந்து “மனிதன் பிழையின்மையை நோக்கி முன்னேற, முன்னேற இந்த விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்வான். தோட்ட இயல் போன்ற அறிவியல் துறைகளில் 'ஒரு செடி, ஒரு குறிப்பிட்ட பருவகாலத்தில் இலைகள் விட்டு துளிர்த்து வளரும். பூக்களையும் பழங்களையும் கொடுக்கும்' என்று ஆராய்ச்சி செய்து சொல்கிறார்கள். அது போல, மனிதன் 'இறைவனை நெருங்கும் அறிவியல்' வளர்ச்சி பெற்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பற்றி பூரணமாக உணரும்போது சிருஷ்டி, வாழ்க்கை பற்றிய ரகசியங்களை தெரிந்துகொள்கிறான். மனிதன் இந்தத் துறையில் நடை போடப் போட, அவனுடைய ஞானமும், உணரும் திறனும் விருத்தியடைகிறது. அறிவியலின் எல்லாத்துறைகளும் இந்த வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டுகள்.

ஆனால் மனிதனின் சிந்தனைகள், பேச்சுகள், செயல்கள் எல்லாம் தூய்மையாக, பிழைகள் இல்லாதவையாக மாறும்வரை மானிட இனம் சிருஷ்டியின் மூலத்தையும் அதன் ரகசியத்தையும் அறிந்து கொள்ள இயலாது. அவை பற்றி அறியும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையில் நாடிஜோதிடம் என்பதும் அந்த முயற்சிகளின் ஒரு பகுதி தான்.

சிலர் 'விஹாய சாஸ்த்ர ஜாலானி யத் சத்யம் தது பாஸ்யதம் வேத சாஸ்த்ர, புராணானி பதபாம்ஸும் இவ த்யஜேத்[52] என்கிறார்கள். இதன் சாராம்சம் முன்பு சொன்னவற்றையே உறுதிப்படுத்துகின்றன.

நீங்கள் நாடி ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளவைகளைப் பின்பற்றி நடக்கத் தொடங்கினால், உங்களின் உள்ளே ஊற்றெடுக்கும் துடிப்புணர்வு பட்டுப்போகும். நீங்கள் சுய தரிசனம் காணவிரும்பினால் தானாகவே வெளிப்படும் உள்ளுணர்வின் குரலை செவிமடுங்கள். உலர்ந்த பனை ஓலைகளில் எழுதப்பட்டுள்ள நாடியை நீங்கள் பார்க்க வேண்டாம். உயிரோட்டமுள்ள உங்கள் உடலில் ஓடும் ஜீவநாடியை கவனியுங்கள். நாடிஜோதிடச்சுவடிகளை பார்த்து பலன் அறிந்து கொள்வதை நிறுத்தி, அவற்றை மூடிவைத்துவிட்டு யோகப்பயிற்சிகளில் ஆர்வம் செலுத்துங்கள்" என்று அறிவுரைகள் வழங்கினார் குருநாதர்.

இப்படி அவர் உபதேசம் செய்த பிறகு ஒரு முக்கிய சிஷ்யர், மற்ற ஆர்வமுள்ளவர்கள் சார்பில் வந்து 'தங்களுடைய ஆவலைத் தீர்த்துக் கொள்ள ஒருமுறை நாடி ஜோதிடச் சுவடிகளைப் பார்த்துப் பலன் தெரிந்து கொள்ள அனுமதிக்குமாறு' கேட்டுக் கொண்டாராம். அதற்கு குருநாதர் "ஆமாம். நீங்கள் நாடி ஜோதிடம் பார்க்க வேண்டிய நேரம் வரும். அதனால் சில முக்கியமான விஷயங்கள் தெரியும். அந்த நேரம் வரும் வரை பொறுத்திருங்கள்" என்று பதிலளித்தாராம். அப்படி அவர் சொன்ன சில நாட்களுக்குப் பின்னர், 'குருநாதர் மற்றும் சில சிஷ்யர்கள் ஆகியோரின் ஜாதக பலன்கள்' நாடிஜோதிடப்படி முன்பு கணிக்கப்பட்டவைகளில் சில பகுதிகள் ஓரளவுக்கு வெளியாகிவிட்டன. நானும் கூட அச்சமயம் என்னுடைய ஜாதகப்பலனின் அறிமுகப் பகுதியைப் படிக்கச் சொல்லி கேட்டுவிட்டேன். அந்த அறிமுகப்பகுதியை, துருவநாடி, புஜண்டர்நாடி மற்றும் விஜயநகர[53] பக்ஷிசாஸ்திரத்திலுள்ள சில ஸ்லோகங்கள் ஆகியவற்றைகேட்டு அவற்றின் நகல்களை எடுத்து வைத்துக் கொண்டேன். அந்த நகல்களையும், குருநாதர் மீது நான் இயற்றிய கவிதையின் சில வரிகளையும் ஓர் இத்தாலிய நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து வைத்திருந்தேன். ஆனால் அவை இப்போது

என்னிடம் இல்லை. நெடுநாட்களுக்கு முன் யாரோ அவற்றை அபகரித்துவிட்டார்கள். அவை இருந்திருந்தால் அவற்றிலிருந்த சில சுவையான வரிகளை இப்போது சொல்லி இருப்பேன். அவை தமிழிலும், என்னுடைய தெலுங்கிலும் அமைந்திருந்தன.

*****

குறிப்பு : 29–08–1950 அன்று சாஸ்திரியார் நம்மிடமிருந்து மறைந்துவிட்டார். அவள் திட்டமிட்டிருந்தபடி "பிரக்ஞாபிரபாகரம்" முபமைப்பெறவில்லை என்பது நமது துரதிஷ்டம்.

நீங்கள் குருநாதர் மீது ஒருமுகமான கவனம் செலுத்தி நம்பிக்கை கொள்ளும் போது, அவருடைய கருணைமிக்க பார்வை உங்கள் மீது படிந்து உங்களை என்றென்றும் பாதுகாக்கும். குறைவில்லாத தேக ஆரோக்கியம், ஆனந்தமான வாழ்க்கை, பிரமிக்க வைக்கும் தெய்வீக உணர்வு இந்த மூன்றும் உங்களுக்கு கிட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நானே அவற்றை அடைந்ததற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறேன். இதை எல்லோரும் நன்கு மனதில் பதித்து வைத்துக் கொள்ளுங்கள்.

(ஒப்பம்) வேட்டூரி பிரபாகர சாஸ்திரி

அடிக்குறிப்புகள்

1. பக்கம் 60 – காலங்கள் ஹிந்து பஞ்சாங்கங்களின்படி, அறுபது, அறுபது ஆண்டுகளாக சுழற்சி முறையில் பகுக்கப்பட்டுள்ளன. இந்த சுழற்சியின் முதல் ஆண்டு பிரபவ. கடைசி ஆண்டு அக்ஷய எனப்படும். சாந்திரமானம் என்ற சந்திரனின் சஞ்சார அடிப்படையில் இந்த ஆண்டுகள் பனிரெண்டு மாதங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதல்மாதம் சித்திரை, கடைசி மாதம் பங்குனி. ஒவ்வொரு மாதமும் இருபட்சங்கள் (அதாவது பதினைந்து நாட்கள்) அடங்கியது. அமாவாசை அல்லது பௌர்ணமியைக்கொண்டு இவற்றிற்கு கிருஷ்ணபட்சம், சுக்லபட்சம் என்று பெயர். அடுத்த உட்பிரிவு அஸ்வினியில் தொடங்கி ரேவதி வரை முடியும் 27 நட்சத்திரங்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பாதங்கள் கொண்டது. மேலும் கடிகை, விகடிகை எனவும் காலம் பகுக்கப்பட்டுள்ளது. கடிகை என்பது 24 ஆகும். ஒரு கடிகையின் 1/60 பாகம் விகடிகை.

18 நிமிஷங்கள் கொண்டது காஷ்டம்.
30 காஷ்டங்கள் சேர்ந்தது ஒரு காலம்.
30 காலங்கள் கொண்டது ஒரு க்ஷணம்.
11 க்ஷணங்கள் சேர்ந்தது ஒரு முகூர்த்தம்.
30 முகூர்த்தங்கள் சேர்ந்தது ஒரு அஹோராத்ரம். (ஒரு இரவு–ஒருபகல்).

2. பக்கம் 60 – ஆரம்பகால ஆந்திர பிராமணர்கள் தொழில் அடிப்படையில் பாரம்பர்யமாக இரு உட்பிரிவினராக இருந்தனர். வேதம் ஓதுதல் போன்ற மதசம்பந்தமான தொழிலை மேற்கொண்டவர்கள் 'வைதீகர்கள்' எனப்பட்டனர். அரசாங்க நிர்வாகப் பணிகளைச் செய்தவர்கள் 'நியோகி' என்றழைக்கப்பட்டனர். இந்த இருபிரிவினருக்கும் உள்ளேயே, அவர்கள் வசித்த பிரதேசங்களின் (நாடுகள்) பெயரில் வெலநாடு,

வேங்கிநாடு, பாகநாடு என்ற கிளைகள் இருந்தன. அரசாங்க அலுவலுக்காக இவைகள் பிளீக்கப்பட்டன.

3. பக்கம் 62 – 'அக்ஷராப்யாசம்' என்பது ஹிந்து பழக்கங்களின்படி குழந்தைக்கு 'மொழியில் எழுதப்படிக்க கற்றுக்கொடுக்கத் தொடங்கும்' சடங்கு: இது ஹிந்து சடங்குகளில் சம்பிரதாயப்படி 16 வகைகளில் ஒன்றாகும். அக்ஷராப்யாசம் பொதுவாக எதையும் மனதில் பதிந்துக்கொள்ள கூடிய குழந்தையின் 5ஆவது வயதில் நடக்கும். 'உபநயனம்' என்ற சடங்கிற்கு முன்னதாக இது நடந்துவிடும்.

4. பக்கம் 63 – பிரம்மமுஹூர்த்தம்: அதிகாலை 4மணி அளவில் உள்ள நல்ல நேரத்திற்கு இந்தப்பெயர். சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவுடன் தொடர்புடைய 96 கால அளவுகள் முஹூர்த்தங்கள் எனப்படுகின்றன. பிரம்மமுஹூர்த்தம் என்ற அதிகாலை நேரம், நற்காரியங்கள் தொடங்குவதற்கு உரியது. இந்த நேரத்தில் பிறந்ததால் இக்ஷ்வாகு வம்ச இளவரசன் ஒருவன் 'அஜன்' எனப்பெயரிடப் பட்டான் என்கிறார் மகாகவி காளிதாசன் பிரம்மாவின் மறுபெயர் 'அஜன்'.

5. பக்கம் 63 – உஞ்சவிருத்தி: முற்காலத்தில் சந்யாசிகள், வயல் வரப்புகள், கதிர்அடிக்கும் களங்கள் இவற்றில் சிந்திக்கிடக்கும் தானியங்களை சேகரித்து, சமைத்து உண்பார்கள். தங்களுக்கென அவர்கள் எதையும் சேகரித்து வைத்துக் கொள்ளலாகாது என்ற நியமத்தை அனுசரித்து இந்தப் பழக்கம் ஏற்பட்டது. இக்காலத்தில் இதுவே பிரம்மச்சாரிகள், 'பிக்ஷை' ஏற்பது என்ற பழக்கமாக மாறி இருக்கிறது.

6. பக்கம் 63 – மாத்யாஹ்னிகம்: அதிகாலை, மதியம், மாலை வேளைகளில் செய்யப்படும் பிரார்த்தனைகளுக்கு 'த்ரிகால சந்த்யா

வந்தனம்' என்று பெயர். இறைவன் இந்தப்பூவுலகில் மனிதனுக்கு தருகின்ற பாதுகாப்பிற்காக அவருக்கு ஒருவன் செலுத்தும் நன்றியின் வெளிப்பாடே இந்தப் பிரார்த்தனைகள். மதியம் செய்யப்படும் பிரார்த்தனையின் பெயர் மாத்யாஹ்னிகம்.

7. பக்கம் 64 – இதுபோன்று இந்த நூலில் சாஸ்திரியார் இரண்டு, மூன்று இடங்களில் சொல்லி இருக்கிறார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதைப்பற்றிய விளக்கங்களை வேறு எங்கும் அவர் தரவில்லை. அவை என்னவாக இருக்கும் என அறிய வாசகர்களுக்கு ஆர்வம் உண்டாகலாம். சாஸ்திரியார் பிற்பாடு என்ன சொல்ல எண்ணி இருப்பார் என்பதை அவரது மற்ற எழுத்துக்களிலிருந்தும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களிடம் இருந்து கேட்கும் அறியமுடியலாம். ஆனால் அவை வெறும் அநுமானங்களாகத்தான் இருக்க முடியும். கிராமத் திருவிழாக்களில் நடைபெறும் மற்ற சடங்குகள், பலி இடுதல் ஆகியவை குறித்து சாஸ்திரியார் எழுதியிருப்பது அவை பற்றி சிறுவயது முதலே அவர் கொண்டிருந்த வெறுப்பையே காட்டுகின்றன. இதுவும், நாடிஜோதிடம், அவருடைய மற்றும் சிஷ்யர்களின் யோகா அனுபவங்கள் குறித்து சாஸ்திரியார் எழுதியிருப்பதும், அவர் புத்த பகவானின் அம்சம், ஆகவே தான் உயிர்களிடம் அவர், கருணை, நேசம் கொண்டவராக இருந்தார்' என்பதை உறுதிப்படுத்துகிறது.

8. பக்கம் 67 – சர்ப்ப யாகம்: இது மஹாபாரத காவியத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஜெனமேஜெய மஹாராஜன், தன் தந்தை பரீக்ஷித்துவின் மரணத்திற்கு காரணமான தக்ஷகன் என்ற சர்ப்பத்தினைப் பழிவாங்க செய்த யாகமே இது. 'இந்த யாகத்தினால் இந்திரன் வேண்டிக்கொண்ட படி “தக்ஷகன்” என்ற பாம்பைத்தவிர பூஉலகில் உள்ள சர்ப்பங்கள் யாவும் அவன் செய்த யாகத்தினால்

ஈர்க்கப்பட்டு யாக அக்னியில் விழுந்து இறந்தன' என மஹாபாரதம் கூறுகிறது.

9. பக்கம் 75 – 'சந்தி' என்பது பகலும் இரவும் சந்திக்கும் வேளை. (சூரியோதயம்– அஸ்தமனம் இரண்டுமே இதன்படி 'சந்தி' தான்). இது நல்ல நேரம் எனப்படுகிறது. நண்பகலும் கூட ஒருவகையில் "சந்தி" தான். இச்சமயங்– களில் செய்யப்படும் பிரார்த்தனைகளுக்கு அதிக சக்தி உண்டு. இந்த நேரத்துக்கான அதிதேவதை சந்தியா. ஆகவே இந்த நேரத்தில் செய்யப்படும் பிரார்த்தனைகளுக்கு 'சந்தியா வந்தனம்' என்று பெயர். 'உபநயனம்–பூணூல் போடுவது' என்னும் நிகழ்ச்சி. ஒரு சிறுவனை வேதம் படிக்க உட்படுத்துவது ஆகும். இது அவனுக்கு இரண்டாம் பிறப்பு என்று கருதப்படுகிறது.

10. பக்கம் 79 – இந்த நிகழ்ச்சி, சாஸ்திரியாரின் மனிதாபிமானத்தை காட்டுவதாகும். இதைப்பற்றி அவரே, 'என் சிறு வயது நினைவுகள்' என்ற தலைப்பில் வானொலியில் உரையாற்றி இருக்கிறார். 2–11–1982ல் 'மணி மஞ்சரி' எனும் இதழில் இதன் மொழி பெயர்ப்பு வெளியாகி உள்ளது. வாசகர் அதைப் படித்தால் 'உள்ளுணர்வு மற்றும் ஆன்மீகத் தன்மை மேம்பாடு' பற்றி அதிகம் தெரிந்து கொள்ளலாம்.

11. பக்கம் 86 – வேட்டூரி (1888–1950) – அவ்வாரி (1895–1935) மற்றும் பிசிபாடி (––––––1907) ஆகிய மூவரும் அட்டேபள்ளி சோமநாத சாஸ்திரி மற்றும் செள்ளபிள்ள வெங்கட சாஸ்திரியிடம் பயின்றவர்கள்.

12. பக்கம் 87 – அனுபவங்கள் என்பது இங்கு 'உலக ஞானத்தை' குறிக்கும். சில பாரம்பர்யச் சொற்றொடர்களில் 'உலக ஞானம்' என்பது என்ன என்று கூறப்பட்டுள்ளன. அவையாவன: பிரயாணம், கற்றவர்களுடன் சிநேகம், அரசாங்க அலுவலர்களுடன் பழக்கம்,

போஷகர்களின் அவைக்கு செல்லுதல் அரசவை நாட்டிய மாதுக்களிடம் ஈர்ப்பு மற்றும் அதிக அளவு படிப்பது ஆகியவை. இந்த வரிகளைப் படிப்பவர்கள் சாஸ்திரியார், தமது ஆசிரியரிடம் வைத்திருந்த 'மதிப்பை' அறிந்துகொள்வார்கள்.

13. பக்கம் 88 – ராவ்பஹதூர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (1848–1919) – அறிவாளர், இலக்கியவாதி, சமூக சீர்திருத்தவாதி. 'தென் இந்திய பொதுவாழ்வுத் துறையின் முன்னோடி' எனக் கருதப்படுபவர். அவரது 'கவுலசரித்ரா' என்ற நூல், தெலுங்குமொழிக்கவிஞர்களின் வரலாற்றைக்கூறும் ஒரு முயற்சி.

14. பக்கம் 88 – தேசபக்தர் கொண்டா வெங்கடப்பய்யா (1886–1946) கல்விமான், தேசபக்தர் நாடக ஆசிரியர், முன்னணி வழக்குரைஞர், காங்கிரஸ் தலைவர், மஹாத்மாகாந்தியைப் பின்பற்றியவர். இந்திய சுதந்திரத்திற்காக நடந்த இயக்கத்தில் பங்கேற்றவர். 'ஆந்திர இயக்கத்தின் தந்தை' எனப்பட்டவர்.

15. பக்கம் 88 – ஸ்ரீவல்லூரி சூரியநாராயண ராவ்: சிந்தனையாளர், முன்னணி சட்டஇயல் வல்லுநர், பெரும் பொருள் ஈட்டினாலும் கொடை உள்ளத்துடன் சுயநலமின்றி தன் செல்வம் அனைத்தையும் கல்வி, கலாச்சார நலன்களுக்காக செலவிட்டவர். சட்டம் தொடர்பான 'மனஸ்–ஸ்வாதந்தர்யமு' போன்ற பல சட்ட நூல்களை எழுதியவர்.

16. பக்கம் 88 – ரெண்டால சுப்ப ராவ்: கல்விமான், வழக்குரைஞர், சென்னையில் அந்தக் காலத்தில் பிரபல எழுத்தாளர், நவீன மறுமலர்ச்சிக்கவிஞரும் நாடக ஆசிரியருமான குரஜடாவின் உறவினர். ரெண்டல சுப்ப ராவ் பலதுறைகளிலும் பிரவேசித்து புகழ்பெற்றவர், இவர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மீது சுலபமாகப் படிக்கும்படி குறிப்புகள் எழுதியவர். இது பற்றி 'கன்யா சுல்கம்' என்ற

நூலில் நகைச்சுவையாக எழுதப்பட்டுள்ளது. ஒரு போட்டோ ஸ்டூடியோ நடத்தி போட்டோ சுவரொட்டிகள் மற்றும் ஊறுகாய் ஏற்றுமதி வியாபாரம் செய்தவர். இவர்தான், சாஸ்திரியார் 'சாடுபத்ய மணிமஞ்சரி' என்ற தொகுப்பை வெளியிட ஊக்கம் அளித்தவர், சாஸ்திரியாரின் அறிவு மற்றும் கவிதை ஆற்றல் மீது மிகுந்த பற்று வைத்தவர். அதனால் அவருக்கு 'ஆந்திர பாரதம்' என்ற நூல் தொகுதிகளை அன்பளிப்பாக வழங்கியவர்.

17. பக்கம் 89 – வேபா ராமேசம்: (1876–1947) சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த பெருமக்களுள் ஒருவர். சட்டம் தவிர மற்றும் பலதுறைகளிலும் ஆழ்ந்த அறிவுமிகுந்தவர்.

18. பக்கம் 89 – 'வைத்யரத்ன' பண்டித திவி கோபாலாச்சார்யுலு: (1872 –1920) சிறந்த ஆயுர்வேத வைத்தியர்; சாஸ்திரியாரின் ஆத்ம நண்பர்; நவீன காலத்தில் ஆயுர்வேத மருத்துவ இயல் வளர்ச்சிபெற பாடுபட்டவர்.

19. பக்கம் 89 – ஸ்ரீ புராணம் நாகபூஷணம் : ஒரு கல்விமான். சாஸ்திரியாரின் மதிப்புக்கு உரியவர்.

20. பக்கம் 89 – பனப்பாக்கம் அனந்தாச்சார்லு : (1843–1909) தொடக்க கால இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர்; 1891–ல் நடைபெற்ற நாக்பூர் காங்கிரஸ் மஹாசபைக்கு தலைமை தாங்கியவர்; வழக்குரைஞர்; எழுத்தாளர்; நளினக் கலைகளில் (ஃபைன் ஆர்ட்ஸ்) ஆர்வம் கொண்டவர். அவர் நடத்திய வாராந்திர நூலகக் கூட்டங்களில் சாஸ்திரியாரையும் மானவல்லி ராமகிருஷ்ணய்யாவையும் கௌரவித்து, முறையே 'கவிசூடாமணி', 'கவி' என்ற பட்டங்களை வழங்கியவர். இவரும், இவரது மகன் ஸ்ரீநிவாஸாச்சார்லுவும், ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ' மற்றும் 'ஹாம்லட்'டை மொழிபெயர்த்தவர்கள். தங்கள் மொழிபெயர்ப்பில்

சாஸ்திரியாரின் கவிதை வரிகளை சேர்த்தவர்கள்.

21. பக்கம் 91 – சாஸ்திரியார் 'ஹேலி'யின் வால்நட்சத்திரத்தை பார்த்ததன் முக்யத்வம், அவருடைய அடிமனதில் இருந்த 'யோகா' (அது வெளிப்பட்டது 29.05.1910ல்) குறித்த அவரது 'உள் நோக்கிய உணர்வின்' அடிப்படையை சார்ந்தது. அந்த வால் நட்சத்திரம் தெரியப்போவதை அவரது உள் மனது உணர்த்தியதன் விளைவே அது. தன் 'யோகா' முறையில் தீக்ஷை பெற்ற பல ஆண்டுகளுக்குப் பின் (அதாவது ஜூன் 1916ல்) அதன் முக்யத்வத்தை அவர் உணர்ந்தார். "பௌதிக உலகை குறையற்றதாக்கும் பரிணாம வளர்ச்சியின் போது பல விஷயங்கள் முன்னதாகவே அறிவிக்கப் படுகின்றன. அதன் அறிகுறிகளை ஒரு சிலரே அறிந்து கொள்கின்றனர்". இது சாஸ்திரியாரின் 'திவ்யதரிசனம்' என்ற கவிதையில் உள்ள வரிகள்.

22. பக்கம் 109 – எம்.ரங்காச்சார்யலு: அரசு கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தின் 'க்யூரேட்டராகப் பணியாற்றிய' கல்விமான். சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் சமஸ்கிருத பேராசிரியராக இருந்திருக்கிறார். அவர் 'பாவுலூரி மல்லனா' தொடர்பாக எழுந்த சர்ச்சையின் போது, சாஸ்திரியாரின் மீதிருந்த அபிமானம் காரணமாக அவரை முற்றிலுமாக ஆதரித்தார். ஸ்ரீரங்காச்சார்யலுவைப் பற்றி 'கிருஷ்ணா பத்ரிகா'வின் 10.08.1914 பதிப்பில் வெளிவந்த கட்டுரையை எழுதியவர் சாஸ்திரியாரே என்று அதன் பாணியை வைத்து நம்பப்படுகிறது.

23. பக்கம் 110 – கொச்சர்லா ஸ்ரீனிவாசராவ்:– அறிஞர் பத்திரிகைகளில் எழுதுபவர்.

24. பக்கம் 111 – இந்த நிகழ்ச்சியைப்பற்றி மேலும் ஆராய்ந்ததில் 'பிரக்ஞ

பிரபாகரத்தை' மொழி பெயர்த்த ஆசிரியர் 'அந்த சந்திப்பு 21–4–1917ல் நடந்தது' என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். (–மணிமஞ்சரி–தொகுதி 1, எண் 1 பிப்ரவரி–1981ல் வெளியான 'ஒகலேகா–ஒக சமாதானமு' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை).

25. பக்கம் 112 – கல்விமானும் கவிஞருமான மானவல்லி ராமகிருஷ்ண கவி,எம்.ஏ. (1866–1957). இவரும் சாஸ்திரியாரும் சென்னை அரசாங்க உத்தரவின் பேரில் 1916– 1920களில் பழைய ஓலைச்சுவடிப் பிரதிகளை சேகரித்து ஆய்வு செய்யும் குழுவினராகப்பணி புரிந்தார்கள். நன்னேசோடா எழுதிய குமார சம்பவம் மொழிபெயர்ப்பை சரிபார்த்தவர். பரதரின் 'நாட்ய சாஸ்த்ரா' என்ற நூலைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்தவர். 1940களில் இவர் சாஸ்திரியாருடன் சமஸ்கிருத உரையாளராக திருப்பதியில் பணி செய்தார்.

26. பக்கம் 118 – இந்த நிகழ்ச்சியைப் பற்றி சாஸ்திரியார் மேலும் அதிகமாக விளக்கவில்லை. ஆனால் அதைப்பற்றி தனது, வேறு பல எழுத்துக்களிலும், சொற்பொழிவு– களிலும் அளித்த விளக்கங்களை வைத்து, 'பிரக்ஞா பிரபாகரத்தை' ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஸ்ரீஆனந்தமூர்த்தி அவர்கள் 'ஆந்திர பிரபா' வார இதழில் 23–10–1985 பதிப்பில் 'கலௌ வேங்கடநாயகா' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். மேலும் பல ஆராய்ச்சிகள் செய்த பின்னரே இதுபற்றி அதிகம் தெரிய வரும். இப்போதைக்கு 'குருநாதர் ஸி.வி.வி. திருப்பதி சென்றபோது வேங்கடாசலபதி வடிவில் தன்னுடைய ஆத்ம சக்தியையே கண்டார்' எனவும் நாம் யூகிக்க இடமிருக்கிறது. 1910ல் சாஸ்திரியார் திருப்பதி மூலஸ்தானத்தில் ஒரு இருட்டு பட்டையையே காணமுடிந்தது. காரணம் அவரது குருநாதராகிய உயர் ஆத்ம சக்தியால் மனித இனத்தின்

ரட்சிப்புக்காக 'பிருக்த ரஹித தாரக ராஜயோகா' முன்னமேயே நிறுவப்பட்டுவிட்டது என்பதுதான். இந்த உண்மை அவருக்கு 1930 மற்றும் 1949களில் இரு தடவை வெளிப்பட்டது. மேல் விபரங்கள் கிடைக்கவில்லை.

27. பக்கம் 121 – சூசர்லா குமாரஸ்வாமி: சாஸ்திரியாரின் பாலிய வயது நண்பர். அவர் இளகிய மனதும், தேவைப்பட்டோருக்கு உதவிடும் பண்பும் கொண்டவர். கிருஷ்ணாநதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது பாதிக்கப்பட்டவர்– களுக்கு குமாரஸ்வாமி புரிந்த உதவிகள் பற்றி சாஸ்திரியார் 'கிருஷ்ணா பத்ரிகா'வில் புகழ்ந்து எழுதி இருக்கிறார்.

28. பக்கம் 133 – எம்டன் போர்க்கப்பல் சென்னை மீது குண்டு வீசிய சம்பவம் 23.9.1914 செவ்வாய்க்கிழமை இரவு 9 மணிக்கு நடந்ததாக பத்திரிகைகள் எழுதி இருக்கின்றன.

29. பக்கம் 140 – இந்த வார்த்தைகள் பவபூதியின் உத்தர ராமசரிதம் காட்சி 1–ல் இடம் பெற்றுள்ளன. ராமபிரான் 'சீதையைப் பிரியும் எண்ணம் தனக்கு வருத்தத்தையும் குற்ற மனப்பான்மையையும் ஏற்படுத்துவதாக' உணர்கிறார். அவர் தன்னைத் தானே கடிந்துகொண்டு, 'தான் வாழும் உலகம் வறண்ட (இறந்த) காடாகத் தெரிவதாகவும் தன் வாழ்வு உயிரற்றதாகி ஒரு மரக்கட்டை போலாகி விட்டதாக' வும் கூறுகிறார்.

30. பக்கம் 142 – குருநாதர் ஸி.வி.வி. தன் சிஷ்யர்களிடம் 'பீஜாக்ஷரத்தையும் மற்ற மந்திரங்களையும் உச்சரித்துக் கொண்டே இருக்கலாகாது' என்று எச்சரித்திருக்கிறார். காயத்ரி மந்திரம் விதிவிலக்கு. அது புனிதமாகக் கருதப்படுவது. அதில் 24 எழுத்துக்கள் உள்ளன. அது மூன்று வேதங்களின் 'சாரம்' எனக்கருதப்படுகிறது. அது 'சவிதா' தேவதையிடம் தன்

எண்ணங்களை நல்வழிப்படுத்துமாறு வேண்டுவதாகும். இந்த மந்திரம் சாஸ்திரியாரால் தெலுங்கில் ஒரு கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்– பட்டுள்ளது. தன் சொந்த வாழ்விலேயும் அந்த மந்திரோபதேசத்தின் முக்யத்வம் தெரியுமாறு அதனைக் கடைப்பிடித்திருக்கிறார். எதிர்காலத்தில் "இந்த யோகத்தைப் பயிலக்கூடிய ஒருவர் இந்த மந்திரத்தை தன் உடலில் எந்த பிரதிபலிப்பும் இல்லாது, ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை ஜபிப்பது முக்யத்வம் இல்லாத வெறும் சடங்கு" என்று கருதுவாரேயானால் அதில் வியப்பில்லை.

31. பக்கம் 145 – மஹாப்ரஸ்தானம்: இந்த உடலைவிட்டு உயிர் நீங்கிச் செல்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நெடும் பயணம். மஹாபாரதம், மஹாப்பிரஸ்தானிக– பர்வத்தில் (பாண்டவ தர்மராஜர்) மேற்கொண்ட மஹாப்பிரஸ்தானம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

32. பக்கம் 151 – மனிதன் ஈடுபட வேண்டிய நான்கு நிலைகளில் 'சந்யாசம்' என்பது கடைசியாக வரக்கூடியது. முதலாவது பிரம்மச்சர்யம்; இரண்டாவது கிரஹஸ்தம்; (திருமணம் ஆன நிலை). மூன்றாவது வானப்பிரஸ்தம் – (குடும்ப வாழ்க்கையிலிருந்து விலகி பற்றற்று இருப்பது). இறுதியாக மேற்கொள்ள வேண்டியது துறவு–அதாவது சந்யாச ஆஸ்ரமம்.

33. பக்கம் 152 – இந்த தினம் 23–6–1916 வெள்ளிக்கிழமையாகும். சாஸ்திரியாரே தன் கைப்பட "ஜேஷ்டபஹுள அஷ்டமி சுக்ரவாரம்; 1–27 உத்தரபாத்ர நட்சத்திரம் 10–24 ஆனி மாதம் 10ஆவது தினம்" என்று குறிப்பிட்டிருக்கிறார் (அது 22ஆம் தேதி என இக்கட்டுரையில் உள்ளது).

34. பக்கம் 152 – 'பிரேதாசனம்' என்பது கீழே மல்லாந்து படுத்துக்கொண்டு, கை கால்களை நீட்டியவாறு இருப்பது. 'பிரேதம்'

என்பது 'சவம்'. அசைவுகள் இல்லாது 'சவம்' போல படுத்திருப்பது என்பதால் இந்த ஆசனம் பிரேதாசனம் என்று பெயரை அடைந்தது.

35. பக்கம் 152 – 'உபதிஷ்டம்' என்பது 'உபதேசம்' வாயிலாகப் பெறக்கூடிய ஒன்று. இந்த யோகாவில் தீக்ஷை பெறுவோருக்கு தினசரி பயிற்சியின் போது குருநாதர் மூலமாக இது கிடைக்கும்.

36. பக்கம் 152 – 'பீஜாக்ஷரங்கள்' என்பது 'சக்தி'யை விதைக்கும் ஒலி. அது ஒலிக்கத் தொடங்கியதும் சக்தி பிறந்து, முளைவிட்டு உயிரோட்டத்துடன் வளரும். பல்வேறு ஒலிகள் அதே போன்று பீஜாக்ஷரங்கள் ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொருவிதமான சக்தி வடிவத்தை உள்ளடக்கி இருக்கும். உபதிஷ்டத்துடன் 'குருநாதர் ஸி.வி.வி.க்கு நமஸ்காரம்' என்ற பீஜாக்ஷரம் ஒலிக்கும் போது 'குருநாதருடைய சக்தி' தீக்ஷை பெற்றவரை பிரார்த்தனை வேளையில் ஆன்மீகச் செயல்பாட்டுக்கு அழைத்துச் செல்கிறது.

37. பக்கம் 156 – 'பரிசோதனை' என்பது ஒரு ஆன்மீகச் செயல்பாடு. அதன் மூலம் குருநாதரின் சக்தி ஒருவர்மீது பிரயோகிக்கப்படும்போது 'அவரது உடல்நிலை, நடைமுறை பழக்கவழக்கங்கள், அது வரை அவருடைய வாழ்வில் நிகழ்ந்தவை எல்லாம் தெரியவரும். இந்த 'யோகா'வில் சேரும் அனைவர் மீதும் குருநாதரின் கட்டளைப்படி இந்த பரீட்சை நடைபெற தேவையில்லை. ஒரு சிலர் மீதுதான் இப்பரீட்சை நடக்கும். பிரபாகர சாஸ்திரியாரின் மீது மட்டும் அல்ல, அவரது சகோதரர் டாக்டர் சந்திரசேகர சாஸ்திரி மீதும் சென்னையில், குருநாதர் கட்டளைப்படி ஸி.ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் என்ற மீடியம் மூலமாக அது நடத்தப்பட்டது. ஸ்ரீசந்திரசேகர சாஸ்திரி 'டைபாயிட்' நோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது நடந்தது அது. பிரக்ஞபிரபாகரத்தில் விவரிக்கப் பட்டுள்ள இந்தப் பரிசோதனை, நவீன காலத்திய

'ஸ்கேனிங்'கிற்கு ஒப்பாகும்.

38. பக்கம் 160 – இந்தக் கவிதை வரிகளுக்குப் பொருள் : “நான் நோய்வாய்ப்பட்டிருந்த போது என் குருநாதரின் பாதுகாப்பை பணிந்து வேண்டினேன். அவர் என்னிடம் “அன்புள்ளவனே! பயப்படாதே. நான் உன்னைப் பாதுகாக்க இங்கேயே இருக்கிறேன்” என்று கனிவுடன் ஆறுதல் கூறினார்.

39. பக்கம் 163 – 'அக்ரஹாரம்' என்பது கற்றறிந்த பிராமணர்கள் எவ்வித இடையூறுமின்றி தங்கள் ஆசாரப்படி வாழ வழங்கப்பட்ட 'வரிகள் அற்ற' குடியிருப்புப் பகுதி.

40. பக்கம் 164 – இதற்கு “சுயதரிசனம் இல்லாதவனுக்கு புனித நூல்களால் பயன் ஏதும் இல்லை. பார்வையற்றவன் நிலைக்கண்ணாடியால் என்ன பயன் பெற முடியும்?” எனப் பொருள்.

41. பக்கம் 164 – எல்லையற்ற ஆன்மீக ஞானத்தைப் பெற்றிராத ஒருவன் சாஸ்திரங்களைப் படித்துப் பயன் பெறலாம். அந்த ஞானம் பெற்றவன் சாஸ்திரங்களைப் படிப்பது தேவையற்றது.

42. பக்கம் 164 – இந்த வரிகள் பிரஹதாரண்யக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்டவை. ஆன்மீக ஞானம் உடைய ஒருவன், சுயதரிசனம் பெற்று தான் கற்றவற்றால் மேம்பாடு காண முடியும். அவன் மேலும் பல கற்று சாஸ்திர அறிவுடன் பேச வேண்டும் என விரும்பத் தேவையில்லை. அத்தகைய விருப்பத்தால் அவன் பேச்சில் தடுமாற்றமே ஏற்படும்.

43. பக்கம் 164 – இதன் பொருள் : முழுமையான மெய்ஞ்ஞானத்தை வழிபட்டு பின்பற்றினால் போதும்; புஸ்தகங்களில் படிக்கும் வரம்புக்குட்பட்ட கல்வியைப் பின்பற்ற வேண்டாம். அது கால்

தூசிக்குத்தான் சமம் என்று நிராகரிக்கப்படவேண்டியது.

44. பக்கம் 168 – இந்த வரிகள் சுபாஷித ரத்ன பண்டாகாரத்தில் உள்ளவை.

இவற்றின் பொருள் :

ஏராளமான நூல்கள் உள்ளன. நிறையப் படிக்க வேண்டும். காலமோ தடங்கல்கள் காரணமாக குறுகியது. ஆகவே, சாரமுள்ளவற்றை மட்டுமே படித்து கிரஹித்துக் கொள்ள வேண்டும். அன்னம், நீர் கலந்த பாலைப் பருகும் போது, பாலை மட்டுமே அருந்தி நீரை விலக்கி விடுவது போன்றது இது.

45. பக்கம் 168 – சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ள 'நியாயம்' (அறிவுரை) இது. சுங்கவரி கொடுக்க விரும்பாத வண்டிக்காரன், இரவு முழுதும் எங்கெங்கோ சுற்றிவிட்டு வந்தும் கூட முடிவில் அந்த வரியைக் கொடுக்கத்தான் நேர்ந்தது. அவன் வரியைக் கொடுக்க விரும்பாமல் சுற்றி அலைந்த தெல்லாம் வீண் தான்'.

46. பக்கம் 182 – இது பற்றி இந்நூலில் அதிகம் விளக்கப்படாவிட்டாலும் கூட சாஸ்திரியாா் எழுதியுள்ள பிறகட்டுரைகளிலிருந்து சில தகவல்கள் பெறப் பட்டுள்ளன. அவை பற்றி சாஸ்திரியாரின் சிஷ்யர் டி.என்.ராமச்சந்திரன் போன்றவர்கள் பிரார்த்தனையின் போது பெற்ற அனுபவங்கள் குறித்து கூறியிருப்பது இதை உறுதி செய்கிறது. சாஸ்திரியார், தனது வயதான பெற்றோர்களுக்கு இந்த யோக முறையில் தீக்ஷை அளிப்பது பற்றி குருநாதரின் அறிவுரையை கேட்டிருக்கிறார். அதைக்கருத்தில் கொள்ளாமல் குருநாதர், சாஸ்திரியாரின் மனைவிக்கு தீக்ஷை அளிப்பது பற்றி மறைமுகமாக குறிப்பிட்டார். 1927ல் தனது தந்தை காலமானபோதுதான் சாஸ்திரியாருக்கு குருநாதரின் மேலான அறிவுரையின் முக்யத்வம் புரிந்தது. 1930ல் சாஸ்திரியாருக்கு மூன்றாவது பையன் பிறந்த

போது 'தன் தந்தையே அப்படிப் பிறந்திருக்கிறார்' என்பதை சாஸ்திரியாரால் உணர முடிந்தது. அப்பையனின் ஜாதகத்தில் தன் தந்தையின் நினைவாக 'தாத்தபாத' என்று சாஸ்திரியார் குறித்திருக்கிறார்.

